A. M. D. G.

1

# சத்தியமறை விளக்கம்

45
170/2008
Accn No: =180004
No of Pages = 280

Printed and published by Rev. Br. Joseph, S. J.,
Superintendent, St. Joseph's Industrial School Press,
Trichinopoly.

1931

270

180004

x 180004

180

CUM PERMISSU SUPERIORUM.

Imprimatur:

✠ AUGUSTINUS, S.J.,

*Ep. Trichinopolit.*

# சத்தியமறை விளக்கம்

## 1. தெய்வம்.

தாய்: மகனே, நீ இருக்கிற இந்த இடம் ஒரு வீடல்லவா?

பி.: ஆமாம், இது ஒரு வீடுதான்.

தாய்: இந்த வீடு தன்னாலேயா முளைத்தது?

பி.: இல்லை, தன்னாலே முளைக்குமா? யாராவது இதைக் கட்டியிருக்கவேணும்.

தாய்: சரியாய்ச் சொன்னாய். நாம் இருக்கிற இந்த ஊரிலே எத்தனை வீடுகளிருக்குமென்று சொல்லுவாயா?

பி.: எண்ணத்தொலையாத வீடுகளுண்டு.

தாய்: அவைகளெல்லாம் எப்படி உண்டானது?

பி.: அவைகளையும் யாராகிலும் கட்டியிருக்கவேண்டும்.

தாய்: இந்த வீடுகளுக்கெல்லாம் மேலாக வானம் இருக்கிறதல்லவா? அது என்னமாகத் தோன்றுகிறது?

பி.: அது கண்ணுக்குள் அடங்காத பிரமாண்டமான வீடுபோலத் தோன்றுகிறது.

தாய்: நாம் இருக்கிற இந்த வீடு உன்னையும் என்னையும் மூடிக்கொண்டிருக்கிறதுபோலே, அந்தப் பிரமாண்டமான வான வீடு இந்தப் பூமியையும் அதிலுள்ள சகலத்தையும் மூடிக்கொண்டிருக்கிறதல்லவா?

பி.: ஆமாம், அது எல்லாத்தையும் மூடிக்கொண்டிருக்கிறது.

தாய்: அந்தப் [illegible]வான வீடு எப்படி உண்டானது?

பி.: அதைப் பிரமாண்ட வல்லபமுள்ள ஒருவர் உண்டாக்கியிருக்கவேணும்.

தாய்: சரியாய்ச் சொன்னாய். அவருக்குப் பேர் என்ன?

பி.: அவர் பேர் சாமி.

தாய்: அவருக்கு அனேகம் பெயர்கள் உண்டு. அவரை சாமி, சர்வேசுரன், கடவுள், தெய்வம், ஆண்டவர் முதலிய பல பல பேர்கள் சொல்லிக் கூப்பிடுகிறோம். சர்வேசுரன் என்றால் சகலத்துக்கும் இராஜா என்றர்த்தம். சரி, அந்த வானமண்டலத்திலே நீ என்னென்ன பார்க்கிறாய்?

பி.: சூரியன், நிலா, நட்சத்திரம், மேகம், மழை, மின்னல், இடி, பச்சைவில் இதுகளெல்லாம் பார்க்கிறேன்.

தாய்: இவைகளெல்லாம் எப்படி உண்டானது?

பி.: வானத்தை உண்டாக்கின சர்வேசுரன்தான் அவைகளையும் உண்டாக்கியிருக்கிறார்.

தாய்: ஆமாம், சர்வேசுரன்தான் அவைகளை உண்டாக்கினார். சரி, இந்தப் பூமியிலே வீடுகளைத்தவிர வேறே என்னென்ன காரியங்களைக் காண்கிறாய்?

பி.: பாரியான பூமி, அதிலே மனிதர், ஆடுமாடு, கோழி குஞ்சு, குருவிகள், மரங்கள், பயிர்பச்சை, ஜலம், மீன், தவளை, பாம்பு, பூச்சி பொட்டு, மண்ணு, மலை, இரும்பு, ஈயம், தங்கம் பொன், வெள்ளி, பித்தளை, கடைசியாய் எல்லாத்தையும் எரிக்கிற நெருப்பு, இதுவெல்லாம் காண்கிறேன்.

தாய்: இவைகளெல்லாம் எப்படி வந்தது?

பி.: இவைகளையெல்லாம் சர்வேசுரன் உண்டாக்கினார்.

தாய்: உன்னை உண்டாக்கினது யார்?

பி.: சர்வேசுரன்.



தாய்: தாய் தகப்பன் உன்னை உண்டாக்கவில்லையா?

பி.: இல்லை.

தாய்: இல்லையென்று உனக்கு எப்படித் தெரியும்?

பி.: பிறக்கிற பிள்ளை ஆணோ பெண்ணோ, அதுக்கு கண், கை, கால் இருக்குமோ, இராதோவென்று அவர்களுக்குத் தெரியாதே.

தாய்: வெகு நேர்த்தியாய்ச் சொன்னாய். சரி, நீ பிறக்கும் முன்னே என்னமாயிருந்தாய்?

பி: நான் யாதொன்றாக இருந்ததில்லை.

தாய்: அப்படியானால் இந்த வானமும் பூமியும் அதில் அடங்கிய சர்வாங்கமும் உண்டாகுமுன்னே அவைகள் என்னமாயிருந்தனவாம்?

பி.: அவைகளும் என்னைப்போலே ஒன்றுமில்லாததாயிருந்திருக்கவேணும்.

தாய்: ஆமாம், ஒன்றும் இல்லாதபோது சகலத்தையும் தெய்வம் உண்டாக்கினார். சரி, நல்லது, அப்படி உண்டாக்கப்பட்ட காரியங்கள் எல்லாம் வளர்ச்சி விருத்தி அடைகிறதெப்படி?

பி.: கடவுள்தான் சகலத்தையும் வளர்த்துக் காப்பாற்றுகிறார்.

தாய்: உன்னை வளர்த்துக் காப்பாற்றுகிறதார்?

பி.: சர்வேசுரன்.

தாய்: அவர் எப்படி உன்னையும், உயிர்ப் பிராணிகளையும் வளர்த்துக் காப்பாற்றுகிறார்?

பி.: சர்வேசுரன்தான் வானத்திலிருந்து மழை பெய்யப்பண்ணி பயிர் பச்சை தவசு தானியம் விளையும்படி செய்து உயிர்களைக் காப்பாற்றுகிறார்.

தாய்: தாய் தகப்பன் வளர்க்கிறதில்லையா?

பி.: சர்வேசுரன் கொடுக்கிற சொத்தைக்கொண்டு தாய் தகப்பன் என்னை வளர்க்கிறார்கள்.

தாய் : ஆனால் கடைசியிலே உயிர்ப் பிராணிகளெல்லாஞ் சாகிறதே. சாவு எப்படி வருகிறது?

பி : உயிர்ப் பிராணிகளை உண்டாக்கின சுவாமிதான் அவைகளுக்குச் சாவையும் அனுப்புகிறார்.

தாய் : தெய்வந்தான் சாவை அனுப்புகிறாரென்று உனக்கு எப்படித் தெரியும்?

பி. : அதுக்குப் பதில், அம்மா, நீங்கள்தான் சொல்லிக்கொடுக்கவேணும்.

தாய் : உயிர்ப்பிராணிகள் எல்லாம் சாகாமல் இருக்கும்படி ஆசைப்படுகிறதினாலேயும், அப்படி ஆசைப்பட்டும் சாகும்படி வருகிறதினாலேயும், உயிர்ப் பிராணிகளின்பேரில் சாவை சர்வ அதிகாரமுஞ் செலுத்துகிற சர்வேசுரன்தான் அனுப்புகிறார்.

பி. : இப்போது எனக்குத் தெரிகிறது. சர்வேசுரன்தான் சகலத்தையும் உண்டாக்குகிறார், காப்பாற்றுகிறார். கடைசியிலே அழிக்கிறார்.

தாய் : அது நிசம். அப்படியானால் நீ யார் கையிலேயிருக்கிறாய்?

பி. : நான் சர்வேசுரன் கையிலே இருக்கிறேன்.

தாய் : நீ சர்வேசுரன் கையிலே இருந்தால் அவரை நீ வணங்கி அவருக்குப் பயந்து நடக்கவேண்டியதல்லவா?

பி. : ஆமாம், அவரை வணங்கி அவருக்கு நான் பயந்து நடக்கவேணும்.

தாய் : அவரை எப்படி வணங்குவாய்?

பி. : சர்வேசுரா சுவாமி, என்னை உண்டாக்கிக் காப்பாற்றிக் கடைசியிலே என்னை எடுத்துக்கொள்ளுகிற தெய்வமே, நான் ஒன்றுமில்லை, என்பேரில் இரக்கமாயிரும் சுவாமி என்று மன்றாடுவேன்.

தாய் : சர்வேசுரனுக்குப் பயந்து நடக்கிறதெப்படி?

பி. : சர்வேசுரனுக்குப் பிரியமில்லாததைச் செய்யாமல் அவருக்குப் பிரியமானதைச் செய்யவேணும்.



தாய் : அவருக்குப் பிரியமில்லாததும் பிரியமானதும் எதுவென்று உனக்கு எப்படித் தெரியும்?

பி. : இதுவும் நீங்கள்தான் எனக்குக் காட்டவேணும்.

தாய் : எது கெட்டதென்று உன் புத்தி சொல்லுகிறதோ, அதைச் செய்கிறது சர்வேசுரனுக்குப் பிரியப்படாது. எது நல்லதென்று உன் புத்தி சொல்லுகிறதோ, அதைச் செய்கிறது அவருக்குப் பிரியமாயிருக்கும்.

பி. : இப்போது தெரியும், நான் கெட்ட புத்தியை விட்டு நல்ல புத்தியோடே நடந்துகொள்ளுகிறேன்.

தாய் : வெகு நேர்த்தி. கெட்ட புத்திக்கடுத்த சில காரியத்தைச் சொல்லு.

பி. : பொய், களவு, பொல்லாத வார்த்தைகள்.

தாய் : நல்ல புத்திக்கடுத்த சில காரியங்களைச் சொல்லு.

பி. : மெய் சொல்லல், களவாணமை, சுத்தமான பேச்சு, செபஞ் செய்தல், சொன்னபடி கேட்டல்.

தாய் : சரி, மகனே, நீ சொன்னபடியே கெட்ட புத்தியைக் காட்டாமல் நல்ல புத்தியுள்ள பிள்ளையாக நடந்து வா; சர்வேசுரன் உன்பேரில் பிரியமாயிருந்து உன்னைத் தமது பிள்ளையாகப் பாவித்து வருவார். உன் தாய் தகப்பனும் இன்னும் மற்றவர்களும் நீ கெட்ட பிள்ளையல்ல, மெய்யாகவே நல்ல பிள்ளையென்று உன்பேரில் பட்சமாயிருப்பார்கள்.

**உதாரணம்** : ஒரு பட்டணத்திலே தாயும் தந்தையும் ஆண்டவர் தங்களுக்குக் கொடுத்த இரண்டு பிள்ளைகளோடே வாழ்ந்துகொண்டிருந்தார்கள். ஒருநாள் தகப்பன் பட்டணத்துக்குள் ஒரு அலுவலாய்ப் போக, தாயும் பிள்ளைகளும் காட்டிலே பயிர்வேலை செய்யப் புறப்பட்டார்கள். சாயுங்காலம் பொழுது அடைகிற சமயத்தில் வீட்டுக்குத் தாயும் பிள்ளைகளும் திரும்பி வந்தபோது வீட்டுக்குள்ளே விளக்கு எரிகிறதை இளைய பையன் கண்டு, இதைக் கொளுத்தினது யார்? வீட்டிலே ஒருவரும்

இல்லையே என்றான். அதற்கு மூத்தவன், ஏன், அப்பா தான் நமக்கு முந்திவந்து அதைக் கொளுத்தியிருக்கவேண்டு மென்றான். நிசத்தை அறிகிறதற்குத் தகப்பனை இரு பிள்ளைகளுந் தேடப்போய் அவர் மற்றொரு அறையில் இருக்கிறதைக் கண்டு சந்தோஷித்தார்கள். மறுநாள் எல்லாரும் ஒருமிக்கக் காட்டில் வைக்கோலை உதறி போர் போடப் போனார்கள். அன்று வெயில் நன்றாய் எரித்துக் கொண்டிருந்தது. அப்போது தகப்பன் பிள்ளைகளை நோக்கி, நேற்று சாயந்தரம் விளக்கைக் கொளுத்தினது யாரென்று நீங்கள் சரியாய் நிதானித்துச் சொன்னீர்களே. இந்த வானத்திலிருந்து எவ்வளவு பிரகாசமான தீபம் உலகமெல்லாம் வீசுகிறது! அம்மாத்திரம் அழகிய தீபமாகிய சூரியனை யார் கொளுத்தி எரியப்பண்ணுகிறாரென்று யோசித்தீர்களா என்று கேட்டான். உடனே இளைய பையன், சாமிதான் சூரியனை உண்டாக்கி அது பிரகாசிக்கப் பண்ணுகிறார் என்றான். மூத்தவனோ, தகப்பனை நோக்கி ஒரு சிறு விளக்கு எரியும்படி யாரொருவர் கொளுத்தவேண்டியிருந்தால், பூமி எங்கும் பிரகாசிக்கிற சூரிய வெளிச்சத்தையும் ஒருவர் கொளுத்தித்தான் அது எங்கும் கதிர் வீசப்பண்ணுகிறார். அவரைத்தான் சாமி, **தெய்வம்** என்கிறோமென்றான். இந்த உதாரணத்தாலே புத்தியுள்ளவர்கள் தெய்வம் உண்டென்பதை இலேசாய்க் கண்டுகொள்வார்களென்பது நிட்சயம்.

---

## 2. உலகங்களுக்கெல்லாம் ஒரே தெய்வம், ஒரே இராஜா.

தாய்: மகனே, சர்வேசுரன் ஒருவரென்று உனக்கு இப்போது தெரியுமல்லவா?

பி.: ஆமாம், சர்வேசுரன் என்றால், சகலத்தையும் உண்டாக்குகிறவர், காப்பாற்றுகிறவர், கடைசியிலே அழிக்க வல்லவர், சகலத்துக்கும் இராஜா.



தாய்: சர்வேசுரன் சகல லோகங்களுக்கும் இராஜாவானால், அப்பேர்ப்பட்ட பெயர் இரண்டு பேர்களுக்குச் செல்லுமா?

பி.: செல்லாது.

தாய்: ஏன் செல்லாது?

பி.: இரண்டு பேர்களுக்குச் சென்றால் ஒருத்தரையும் எல்லாத்துக்கும் இராஜாவென்று சொல்லமுடியாது.

தாய்: ஏன் சொல்லமுடியாது?

பி.: இரண்டுபேரும் சரிக்குச் சரியாயிருப்பதால் ஒரு சர்வேசுரன் மற்றொரு சர்வேசுரனுக்கு இராஜாவென்று சொல்லமுடியாது. அப்படிச் சொல்லமுடியாதானால் ஒருத்தருஞ் சர்வேசுரனல்ல.

தாய்: நன்றாய்ச் சொன்னாய். நாம் இருக்கிற இந்தப் பட்டணத்திலே இரண்டு நாட்டாண்மைக்காரர் இருந்தால் பட்டணம் எப்படியிருக்கும்?

பி.: அவர்கள் நான் பெரியவன், நீ பெரியவன் என்று சண்டையிட்டுக்கொள்வார்கள். அதினாலே ஜனங்களுக்குள்ளே கலகம் உண்டாகும். பட்டணம் சீரழியும்.

தாய்: சரி, ஆனால் வானத்துக்கு ஒரு கடவுள், இந்தப் பூமிக்கு ஒரு கடவுளென்று இருந்தால் என்ன குறையுண்டாகும்?

பி.: வானத்துக் கடவுள் சூரியன், சந்திரன், மழையை நிறுத்தினால் பூமி பாழாய்ப்போகும். அப்படிக்கில்லாமல் வானலோக வஸ்துக்கள் இந்தப் பூலோகத்தைக் காப்பாற்றுவதற்கு உதவியாய் நிற்பதால், வானத்தையும் பூமியையும் ஒரு கடவுள்தான் ஆளுகிறார்.

தாய்: அப்படியானால், தேவமாதா, அந்தோனியார், சந்தியாகப்பர், செபஸ்தியார் இவர்கள் சர்வேசுரனா?

பி.: சர்வேசுரனல்ல.

தாய்: ஏன் [illegible]ல்லை?

பி.: அவர்கள் நம்மை[illegible]போலே பிறந்து [illegible] கடைசியிலே செத்துப்போனார்களென்று சரித்திரங்களிலே சொல்லப்பட்டிருக்கிறதினாலே அவர்கள் எல்லாரும் நம்மைப்போலவே உண்டாக்கப்பட்ட வஸ்துக்களாயிருக்கிறார்கள்.

தாய்: அவர்களை ஏன் நீ கும்பிடுகிறாய்?

பி.: அவர்கள் சர்வேசுரனுக்குப் பிரிய சிநேகிதராயிருக்கிறதினாலே அவர்களைக் கும்பிடுகிறேன்.

தாய்: அவர்களுக்கு என்ன பேர் கொடுக்கிறோம்?

பி.: அவர்களை அர்ச்சியசிஷ்டவர்கள் என்கிறோம்.

தாய்: அர்ச்சியசிஷ்டவர்கள் என்கிற சொல்லுக்கு அர்த்தமென்ன?

பி.: அர்ச்சிய என்பது புகழ்ச்சிக்குரிய வணக்கத்துக்குரிய என்றும், சிஷ்ட என்பது நற்குணசாலி என்றும் அர்த்தங்கொள்ளும்.

தாய்: இவ்வுலகத்திலே இராஜாவுடைய சிநேகிதனையும் உத்தியோகஸ்தரையும் வணங்குகிறோமோ இல்லையோ?

பி.: அவர்களையெல்லாம் வணங்குகிறோம்.

தாய்: ஒரு இராஜாவின் உத்தியோகஸ்தரை நீர்தான் எனக்கு இராஜாவென்று வணங்கலாமா?

பி.: அப்படி வணங்குகிறது இராஜ துரோகம்.

தாய்: சரி, தேவமாதா, அந்தோனியாரைப் பார்த்து, நீங்கள்தான் என்னைப் படைத்த சுவாமிகளென்று வணங்கலாமா?

பி.: அப்படி வணங்குகிறது தேவதுரோகம். மகாப் பெரிய பாவம்.

தாய்: கோவிலிலே தேவமாதா, அந்தோனியார், செபஸ்தியார் முதலிய அர்ச்சியசிஷ்டவர்களுடைய சுரூபங்கள் இருக்கிறதே. அந்த சுரூபங்கள்தானா தேவமாதா முதலிய அர்ச்சியசிஷ்டவர்கள்?



பி.: அல்ல; அந்தச் சுரூபங்கள் அவர்களுடைய அடையாளங்கள்.

தாய்: அந்த சுரூபங்களிலே அந்த அர்ச்சியசிஷ்டவர்கள் இறங்கி வந்திருக்கிறார்களோ?

பி.: அதுகளிலே அவர்கள் இறங்கிவருகிறதில்லை.

தாய்: அர்ச்சியசிஷ்டவர்களை நம்மைப் படைத்த சாமியென்று வணங்குகிறதும், அவர்கள் சுரூபங்களில்தான் அந்த அர்ச்சியசிஷ்டவர்கள் இறங்கிவந்திருக்கிறார்களென்று விசுவசிக்கிறதும் என்ன பாவமென்று சொல்லப்படுகிறது?

பி.: அதுதான் மகாப் பெரிய அஞ்ஞானம் என்கிற பாவம்.

தாய்: அப்படியானால் காளி, கருப்பன், மதுரைவீரன் முதலிய பேர்களைக் கும்பிடலாமா?

பி.: அவைகளைப் பரிச்சேதம் கும்பிடப்படாது. அது அஞ்ஞானக் குருட்டாட்டம்.

தாய்: ஏன் அவைகளைக் கும்பிடப்படாது?

பி.: அவைகள் சர்வேசுரனுடைய சத்துருக்கள், பகையாளிகள்.

தாய்: நமக்கும் அவைகள் சத்துருக்களா?

பி.: நமக்கும் பிராண சத்துருக்கள்.

தாய்: அவைகளுக்குப் பேரென்ன?

பி.: பேய்கள், பசாசுகள் என்று அவைகளுக்குப் பேர்.

தாய்: அவைகள் நமக்குப் பிராண சத்துருவென்று ஏன் சொல்லுகிறாய்?

பி.: அவைகள் பிராண சத்துருக்களாயிருப்பதினாலே தான் அஞ்ஞானிகள் முதலாய்ப் பேய்பிடித்தவர்களைச் செருப்பாலே அடித்துப் பேயை விரட்டப் பார்க்கிறார்கள்.

தாய்: ஆனால் சில சமயங்களிலே பேயானது தலைவலி, காய்ச்சல், பீடை, பிணிகளை நீக்குகிறது என்கிறார்களே. இப்படி நீக்குகிறது நல்ல காரியந்தானே?

பி.: நாம் தூண்டில் போட்டு மீனை ஏய்த்துப் பிடித்துக் கொல்லுகிறாப்போலே, பேயானது நம்மை ஏய்த்து ஏமாற்றிக் கெடுக்கப் பார்க்கிறது. அது நமக்குப் பிராண சத்துருவாயிருக்கையிலே நமக்கு மெய்யான நன்மை செய்யவேமாட்டாது.

தாய்: வியாதி போகிறதற்குப் பேய்மந்திரம் பண்ணலாமா?

பி.: ஒருக்காலும் பண்ணப்படாது. அதைச் செய்கிறவன் பேய்க்கு அடிமையாகிறான்.

தாய்: வியாதி வந்தால் என்ன செய்யவேண்டியது?

பி.: சுவாமியின்மேல் நம்பிக்கையை வைத்துத் தெரிந்த மருந்தைச் சாப்பிடவேண்டியது. செத்தாலுஞ் சரி, பிழைத்தாலுஞ் சரியென்று தைரியமாயிருக்கவேணும்.

தாய்: அஞ்ஞானிகளிடத்தில் வைத்தியம் பார்க்கலாமா?

பி.: அவர்கள் சகுன சாஸ்திரம் பார்க்காமலும் மந்திரிக்காமலும் மருந்து கொடுத்தால் அதை வாங்கிச் சாப்பிடலாம்.

தாய்: மந்திரித்துத்தான், சகுன சாஸ்திரம் பார்த்துத்தான் மருந்து கொடுக்கவேண்டியது என்று அஞ்ஞான வைத்தியர் சாதித்தால் என்ன செய்கிறது?

பி.: அவர்களை நீக்கிவிட்டு வேறே வைத்தியர்களைப் பார்க்கவேண்டியது.

தாய்: வேறே வைத்தியர் அகப்படாவிட்டால் என்ன செய்வாய்?

பி.: அது வெகு அபூர்வமாயிருக்கும். மெய்யாகவே அப்படி அகப்படாவிட்டால் சர்க்கார் வைத்தியரிடம் போகலாம்.



தாய்: பேய்மந்திரம் பண்ணக்கூடாது என்பது நியாதான். ஆனால் பேய்க்குப் படைத்ததை வாங்கிச் சாப்பிடலாமா?

பி.: பேயை நமது பரிசுத்த தாயாகிய அர்ச். கன்னிமரியம்மாளும், சம்மனசுகளுக்குத் தலைவரான அர்ச். மிக்கேலும் தங்கள் காலின்கீழ் வைத்து மிதித்து நசுக்குகிறார்களே. அம்மாத்திரம் நீசப்பேய்க்கு நேர்ச்சியாகப் படைக்கப்பட்டதைக் கிறீஸ்துவர்கள் தங்கள் வாயிலே வைப்பது மகா மகா வெட்கக்கேடு. நமது தாயாராகிய மாசில்லாத அர்ச். கன்னிமரியம்மாளுக்கு அது பொறுக்கமுடியாத அவமானம்.

தாய்: அப்படிப் பேயின் சாப்பாட்டை வாங்கித் தின்கிறவர்கள் தேவ கன்னித்தாயை நோக்கி "எங்கள் தாயே" என்று சொல்லலாமோ?

பி.: கூச்சமில்லாமல் சொல்ல நாக்கு எழாது.

தாய்: ஆகையால் இந்தப் பாடத்திலே நீ படித்துக் கொண்டதென்ன?

பி.: (1) உலகத்துக்கெல்லாம் ஒரே சர்வேசுரன்—ஒரே சாமி, ஒரே இராஜா.

(2) சர்வேசுரனுடைய சிநேகிதராகிய அர்ச்சியசிஷ்டவர்களை நாம் வணங்கலாம்.

(3) அஞ்ஞானிகளைப்போலே அநேகம் தெய்வங்கள் உண்டென்று நினைக்கவும்படாது, அவைகளை வணங்கவுங் கூடாது.

(4) பேய்க்குப் படைத்ததைச் சாப்பிடப்படாது. அது அவலமும் ஆவலாதியுமான காரியம்.

(5) பேய்மந்திரம் பண்ணலொண்ணாது. கிறீஸ்து வேத மந்திரத்தோடே பேய் மந்திரத்தைக் கலப்பது அடாத துரோகம்.

தாய்: மெத்த நல்லது. ஆனால் நமது தேசத்திலே இலட்சக்கணக்கான ஜனங்கள் பேய் பூதங்களைக் கும்பிட்டுக் கெட்டுப்போகிறார்களே. அவர்கள் மெய்யான சர்வே

சுரனை அறிந்து [illegible]க்கும்படி இனும் அவர்களுக்கு மன்றாடிவா. இரண்டாவது [illegible]யதான அஞ்ஞான பிள்ளைகளுக்குப் பட்சமாய்ப் புத்தி சொல்லி மெய்யான கடவுளை அவர்கள் அறிந்து அவரை வணங்கும்படி பிரயாசப்படு.

பி.: நீங்கள் சொன்னபடியே செய்கிறேன்.

தாய்: நீ இன்னம் ஒரு காரியம் செய்யவேணும். என்ன தெரியுமா?

பி.: நீங்கள் கற்றுக்கொடுத்தால்தான் தெரியும்.

தாய்: அவஸ்தையாய்க் கிடக்கிற அஞ்ஞானக் குழந்தைகள் ஞானஸ்நானம் பெறும்படி கிறீஸ்துவ சீமைகளிலே பாலர் சபையென்று ஒன்று ஏற்பட்டிருக்கிறது. அதில் கிறீஸ்துவக் குழந்தைகள் தாங்கள் வாங்குகிற பலகாரக் காசில் கொஞ்சம் மிச்சம்பிடித்துச் சபைத்தலைவர்களிடம் அதைக் கொடுக்கிறார்கள். அதை ஒரு தொகையாகச் சேர்க்கிற தலைவர்கள் அஞ்ஞான தேசங்களுக்குப் பகிர்ந்து அனுப்பி, அஞ்ஞானக் குழந்தைகளுக்கு ஞானஸ்நானங் கொடுக்கும்படி தூண்டுகிறார்கள். அநேகம் ஆயிரம் காதவழி தூரத்தில் இருக்கிற அந்தக் கிறீஸ்துவக் குழந்தைகள் நமது தேசத்து அஞ்ஞானப்பிள்ளைகள் மனந்திரும்ப முயற்சியாயிருக்கும்போது அஞ்ஞானிகள் நடுவில் இருக்கிற நீ அவர்களை மறக்கலாமா?

பி.: நானும் எனக்கு நீங்கள் கொடுக்கிற தோசை மிட்டாய்க் காசில் இதுமுதல் மிச்சம்பிடித்துத் தர்மத்துக்குக் கொடுக்கிறேன்.

தாய்: ரொம்ப நல்லது. ஒருவாரத்திலே ஒரு பைசா கொடுத்தால் போதும்.

பி.: நான் ஒருவாரத்துக்கு மூன்று பைசா, முக்கால் துட்டுக் கொடுப்பேன்.

தாய்: அப்படியே செய்துவா. உன்னுடைய தர்மத்தைப் பார்த்துக் குழந்தை சேசுநாதர்சுவாமி உன்னுடைய தாய் தகப்பனையும் ஆசீர்வதிப்பார்.



## திருஷ்டாந்தம்

1. ஒரு வரி[illegible]காரனான ஒரு கிறீஸ்துவன் அவஸ்தையாய்க்கிடந்தான். அவனுடைய வீட்டார் கனம் குருசுவாமியாரை அவஸ்தைக்குக் கூப்பிட்டார்கள். குருசுவாமியாரவர்கள் போய்க் கடைசித் தேவதிரவிய அநுமானங்களை நிறைவேற்றி முடித்துத் தமது கிரகத்துக்குத் திரும்பினார். அதற்குமேல் நடந்ததென்னவெனில், அந்த வீட்டார் விசுவாசக்குறைச்சலினாலே பேய்மந்திரம் பண்ண நினைத்து ஒரு மந்திரக்காரனைக் கூப்பிட்டுப் பேயாட்டங்களை நடத்தி, மூடாத்துமாக்களும் விசுவாசக்குறைச்சலுள்ளவர்களுமான இந்தக் கிறீஸ்துவர்கள் மாட்டுச்சாணிச் சாம்பலை அவஸ்தைக்காரன் வாயிலே போட்டு விழுங்கச் சொன்னார்கள். அவன் அதை விழுங்குகையில் மன்னையடைபட்டுச் செத்தான். ஐயோ, என்ன பரிதாபம், என்ன கொலை பாதகம்! என்ன பயங்கர மரணம்! பேய்கள் அப்போது எவ்வளவோ கூத்தாடியிருக்கும்! இந்த அக்கிரமத்தை முடித்தவர்கள், பிற்பாடு, நல்ல புண்ணியவான்களைப்போலே மரித்தவனுக்கு சத்திய வேத முறைமைப்படி சிறந்த அடக்கஞ்செய்யவேண்டுமென்று யோசித்து கனம் குருசுவாமியார் பாதத்திலே பத்து ரூபாய் காணிக்கை வைத்தார்கள். நடந்த வெட்கக்கேடான காரியம் அவருக்கு எப்படியோ தெரியலானது. விசுவாசமற்ற அந்த வீட்டாருக்கும் மற்றவர்களுக்கும் மனதில் அழுந்தித் தைக்கும்படியான ஒரு புத்தி கொடுக்கவேணுமென்று கருதி, ஜனங்கள் எல்லாரும் கோவிலில்வந்து கூடினவுடனே, சுவாமியார் பீடத்தின் படிமேலேறிச் சபையாரை நோக்கி, கிறீஸ்துவர்களே, நீங்கள் இன்று ஒரு மனிதனைப் பேய்மந்திரம் பண்ணி அவலமாய்ச் சாகடித்துப் பேயின் கையிலே கொடுத்துவிட்டு இப்போது சத்தியவேத முறைமைப்படி அவனுக்கு ஆடம்பரமான அடக்கஞ்செய்ய நினைக்கிறீர்கள். இப்படிக் கள்ளத்தனமாய் நம்மையும் தெய்வத்தையும் ஏய்க்கப் பார்க்கிறீர்களோ? இதோ அவனுடைய அடக்கத்துக்கென்று நீங்கள் நம்மிடம் கொண்டுவந்த ரூபாயை அந்தப் பேயே கொண்டுபோய் நரகத்திலே

விறகுக்கட்டை வாங்கிக்கொள்ளட்டும் என்று சொல்லி அந்தப் பணத்தை சபை நடுவில் விட்டெறிந்துவிட்டு தமது வீட்டுக்கு புறப்பட்டார். ஜனங்களெல்லாரும் திகிலடைந்து வாய்பேசாமல் வெளியே போனார்கள்.

2. ஒரு நல்ல கிறீஸ்தவன் தன்னூருக்கு ஒருமைல் தூரத்திலிருந்த வேறொரு பட்டிக்கிறீஸ்துவர்கள் வேத முறைமைக்கு ஒவ்வாத சில காரியங்களை நடத்துகிறார்களென்று அறிந்து ஒரு ஞாயிற்றுக்கிழமை சாயங்காலம் அவர்களுக்கு நற்புத்தி சொல்லப்போய், பொழுது விடிந்த பிற்பாடு வீட்டுக்குத் திரும்பினான். நடுவழியில் ஏதோ ஒரு முள் குத்தினாற்போல் தோன்றினது. அதை அவன் கவனியாமல் வீடுவந்து சேர்ந்து சாப்பிட்டான். சாப்பிட்டமாத்திரத்தில் நெஞ்சடைப்பு உண்டானது. வீட்டு ஜனங்கள் என்ன காரணமென்று வினவ, அவன் அப்படிக்கு ஒன்றுமில்லை, வந்த வழியில் ஒரு முள் தைத்தாற்போலிருந்தது, நான் அது என்னவென்று கவனியாமல் வந்துவிட்டேன் என்றான். வரவர நெஞ்சடைப்பு சாஸ்தியாகப் பல் கிட்டத் துவக்கிற்று. எல்லாரும் அது விஷமாய்த்தான் இருக்கவேண்டுமென்று நிச்சயித்தார்கள். அதற்கான மருந்தைத் தேடாமல், அந்த ஊரிலே ஏறக்குறைய எல்லோரும் அஞ்ஞானிகளாயிருந்தபடியினாலே, அவர்கள் ஒரு விஷம் இறக்குகிறவனைக் கூட்டிவந்தார்கள். வியாதிக்காரனுடைய வீட்டாரும் அதற்குச் சம்மதித்தபடியால் அந்த மூடப்பேர்வழி சில வேப்பங்குழைகளோடே வீட்டுக்குள் பிரவேசித்தான். வியாதிக்காரன் அவன் என்ன செய்யப்போகிறானென்று உற்றுப்பார்த்துக்கொண்டிருந்தான். வந்த பரமாத்மா வேப்பிலையை அடித்துக்கொண்டு ஏதோ மந்திரம் ஓத ஆரம்பித்தான். உடனே நோயாளி அவன் அப்படிச் செய்யப்படாதென்று வாய் திறந்து சொல்லப்பார்த்தான். பல் கிட்டிக்கொண்டதினாலே வாய் திறக்கமுடியவில்லை. அப்போது அந்த வியாதிஸ்தன் தன் இருகையினாலும் அவனைத்தள்ளி வெளியே போகும்படி செய்தான். பக்கத்திலிருந்தவர்கள் என்ன சொன்னாலும் கேட்கவில்லை. பேயை நம்பிப் பிழைக்கிறதைவிடச் சர்வேசுரனை நம்பிச் சாகிறது நலமென்று ஒரே விசுவாசமாயிருந்து உயிர்விட்டான்.



இவ்விரு வரலாற்றிலும் பேயை நம்பினவனுஞ் செத்தான், சர்வேசுரனை நம்பினவனுஞ் செத்தான். ஆகையால் பேயை நம்பிப் பிழைக்கிறதைவிடச் சர்வேசுரனை நம்பிச் சாகிறதே விசுவாசமுள்ள கிறீஸ்தவனுடைய அறிகுறியென்று உணரக்கடவோம்.

## 3. தெய்வத்தைக் கண்டதார்?

தாய்: மகனே, போன பாடத்திலே ஒரேயொரு கடவுள்தான் உண்டென்று படித்துக்கொண்டாயல்லவா? ஒரே கடவுளுக்கு ஏக கடவுள் என்கிற பேர் கொடுக்கலாமா?

பி.: கொடுக்கலாம். **ஒரே** என்றாலும் **ஏக** என்றாலும் அர்த்தம் ஒன்றுதான்.

தாய்: இந்த ஏக கடவுள் எங்கே இருக்கிறார்?

பி.: கடவுள் எங்கும் இருக்கிறார்.

தாய்: அவர் எப்படி எங்கும் இருக்கக்கூடும்?

பி.: ஆகாயமும் வெளிச்சமும் உலகமெல்லாம் பரவியிருக்கிறதே. அதுபோலே அவைகளை உண்டாக்கின சுவாமி எங்கும் இருக்கிறது அதிசயமல்ல.

தாய்: கடவுள் எங்கும் வியாபித்திருக்கிறார் என்று படிக்கிறோமே. அதற்கு அர்த்தமென்ன?

பி.: வியாபித்திருக்கிறதென்றால் எங்கும் பரவியிருக்கிறதென்று அர்த்தம். சர்வேசுரன் வெளிச்சத்தைப் போலே எங்கும் பரவி நிறைந்திருக்கிறார்.

தாய்: கடவுள் எங்கும் நிறைந்திருந்தால் நமது கண்ணுக்கு ஏன் தெரியவில்லை?

பி.: கடவுள் அரூபியானதால், கண்ணுக்குத் தெரியவில்லை.

தாய்: மனிதர்கள் கடவுளைக் கண்ணால் காணக்கூடாதால், தெய்வத்தைக் கண்டதார் என்னலாமா?

பி.: அது மூடர்கள் பேச்சு; புத்திசாலிகளின் பேச்சல்ல.

தாய்: தெய்வத்தைக் கண்டதார் என்றால் அதற்கு என்ன பதில் சொல்லுவாய்?

பி.: நீ உன்னைச் சூழ்ந்திருக்கிற ஆகாயம் எப்படிப்பட்டதென்று கண்ணாலே பார்த்துச் சொல்லு, இருட்டிலே பூனையைப்போலே எலியைப் பார்த்துப் பிடி, இதையே செய்யக்கூடாத உனக்கு தெய்வத்தை எப்படிக் காட்டுகிறது என்பேன்.

தாய்: தெய்வத்தைக் கண்டதார் என்று வழக்கமாய்க் கேட்கிறவர்கள் யார்?

பி.: இந்த மண்ணாங்கட்டிப் பூமியிலே கொஞ்சநாள் வாழ்ந்தால் போதுமென்று நினைத்து எதேச்சையாய் நடக்கிறவர்கள்தான் அப்படிக் கேட்பார்கள்.

தாய்: தெய்வத்தினுடைய இருப்பு நமக்குத் தெரியாதேபோனால் நம்முடைய இருப்பு தெய்வத்துக்குத் தெரியுமா?

பி.: நம்முடைய இருப்பெல்லாம் தெய்வத்துக்கு நன்றாய்த் தெரியும்.

தாய்: அதெப்படித் தெய்வத்துக்குத் தெரியும்?

பி.: எல்லாத்தையும் படைத்து எங்கும் நிறைந்திருக்கிற தெய்வத்துக்கு எல்லாந்தான் தெரியவேண்டியது.

தாய்: நீ மனதிலே நினைக்கிறதெல்லாம் அவர் அறிகிறாரா?

பி.: நான் மனதிலே நினைக்கிறதென்னவென்றும், விரும்புகிறதென்னவென்றும், வெறுக்கிறதென்னவென்றும் அவருக்கு எல்லாம் வெட்டவெளியாய்த் தெரியும். என் மனதுக்குள்ளே அவர் இருக்கிறார்.

தாய்: சர்வேசுரன் நமது மனதுக்குள்ளே இருந்தால், அதிலே அவர் குடியிருக்கும்படி நாம் செய்யவேண்டுமென்று சொல்லுவானேன்?



பி.: சர்வேசுரன் நமது மனதிலே பிரியத்தோடே இருக்கச்செய்யவேண்டுமென்று படிப்பிக்கிறதற்காக அப்படிச் சொல்லுகிறோம்.

தாய்: உன் மனதிலே சர்வேசுரன் பிரியமாய்க் குடியிருக்கும்படி நீ என்ன செய்யவேண்டியது?

பி.: நான் சர்வேசுரனுடைய கண்ணுக்கு நல்ல பிள்ளையாய் நடக்கவேண்டும்.

தாய்: கெட்ட பிள்ளையாய் நடந்தால் சர்வேசுரன் என்ன செய்வார்?

பி.: சர்வேசுரன் என்மேல் கோபம் வைத்து என்னைத் தண்டிப்பார். அதினால்தான் கெடுதிக்காரரைத் தெய்வங் கேட்கும் என்று எல்லாருஞ் சொல்லுகிறார்கள்.

தாய்: கெட்டவர்களை ஏன் அநேகமாய் உடனேக்குடனே தண்டியாமல் விடுகிறார்?

பி.: இரக்கத்தினாலே பொறுமையாயிருந்து அவர்கள் நல்லவர்களாகும்படி நாள் கொடுக்கிறார்.

தாய்: தெய்வம் பொறுமையாயிருக்க, அவருக்குக் கண்ணில்லையாவென்று கேட்கலாமா?

பி.: அந்த வார்த்தை அடாத தூஷணப் பேச்சு. அது வாயிலே வரப்படாது.

தாய்: சர்வேசுரன் பொறுமையாயிருக்கிறாரென்று எதேச்சையாய் நடக்கலாமா?

பி.: அப்படி நடக்கிறது மகா நன்றிகெட்டதனம்.

தாய்: இராஜாவின் கண்ணுக்குமுன் அவருக்குப் பொருந்தாத காரியத்தைச் செய்வாயா?

பி.: செய்யமாட்டேன்.

தாய்: சர்வேசுரன் எங்கும் நிறைந்து உன்னையும் மற்றச் சகலத்தையும் பார்த்துக்கொண்டிருக்கையிலே அவருக்குப் பிரியமில்லாதவைகளைச் செய்யலாமா?

பி.: ஒருக்காலும் செய்யக்கூடாது.

தாய்: அரசன் அன்று கொல்லும் தெய்வம் நின்று கொல்லும். தெய்வம் பொறுமையுள்ளதாயிருக்கிறதினாலே தண்டிக்கமாட்டாதென்று அர்த்தமல்ல. நல்லவர்களின் மனமில்லாமல் தங்கள் இச்சைப்படி செய்கிறவர்களுடைய தலைமேலே தேவகோபம் ஒருநாள் இடிபோலே வந்து மோதும். ஆகையால் இருட்டிலும் வெளிச்சத்திலும் கூட்டத்திலும் தனிப்படவும் எப்போதும் சர்வேசுரனுக்குப் பயந்து நடந்துவா, மகனே. சர்வேசுரன் உன்னைத் தமது பிள்ளைபோலே ஆதரிப்பார்.

## திருஷ்டாந்தம்.

நமது ஆதித்தகப்பன் தாயாகிய ஆதாம் ஏவாளுக்குக் கடவுள்கொடுத்த முதல் பிள்ளையின் பேர் காயின். இரண்டாம் பிள்ளையின் பெயர் ஆபேல். காயின் ஆளானபிறகு பயிர்த்தொழில் செய்ய ஏற்பட்டான், ஆபேலோ மந்தை மேய்ப்பவன் ஆனான். இவர்களுக்கு ஆதாம் ஏவாள் தெய்வ வணக்கத்தைக் கற்பித்திருந்தபடியால் காயின் தனது விளைச்சலின் பலனிலும், ஆபேல் தன் மந்தையின் ஈற்றுக்களிலும் கடவுளுக்குக் காணிக்கை செலுத்தி வந்தார்கள். ஆனால் காயின் கெட்ட புத்தியுங் கெடும் மனதும் உள்ளவனாய்க் கீழ்த்தரமான பலனை ஆண்டவருக்கு ஒப்புக்கொடுப்பான். அவனுடைய தம்பியாகிய ஆபேலோ, நற்புத்தியும் நல் இருதயமும் உடையவனாய்த் தன் மந்தைகளில் நன்றாய்க் கொழுத்த ஆட்டுக்குட்டிகளைக் காணிக்கையாகப் பலியிடுவான். சுவாமியானவர் இவனுடைய நைவேத்தியங்களைக் கடாக்ஷமாய் ஏற்றுக்கொண்டு காயினுடைய காணிக்கைகளின்மட்டில் பராமுகமாயிருந்தார். சர்வேசுரன் தன் பேரில் பிரியப்படவில்லையென்று உணர்ந்த காயினுடைய முகஞ் சுண்டினது. பொறாமையினாலே தன் தம்பியை விரோதித்துப் பகைக்கத் தொடங்கினான்.

அப்போது ஆண்டவர் காயினை நோக்கி, காயின், உன் முகம் ஏன் விசனமாயிருக்கிறது? உன் செய்கை நல்லதாயிருந்தால், அதை நாம் ஏற்றுக்கொள்ளமாட்டோமா? உன் செய்கை கெடுதலாயிருந்தாலோ, பாவமானது உன் தலைவாசலில் வந்து நிற்குமே, என்று எச்சரித்துவைத்தார்.



கடவுள் உரைத்த புத்தி காயினுடைய மனதில் இறங்கவில்லை. ஒருநாள் அவன் தன் தம்பியை, வெளியே காட்டுக்கு நாம் உலாவப்போவோம் வா, என்று கூட்டிப்போய், ஓரிடத்தில் தனியே இருவரும் இருக்கும்போது, அண்ணனானவன் தம்பியின்மேல் பாய்ந்து அவனைக் கொன்றுபோட்டான். தாய் தகப்பன் கேட்டால், எங்கேயோ போய்விட்டானென்று பொய் சொல்லித் தன் கொலைபாதகத்தை மூடிப்போடலாமென்று சூது எண்ணங்கொண்டிருந்தான். ஆனால் எங்கும் நிறைந்து எல்லாவற்றையும் பார்க்கிற தெய்வத்தை ஏய்க்கமுடியுமோ? இருந்தாப்போலே கர்த்தரானவர் அவனுக்குத் தோன்றி, "காயின், உன் சகோதரன் ஆபேல் எங்கே?" என்றார். "அவன் எங்கேயோ, எனக்குத் தெரியாது. என் சகோதரனுக்கு நான்தானா காவலாளி?" என, சகலத்தையும் அறிகிற கடவுளுக்கு முன்னேயே அவகேடான பொய்யைக் கூச்சமில்லாமல் கக்கினான்.

ஐயோ! காயின் என்ன கன்னெஞ்ச பாதகனானான்! தான் செய்த படுகொலைபாதகத்தை ஒத்துக்கொண்டு அறியாமற் செய்தேனென்று ஆண்டவர் பாதத்திலே பொறுத்தல் கேட்டிருந்தால் அளவற்ற இரக்கம் நிறைந்த கடவுள் அவனுடைய பாவத்தைப் பொறுத்திருப்பாரே. அவன் தன் அகத்தைக் காட்டினபடியால் கடவுள் அவனை நோக்கி, "ஆ! காயின், என்ன செய்தாய்? உன் தம்பியினுடைய இரத்தமானது பூமியினின்று நம்மை நோக்கிக் கதறுகிறதே. கேள், உன் தம்பியின் உதிரத்தை வாய்திறந்து உறிஞ்சின இந்தப் பூமியிலே நீ இன்றுமுதல் சபிக்கப்பட்டவனாய்த் திரிவாய். நீ அதை எப்படித்தான் உழுது பயிரிட்டபோதிலும் பலனொன்றும் அது உனக்குத் தரமாட்டாது. நீ அதிலே வீடு வாசலின்றி நாடோடியாய் அலைந்து மாளுவாய்" என்று தீர்வையிட்டு மறைந்தார். காயின் அப்படியே பரதேசியாய்க் காட்டிலே திரிந்துகொண்டிருக்கையிலே அங்கே ஒரு மனிதன் எய்த அம்பு அசுப்பிலே அவன்மேல் பாயவே, அவன் கீழே விழுந்து அவலமாய்ச் செத்தான்.

இருட்டிலே தனிமையாய் இருக்கும்போது யார் நம்மைப் பார்க்கிறது, இஷ்டம்போல் பாவத்தைத் துணிந்து செய்யலாமென்று நினைக்கிறவர்கள், எல்லா இடத்திலும் இருக்கிற சர்வ வல்லப சர்வேசுரன் தமது சம்மனசுக்கள் புடைசூழ தங்களைப் பார்த்துக்கொண்டிருக்கிறாரென்பதை மறந்துபோகாதிருப்பார்களாக. காயினுக்குக் கிடைத்த சாபத்தைத் தியானித்து நடுநடுங்கிப் பாவ நினைவைத் தள்ளாதேபோனால், தாங்களும் சபிக்கப்படுவார்களென்று அஞ்சக்கடவார்கள்.

---

## 4. தெய்வத்துக்குச் சரீரமுண்டா?

தாய்: போன பாடத்திலே தெய்வம் அரூபியாயிருக்கிறதினாலே கண்ணுக்குத் தெரியவில்லையென்றாயே. இந்த நியாயத்தை நானா உனக்குக் கற்றுக்கொடுத்தேன்?

பி.: இல்லை, சிலபேர் அந்த உயர்ந்த வார்த்தையைச் சொல்லக்கேட்டு நானுஞ் சொன்னேன்.

தாய்: **அரூபி**யென்றால் அர்த்தமென்ன?

பி.: எனக்குத் தெரியாது.

தாய்: தெரியாத வார்த்தை காதிலே விழுந்தால் அதின் அர்த்தம் என்னவென்று அறியும் முன்னே, தெரிந்தவனைப்போலே பேசாதே.

பி.: தெரியாமல் சொல்லிவிட்டேன். தயவுசெய்து அதின் அர்த்தத்தை எனக்கு விளங்கச் சொல்லுங்கள், அம்மா.

தாய்: **அரூபி**யென்றால் யாதொரு உருவும் வடிவும் இல்லாத வஸ்து என்று அர்த்தமாகும். நமது கண்ணானது ரூபமுள்ள வஸ்துக்களையெல்லாம் பார்க்கும்படியான பெலன் உடையதா?

பி.: பெலன் உடையதல்ல. இருட்டிலே ரூபமுள்ள வஸ்துக்கள் நமது கண்ணுக்குத் தெரிகிறதில்லை. பகலிலே தூரத்தில் உள்ள வஸ்துக்கள் கண்ணுக்குப் புகைபோலக்



காணப்படுகிறது. நம்மைச் சூழ்ந்திருக்கிற ஆகாயம் காற்று ரூபம் உடையதாயிருந்தாலும் கண்ணுக்குத் தெரிகிறதில்லை.

தாய்: காற்றுக்கு ரூபம் உண்டென்று ஏன் சொல்லுகிறாய்?

பி.: அதற்கு ரூபம் இருப்பதினாலேதான் அது பிரமாண்டமான மரங்களை முதலாய் வேரோடே விழத்தாட்டுகிறது. வீட்டுக் கூரைகளையும் பிரித்தெறிகிறது. நம்மையும் கீழே தள்ளிவிடுகிறது.

தாய்: நல்ல பதில் சொன்னாய். அப்படியானால் தெய்வத்துக்கு ரூபம் இல்லாதபடியால் நமது கண்ணுக்குத் தெரியவில்லையென்கிறது முழுதும் திருப்தியான மறுமொழியாகுமா?

பி.: ஆகாது. நீங்கள் எனக்குக் கற்றுக்கொடுத்தாப்போலே, தெய்வத்தைப் பார்க்கிறதற்கு நமக்குக் கண் கூர்மை இல்லையென்றால், அது என்னைப்போலே சிறுபிள்ளைகளுக்கு மனதிலே தரிக்கும்படியான நியாயமாயிருக்கிறது; படித்தவர்களும் தடுத்துப் பேசமாட்டார்கள்.

தாய்: அதுவுமல்லாமல், தெய்வத்துக்கு ரூபம் உண்டோ இல்லையோவென்கிற பாடம் இன்னம் நீ படிக்காததினாலே, அவர் அரூபியாயிருக்கிறாரென்று இருந்தாப்போல நீ சொன்னது முன்னும் பின்னும் பாராதவன் பேசுகிற பேச்சாயிருக்கிறது. இதினாலேதான் உன்னுடைய நியாயம் பின்னால் பூனையைக் குறித்துச் சொல்லப்பட்ட விஷயத்தோடே இசையாமல் அந்தரத்திலே நிற்கிறது.

பி.: நீங்கள் சொல்லுகிறது இப்போது எனக்கு நன்றாய் விளங்குகிறது. பூனைக்கு இருட்டிலே எலியைப் பிடிக்கும்படியான கண் கூர்மையிருக்கிறது. நமக்கு அந்தக் கூர்மையில்லை. நாம் நமது கண்ணில் இருக்கிற குறையை உணராமல், இருட்டாயிருக்கிறதினாலே கண்ணுக்குத் தெரியவில்லையென்று இருட்டின்மேலே பழியைப் போடுகிறோம்.

இருட்டிலே தனிமையாய் இருக்கும்போது யார் நம்மைப் பார்க்கிறது, இஷ்டம்போல் பாவத்தைத் துணிந்து செய்யலாமென்று நினைக்கிறவர்கள், எல்லா இடத்திலும் இருக்கிற சர்வ வல்லப சர்வேசுரன் தமது சம்மனசுக்கள் புடைசூழ தங்களைப் பார்த்துக்கொண்டிருக்கிறாரென்பதை மறந்துபோகாதிருப்பார்களாக. காயினுக்குக் கிடைத்த சாபத்தைத் தியானித்து நடுநடுங்கிப் பாவ நினைவைத் தள்ளாதேபோனால், தாங்களும் சபிக்கப்படுவார்களென்று அஞ்சக்கடவார்கள்.

---

## 4. தெய்வத்துக்குச் சரீரமுண்டா?

தாய்: போன பாடத்திலே தெய்வம் அரூபியாயிருக்கிறதினாலே கண்ணுக்குத் தெரியவில்லையென்றாயே. இந்த நியாயத்தை நானா உனக்குக் கற்றுக்கொடுத்தேன்?

பி.: இல்லை, சிலபேர் அந்த உயர்ந்த வார்த்தையைச் சொல்லக்கேட்டு நானுஞ் சொன்னேன்.

தாய்: அரூபியென்றால் அர்த்தமென்ன?

பி.: எனக்குத் தெரியாது.

தாய்: தெரியாத வார்த்தை காதிலே விழுந்தால் அதின் அர்த்தம் என்னவென்று அறியும் முன்னே, தெரிந்தவனைப்போலே பேசாதே.

பி.: தெரியாமல் சொல்லிவிட்டேன். தயவுசெய்து அதின் அர்த்தத்தை எனக்கு விளங்கச் சொல்லுங்கள், அம்மா.

தாய்: அரூபியென்றால் யாதொரு உருவும் வடிவும் இல்லாத வஸ்து என்று அர்த்தமாகும். நமது கண்ணானது ரூபமுள்ள வஸ்துக்களையெல்லாம் பார்க்கும்படியான பெலன் உடையதா?

பி.: பெலன் உடையதல்ல. இருட்டிலே ரூபமுள்ள வஸ்துக்கள் நமது கண்ணுக்குத் தெரிகிறதில்லை. பகலிலே தூரத்தில் உள்ள வஸ்துக்கள் கண்ணுக்குப் புகைபோலக்



காணப்படுகிறது. நம்மைச் சூழ்ந்திருக்கிற ஆகாயம் காற்று ரூபம் உடையதாயிருந்தாலும் கண்ணுக்குத் தெரிகிறதில்லை.

தாய்: காற்றுக்கு ரூபம் உண்டென்று ஏன் சொல்லுகிறாய்?

பி.: அதற்கு ரூபம் இருப்பதினாலேதான் அது பிரமாண்டமான மரங்களை முதலாய் வேரோடே விழத்தாட்டுகிறது. வீட்டுக் கூரைகளையும் பிரித்தெறிகிறது. நம்மையும் கீழே தள்ளிவிடுகிறது.

தாய்: நல்ல பதில் சொன்னாய். அப்படியானால் தெய்வத்துக்கு ரூபம் இல்லாதபடியால் நமது கண்ணுக்குத் தெரியவில்லையென்கிறது முழுதும் திருப்தியான மறுமொழியாகுமா?

பி.: ஆகாது. நீங்கள் எனக்குக் கற்றுக்கொடுத்தாப்போலே, தெய்வத்தைப் பார்க்கிறதற்கு நமக்குக் கண் கூர்மை இல்லையென்றால், அது என்னைப்போலே சிறு பிள்ளைகளுக்கு மனதிலே தரிக்கும்படியான நியாயமாயிருக்கிறது; படித்தவர்களும் தடுத்துப் பேசமாட்டார்கள்.

தாய்: அதுவுமல்லாமல், தெய்வத்துக்கு ரூபம் உண்டோ இல்லையோவென்கிற பாடம் இன்னம் நீ படிக்காததினாலே, அவர் அரூபியாயிருக்கிறாரென்று இருந்தாப்போல நீ சொன்னது முன்னும் பின்னும் பாராதவன் பேசுகிற பேச்சாயிருக்கிறது. இதினாலேதான் உன்னுடைய நியாயம் பின்னால் பூனையைக் குறித்துச் சொல்லப்பட்ட விஷயத்தோடே இசையாமல் அந்தரத்திலே நிற்கிறது.

பி.: நீங்கள் சொல்லுகிறது இப்போது எனக்கு நன்றாய் விளங்குகிறது. பூனைக்கு இருட்டிலே எலியைப் பிடிக்கும்படியான கண் கூர்மையிருக்கிறது. நமக்கு அந்தக் கூர்மையில்லை. நாம் நமது கண்ணில் இருக்கிற குறையை உணராமல், இருட்டாயிருக்கிறதினாலே கண்ணுக்குத் தெரியவில்லையென்று இருட்டின்மேலே பழியைப் போடுகிறோம்.

தாய்: அதுபோலவே, தெய்வத்தை ஏன் பார்க்க முடியாதென்றால், அதற்குக் காரணம் நமது குருட்டுச் சுபாவமென்று சொல்லாமல் தெய்வம் ரூபமில்லாமல் அரூபியாயிருக்கிறதினாலே என்கிறோம். அப்படிச் சொல்லுகிறதிலே பாதகமில்லையென்றாலும், அது நொண்டிக் குதிரைக்குச் சறுக்கினது சாக்கு என்றவாறாய்த்தானிருக்கிறது.

பி.: நான் தெய்வம் அரூபியாயிருக்கிறதென்று தெரியாத வார்த்தையைத் திடகூறாய்ச் சொன்னது பிசகாயிருந்தாலும், அதிலிருந்து எனக்கு எத்தனையோ நல்லறிவைக் கற்றுக்கொடுத்தீர்கள். அதற்கு உங்களுக்கு மிகவும் நன்றியறிந்திருக்கிறேன். ஆனால் தெய்வத்துக்கு ரூபம் இல்லையென்கிறது மெய்தானா? அவருக்குக் கால் கை இல்லையா?

தாய்: தெய்வம் வெளிச்சத்தைப்போலே எங்கும் நிறைந்திருக்கிறதினாலே அவர் நடந்து போகவேண்டியதில்லை. ஆகையால் அவருக்குக் காலில்லை. சகலத்தையும் படைத்துக் காப்பாற்ற வல்லமையுள்ளவர் கைவேலை செய்து பிழைக்கிறவரல்ல. ஆகையால் அவருக்குக் கையில்லை.

பி.: தெய்வத்துக்குக் கண்ணாகிலும் இருக்கவேணுமே. கண்ணில்லாமல் எப்படி நம்மைப் பார்ப்பார்?

தாய்: இதிலேதான் நாம் மோசம்போகிறோம். பார்க்கிறது நமது மனசேயொழிய நமது கண்ணல்ல. கண்ணானது மனதுக்கு இந்த வீட்டின் கதவுபோலே ஒரு கண்ணாடிக் கதவென்று நினைத்துக்கொள். நமது சரீரமோ நமது மனது குடியிருக்கிற ஒரு வீடென்று எண்ணிக்கொள். வீட்டுக்குள் இருக்கிற நாம் கதவு வழியாக வெளியே நடக்கிற காரியங்களைப் பார்க்கிறதுபோலே, நமது மனது கண் வழியாக வெளியே நடக்கிற காரியங்களைப் பார்க்கிறது. இவ்விதமாய்ப் பார்த்த காரியங்கள் மனதுக்குள் பதிந்துபோகிறது. பிறகு கண்களை மூடிக்கொண்டாலும் மனசானது அவைகளைத் தனக்குள்ளே பார்க்கிறது.



பி.: ஆமாம், அம்மா; நான் அழகான நமது கோவிலை பார்த்தபின், அது என் கண்ணுக்குமுன் இல்லாவிட்டாலும் என் மனசுக்குள் இருக்கிறதாகத் தோன்றுகிறது.

தாய்: சர்வேசுரன் எல்லாத்தையும் படைத்தவராதலால் அவருடைய மனதிலே அவர் உண்டாக்கின சகல காரியங்களும் பதிந்திருக்கிறது. அவைகளை அவர் தமது மனதுக்குள்ளே பார்க்கிறார். ஆகையால் அவைகளைப் பார்க்கிறதற்குக் கதவாகிய கண் அவருக்கு வேண்டியதில்லை.

பி.: நீங்கள் சொல்லுகிறது எனக்குத் தெளிவாயிருக்கிறது. சர்வேசுரனுக்குக் கால் கையில்லை, கண்ணுமில்லை. இன்னம் ஒரு சந்தேகம் கேட்கிறேன். சர்வேசுரன் சாப்பிடுகிறதில்லையா?

தாய்: சகல ஜீவப்பிராணிகளையும் உண்டாக்கி அவைகளுக்குத் தினம் படி அளந்து காப்பாற்றுகிறவர், தாம் உண்டாக்கின பதார்த்தங்களைச் சாப்பிட்டுப் பிழைக்கிறதில்லை. அவர் சர்வ வல்லபராயிருப்பதால் அவருக்குப் பசியுமில்லை, வயிறுமில்லை.

பி.: நமது தேசத்து அஞ்ஞானிகள் " எங்கள் சுவாமிகள் சாப்பிடுகிறது " என்கிறார்களே.

தாய்: அப்படிச் சொல்லுகிறதினாலேதான், அவர்கள் கும்பிடுகிற சாமிகள் கட்டுக்கதைச் சாமிகள், தெய்வத்துவம் சிறிதுமில்லாத பேய் பூதங்களென்று கிறீஸ்துவர்களாகிய நாம் அவைகளை நகைக்கிறோம். இது விஷயமாய் வேத புஸ்தகத்திலே எழுதப்பட்டிருக்கிற சரித்திரம் ஒன்று உனக்குத் தெரியுமா?

பி.: எனக்கு நீங்கள் சொல்லாதேபோனால் எப்படித் தெரியும்?

தாய்: நல்லது. அந்தச் சரித்திரத்தைச் சொல்லுகிறேன், நன்றாய்க் கேள்:

## திருஷ்டாந்தம்.

முன்னொருகாலத்திலே தானியேல் என்னும் பேர் கொண்ட ஒரு தீர்க்கதரிசி இருந்தார். தீர்க்கதரிசி என்றால் பின் காலங்களில் நடக்கப்போகிற காரியங்களைக் கடவுளுடைய வரத்தினாலே முன்னமே அறிந்து மற்றவர்களுக்கு அறிவிக்கிறவர் என்று அர்த்தமாகும். இவர் நமது தேசத்துக்கு ஒப்பான ஒரு அஞ்ஞான இராச்சியத்திலே வாசஞ் செய்தார். அந்த இராச்சியத்தாரும் அவர்களுடைய இராஜாவும் பால்சாமி யென்ற ஒரு பூதத்தைத் தெய்வமாகக் கும்பிட்டு வந்தார்கள். நமது தேசத்து ஜனங்கள் பேய் பூதங்களைச் சாமிகளென்று தெண்டனிடுகிறதுபோலே தான் அவர்களும் செய்து வந்தார்கள். தானியேலோ மெய்யான ஏக கடவுளை மாத்திரம் ஆராதித்து வந்தார். இவர் மகாப் புண்ணியவானும் தீர்க்கதரிசியுமாயிருந்தபடியால், இராயன் இவரை வெகு சங்கையோடே நடத்துவான். இப்படியிருக்க, ஒருநாள் இராஜா தானியேலை நோக்கி, "நாங்கள் வணங்குகிற பால்சாமியை நீர் ஏன் கும்பிடுகிறதில்லை? அது சாமியாய் இல்லாவிட்டால் தினம் பன்னிரண்டு படி கோதுமை மாவு ரொட்டி பணியாரங்களையும், நாற்பது ஆடுகளையும், ஆறு சால் முந்திரி இரசத்தையும் சாப்பிடுமா" என்றான். தானியேல் மாறுத்தாரமாக: "நான் சகல லோகங்களையும் படைத்துக் காப்பாற்றுகிற ஏக தெய்வத்தைக் கும்பிடுகிறதேயல்லாமல், கல்லாலும் மரத்தாலும், மண்ணாலும் உண்டாக்கப்பட்ட உயிரற்ற விக்கிரகங்களை ஒருக்காலும் கும்பிடமாட்டேன்" என்றார். அதற்கு இராஜன் "ஏன் அப்படி எங்கள் பால்சாமிக்கு உயிரில்லை என்கிறீர்? தினந்தோறும் அவர் விழுங்குகிற கறியும் இரசமும் நானூறு பேர் சாப்பிட்டும் மிஞ்சிப்போகுமே" என்க, தானியேல் புன்சிரிப்புடனே, "மகா இராஜாவே, நீர் மோசம்போகிறீர். உம்முடைய கோவிலுக்கு நீர் தினம் அனுப்பிய பலி காணிக்கைகளை பால்சாமி புசிக்கிறதென்று கனவிலும் முதலாய் நம்பவேண்டாம். அவைகளையெல்லாம் உம்முடைய வஞ்சகக் குருக்கள் எடுத்து விழுங்கிப் போட்டு, பால்சாமிதான் அவைகளைத் தின்றுவிட்ட



தென்று பித்தலாட்டமாய்ப் பிதற்றுகிறார்கள்" என்றார். இதைக் கேட்டு இராயனுக்குக் கோபம் மூண்டு உடனே தன் குருக்களை வரவழைத்து "கோவிலில் படைக்கப்படுகிற பலிகளைச் சாப்பிடுகிறது யாரென்று உள்ளபடி சொல்லாவிட்டால் உங்களில் அத்தனை பேரையும் சங்காரம் பண்ணுவேன்" என்று பயமுறுத்தினான். பிரட்டு உருட்டுக்கு அஞ்சாத அந்த வயிற்றாண்டிகள் ஆணையிட்டுப் பால்சாமிதான் அந்தப் பலிகளையெல்லாம் பட்சிக்கிறதென்று தலையில் அடித்துப் பேசினார்கள். "அதை நீங்கள் சரியாய் ஒப்பித்தால் நமது சாமியைத் தூஷித்த இந்தத் தானியேலுக்கு மரணம்" என்று அரசன் மொழிந்தான். தானியேலும் அப்படியே ஆகட்டுமென்று ஒப்புக்கொண்டார்.

பிறகு எல்லாரும் ஒருமிக்கக் கோவிலுக்குச் சென்றார்கள். அவ்விடம் சேர்ந்தவுடனே, குருக்கள் அரசனை நோக்கி, "மகா இராஜாதிபதி, நீங்கள் வழக்கம்போலே உங்கள் பலிகளைக் கோவிலுக்குள்ளே வைத்துக் கதவை நன்றாய்ப் பூட்டி முத்திரையிட்டுப் பத்திரம் பண்ணிவிட்டுப் போங்கள். நாளைக் காலையில் தேவரீர் மகாராஜா, தானியேலோடே வந்து பாருங்கள். பால்சாமி அந்தப் பலிகளையெல்லாம் புசியாமல் விட்டிருந்தால் எங்களுக்கு மரணம், அவைகளைப் புசித்திருந்தால் தானியேல் மடியவேண்டும்" என்று கெம்பீரமாய்க் கூறிவிட்டு அக்கிராரம் சென்றார்கள். பிறகு இராயன் வழக்கம்போலே மாவு, ஆடு, இரசம் முதலிய பலிகளைக் கோவிலுக்குள் வைக்கச் செய்தான். அதன்பின் தானியேல் கோவிலின் தளவரிசைப் பரப்பு எங்கும் சாம்பலைத் தாராளமாய்த் தூவும்படி வேலைக்காரரை யேவ, அவர்கள் அவ்வாறே செய்தார்கள்.

மறுநாள் காலையில் இராஜனும் தானியேலும் கோவிலுக்கு வந்து முத்திரை போட்டபடியேயிருக்கிறதைக் கண்டு கதவைத் திறந்தார்கள். உள்ளேயிருந்த காணிக்கைகளெல்லாம் மாயமாய்ப் போய்விட்டதைப் பார்த்து, இராஜா மனம் பூரித்து, ஆ! தானியேல், எங்கள் தெய்வம் மெய்யாகவே உயிருள்ள தெய்வமல்லவா, என்ன சொல்லுகிறாயென்றான். தானியேல், அரசனை உள்ளே போகாதபடி

நிறுத்தித் தரையெங்கும் தூவப்பட்டிருக்கிற சாம்பலை உற்றுப்பார்க்கச்சொல்லி அங்கே பலருடைய கால்கள் பதிந்திருக்கிறதென்று கேட்டார். அரசன் உள்ளே எங்கே பார்த்தாலும் ஆண், பெண், கிழவர், வாலிபர், சிறு பிள்ளைகள் முதலியவர்களுடைய பலவாறான தடங்கள் பதிந்திருக்கிறதைக் கண்ணுற்றுப் பார்த்து, உடனே தன் குருக்களைத் தன் சமுகம் வரப்பண்ணி இந்த விதவிதமான அடிகளெல்லாம் பால்சாமியுடையதோ? உள்ளதை உள்ளபடி வெளியாக்காதேபோனால் நீங்கள் வாளுக்கு இரையாவீர்களென்று வெகுளித்துச் சீறிக்கொண்டு பேசினான். அவர்கள் நடுங்கி பதறி பால்சாமியின் சிலைக்கு அடியிலிருந்து தங்கள் அக்கிராரம் வரையில் பெருச்சாளி வளைபோலே ஒரு சுரங்கப் பாதை போகிறதைக் காட்டினார்கள். அந்த இரகசியமான பாதை வழியாய் அந்தக் குருக்களும் அவர்களுடைய மனைவி மக்களும் இரவில் இரகசியமாய்க் கோவிலுக்குள்ளே புகுந்து உள்ளே அமைக்கப்பட்டிருந்த காணிக்கைகளையெல்லாம் கொண்டுபோய் வயிறு நிறையத் தின்றுவிட்டு எல்லாத்தையும் பால்சாமி புசிக்கிறதென்று பொய் சொல்லித் தன்னை ஏய்த்து வந்ததை இராஜா கண்டவுடனே அத்தனை பேர்களையுங் கொன்றுவிட்டுப் பால்சாமியின் சிலையை தானியேல் வசங் கொடுத்தான். அவர் அதைத் தகர்த்து எறிந்தார்.

இந்த இராஜாவுக்கும் அவனுடைய குருக்களுக்கும் மனக் குருட்டாட்டம் மிஞ்சிப்போனதினாலே, ஒரு தெய்வத்துக்குப் பசியெடுத்துச் சாப்பிடவேண்டியிருந்தால், அது எப்படிச் சகல வல்லமையும் உள்ள தெய்வமாகுமென்று யோசியாமற்போனார்கள். நமது தேசத்திலிருக்கிற அஞ்ஞானிகளும் அவ்வண்ணமே மனக் குருடராய்த் தெய்வம் சாப்பிடுகிறதென்று நம்புகிறார்கள்.

---



## 5. திரியேக சர்வேசுரன்.

**தாய்:** தெய்வத்துக்கு வடிவம் ரூபம் இல்லையென்று இப்போது படித்திருக்கிறாயல்லவா? ரூபம் இல்லாத பொருளுக்கு என்ன பேர் கொடுக்கிறோம்?

பி.: அரூபியென்கிறோம்.

**தாய்:** அரூபியென்றாவது அசரீரி என்றாவது சொல்லலாம். அசரீரி என்றால் அர்த்தமென்ன, தெரியுமா?

பி.: அரூபியென்றால் ரூபம் இல்லாத பொருள் என்கிறாப்போலே அசரீரியென்றால் சரீரம் இல்லாத பொருள் என்றுதான் அர்த்தம் கொள்ளுமாக்கும்.

**தாய்:** ஆமாம், சரியாய்ச் சொன்னாய், சர்வேசுரனுக்கு நம்மைப்போலே சரீரங் கிடையாது. ஆனால் நம்மைப்போலே ஒரு சரீர ரூபம் எடுத்துக்கொண்டு சர்வேசுரன் இந்தப் பூலோகத்துக்கு வரக்கூடுமா?

பி.: அவருக்கு மனதிருந்தால் வரக்கூடும். வரப்படாதென்று தடைசெய்ய வல்லவர் யாருமில்லை. அப்படி வருவதோ அளவற்ற தயவாயிருக்கும்.

**தாய்:** அப்படித் தயவினாலே வந்தாரா?

பி.: ஆம், அளவற்ற தயவு பட்சத்தினாலே சர்வேசுரன் நம்மைப்போலே மனுஷ உருவம் எடுத்துக்கொண்டு இந்த உலகத்துக்கு வந்தருளினார்.

**தாய்:** அவர் இந்த உலகத்துக்கு மனுஷ ரூபமாய் வந்தாரென்று உனக்கு எப்படித் தெரியும்?

பி.: சுவாமி பிறந்த திருநாள் நமது தேசமெங்கும் கொண்டாடப்படுகிறதினாலே எனக்குத் தெரியும். வருஷக் கணக்கும் அந்தப் பிறப்பைக் குறிக்கிறது.

**தாய்:** நமது தேசமெங்கும் அது எப்படி கொண்டாடப்படுகிறது?

பி.: சுவாமி பிறந்த திருநாளைக் கொண்டாடும்படி இராஜாங்கத்தார் கச்சேரி வேலைகளையெல்லாம் ஒரு வாரம் முழுதும் நிறுத்தி எல்லாருக்கும் விடுமுறைநாள் கொடுக்கிற

தினாலே நமது தே[illegible] இந்துக்கள் மகம்மதியர் முதலாய்ச் சுவாமி மனுஷனாய்ப் பிறந்த[illegible] அறிவார்கள்.

தாய் : அப்படி மனித ரூபம் எடுக்கும்படி சித்தமான சுவாமியின் பேரென்னவென்று சொல்லுகிறோம்?

பி. : **இரண்டாம் ஆளாகிற சுதனாகிய சர்வேசுரன்** என்கிறோம்.

தாய் : **இரண்டாம் ஆள்** என்றால் **முதலாள்** ஒருத்தர் இருக்கிறாரோ?

பி. : ஆம், முதலாள் ஒருத்தர் இருக்கிறார். அவருக்குப் பேர் **பிதாவாகிய சர்வேசுரன்.**

தாய் : **பிதா, சுதன்** என்னும் சொற்களுக்கு அர்த்தமென்ன?

பி. : **பிதா** என்றால் தகப்பன், **சுதன்** என்றால் குமாரன், மகன், பிள்ளை.

தாய் : சர்வேசுரன் ஏகதெய்வமாயிருக்கையிலே அவருக்கு எப்படி ஒரு குமாரன் இருக்கலாகும்?

பி. : அது எப்படியென்று எனக்குத் தெரியாது, நீங்கள்தான் சொல்லிக்கொடுக்கவேணும். இது என் புத்திக்கு எட்டாத காரியமாயிருக்கிறது.

தாய் : ஆம், இந்த அதிசயம் மனிதர் புத்திக்கு எட்டாத காரியந்தான். ஆனால் மனித ரூபமெடுத்த சுதனாகிய சர்வேசுரன் அதை அறிவித்தபடியினாலே நாம் அதை விசுவசிக்கிறோம். ஆகையால் பிதாவானவர் நித்தியமாய் பிறப்பிக்கிறவர் அல்லது ஜெனிப்பிக்கிறவர், சுதனோவெனில் பிதாவாலே பிறப்பிக்கப்படுகிறவர் அல்லது ஜெனிப்பிக்கப்படுகிறவர்.

பி. : அப்படியா[illegible]தா பெரியவர், சுதன் சிறியவர் என்கலாமா?

தாய் : அப்படிச் [illegible]ப்படாது. ஏனெனில் பிதாவினுடைய சுபாவம் மு[illegible]ம் யாதொரு குறையின்றிச் சுதனிடத்தில் இருக்கிறதினாலே சுதனுடைய அச்சு பிதா



[illegible]யுடைய அச்சாக இருக்கிற[illegible] ஆகையால் சுதனைப் [illegible]ர்க்கிறவன் பிதாவைப் பார்க்கிறான். ஆகையால் பிதாவுஞ் சுதனும் சரிசமானமாயிருக்கிறார்கள். சுதன் பிதாவினால் நித்தியமாய் ஜெனிப்பிக்கப்படுகிறார் என்பதினால் ஆள்வகையில் வித்தியாசமொன்று தவிர சுபாவத்திலே ஒரு வித்தியாசமுமில்லை. அதினால் பிதா முந்தியிருக்கிறாரென்றும், சுதன் பிந்தி பிறந்தாரென்றும் நினைக்கக் கூடாது. ஏனெனில் பிதாவும் சுதனும் துவக்கமின்றி எப்போதும் இருக்கிறார்கள்.

பி. : சர்வேசுரன் ஒருவராயிருந்தாலும் ஆள் வகையிலே மூவராயிருக்கிறார் என்கிறோமே, அதற்கு அர்த்தம் என்ன, அம்மா?

தாய் : சர்வேசுரன் தேவசுபாவத்திலே ஒருவராயிருந்தாலும், ஆள்வகையில் மூவராயிருக்கிறார். இந்த மூன்றாட்களுக்கும் பிதா, சுதன், இஸ்பிரீத்துசாந்துவென்று பெயர். பிதா வேறே, சுதன் வேறே. இஸ்பிரீத்து சாந்து வேறே. பிதாவும் சர்வேசுரன், சுதனும் சர்வேசுரன், இஸ்பிரீத்து சாந்துவும் சர்வேசுரன். மூவரும் எல்லாத்திலும் சரிசமானமாயிருக்கிறார்கள். ஆதலால், மூவரும் மூன்று சர்வேசுரன் அல்ல, ஒரே சர்வேசுரன்தான். அதெப்படியென்றால், இந்த மூன்றாட்களுக்கும், ஒரே ஞானம், ஒரே சித்தம், ஒரே வல்லமை, ஒரே தேவசுபாவம் இருக்கிறதினால், மூவரும் ஒரே சர்வேசுரன்தான். ஏக சர்வேசுரன் மூன்றாளாயிருக்கிறார் என்பது அர்ச்சியசிஷ்ட திரித்துவத்தின் பரம இரகசியமென்று சொல்லப்படும்.

பி. : பரம இரகசியமாவதென்ன?

தாய் : சர்வேசுரன் [illegible]க்கு வெளிப்படுத்தின சத்தியங்களுக்குள்ளே, நம்முடைய புத்தியினால் அறியவும் கண்டுபிடிக்கவும் கூடாதவைகளான [illegible]யங்களே பரம இரகசியங்களென்று சொல்லப்படும். [illegible]ப்படிப்பட்ட சத்தியங்களைச் சர்வேசுரன்தாமே வெ[illegible]படுத்தியிருக்கிறதினாலே, இவைகளைச் சகலரும் சத்தியமென்று கைக்கொண்டு, [illegible]தியாய் விசுவசிக்கவேண்டியது. நாம் இவ்வுலகில்

இருக்குமளவும், இந்தப் பரம இரகசியங்களைக் கண்டுபிடிக்கக்கூடாதென்றாலும், இவைகளை மோட்சத்தில் தெளிவாய் அறிந்துகொள்வோம். இதுவே மோக்ஷத்தில் நமது புத்திக்குப் பேரின்பமாகும்.

பி.: இந்த மூன்றாட்களுக்கும் தேவ சுபாவத்தில் வித்தியாசமுண்டோ?

தாய்: யாதொரு வித்தியாசமுமில்லை. சுதனுக்கு இருக்கிற சுபாவம் பிதாவினுடைய சுபாவந்தான். இஸ்பிரீத்துசாந்துவுக்கு இருக்கிற சுபாவம் பிதாச் சுதனுடைய சுபாவமே. மூன்றாட்களும் ஒரே தேவ சுபாவத்தைக் கொண்டிராவிட்டால், ஒரே சர்வேசுரனாயிராமல், மூன்று சர்வேசுரர்களாய் இருப்பார்கள். ஒவ்வொரு மனிதனுடைய சுபாவமும் தனித்தனியாய் இருக்கிறதேயன்றி, மற்ற மனுஷ சுபாவங்களோடு கலக்கிறதில்லை. ஆதலால் மூன்று மனிதர்களுக்கு அகத்தியம் மூன்று சுபாவங்களுண்டு. மூன்று தேவ ஆட்களோவென்றால் ஒரே தேவ சுபாவத்தைத் தங்களுக்குச் சொந்தமாகக்கொண்டிருக்கிறார்கள்.

பி.: பரலோகத்தையும் பூலோகத்தையும் படைத்த சர்வத்துக்கும் வல்ல பிதாவாகிய சர்வேசுரனை விசுவசிக்கிறேன் என்று சொல்லுகிறோமே, பிதாவாகிய சர்வேசுரன் மாத்திரம் உலகத்தை சிருஷ்டித்தாரோ?

தாய்: அப்படியல்ல; சிருஷ்டித்தல் மூன்றாட்களாலேயும் செய்யப்பட்ட வேலை. ஏனெனில் சிருஷ்டித்தல் தேவசுபாவத்துக்குரிய கிரிகையானதாலும், மூன்று ஆட்களும் ஒரே தேவ சுபாவத்தைக் கொண்டிருக்கிறபடியினாலும், பிதாவைப்போல சுதனும் இஸ்பிரீத்துசாந்துவும் சர்வ வல்லபமுள்ளவர்களாயும் சகலத்தையும் சிருஷ்டிக்கிறவர்களாயுமிருக்கிறார்கள். [illegible]கிலும் அர்ச். திரித்துவத்தின் மூன்று ஆட்களாலேயும் [illegible]யப்பட்ட வெளிக் கிரிகைகளுக்குள் வல்லபத்துக்க[illegible] கிரிகைகளை பிதாவுக்குமாத்திரம் குறித்துச் சொல்வது [illegible]ழக்கம்; புத்தி ஞானத்துக்கு முக்கியமாய் அடுத்த கிரிகைகளைச் சுதனுக்கு உரியதுபோல்



குறித்துச் சொல்வது வழக்கம்; தேவசிநேகத்துக்கடுத்த கிரிகைகளை இஸ்பிரீத்துசாந்துவுக்கு உரியதுபோல் குறித்துச் சொல்வதுண்டு. அர்ச். திரித்துவத்தின் மூன்றாட்களும், சிருஷ்டிப்பின் வல்லமையைச் சரிசமானமாய்க் கொண்டிருந்தாலும், இரண்டாம் ஆளும், மூன்றாம் ஆளும் பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிறதைக் காண்பிக்கும்படியாக, வேத சாஸ்திரிகள் இவ்வல்லமையைப் பிதாவுக்கே குறித்துச் சொல்லுகிறார்கள்.

பி.: மூன்றாட்களுக்கும் ஒரே ஒரு தேவசுபாவம் இருக்கிறதினாலே, தேவ இலட்சணங்களெல்லாம் அவர்களுக்குப் பொதுவாயிருக்கின்றன என்று சொல்லலாமா?

தாய்: ஆம், அப்படித்தான் சொல்லவேண்டும். ஆதலால் மூன்றாட்களும் அநாதியாயிருக்கிறார்கள்; மூன்றாட்களும் ஒரே சர்வ வல்லபர், ஒரே உத்தமர், சகல நன்மைச்சுரூபி, அளவில்லாத இரக்கமுள்ளவர், ஒரே கர்த்தர். சர்வேசுரன் ஒரே ஒருவராயும் திரித்துவமாயும் இருக்கிறார் என்னும் சத்தியத்தை விசுவசிப்பது இரட்சணியம் அடைய முழுதும் அவசரம்.

பி.: இப்போது கொஞ்சம் கண்டுபிடிக்கிறேன், அம்மா. சர்வேசுரன் சுபாவ வகையில் ஒருவரும், ஆள் வகையில் மூவருமாயிருக்கிறார்.

தாய்: ஆம், சரியாய்ச் சொன்னாய். சர்வேசுரன் சுபாவ வகையில் ஒருவரும், ஆள்வகையில் மூவருமாயிருக்கிறாரென்பது வேத சத்தியம்.

பி.: பிதா, சுதன், இஸ்பிரீத்து என்னும் மூன்றாட்களை திரித்துவம் என்கிறோமே. அதற்கு அர்த்தமென்ன, அம்மா?

தாய்: திரித்துவம் எ[illegible] மூன்றாளாயிருக்கிறது என்று அர்த்தமாகும்.

பி.: நமது தேசத்து [illegible]ஞானிகள் பிரமா, விஷ்ணு சிவன் என்னும் திரிமூர்த்திகள் இருக்கிறதாகச் சொல்லு

கிறார்களே. அம்மூர்த்திகள் ஒரே தெய்வ சுபாவம் உடையவர்களா?

தாய்: (1) திரி என்றால் மூன்று; மூர்த்தி என்றால் சரீர உருவம் என்று அர்த்தம். அஞ்ஞானிகள் பிரமா, விஷ்ணு, சிவன் சரீரமுள்ளவர்களென்று சொல்லுவதினால், அவர்கள் தெய்வங்களேயல்ல.

(2) விஷ்ணுவும் சிவனும் பிரமாவுக்குள்ளிருந்து வராமல் பிரத்திப்பட்டு வருவதால் திரிமூர்த்திகளும் சுபாவத்தில் ஒருமைப்படாத மூன்று தெய்வங்களென்று சொல்ல வேண்டியிருக்கிறது. ஆகையால் அவர்கள் ஒரே சுபாவமுள்ள தெய்வமல்ல.

(3) விஷ்ணு மதத்தார் சிவனைவிட விஷ்ணு பெரிய தெய்வமென்கிறார்கள். சிவமதத்தார், விஷ்ணுவைவிட சிவன்தான் பெரிய தெய்வமென்கிறார்கள். விஷ்ணு மதத்தார் சிவன் கோவிலுக்கு முதலாய்ப் போகமாட்டார்கள். இக்காலத்தில் பிரமா மதத்தாரே கிடையாது. அஞ்ஞானிகளுடைய புராணங்களும் ஒரு மூர்த்தியைவிட இன்னொரு மூர்த்தியை ஏற்றி ஏற்றித் துதிக்கிற ஆதாரமற்ற கதைகளாயிருக்கின்றன. ஆகையால் திரிமூர்த்திகளுக்குத் தெய்வமென்கிற பேர் பரிச்சேதம் செல்லாது.

பிள்ளை: அம்மா, நீங்கள் தயவுசெய்து படித்துக் கொடுத்தவைகளைத் தொகுத்துச் சொல்லுகிறேன்.

(1) தெய்வம் மனிதரூபமெடுத்து இந்த உலகத்துக்கு வந்து, தெய்வம் எப்படிப்பட்டவரென்று மனிதருக்குக் கற்றுக்கொடுத்தார்.

(2) அவர் கற்றுக்கொடுத்தபடி, சர்வேசுரன் ஒரே சுபாவத்தையுடைய மூன்றாட்களாயிருக்கிறார்.

(3) இந்த மூன்றாட்களில் சுதன் பிதாவினிடத்தில் ஜெனிப்பிக்கப்பட்டுப் பிதாவினுடைய உயிருள்ள சரிசாயலாய் ஒரு ஆளாகவிருக்கிறார்.



(4) இஸ்பிரீத்துசாந்து பிதாவிடத்திலும் சுதனிடத்திலும் நின்று எழும்புகிற உயிருள்ள சிநேகமாகிய ஒரு ஆளாகவிருக்கிறார்.

(5) சுதனும் இஸ்பிரீத்துசாந்தும் தனித்தனியே உயிருள்ள வெவ்வேறு ஆட்களாயிருந்தாலும், இம்மூவரும் ஒருவர் ஒருவருக்குள் ஒன்றாய் இருக்கிறார்களேயொழிய, இவ்வுலக தகப்பன் பிள்ளை இருக்கிறதுபோலே ஒருவர் ஒருவருக்குப் புறத்தியிலே இருக்கிறதில்லை.

(6) மூன்றாட்களுக்குள்ளே பெரியவர் சிறியவர், முந்தினவர் பிந்தினவர் இல்லை. மூவரும் ஒருவர் ஒருவருக்குச் சரிசமானமாயிருக்கிறார்கள். அவர்களுடைய ஒன்றான தேவசுபாவம் அவர்களை ஒன்றாக்குகிறது.

(7) அஞ்ஞான திரிமூர்த்திகள் சரீரம் உடையவர்கள்; ஒரே தெய்வ சுபாவம் அவர்களுக்கு இல்லை. அவர்கள் தெய்வங்களேயல்ல.

(8) ஒரே சர்வேசுரன் மூன்றாட்களாயிருக்கிற சத்தியத்தை அர்ச். திரித்துவம் என்கிறோம். அதைப் பரிச்சேதம் திரிமூர்த்தி என்கப்படாது.

தாய்: நான் கற்றுக்கொடுத்தபடி எல்லாம் சரியாய்ச் சொன்னாய். மெத்த சந்தோஷம். அர்ச்சியசிஷ்ட திரித்துவ சத்தியம் இவ்வுலகில் மனிதருடைய புத்திக்குச் சுத்தமாய் எட்டாத பரம இரகசியம். மோட்சத்திலே மாத்திரம் அறியக்கூடிய இரகசியம். இதற்கு ஒரு திருஷ்டாந்தம் சொல்லுகிறேன்.

## திருஷ்டாந்தம்.

உலகத்தில் உண்டான பேர்போன சாஸ்திரிகள் ஞானிகளுக்குள்ளே உயர்ந்தோங்கி விளங்கிவருகிற அர்ச். அகுஸ்தீன் அர்ச். திரித்துவ பரம இரகசியத்தைத் தெளிவாய்த் துலக்கிக் காட்டும்படி ஒரு புஸ்தகம் எழுதக் கருதினார். இந்தச் சிந்தையுடன் ஒருநாள் அவர் கடற்கரை ஓர

மாய் * உலாவிக்கொண்டு ஒரு தெய்வம் எப்படித் தனக்குள்ளே மூன்றாளாயிருக்கிறாரென்று ஆழ்ந்து ஆழ்ந்து யூகித்துக்கொண்டிருக்கையில், ஒரு சிறு பாலன் கரையிலே ஒரு சிறு குழியைத் தோண்டி, அக்குழி நிறையக் கடல் தண்ணீரை ஒரு சிறு சிப்பியிலே எடுத்துவந்து ஊற்றுகிறதைக் கண்டார். கண்டதின்மேல் அந்தப் பாலன் கிட்ட அணுகி: "மகனே, நீ இங்கே என்ன வித்தை செய்கிறாய்" என்று கேட்டார். "நான் கடல் தண்ணீர் அவ்வளவும் இந்தக் குழிக்குள் அடக்கப் பார்க்கிறேன்" என்றான் பாலன். அர்ச். அகுஸ்தீன் "மகனே, இந்த வித்தையைச் செய்ய உலகத்திலே யாராலும் முடியாதே. நீ தோண்டிய குழி எவ்வளவு சிறிது, கடலோ எம்மாத்திரம் பாரியாயிருக்கிறது" என்றார். பாலன், "நான் இந்தக் கடல்நீர் அவ்வளவையும் இந்தக் குழிக்குள் அடக்குவது கூடாத காரியமென்று நீங்கள் சொல்லுகிறீர்கள். அது நிசந்தான். ஆனால் நான் அப்படி அடக்கிப்போட்டபோதிலும், அர்ச். திரித்துவத்தின் பரம இரகசியத்தை நீங்கள் உங்கள் புத்திக்குள் எந்தக்காலத்திலும் அடக்கமாட்டீர்கள்" என்று சொல்லி இருந்தாப்போலே காணாமற்போனான். இந்தப் பாலன் தமக்குப் புத்தி சொல்லவந்த ஒரு சம்மனசு என்று அர்ச். அகுஸ்தீன் உணர்ந்து திரித்துவ பரம இரகசியத்தைப் புத்தியினாலே யூகித்து அளாவி அறிந்துகொள்ளக் கூடுமென்கிற எண்ணத்தை விட்டுவிட்டார்.

---

## 6. மனுஷ அவதாரம்.

*தாய்:* மகனே, சர்வேசுரன் ஒருவராயிருந்தாலும் மூன்றாளாயிருக்கிறாரென்றும், இந்த மூன்றாட்களுக்குள்ளே இரண்டாமாளாகிய சுதனாகிய சர்வேசுரன் மனிதரூபம் எடுத்து இவ்வுலகத்துக்கு வந்தாரென்றும் தெரிந்துகொண்டாய். அவர் மனுஷனாகப் பிறந்து இப்போது எத்தனை வருஷங்களாகிறதென்று தெரியுமா?



*பி.:* 1929 வருஷங்களாகிறது. அவர் நமது தேசத்திலேயா பிறந்தார்?

*தாய்:* இல்லை. அவர் பலெஸ்தினா தேசத்திலே பெத்லேம் ஊரிலே பிறந்தார்.

*பி.:* பலெஸ்தினா தேசம் நமக்கு எந்தத் திசையிலே இருக்கிறதம்மா?

*தாய்:* நமக்கு அது வடமேற்கிலேயிருக்கிறது.

*பி.:* பெத்லேம் ஊருக்கும் சென்னப்பட்டணத்துக்கும் எவ்வளவு தூரம் இருக்கும்?

*தாய்:* 3150 மைல் தூரம் இருக்கும். அவர் பிறந்த மாதம் தேதி உனக்குத் தெரியுமா?

*பி.:* அவர் டிசம்பர்-மீ 25-ம் தேதி நடுச்சாமத்திலே பிறந்தார்.

*தாய்:* அவர் பிறந்த வீடு எப்படிப்பட்டது?

*பி.:* அவர் பிறந்த இடம் ஒரு மாட்டுக்கொட்டில். ஏன் அவர் ஒரு நல்ல வீட்டிலே பிறக்கவில்லை, அம்மா?

*தாய்:* நாம் சுகசெல்வத்தின்மேலே ஆசை வைக்காமல் தரித்திரத்தையும், தரித்திரரையும் மதிக்கும்படிதான். அந்தக் கொட்டிலில் இருந்தது யார்?

*பி.:* தாயாராகிய அர்ச். கன்னிமரியம்மாளும், அர்ச். சூசையப்பருமேயொழிய வேறு ஜனக்கூட்டமில்லை. சில மிருகங்கள் அந்தக் கொட்டிலில் அடைய வந்திருக்கும்.

*தாய்:* அர்ச். கன்னிமரியம்மாளுக்கு வேறே பல பெயர்கள் உண்டா? உனக்குத் தெரிந்த சில பெயர்களைச் சொல்லு.

*பி.:* தேவமாதா, வியாகுலமாதா, ஆரோக்கியமாதா, லூர்துமாதா, அடைக்கலமாதா, உத்தரியமாதா, ஜெபமாலை மாதா, சலேத்மாதா ஆக இப்படி அநேகாநேக பேர்கள் அர்ச். கன்னிமரியம்மாளுடைய பெருபகாரங்களைக் குறிக்கிறது.

தாய் : அர்ச். சூசையப்பர் என்றால் யார் ?

பி. : மனித ரூபம் எடுத்த சுவாமியை வளர்த்தவர். அவருடைய கைத்தாதை.

தாய் : சுதனாகிய சர்வேசுரன் எப்படிப் பிறந்தார் ?

பி. : தேவமாதாவின் கன்னிமைக்குப் பழுதுவராமல், சுதனாகிய சர்வேசுரன், அவளுடைய உதரத்தில் மனித ரூபத்தையெடுத்து, சூரியக் கதிர் கண்ணாடி வழியாய்ப் புறப்படுகிறாப்போலே, அவளுடைய உதரத்தினின்று ஒரு குழந்தையாகப் பிறந்தார். ஆனால், அம்மா, அவர் இஸ்பிரீத்துசாந்துவினாலே உற்பவித்துப் பிறந்தாரென்று சொல்லுவானேன் ?

தாய் : சர்வேசுரன் மனுஷ ரூபம் எடுத்த சகாயம் அளவில்லாத சிநேகத்தின் குறிப்பாயிருக்கிறதினாலே, தெய்வ சிநேக ரூபமாகிய இஸ்பிரீத்துசாந்துவானவர் சுதனாகிய சர்வேசுரனுடைய மனித ரூபத்துக்கு வேண்டிய சரீரத்தையும் ஆத்துமத்தையும் உண்டுபண்ணினாரென்றும், அந்தச் சரீரத்தை மாசற்ற கன்னிமரியம்மாளுடைய இரத்தத்தைக் கொண்டு உருவாக்கினாரென்றுஞ் சொல்லுகிறோம். சுதனாகிய சர்வேசுரனைப்போலே பிதாவும் இஸ்பிரீத்துசாந்துவும் சரீர ரூபம் எடுத்தார்களா ?

பி. : பிதாவும் இஸ்பிரீத்துசாந்துவும் யாதொரு சரீர ரூபமும் எடுக்கவில்லை. ஆயினும் படங்களில் பிதாவாகிய சர்வேசுரனை ஒரு கிழவனாரைப்போலவும் இஸ்பிரீத்துசாந்துவாகிய சர்வேசுரனை ஒரு புறாவைப்போலவும் அல்லது அக்கினி நாக்கைப்போலவுங் காட்டுகிறார்களே. ஏன் அப்படிக் காட்டுகிறார்களென்று எனக்குத் தெரியவில்லையே ?

தாய் : வேத புஸ்தகத்திலே எழுதப்பட்டிருக்கிற சில காட்சிகளில் பிதாவாகிய சர்வேசுரன் ஒரு கிழவனாரைப் போலேயும் இஸ்பிரீத்துசாந்துவாகிய சர்வேசுரன் மாடப் புறாவைப்போலேயும் அக்கினி நாக்கைப்போலேயுந் தோன்றினதினாலே அந்த அடையாளங்களாலே அவர்கள் குறிக்கப்படுகிறார்களேயொழிய அந்த ரூபங்கள் மெய்யாகவே



அவர்களுக்குக் கிடையாது. சுதனாகிய சர்வேசுரன் மனுஷ ரூபமெடுத்துக் குழந்தையாய்ப் பிறந்தபோது அவருக்கு என்ன பெயர் கொடுக்கப்பட்டது ?

பி. : ஜேசு என்னும் பெயர் கொடுக்கப்பட்டது. அதைத் தமிழ்ப் பாஷையில் சேசு அல்லது இயேசு என்கிறோம்.

தாய் : அப்போது அவருக்கு எத்தனை பெயர் ஆகிறது ?

பி. : சுதனாகிய சர்வேசுரன், சேசு ஆக இரண்டு பெயராகிறது.

தாய் : இரண்டு பெயரும் இரண்டு சுபாவத்தைக் காட்டுகிறதல்லவா ?

பி. : ஆமாம், மனித ரூபம் எடுத்த இரண்டாம் ஆள் இடத்திலே தேவ சுபாவம் மனித சுபாவம் ஆக இரண்டு சுபாவமிருக்கிறது.

தாய் : மனித சுபாவம் என்றால் என்ன ?

பி. : மனிதனாயிருக்கிறதுதான் மனித சுபாவம்.

தாய் : மனிதனாயிருக்கிறதற்கு அவசியமாய் வேண்டியதென்ன ?

பி. : மனிதனாயிருக்கிறதற்கு ஒரு சரீரமும் புத்தியுள்ள ஒரு ஆத்துமமும் வேண்டியது.

தாய் : மனித சுபாவத்துக்கும் மிருக சுபாவத்துக்கும் உள்ள வித்தியாசமென்ன ?

பி. : மிருகமாயிருக்கிறதுதான் மிருக சுபாவம். மிருகத்துக்குச் சரீரம் உண்டு : ஆனால் அதனுடைய ஆத்துமம் புத்தியுள்ளதல்ல அது ஜீவாத்துமம் என்று சொல்லப்படுகிறது.

தாய் : புத்தியுள்ள மனித ஆத்துமத்துக்கும் புத்தியில்லாத மிருக ஆத்துமத்துக்கும் வித்தியாசமென்ன ?

பி.: (1) மனித ஆத்துமத்துக்குப் பகுத்தறிவு உண்டு; மிருக ஆத்துமத்துக்கு இல்லை.

(2) மிருக ஆத்துமம் தான் செய்கிற கிரியை நல்லதோ கெட்டதோ, பாவமோ புண்ணியமோவென்று யோசிக்காது. மனித ஆத்துமம் அதையெல்லாம் யோசித்துப் பார்க்கும். அதனாலே மிருகத்துக்குப் பாவ புண்ணியமில்லை, மனிதனுக்கு உண்டு.

(3) மிருகத்துக்குப் பாவ புண்ணியமில்லாததினாலே, அது செத்தபிற்பாடு அதற்குச் சம்பாவனையுமில்லை, ஆக்கினையுமில்லை. மிருகம் சாகும்போது அதினுடைய உயிர் சுத்த சூனியமாய்ப்போகிறது. மனிதனுடைய ஆத்துமத்துக்கோ அவன் செத்தபிற்பாடு, நித்திய பாக்கியமாவது நித்திய ஆக்கினையாவது கிடைக்கும்.

தாய்: தெய்வ சுபாவத்துக்கு வேண்டியதென்ன?

பி.: தெய்வமாயிருக்கிறதுதான் தெய்வ சுபாவம். தெய்வ சுபாவத்துக்குச் சகலத்தையும் படைத்துக் காப்பாற்றுகிற வல்லமை இருக்கவேண்டியது.

தாய்: சேசுநாதர்சுவாமி மெய்யான தெய்வமும் மெய்யான மனிதனுமாயிருக்கிறாரா?

பி.: ஆம், சேசுநாதர்சுவாமி மெய்யான தெய்வமும் மெய்யான மனுஷனுமாயிருக்கிறார். அவர் ஒரே ஆளாயிருந்தாலும் இரண்டு சுபாவம் உடையவராயிருக்கிறார்.

தாய்: சேசு என்கிற பெயருக்கு அர்த்தமென்ன?

பி.: இரட்சிக்கிறவர் என்று அர்த்தமாகும்.

தாய்: இரட்சிக்கிறது என்றால் என்ன?

பி.: பொல்லாப்பை விலக்கிக் காப்பாற்றுகிறதைத்தான் இரட்சிக்கிறது என்று சொல்லப்படும்.

தாய்: சரியாய்ச் சொன்னாய். சேசுநாதர்சுவாமி என்ன பொல்லாப்புகளை விலக்கி நம்மைக் காப்பாற்றினார்?



பி.: நமது ஆதித்தாய் தந்தையர் செய்த பாவத்தினாலே நாமெல்லோரும் தேவசாபத்துக்குள்ளாகி நரகப் பேயின் அடிமைகளாயிருந்தோம். அந்த தேவசாபத்தை நீக்கி பசாசின் அடிமைத்தனத்திலிருந்து நம்மைக் காப்பாற்றினார்.

தாய்: இப்போதும் நம்மைக் காப்பாற்றிவருகிறாரா?

பி.: (1) பசாசையும், (2) நரகத்தையும், (3) பாவத்தையும், (4) சரீரத்துக்கு வருகிற பீடை பிணிகளையும் விலக்கி இப்போதும் காப்பாற்றுகிறார், எப்போதும் காப்பாற்றுவார்.

தாய்: சேசுநாதர்சுவாமி எப்படிப் பசாசையும், நரகத்தையும், பாவத்தையும் விலக்குகிறார்?

பி.: (1) பசாசானது நம்மைச் சோதித்துப் பாவத்திலே விழத்தாட்டி நரகத்துக்கு இழுக்கத் தந்திரஞ் செய்யும்போது, நாம் சேசுவே, சேசுவே என்று முழு நம்பிக்கையோடே கூப்பிட்டால், எல்லாம் நம்மைவிட்டு விலகிப் போம். நாம் பாவத்தில் விழமாட்டோம்.

(2) பலவீனத்தினாலே நாம் யாதொரு பாவத்திலே விழுந்திருந்தால், நல்ல பாவசங்கீர்த்தனத்தினாலே அந்தப் பாவம் விலகிப்போகும்படி சேசுநாதர்சுவாமி செய்கிறார். ஆனால், அம்மா, நமது சரீரத்துக்கு வருகிற வியாதி துன்பங்களையும் சேசுநாதர்சுவாமி விலக்குகிறாரோ?

தாய்: அந்தத் துன்பங்கள் விலகுகிறது நமக்கு நன்மையாயிருந்தால் அவைகளை அவர் விலக்குவார். அதற்கு அத்தாட்சி ஊர்துமாதா, லோரேத்துமாதாக் கோவில்களில் நடக்கிற அற்புதங்கள்.

பி.: சரீர துன்ப பொல்லாங்குகளைச் சேசுநாதர்சுவாமி ஏன் எப்போதும் தவறாமல் விலக்குகிறதில்லை?

தாய்: கெட்டுப்போன நமது சுபாவத்துக்குச் சரீர துன்பங்கள் அநேகாநேகவிசை நல்ல புத்தி கொடுக்கிறதினாலே, சேசுநாதர்சுவாமி அந்தத் துன்பங்களை விலக்காமல்,

இருக்கிறது நமக்குப் பெரிய உபகாரம் என்று சொல்ல வேணும். இதிப்படியிருக்க, பேய் மந்திரங்களினாலே பீடை பிணிகளைப் போக்கப் பார்க்கிறது புத்தியா?

பி.: நமக்குப் பிராண சத்துருவாகிய பேயை அகற்றித் தூரத்தி நரகவாசலை நமக்கு அடைக்க சேசுநாதர்சுவாமி மனிதனாகப் பிறந்தாரென்று அறிந்தபின், அந்தப் பிராண சத்துருவின் காலிலே விழுந்து, அது நமக்கு உபகாரஞ் செய்கிறதுபோலே பாசாங்குபண்ணி நம்மை நரகப்படுகுழியிலே திடீரென்று தள்ளும்படி சம்மதிக்கிறதைவிட மதிகேடில்லை. வீட்டு எலியை விரட்டக் காட்டுப் புலியைக் கொண்டுவந்தாப்போலிருக்கிறது. மண்ணாய்ப்போகிற இந்த உலகத்திலே பசாசை நம்பிப் பிழைக்கிறதைவிட சேசுநாதர்சுவாமியை நம்பிச் சாகிறதே பாக்கியம்.

தாய்: மெய்யான விசுவாசமுள்ள கிறீஸ்துவர்கள் இப்படித்தான் நினைக்கவேண்டியது. நல்லது, நமது சத்திய வேதத்திலே தெய்வமானது மனுஷ ரூபம் எடுத்த விபரம் நன்றாய்த் தெரிகிறது. சேசுநாதர்சுவாமி மனுஷாவதாரம் எடுத்த உபகாரமானது கடவுள் செய்யக்கூடிய உபகாரங்களிலெல்லாம் பெரிய உபகாரமென்று நீ உணரும்படி நான் சொல்லப்போகிற ஒரு வரலாற்றைக் கவனமாய்க்கேள்.

### வரலாறு.

சேசுநாதர்சுவாமி பிறந்த 610-ம் வருஷத்தில் துலுக்கருடைய மதம் முளைத்துக் கிறீஸ்துவர்களுடைய இராட்சியங்களில் சிலவற்றைப் பிடித்துக்கொண்டது. அம்மதத்து இராஜா அல்லது சுல்த்தான் தன் கையில் அகப்பட்ட கிறீஸ்துவர்களைக் கட்டாயமாய்த் துலுக்கராகும்படி செய்வான்; அல்லாவிட்டால் அவர்கள் வாளுக்கு இரையானார்கள். அநேகர் அடிமைகளானார்கள். இந்தப் பாரி நிற்பாக்கியத்தினின்று கிறீஸ்துவர்களை இரட்சிக்கும்படி ஐரோப்பிய தேசத்திலே அடிமை மீட்கும் சபையொன்று ஏற்பட்டது. இந்தச் சபையைச் சேர்ந்தவர்கள் தங்கள் தேசத்திலே பணஞ்சேர்த்து சுல்த்தானுடைய இராட்சியத்துக்குத்



தைரியத்தோடே போய்ப் பணங்கட்டித் தங்களாலே ஆனமட்டும் அடிமைகளாயிருந்த கிறீஸ்துவர்களை மீட்பார்கள். தங்களிடத்தில் துலுக்கர் கேட்ட அளவுக்குப் பணம் இல்லாதபோது, தாங்களே பணம் சேரும்வரையிலே அடிமைகளாயிருந்துகொண்டு ஏழைக் கிறீஸ்துவர்களை மீட்பார்கள். எக்காலத்திலும் கேள்விப்படாத இந்த அற்புத பிறர்சிநேகத்தைத் துலுக்கர் பார்த்து எம்மாத்திரம் ஆச்சரியப்பட்டார்களென்று நாவினாலே சொல்லமுடியாது. மீட்கப்பட்ட கிறீஸ்துவர்களும் தங்களுக்காகப் பிணையாயிருந்த அந்தச் சபையாருக்கு ஆயுசுகாலமெல்லாம் தங்களாலான நன்றியுஞ் சங்கையுங் காட்டிவந்தார்கள். அந்த நன்றி உலகம் முடியும்வரையில் நிலைக்கும்பொருட்டு திருச்சபையிலே அடிமை மீட்கும் மாதா திருநாள் ஒன்று வருஷா வருஷம் நடந்துவருகிறது. இது மகா நியாயந்தானே. ஆனால் இந்தச் சபையார் செய்த உபகாரத்தைவிட, சேசுநாதர்சுவாமி மனுஷ ரூபமெடுத்து நரகப் பசாசின் அடிமைத்தனத்தினின்று உன்னையும் என்னையும் இன்னும் சகல மனிதரையும் இரட்சித்த உபகாரம் எத்தனை ஆயிரம் மடங்கு பெரிதாயிருக்கிறது! அதற்கு நாம் நித்தியகாலமும் எவ்வளவோ நன்றியறிதல் காட்டவேண்டியது! மகனே, சேசுநாதர்சுவாமிக்கு உன்னுடைய நன்றியைக் காட்டவேண்டுமானால், அவருக்குப் பொருந்தாத அக்கிரமத்தைச் செய்யவே செய்யாதே.

---

## 7. கத்தோலிக் வேதமே கிறீஸ்து வேதம்.

தாய்: மகனே, இரண்டாம் ஆளாகிய சுதனாகிய சர்வேசுரன் அர்ச். கன்னிமரியம்மாள் உதரத்திலே மனுஷாவதாரம் எடுத்துப் பிறந்து சேசு என்னும் பெயர் தரித்துக்கொண்டாரென்று கற்றுக்கொண்டாய். நல்லது, சேசுநாதர் இவ்வுலகத்திலே எத்தனை வருஷகாலம் ஜீவித்தார், தெரியுமா?

பி.: முப்பத்துமூன்று வருஷம் இவ்வுலகத்திலே ஜீவித்தார்.

தாய்: அந்த முப்பத்துமூன்று வருஷங்களிலும் அவர் செய்தது என்னவென்று சுருக்கமாய்ச் சொல்லுவாயா?

பி.: சேசுநாதர்சுவாமி முதல் முப்பது வருஷம் வீட்டிலேயே இருந்து தாயும் கைத்தாதையும் ஏவின வேலைகளைச் செய்துகொண்டு வந்தார்; பிறகு மூன்று வருஷம் தமது வேதத்தைப் போதித்தார்; கடைசியாய் நமது பாவங்களுக்கு உத்தரிக்கும்படி சிலுவையிலே அறையுண்டு மரித்தார்.

ஆனால் சேசுநாதர்சுவாமி முப்பது வருஷமாய் ஏன் வீட்டிலேயே அடைபட்டிருந்தாரென்று தெரியவில்லையே?

தாய்: பிள்ளைகள் வளர்ந்து கொஞ்சம் பறக்கக் கற்றுக்கொண்டபிற்பாடு தாய் தகப்பனுடைய வார்த்தையையும் புத்தியையுங் கேளாமல் தங்கள் மனதுக்குத் தோன்றுகிறதுதான் தங்களுக்குச் சட்டமென்று எண்ணி நடக்கிறதினாலே ஆங்காரம் வளர்ந்து உலகம் கெட்டுப்போகிறது. சேசுநாதர்சுவாமி கீழ்ப்படிதலினாலே தாழ்ச்சியைக் கற்றுக்கொடுக்கிறார். இதைக்கொண்டு நீ படித்துக்கொள்ள வேண்டிய புத்தியென்ன?

பி.: மெய்யான தாழ்ச்சிக்கு அறிகுறி கீழ்ப்படிதலாகிய புண்ணியமென்று தெரிகிறது.

தாய்: சரியாய்ச் சொன்னாய். நீ சொன்னாப்போலே பெரியோர்களுக்கு நீ கீழ்ப்படிந்து நடந்துவா; மகனே, அப்போது நீ மெய்யாகவே தாழ்ச்சியுள்ள பிள்ளையாயிருப்பாய். உன்னாலே உலகத்திலே ஒரு கேடும் வராது.

பி.: அம்மா, நீங்கள் கற்பிக்கிறபடியே நான் தடைசொல்லாமல் கேட்டு நடக்கப் பிரயாசப்படுகிறேன். சேசுநாதர்சுவாமி ஞானத்திலும் வரப்பிரசாதத்திலும் வளர்ந்துவந்தாரென்று படிக்கிறோமே. அவரே தெய்வமாயிருக்கையிலே ஞானத்திலும் வரப்பிரசாதத்திலும் வளர்ந்தாரென்று சொல்லுவானேன்?



தாய்: சேசுநாதர்சுவாமி சர்வேசுரன் ஆனதால் அவர் அளவில்லாத ஞானமும் தேவ வரங்களுக்கு ஊற்றுமாயிருக்கிறார். அதினாலே அவர் ஞானத்திலாவது தெய்வ வரங்களிலாவது மெய்யாகவே வளரவில்லை, வளரவுமுடியாது. ஆனால் அவருக்கு வயது வரவர, அவருடைய ஞானமும் மற்றத் தெய்வ வரங்கள் யாவும் மனிதர் கண்ணுக்கு மேன்மேலும் துலக்கமாய் விளங்கினது என்று காட்டும்படி அவைகளில் அவர் வளர்ந்துவந்தார் என்கிறோம். இந்த அதி உன்னத வளர்ச்சியினாலே அவர் அளவின்றி அர்ச்சிக்கப்பட்டவரென்று தெரிவிக்கும்படி அவருக்குக் கிறீஸ்துநாதர் என்னும் பட்டஞ் சூட்டப்படுகிறது.

பி.: அப்படியானால் கிறீஸ்துநாதர் என்றால் அர்ச்சிக்கப்பட்டவரென்று அர்த்தங்கொள்ளும்?

தாய்: கிறீஸ்து என்றால் அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்று அர்த்தமாகும். தமிழ்ப் பாஷையில் அபிஷேகம் என்றால் மந்திரிக்கப்பட்ட தைலம் பூசுதல் என்று அர்த்தங்கொள்ளும். இராஜாக்களும், குருக்களும் பட்டம் பெறும்போது அபிஷேகம் பண்ணப்படுகிறார்கள். இந்த அபிஷேகத்தினாலே அவர்கள் அர்ச்சிக்கப்படுகிறார்களென்று சகலரும் அறிந்துகொள்ளுகிறார்கள். சேசுநாதர்சுவாமி பிதாவாகிய சர்வேசுரனாலே இராஜாவாகவும் நித்திய குருவாகவும் அபிஷேகம் பண்ணப்பட்டவரென்று சகலரும் உணரும்படி அவரை சேசுக்கிறீஸ்துநாதர் என்கிறோம்.

பி.: சேசுக்கிறீஸ்துநாதர்சுவாமி கடைசி மூன்றுவருஷமளவாய்ப் போதித்த வேதத்தின் சாரம் என்ன, அம்மா?

தாய்: கிறீஸ்துநாதர் தமது ஆயுசுகாலமெல்லாம் பாலப்பிள்ளைபோலே தமது தேவபிதாவுக்குத் தாழ்ச்சியோடே கீழ்ப்படிந்து வந்தார். அவருடைய வேதபோதனையும் அவருடைய நடத்தைக்கு இசைந்ததாயிருந்தது. ஒரு நாள் ஒரு பாலப்பிள்ளையைத் தமது சீஷர்களுக்கு முன்பாக நிறுத்தி, "நீங்கள் மனந்திரும்பி இந்தப் பாலனைப்போலே

ஆகாதேபோனால் மோக்ஷ இராச்சியத்திலே பிரவேசிக்க மாட்டீர்கள்" என்றார்.

பி.: வளர்ந்து, வேண்டிய புத்தியும் அறிவும் இருக்கும்போது, பாலப்பிள்ளைபோலே ஆகிறதெப்படி?

தாய்: (1) பாலப்பிள்ளை தன் புத்தியை நம்பாமல் தாய் புத்தியை நம்பி நடக்கும். அவ்வாறே நாம் சேசுநாதர்சுவாமியால் நமக்கு மெய்யாகவே தாயாகக் கொடுக்கப்பட்டிருக்கிற சத்திய திருச்சபையின் புத்தியை நம்பி, அது படிப்பிக்கிற சத்தியங்களை உறுதியாக விசுவசித்து நடக்கவேண்டியது.

(2) பாலப்பிள்ளை தனது தாயைப் பூரணமாய்ச் சிநேகிக்கும். அப்படியே நாம் எந்தத் தாயையும்விட அளவின்றி நம்மைச் சிநேகிக்கிற சர்வேசுரனை எல்லாத்துக்கும் மேலாகச் சிநேகிக்கவேண்டியது.

(3) பாலப்பிள்ளை புறத்தியார் எல்லாரும் நன்றாயிருக்கவேண்டுமென்று நினைக்குமேயொழிய, அவர்கள் கெட்டுப்போகவேண்டுமென்று நினையாது. அவ்வண்ணமே நாம் நன்றாயிருக்கவேண்டுமென்று விரும்புகிறாப்போலே சகலரும் நன்றாயிருக்கவேண்டுமென்று ஆசிக்கவேண்டியது.

(4) பாலப்பிள்ளை மற்றவர்களால் வரும் துன்பத்தை இலேசாய் மறந்துவிடும். அவ்விதமே நாம் புறத்தியாரால் நமக்குத் துன்பம் வரும்போது பழிவாங்க நினையாமல் மன்னித்துக்கொள்ளவேண்டியது.

(5) பாலப்பிள்ளையிடத்தில் தோன்றுகிற துர்க்குணச் சாடைகள் பெரியோர் உதவியால் இலேசாய்த் திருந்தக் கூடியவைகளாயிருக்கிறது. அதுபோலவே நம்மிடத்தில் முளைக்கிற துர்க்குணங்கள் வேர் ஊன்றாமல் நாம் இலேசாய்ப் பிடுங்கி எறியக்கூடிய வண்ணம் பெரியோர் சொல்லுக்கு இணங்கி நடக்கவேண்டியது.

(6) இந்தப் போதனைகளை சேசுநாதர்சுவாமி தொகுத்து: 1-வது. எல்லாத்தையும் பார்க்கச் சர்வேசுரனைச்



சிநேகி, 2-வது. உன்னைப்போலே புறத்தியாரையுஞ் சிநேகி, 3-வது. தாழ்ச்சியுஞ் சாந்தகுணமும் உடைத்தாயிரு என்று சுருக்கமாய்க் கற்பிக்கிறார். ஆகையால் சேசுநாதர்சுவாமியுடைய வேதம் சிநேகத்திலேயும் தாழ்ச்சி கீழ்ப்படிதலிலேயும் வேர் ஊன்றியிருக்கிறது.

இந்த வேத போதனைகளை விசேஷமாய் யாருக்குக் கற்பித்தார், தெரியுமா?

பி.: அப்போஸ்தலர்கள் என்று சொல்லப்பட்ட தமது சீஷர்களுக்கு அவைகளை விசேஷமாய்க் கற்றுக் கொடுத்தார். ஆனால் இந்த வார்த்தைகளுக்குரிய பொருள் என்னவென்று எனக்குச் சரியாய்த் தெரியவில்லை.

தாய்: சீஷன் என்றால் ஒரு வேலைசெய்யக் கற்றுக் கொள்ள விரும்புகிறவனென்றும், அடக்கம், வணக்கம், தாழ்ச்சியுள்ளவனென்றும், ஒரு குருவிடத்திலே ஞானம் படிக்கிறவனென்றும் பொருள்கொள்ளும். அப்போஸ்தலர் என்பது அங்கங்கே அனுப்பப்பட்டவர்கள் என அர்த்தம் பெறும்.

சேசுக்கிறீஸ்துநாதருடைய அப்போஸ்தலர்கள் எங்கெங்கே அனுப்பப்பட்டார்கள், தெரியுமா?

பி.: சேசுநாதர்சுவாமி தமது அப்போஸ்தலர்களை நோக்கி, உலகத்தின் எத்திசையிலும் நீங்கள் போய் நாம் படிப்பித்த வேதசத்தியங்களை ஒன்றாகிலும் விடாமல் சகல ஜாதி ஜனங்களுக்கும் போதியுங்கள் என்று கட்டளையிட்டார்.

தாய்: அப்போஸ்தலர்கள் எத்தனை பேர்? அவர்களுடைய பெயர்களென்ன?

பி.: பன்னிரண்டு பேர்கள்: (1) பேத்ரு அல்லது இராயப்பர், (2) அவருடைய சகோதரராகிய அந்திரேயாஸ் அல்லது பிலவேந்திரர், (3) யாக்கோபு அல்லது யாகப்பர், (4) அவருடைய சகோதரராகிய ஜோவான்னஸ் அல்லது அருளப்பர், (5) பிலிப்பு, (6) பர்த்தலோமை,

(7) மத்தேயுஸ், (8) தோமாஸ் அல்லது தீதிமுஸ், (9) அல்பேயின் மகனான (சின்ன) யாகப்பர், (10) அவருடைய சகோதரராகிய யூதா அல்லது ததேயுஸ், (11) சீமோன், (12) யூதாஸ் இஸ்காரியோத்.

தாய்: சேசுநாதர்சுவாமி தமது வேத போதனைகளை எழுதிக்கொடுத்தாரோ அல்லது எழுதும்படி கட்டளையிட்டாரோ?

பி.: அதுவுமில்லை, இதுவுமில்லை. உலகமெங்கும் போய் வாய்மொழியாய்ப் பிரசங்கிக்கும்படி அப்போஸ்தலர்களுக்குக் கற்பித்தார். ஆனால் புரோட்டெஸ்டாண்டாராகிய பதிதர் சுவிசேஷம் என்னும் புத்தகத்தைக் கையிலெடுத்துக்கொண்டு, கிறீஸ்துநாதரின் வேதத்தை இந்த சுவிசேஷ புத்தகத்தை வாசித்துத்தான் கற்றுக்கொள்ள வேண்டும் என்று சாதிக்கிறார்களே, அது சரியா?

தாய்: (1) அவர்கள் சேசுநாதர்சுவாமி வெகு தெளிவாய்க் கற்பித்த முறையைத் தள்ளிப்போட்டுச் சுவிசேஷ புத்தகத்தை அவசியம் வாசித்துக் கிறீஸ்து வேதத்தை அறிந்துகொள்ளவேண்டுமென்று பிதற்றுகிறதினாலேதான் அவர்களை புரட்டுகிற புரோட்டெஸ்டாண்டார் என்கிறோம். இந்தப் பெயரும் அவர்களால் 1529-ம் வருஷத்தில் ஏற்றுக்கொண்ட பெயர்தான்.

(2) சுவிசேஷத்தை வாசித்துத்தான் கிறீஸ்து வேதத்தை அறியவேண்டுமென்றால் இந்த இருபது நூற்றாண்டுகளிலும் கணக்கற்ற கிறீஸ்துவர்கள் பள்ளிக்கூடங்களில் படிக்காமல் பல வேலைசெய்து பிழைத்து மரணித்திருக்கிறார்களே, அவர்கள் கிறீஸ்து வேதத்தை அறியாமல் போனார்களென்று சொல்லப்படுமோ?

(3) இந்த இருபது நூற்றாண்டுகளுக்குள்ளே சுவிசேஷ புத்தகத்தை வாசித்தவர்களில் ஒவ்வொருவரும் அதில் எழுதப்பட்டிருக்கிற போதனைகளைச் சரியாய்க் கண்டு அறிந்தார்களென்று சொல்லக்கூடுமோ?



பி.: கிறிஸ்துவர்களுக்குள்ளே ஒன்றுக்கொன்று ஒவ்வாத பிரிவினைகளிருக்கிறதினாலே எல்லாரும் சுவிசேஷத்தைச் சரியாய் அறிந்துகொண்டார்களென்று சொல்ல இடமேயில்லை.

தாய்: அப்படியானால் பிரிவினைகளை ஒழித்து ஒற்றுமையை வேதவிஷயத்திலே உண்டாக்குகிறதற்கு வழியென்ன?

பி.: வேதவிஷயங்களிலே சந்தேகங்களைக் கேட்டு நிவர்த்தியாக்கி, சேசுநாதர்சுவாமி படிப்பித்த போதனை இன்னது, அதற்கு இசைந்த போதனை இன்னது என்று கூறும்படியான ஒரு அதிகாரி வேண்டியது.

தாய்: இவ்விதமான அதிகாரியை சேசுநாதர்சுவாமி தமது வேதத்திலே ஏற்படுத்தினாரா?

பி.: ஆம், அர்ச். இராயப்பரை மற்ற அப்போஸ்தலர்களுக்கும் சீஷர்களுக்கும் தலைவராக ஏற்படுத்தினார். ஏற்படுத்தினாரென்று ஒப்பிக்கிறதெப்படி, அம்மா?

தாய்: (1) அப்போஸ்தலர் காலம் முதல் இதுவரையில் தலைமுறை தலைமுறையாய் எத்தேசத்திலும் விளங்குகிற இலட்சாதி இலட்சம் கிறீஸ்துவர்களுடைய விசுவாசமும், (2) அக்காலமுதல் இதுவரையில் கிறீஸ்து வேதத்தைப்பற்றி எழுதப்பட்டிருக்கிற சரித்திர வரலாற்றுப் புத்தகங்களும், அர்ச். இராயப்பர் கிறீஸ்து வேதத்துக்கு சேசுநாதர்சுவாமியால் தலைவராக நியமிக்கப்பட்டாரென்று அத்தாட்சியாயிருக்கிறது. இந்தப் புத்தகங்களில் பதித மார்க்கத்தார் அங்கீகரித்து ஏற்றுக்கொண்டுவருகிற சுவிசேஷமே பிரதான சாட்சி. அர்ச். இராயப்பர் இறந்துபோனாரே, அவருடைய அதிகாரம் யார் கையிலிருக்கிறது?

பி.: அர்ச். இராயப்பருடைய ஸ்தானத்திலிருக்கிற அர்ச். பாப்பானவரிடத்தில் அவருடைய அதிகாரம் இருக்கிறது. அர்ச். பாப்பு அர்ச். இராயப்பருடைய ஸ்தானத்தில் இருக்கிறாரென்று ஒப்பிக்கிறதெப்படி?

தாய்: (1) அர்ச். இராயப்பர் காலமுதல் தொன்றுதொட்டு எத்தேசத்திலும் இதுவரையில் தலைமுறை தலைமுறையாய் விளங்குகிற கணக்கற்ற கிறீஸ்துவர்களுடைய விசுவாசமும், (2) அக்காலமுதல் இதுவரையில் எழுதப்பட்ட கிறீஸ்துவேத சரித்திர உலக சரித்திரப் புத்தகங்களும் அத்தாட்சியாயிருக்கிறது. அந்தப் புத்தகங்களில் அர்ச். இராயப்பருக்குப்பின் அவருடைய ஸ்தானத்தில் வரிசைக்கிரமமாய் வந்த அர்ச். பாப்புமார்களுடைய நாமங்களின் அட்டவணையைப் பார்க்கலாம். இந்த அட்டவணையைப் பதிதர் எழுதின சரித்திரப் புத்தகங்களிலும் காணலாம். (*cf.* Cassell's Concise Cyclopœdia.)

(3) அப்படி அர்ச். இராயப்பர் ஸ்தானத்திலே அர்ச். பாப்புமார்கள் இல்லையென்றால், அப்போது அர்ச். இராயப்பருடைய ஸ்தானத்திலே வேறே யாரும் இல்லாததினாலே அவருடைய அதிகாரம் அவரோடே அழிந்துபோயிற்று என்கவேண்டும். அது அழிந்துபோனால் கிறீஸ்து வேதமும் பற்பல பிரிவினைகளாய்ப் பிரிந்துபோய் ஒன்றோடொன்று மோதி உடைந்து உருப்படாமற்போயிற்றென்று மதிக்கப்படும். அவ்வாறு மதித்தால் சேசுநாதர்சுவாமி மனித ரூபமெடுத்து மனிதரை இரட்சிக்க வந்ததினாலே ஒரு பிரயோஜனமுமில்லையென்று முடிவு கட்டத்தகும். சேசுநாதர்சுவாமி உலகத்தை இரட்சிக்க வந்ததினாலே யாதொரு நன்மையும் விளையவில்லையென்று பரிச்சேதம் சொல்லப்படாதென்கிறதினாலே, அர்ச். பாப்புமார்கள் அர்ச். இராயப்பருடைய ஸ்தானத்திலே இருக்கிறார்களென்கிறது சத்தியமான காரியம்.

தாய்: பாப்பானவர் என்றால் அர்த்தமென்ன?

பி.: தகப்பன் என்று அர்த்தமாகும்.

தாய்: அவருடைய அதிகாரத்துக்குள் அடங்கியிருக்கிற கிறீஸ்துவர்களுடைய சபைக்கு என்ன பெயர் வழக்கமாய்க் கொடுக்கப்படுகிறது?

பி.: கத்தோலிக் திருச்சபை அல்லது ரோமன் கத்தோலிக் திருச்சபையென்னும் பெயர் கொடுக்கப்படுகிறது.



தாய்: ரோமன் என்று சொல்லுவானேன்?

பி.: திருச்சபைக்குத் தலைவராகிய அர்ச். பாப்பு ரோமாபுரியென்னும் பட்டணத்தில் இருக்கிறதினாலேதான்.

தாய்: கத்தோலிக் என்றால் அர்த்தமென்ன?

பி.: கத்தோலிக் என்பது பொது என்று அர்த்தங்கொள்ளும். கர்த்தர் கட்டளைப்படி உலகத்தில் உள்ள சகல தேசத்தாருக்கும் சகல ஜாதி ஜனங்களுக்கும் போதிக்கப்படவேண்டிய சபையென்றும், சகல மனிதரும் சேரவேண்டிய ஏக வேத சபை அது ஒன்றே தவிர வேறு வேத சபையில்லையென்றும் காட்டும்படி கத்தோலிக் என்கிற பெயர் அர்ச். பாப்புவினுடைய அதிகாரத்துக்கு உட்பட்ட கிறீஸ்துவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது.

தாய்: சேசுநாதர்சுவாமி ஏற்படுத்தின திருச்சபையிலே ஒற்றுமையைக் காப்பாற்றுகிறதற்கு ஒரு தலைவர் வேண்டுமென்று நீ உணரும்படி பின்வரும் வரலாற்றைக் கேள்.

## வரலாறு.

பன்னிரண்டு அப்போஸ்தலர்களில் ஒருவனாகிய யூதாஸ் இஸ்காரியோத் அவலமாய்ச் செத்தபோது அப்போஸ்தலர்களுடைய கணக்கு பதினொன்று ஆகிவிட்டதல்லோ. சேசுநாதர்சுவாமி பரலோகத்துக்கு எழுந்தருளிப்போன பிற்பாடு அப்போஸ்தலர்களும் இன்னும் பல சீஷர்களும் இஸ்பிரீத்துசாந்துவின் வருகைக்குக் காத்துக்கொண்டிருக்கும்போது, அர்ச். இராயப்பர் எழுந்து மற்றச் சபையாரைப் பார்த்து, சேசுநாதர்சுவாமி குறித்த பன்னிரண்டு அப்போஸ்தலர்களுடைய கணக்கு சரிவர நிற்கும்படி யூதாஸுக்குப் பதிலாய் சேசுநாதர்சுவாமியை அறிந்த சீஷர்களில் ஒருவரை அவசியம் தெரிந்துகொள்ளவேண்டுமென்று அறிவித்தார். அப்போது கூடியிருந்த சபையார் இரண்டு சீஷர்களைக் குறிப்பிட்டு ஆண்டவரைப் பார்த்து: "சகல இருதயங்களையும் அறிகிற தெய்வமே, இந்த இரண்டு பேர்களில்

தாய்: (1) அர்ச். இராயப்பர் காலமுதல் தொன்று தொட்டு எத்தேசத்திலும் இதுவரையில் தலைமுறை தலைமுறையாய் விளங்குகிற கணக்கற்ற கிறீஸ்துவர்களுடைய விசுவாசமும், (2) அக்காலமுதல் இதுவரையில் எழுதப்பட்ட கிறீஸ்துவேத சரித்திர உலக சரித்திரப் புத்தகங்களும் அத்தாட்சியாயிருக்கிறது. அந்தப் புத்தகங்களில் அர்ச். இராயப்பருக்குப்பின் அவருடைய ஸ்தானத்தில் வரிசைக்கிரமமாய் வந்த அர்ச். பாப்புமார்களுடைய நாமங்களின் அட்டவணையைப் பார்க்கலாம். இந்த அட்டவணையைப் பதிதர் எழுதின சரித்திரப் புத்தகங்களிலும் காணலாம். (*cf.* Cassell's Concise Cyclopœdia.)

(3) அப்படி அர்ச். இராயப்பர் ஸ்தானத்திலே அர்ச். பாப்புமார்கள் இல்லையென்றால், அப்போது அர்ச். இராயப்பருடைய ஸ்தானத்திலே வேறே யாரும் இல்லாததினாலே அவருடைய அதிகாரம் அவரோடே அழிந்துபோயிற்று என்கவேண்டும். அது அழிந்துபோனால் கிறீஸ்து வேதமும் பற்பல பிரிவினைகளாய்ப் பிரிந்துபோய் ஒன்றோடொன்று மோதி உடைந்து உருப்படாமற்போயிற்றென்று மதிக்கப்படும். அவ்வாறு மதித்தால் சேசுநாதர்சுவாமி மனித ரூபமெடுத்து மனிதரை இரட்சிக்க வந்ததினாலே ஒரு பிரயோஜனமுமில்லையென்று முடிவு கட்டத்தகும். சேசுநாதர்சுவாமி உலகத்தை இரட்சிக்க வந்ததினாலே யாதொரு நன்மையும் விளையவில்லையென்று பரிச்சேதம் சொல்லப்படாதென்கிறதினாலே, அர்ச். பாப்புமார்கள் அர்ச். இராயப்பருடைய ஸ்தானத்திலே இருக்கிறார்களென்கிறது சத்தியமான காரியம்.

தாய்: பாப்பானவர் என்றால் அர்த்தமென்ன?

பி.: தகப்பன் என்று அர்த்தமாகும்.

தாய்: அவருடைய அதிகாரத்துக்குள் அடங்கியிருக்கிற கிறீஸ்துவர்களுடைய சபைக்கு என்ன பெயர் வழக்கமாய்க் கொடுக்கப்படுகிறது?

பி.: கத்தோலிக் திருச்சபை அல்லது ரோமன் கத்தோலிக் திருச்சபையென்னும் பெயர் கொடுக்கப்படுகிறது.



தாய்: ரோமன் என்று சொல்லுவானேன்?

பி.: திருச்சபைக்குத் தலைவராகிய அர்ச். பாப்பு ரோமாபுரியென்னும் பட்டணத்தில் இருக்கிறதினாலேதான்.

தாய்: கத்தோலிக் என்றால் அர்த்தமென்ன?

பி.: கத்தோலிக் என்பது பொது என்று அர்த்தங்கொள்ளும். கர்த்தர் கட்டளைப்படி உலகத்தில் உள்ள சகல தேசத்தாருக்கும் சகல ஜாதி ஜனங்களுக்கும் போதிக்கப்படவேண்டிய சபையென்றும், சகல மனிதரும் சேரவேண்டிய ஏக வேத சபை அது ஒன்றே தவிர வேறு வேத சபையில்லையென்றும் காட்டும்படி கத்தோலிக் என்கிற பெயர் அர்ச். பாப்புவினுடைய அதிகாரத்துக்கு உட்பட்ட கிறீஸ்துவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது.

தாய்: சேசுநாதர்சுவாமி ஏற்படுத்தின திருச்சபையிலே ஒற்றுமையைக் காப்பாற்றுகிறதற்கு ஒரு தலைவர் வேண்டுமென்று நீ உணரும்படி பின்வரும் வரலாற்றைக் கேள்.

## வரலாறு.

பன்னிரண்டு அப்போஸ்தலர்களில் ஒருவனாகிய யூதாஸ் இஸ்காரியோத் அவலமாய்ச் செத்தபோது அப்போஸ்தலர்களுடைய கணக்கு பதினொன்று ஆகிவிட்டதல்லோ. சேசுநாதர்சுவாமி பரலோகத்துக்கு எழுந்தருளிப்போன பிற்பாடு அப்போஸ்தலர்களும் இன்னும் பல சீஷர்களும் இஸ்பிரீத்துசாந்துவின் வருகைக்குக் காத்துக்கொண்டிருக்கும்போது, அர்ச். இராயப்பர் எழுந்து மற்றச் சபையாரைப் பார்த்து, சேசுநாதர்சுவாமி குறித்த பன்னிரண்டு அப்போஸ்தலர்களுடைய கணக்கு சரிவர நிற்கும்படி யூதாஸுக்குப் பதிலாய் சேசுநாதர்சுவாமியை அறிந்த சீஷர்களில் ஒருவரை அவசியம் தெரிந்துகொள்ளவேண்டுமென்று அறிவித்தார். அப்போது கூடியிருந்த சபையார் இரண்டு சீஷர்களைக் குறிப்பிட்டு ஆண்டவரைப் பார்த்து: "சகல இருதயங்களையும் அறிகிற தெய்வமே, இந்த இரண்டு பேர்களில்

யாரைத் தேவரீர் தெரிந்துகொள்ளுகிறீர் என்று அறிவித்தருளும்" என்று மன்றாடித் திருவுளச்சீட்டுப் போட்டார்கள். அந்தச் சீட்டு மத்தியாஸ் என்பவர்பேரில் விழுந்தது. உடனே அவர் பன்னிரண்டாம் அப்போஸ்தலராக ஏற்றுக் கொள்ளப்பட்டார்.

இந்த வர்த்தமானத்தைக்கொண்டு: 1-வது. சேசுநாதர்சுவாமி அர்ச். இராயப்பரைத் தமது திருச்சபைக்குத் தலைவராய் நியமித்து வைத்தாரென்றும், 2-வது. இராயப்பரும் அப்போஸ்தலர்களும் இறந்துபோன பிற்பாடு அவர்களுடைய ஸ்தானத்திலே வேறே பேர்கள் விடாத்தொடர்பாய் வரவேண்டுமென்றும் வெகு தெளிவாய்ப் புலப்படுகிறது. 3-வது. அர்ச். இராயப்பர் செய்த தீர்மானத்தைச் சர்வேசுரன் அங்கீகரித்து அர்ச். மத்தியாசை அப்போஸ்தலராக நியமித்தாப்போலே, இராயப்பருடைய ஸ்தானத்திலிருக்கிற பாப்புமார்களின் வேதவிஷயமான தீர்மானங்களையும் சர்வேசுரன் அங்கீகரித்து உறுதிப்படுத்துகிறாரென்பதும் நிச்சயமாகிறது.

---

## 8. சுவிசேஷம் தெய்வ வாக்கியமா?

பிள்ளை: சேசுநாதர்சுவாமி தமது வேதத்தை வாய்மொழியாகப் போதிக்கும்படி தமது அப்போஸ்தலர்களுக்கும் மற்றச் சீஷர்களுக்கும் கற்பித்தாரென்பது நிச்சயமாயிருக்கையிலே, புரோட்டெஸ்டாண்டார் சுவிசேஷம் என்னும் புத்தகமே கிறீஸ்துவ வேதத்துக்கு ஏக ஆதாரம் என்கிறார்களே, அவர்கள் சொல்லுகிறது நியாயமா?

தாய்: நியாயமல்ல. சேசுநாதர்சுவாமி தமது வேதத்தை எழுதும்படி அப்போஸ்தலர்களுக்குக் கட்டளையிடாமல் பிரசங்கிக்கும்படி கற்பித்ததினாலே, எழுதப்பட்ட சுவிசேஷ புத்தகம் மாத்திரம் அவருடைய வேதத்துக்கு ஆதாரமாயிருக்கிறதென்று போதிக்கிறது அபத்தமான போதகமாமே.



பி.: சுவிசேஷம் எந்தக்காலத்திலே எழுதப்பட்டது, அம்மா?

தாய்: அது அப்போஸ்தலர்களும் அவர்களுடைய சீஷர்களும் ஜீவித்திருந்த காலத்திலே எழுதப்பட்டது. அதில் சில பாகங்களை வரைந்தவர்கள் அப்போஸ்தலர்களே.

பி.: சுவிசேஷத்தை நம்புகிறதற்கு என்ன நியாயம் இருக்கிறது?

தாய்: உலகம் உண்டானதுமுதல் அந்தந்தக் காலங்களிலும் இடங்களிலும் சம்பவித்த நடபடிக்கைகள் எழுதப்பட்ட சரித்திரப் புத்தகங்கள் அநேகம் உண்டல்லோ? அவைகளை நம்பினால் சுவிசேஷத்தை ஏன் நம்பப்படாது? இதை நம்பப்படாதென்றால் பழையகாலத்துச் சரித்திர புத்தகங்கள் யாவையும் ஒருமிக்க நம்பப்படாதென்கவேண்டும். ஆகையால் நமது சக்கரவர்த்தியாகிய 5-ம் ஜார்ஜ் நமது தேசத்தைப் பார்க்கும்படி இங்கிலாந்து தேசத்திலிருந்து வந்தாரென்று இனி ஆயிரம் வருஷத்திற்குப் பிற்பாடு யாராகிலும் புத்தகத்தில் வாசித்தால், அதை நம்பப்படாதென்று நமது பின்னோர்கள் தீர்மானிக்கும்படியாகுமல்லோ?

பி.: அம்மா, நீங்கள் சொல்லுகிறது நியாயந்தான். ஆனால் சுவிசேஷத்திலே மனிதருடைய புத்தி பலத்துக்கு மேற்பட்ட அதிசயங்கள் எழுதப்பட்டிருக்கிறதினாலே அதை நம்பப்படாதென்று சிலர் சாதிக்கிறார்களே.

தாய்: தெய்வம் அளவற்ற ஞானமும் வல்லமையும் உடையவராயிருக்க, நமது மட்டான புத்தி பெலனுக்கு எட்டாத அற்புத செயல்களைப் பண்ணினாரென்று சுவிசேஷத்தில் வரையப்பட்டிருக்கும்போது அதை நம்பப்படாதென்கிறது அகங்காரமேயொழிய புத்திக்கேற்ற நிர்ணயமல்ல. இவ்வுலகத்திலே தினசரி சம்பவிக்கிற விஷயங்களிலே நமது புத்தி பெலனுக்குள் அடங்காதவைகள் அநேகம் உண்டென்று உனக்குத் தெரியாதா?

பி.: அவைகளில் சில உதாரணங்களை நான் அறிய எடுத்துக்காட்டுங்கள், அம்மா.

தாய்: நாம் நிலத்தில் போடுகிற ஒரு புளிய விதை ஈரத்தில் அழுகி அழிந்தபின் மறுபடி முளைத்து மரமாகி வருஷா வருஷம் ஆயிரக்கணக்காய் தன்னைப்போன்ற விதைகள் குலுங்கப்பண்ணுகிறதே. இதன் காரணத்தை உணரக்கூடிய சாஸ்திரி யார்?

நாம் அநுதினம் புசிக்கிற சாதம் இரத்தமாக மாறிச் சதையும் எலும்புமாய், கண்ணும் காதுமாய், நாக்கும் பல்லுமாய் ரூபம் எடுக்கிறதல்லோ? ஆயினும் அந்தச் சாதம் மண்ணேயொழிய வேறொன்றும் அல்லவே. இவ்வண்ணம் மண்ணை இரத்தமாக்கக்கூடிய தத்துவ ஞானி யார்? இவைகளெல்லாம் தெய்வம் ஒன்றே செய்துவருகிற அதிசயங்களல்லோ? ஜடப்பொருளாகிய மண்ணை உணர்ச்சியுள்ள மனித இரத்தஞ் சதையாக மாற்றுகிற கடவுள், சுத்த சூனியத்திலிருந்து மனிதனையும் சர்வலோகங்களையும் படைத்த கடவுள், செத்த மனிதனுக்கு மறுபடியும் உயிர்கொடுத்தாரென்று சுவிசேஷத்தில் எழுதப்பட்டிருக்கும்போது அதை நம்பக்கூடாதென்று பிதற்றுகிறது மதியீனம்.

பி.: அம்மா, நீங்கள் இதுவரையில் எனக்குக் கற்றுக்கொடுத்ததைக்கொண்டு, சுவிசேஷம் ஒரு மெய்யான சரித்திரமென்று தெளிவாகிறது. ஆனால் சுவிசேஷமானது தெய்வ வாக்கியமென்று ரூபிக்கிறதெப்படி?

தாய்: i. முந்தமுந்தச் சுவிசேஷ நூலை உண்மையான ஒரு சரித்திரமாக மாத்திரம் பாவித்துக்கொள்வோம். அந்தச் சரித்திரத்திலே வரையப்பட்டிருக்கிற சில வாக்கியங்களை இப்போது நாம் கவனிக்கவேண்டியது:—(1) சேசுநாதர்சுவாமி சீஷர்களை நோக்கி: நீங்கள் உலகமெங்குஞ் சென்று சர்வ பிராணிகளுக்கும் சுவிசேஷத்தைப் போதியுங்கள் (மாற்கு 16, 15). என் நாமத்தினாலே பிதாவானவர் அனுப்பப்போகிற இஸ்பிரீத்துசாந்து உங்களுக்



குச் சகலத்தையும் படிப்பிப்பார். நான் உங்களுக்குச் சொல்லியவைகளையெல்லாம் உங்களுக்கு நினைப்பூட்டுவார் (அரு. 14, 26). நான் உங்களுக்கு அனுப்பப்போகிற சத்திய சுரூபியாகிய தேற்றுகிற இஸ்பிரீத்துசாந்து என்னைக் குறித்துச் சாட்சியம் சொல்லுவார். நீங்களும் அப்படியே சாட்சியஞ் சொல்லுவீர்கள் (அரு. 15, 26-27). உங்கள் மேல் எழுந்தருளிவரும் இஸ்பிரீத்து சாந்துவின் வல்லமையை நீங்கள் அடைந்து உலகத்தின் கடைகோடி வரையிலுமே எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் (அப். நட. 1, 8). நான் உங்களுக்குக் கற்பித்தவைகள் யாவையும் சகல ஜனங்களுக்கும் போதியுங்கள்; நான் எந்நாளும் உலகம் முடியுந்தனையும் உங்களோடேயிருக்கிறேன் (மத். 28, 20). *

இந்த வாக்கியங்கள் மூலமாய், அப்போஸ்தலர்கள் சேசுநாதர்சுவாமியைப்பற்றி பிரசங்கித்தவைகள் எல்லாம் இஸ்பிரீத்துசாந்துவாகிய சர்வேசுரனுடைய வாக்குகள் என்று நிச்சயமாகிறது. ஆகையால் அந்த வாக்குகள் அடங்கிய சுவிசேஷம் தேவ வாக்கியங்கள் என்பதற்குச் சந்தேகமில்லை.

ii. சுவிசேஷ வாக்கியங்கள் தேவ வாக்கியம் அல்லவென்றால் அப்போஸ்தலர்கள் இஸ்பிரீத்துசாந்துவினால் ஏவப்பட்டு அவரோடே ஒத்துப் பிரசங்கியாமல் தங்கள் யுக்திப்படி போதித்தார்கள் என்கவேண்டியது. தங்கள் யுக்திப்படி போதித்திருந்தால் அந்தப் போதனை சேசுநாதர் சுவாமியின் ஜீவியத்தையும் வேதத்தையும் படிப்பிக்கிறதில்லையென்றும் சொல்லவேண்டியது. இவ்வாறு சொல்லும்பட்சத்தில் சுவிசேஷம் பொய்க்கதையாகிறது. அது பொய்க்கதையானால் உலகத்திலே எழுதப்பட்ட பழைய காலச் சரித்திர புத்தகங்களும் ஒருமிக்க நம்பக்கூடாத கள்ளப் பிரபந்தங்களாகிறது. எல்லாம் கள்ளச்சரித்திரங்களென்று இதுவரையில் எவருஞ் சொல்லாததால், சுவிசே

* இவ்வாக்கியங்கள் நான்கு சுவிசேஷகர்களிடத்திலும் இருந்து எடுக்கப்பட்டிருக்கின்றன.

ஷம் மெய்யான சரித்திரமென்றும் இஸ்பிரீத்துசாந்துவினுடைய வாக்கென்றும் உறுதியாகிறது. ஏனெனில் இஸ்பிரீத்துசாந்து சேசுநாதர்சுவாமிக்கு முதல் சாட்சியாயிருக்கவேண்டியது (அரு. 15, 26-27).

iii. அர்ச். பாப்பானவரும் மேற்றிராணிமார்களும் அர்ச். இராயப்பருடையவும் மற்ற அப்போஸ்தலர்களுடையவும் ஸ்தானத்திலே விடாத்தொடர்பாய் வந்து சேசுநாதருடைய மந்தையாகிய திருச்சபையை ஆளுகிறார்களென்று நீ முந்தின பாடத்திலே கற்றுக்கொண்டாயே. அவர்கள் அப்போஸ்தலர் காலம் முதல் இதுவரையிலே சுவிசேஷ புத்தகம் தேவ வாக்கியமென்று சகல தேசத்தாருக்கும் படிப்பித்துக்கொண்டு வருகிறதினாலே அது மெய்யாகவே தெய்வ வாக்கியமென்று நாம் விசுவசிக்கவேண்டியது. அது தெய்வ மொழியாய் இராவிட்டால் அப்போஸ்தலருடைய ஸ்தானத்தில் இருக்கிற திருச்சபை அதிகாரிகள் சகல தேசத்தாரையும் ஏய்த்தும் பொய்யைக் கற்றுக்கொடுக்கிறார்கள் என்கத்தகும்.

அவர்கள் பொய்யைக் கற்றுக்கொடுத்தால் சேசுநாதர்சுவாமியுடைய போதனை உலகத்திலே அழிந்துபோயிற்றென்கவும், அது அழிந்துபோனால் சேசுநாதர்சுவாமியினாலே மனிதனுக்கு இரட்சண்ணியம் கிடையாதென்று முடியும். இரட்சண்ணியம் இல்லாததினாலே மனிதர் இவ்வுலகத்திலேயும் மறுலோகத்திலேயும் ஆறுதலைக் காணாமல் மனம் மயங்கி அவலமாய்ச் சாவதே மனித விதியென்றாகும். ஆனால் மனிதனைப் படைத்த தெய்வம் இவ்வித அவலமரணத்துக்கு மனித ஜென்மத்தைக் கையளித்தாரென்று எந்தப் புத்திமானும் மனங்கூசாமல் நினைக்கமாட்டான். அப்படிக் கையளிக்கவில்லையென்று திருச்சபையில் எக்காலத்திலும் எத்திசையிலும் விளங்கிய ஆணும் பெண்ணும் ஆகிய கணக்கற்ற வேதசாட்சிகளும், அர்ச்சியசிஷ்டவர்களும், மற்றப் புண்ணியவான்களும் சாட்சியாயிருக்கிறார்கள். இவர்கள் எல்லாரும் திருச்சபை அதிகாரிகளுடைய போதனையின்படியே சுவிசேஷம் தெய்வ வாக்கு என்று



பூரணமாய் விசுவசித்து நடந்தவர்கள்தான். ஆகையால் திருச்சபையின் அதிகாரிகளுடைய போதனைப்படியே சுவிசேஷம் தெய்வ வாக்கு என்று நாம் உறுதியாக விசுவசிக்கவேண்டியதாமே.

iv. சுவிசேஷம் முழுதும் ஆசியா காண்டத்தாரான யூத வம்சத்தாரால் எழுதப்பட்டது. யூத வம்சத்தாரோ ஐரோப்பியராகிய ரோமானர் கையில் தோர்வையடைந்து அவர்களுக்குக் கப்பஞ் செலுத்தி வந்தபடியால் ரோமானரால் நிந்திக்கப்பட்டவர்கள். இன்னம் இதுவரையிலும் அநேக இடங்களில் நிந்திக்கப்பட்டு வருகிறார்கள். இப்படி ஈனமாய் நிந்திக்கப்பட்டவர்கள் எழுதின புஸ்தகமாகிய சுவிசேஷம் தெய்வ வாக்காயிராவிட்டால் அதைத் தெய்வ வாக்கென்று இராஜாங்கத்தாரான ரோமானரும் மற்ற ஐரோப்பா தேசத்தாரும் பரிச்சேதம் உலகமெங்கும் சாட்சியஞ் சொல்லித் தங்கள் உயிரைக் கொடுத்திருக்கமாட்டார்கள். ஆகையால் சுவிசேஷம் தேவ வாக்கியமென்பது சத்தியமான காரியம்.

### வரலாறு.

(1) சுவாமி பிறந்த 200-ம் ௵ அஞ்ஞானி அதிபதியான ஸாத்தூர்னன் அர்ச். ஸ்பேராத்தரை வேதத்தினிமித்தம் பிடித்து உபாதித்துத் தன் தெய்வங்களைக் கும்பிடும்படி கட்டாயஞ்செய்தான். அர்ச்சியசிஷ்டவர் தான் மெய்யான சர்வேசுரனை ஆராதிப்பதொழிய உயிர்போனாலும் பொய்த்தேவர்களை வணங்கமாட்டேனென்றார். அப்போது அதிபதி அவரை நோக்கி, நீங்கள் மகா பூச்சிய வணக்கத்தோடே சில புத்தகங்களைப் படிக்கிறதாகக் கேள்விப்படுகிறேன். அவைகள் என்னமாதிரிக் கிரந்தங்களென்று வினாவினான். அவனுக்கு மறுமொழியாக, நாங்கள் சேசுநாதர்சுவாமியுடைய ஜீவியத்தைக் குறித்து எழுதப்பட்டிருக்கிற நான்கு சுவிசேஷங்களையும், அர்ச். சின்னப்பருடைய நிரூபங்களையும், இன்னம் தேவ ஏவுதலால் வரையப்பட்ட வேதாகமம் அனைத்தையும் மகா பூச்சியத்தோடே வாசிக்கிறோம் என்று மொழிந்தார்.

(2) ஸெலூஸியா தேசத்திலே கிறீஸ்துவர்களுக்குள்ளே கலகத்தையும் பிரிவினையையும் வளர்த்துவந்த [illegible]க்காரியான பாப்பாலை நல்வழிகொண்டுவரும்படி அர்ச். மில்ஸ் அவனுக்குப் புத்திசொன்னபோது அவன் சினந்து, நீ என்ன எனக்கு ஞானம் போதிக்கிறது? என் கடமை எனக்குத் தெரியும் என்றான். அப்போது அர்ச். மில்ஸ் தமது கையிலிருந்த சுவிசேஷத்தை ஒரு மேசைமேல் வைத்து பாப்பாலை நோக்கி, தம்பி, நான் ஒரு அப்பிராணியான மனிதன்தான், ஆனால் தேவ வாக்கியங்கள் அடங்கிய இந்தச் சுவிசேஷத்தின் புத்தியையாவது கவனித்துக்கேள் என்க, அதற்கும் அவன் அகந்தையோடே "சரி, சரி, சுவிசேஷம் பேசட்டும், நான் கேட்பேன்" என்றான். அதைக் கேட்டு அர்ச். மில்ஸ் அவனைப்பார்த்து, "தம்பி, நீ தேவ வாக்கியத்தையே அவமதிக்கிறபடியால் ஆண்டவருடைய தூதன் உன்னைத் தண்டிப்பார். இதோ உன் திரேகத்திலே பாதி உனக்கு உயிரற்றதாய்ப் போகும்" என்றார். உடனே அவன் கால் உயிரற்றுப்போக, எல்லாரும் அதிசயிக்கக் கீழே விழுந்தான். (Rodz. Vol. I. p. 362-3.)

இந்த வர்த்தமானங்களினாலே சுவிசேஷம் ஆதிகால முதல் தெய்வ வாக்கியமாய்ப் பூசிக்கப்பட்டு வந்ததென்றும், அதை அஞ்ஞானிகளே அறிந்திருந்தார்களென்றும், அதற்கு வணக்கக்குறைச்சல் காட்டினவர்களைச் சுவாமி தண்டித்தாரென்றுந் தெளிவாகிறது.

---

## 9. சேசுநாதர்சுவாமியும், அஞ்ஞான மத ஞானிகளும்.

பிள்ளை: அம்மா, போன பாடத்திலே சுவிசேஷம் ஒரு உண்மையான சரித்திர புஸ்தகமென்றும், அது தவறாத தெய்வ வாக்கியமென்றும் கற்றுக்கொண்டேன். ஆனால் இத்தேசத்து ஞானிகளுடைய போதனைக்கும், சேசுநாதர் சுவாமியுடைய போதனைக்கும் வித்தியாசம் உண்டோ?



தாய்: பாரதூர வித்தியாசமுண்டு. 1. நமது தேசத்து ஞானிகளுடைய போதகம் அவர்களுடைய சுய புத்தியிலே உற்பத்தியானதொழிய விசேஷ தெய்வ ஏவுதலால் உற்பத்தியானதல்ல. அப்படியே இந்தச் சீமை ஞானிகளுக்கெல்லாம் பெரிய ஞானியாக விளங்கிய கௌதம புத்தருடைய போதனைகளில் தெய்வத்தைப்பற்றி ஒரு வார்த்தையுமில்லை, தான் தெய்வ ஏவுதலால் பேசுகிறதாக ஒருவகையிலும் காட்டவில்லை. *

2. விசேஷ தெய்வ ஏவுதல் இல்லாதபடியினாலே தான் இத்தேசத்து ஞானிகளென்று எண்ணப்பட்ட முனிவர்கள் மறுலோக சீவியத்தையும், மரித்தபிற்பாடு மனிதனுடைய கதியையும்பற்றிச் சத்தியப் பிரமாணமாக யாதொன்றும் போதிக்கவில்லை. இருக்குவேத புத்தகத்திலே நரகத்தைப்பற்றி ஒரு வார்த்தையும் கிடையாது. (R. C. Dutt, Ancient India, Page 25.)

பேர்போன போகமுனி மறு பிறப்பைக் கண்டதில்லையென்றும்,

"கொல்லனது வீதிதனில் ஊசிவிற்ற
கூரான கதைபோலே என் முன்னாக,
எல்லையுள்ள முனிரிஷிகளெல்லாம்
எழிலாகப் பாடிவைத்தார் நூல்கள்தாமே"

என்றும்,

"தோன்றாத பொருள்களெல்லாம் நூலில் கூறி
தொகுப்புடனே சத்திரங்கள் கட்டி வைத்தார்"

என்றும் பரிகாசம் பண்ணுகிறார். †

3. நமது சீமையில் மிகவும் புகழ்பெற்ற மனு முனிவர் தாம் எழுதிய தர்ம சாஸ்திரம் என்னும் நீதிநூலில் பிராமணர் தெய்வங்களென்றும், சூத்திரர் அவர்களுக்கு

* புத்த சரித்திரம் by சென்னை கலாசாலை அரங்காசாரியார் pp. 64-65.

† சப்தகாண்டம் 5-ம் காண்டம் பாட்டு 990-991.

அடிமைகளென்றும் போதிக்கிறார். உதாரணமாகச் சில வாக்கியங்களை இதோ கூறுகின்றேன்.

(*a*) பிராமணன் ஞானியாயிருந்தாலும், மூடனாயிருந்தாலும் அவனே மேலான தெய்வமாவான். (அதி. VI. 317.)

(*b*) சூத்திரனைப் பிராமணன் நிர்ப்பந்தப்படுத்தி வேலை வாங்கலாம். ஏனென்றால் கடவுள் சூத்திரனைப் பிராமணனுக்கு வேலைசெய்யும் ஒரே நிமித்தமாகவே படைத்திருக்கிறார். (அதி. VIII. 413.)

(*c*) பிராமணன் சூத்திரனுடைய பொருளை முழுமனச் சமாதானத்துடன் சற்றாயினும் பாவமென்று எண்ணாமல் கைப்பற்றிக்கொள்ளலாம். ஏனெனில் சூத்திரனுக்குச் சொந்தமானது ஒன்றுமில்லை. (அதி. VIII. 417.)

(*d*) பிராமணன் ஒரு பூனை, அணில், காடை, தவளை, நாய், உடும்பு, கோட்டான், காகம் இவைகளைக் கொன்றால் என்ன பரிகாரம் பண்ணவேண்டியதோ, அதே பரிகாரம் அவன் ஒரு சூத்திரனைக் கொன்றாலுஞ் செய்தால் போதும். (அதி. IX. 132.) ஆகையால் பிராமணனுக்கு ஒரு நாயுஞ் சரி, சூத்திரனுஞ் சரி.

(*e*) சூத்திரன் பிராமணருடைய பேரையாவது, ஜாதியையாவது தூஷித்தால், பத்து விரல் நீளமுள்ள பழுக்கக் காய்ச்சின இரும்பை அவன் வாய்க்குள் செலுத்தவேண்டும். (அதி. VIII. 271.)

(*f*) விஷ்ணுவின் அவதாரமாக தெய்வமென்று கொண்டாடப்படுகிற இராமர், ஒரு சூத்திரன் மேன்குலத்தாருக்குக் குறிக்கப்பட்ட தபசு முயற்சிகளைச் செய்து தெய்வலோகத்தாரோடே சேரப் பார்க்கிறானென்று அறிந்து, அவன் அவ்விதம் தவம்புரிந்து மேன்மை அடையாதபடி அவன் தலையை வெட்டினார்.*

(*g*) பிராமணரை க்ஷத்திரிய ஜாதியார் மேற்கொள்ளாதபடி விஷ்ணு பரசுராமன் என்னும் ஒரு அவதாரமெடுத்து க்ஷத்திரியரைச் சங்காரம் பண்ணினார் என்று புராணங்களிலே கூறப்படுகிறது.

* Critical Review by Subramaniya Mudaliar p. 48.



இவ்வாறு தெய்வம் பிராமணரை உயர்த்தி மற்ற ஜாதியாரைத் தாழ்த்தும்படியாக அவதாரங்கள் எடுக்குமோ? பரிச்சேதம் எடுக்கமாட்டாதென்கிறதினாலே, நமது தேசத்திலே வேதமாகப் போதிக்கப்படுகிற கொள்கைகள் விசேஷத் தேவ ஏவுதலால் பிறக்கவில்லையென்பது நிச்சயம்.

நமதாண்டவராகிய சேசுநாதர்சுவாமியுடைய போதகம் இன்னதென்று போன பாடத்திலே அறிந்துகொண்டாய்.

(*a*) அது மேலான தேவசிநேகத்தையும், பிறர்சிநேகத்தையும் அத்தியாவசியமான கடமையாகப் படிப்பித்து சகல மனிதரும் எந்த ஜாதியாராயிருந்தாலுஞ்சரி, சர்வேசுரனுடைய மக்களாகவேண்டுமென்று கற்பிக்கிறது.

(*b*) வானமும் பூமியும் தொலைந்துபோனாலும், தமது வாக்கானது கலையாது குலையாதென்று சேசுநாதர்சுவாமி ஒரே உறுதியாய் மொழிகிறார். (மாற்கு 13, 31.)

(*c*) என்னுடைய வாக்கு எனது பிதாவாகிய சர்வேசுரனுடைய வாக்கென்று சேசுநாதர்சுவாமி உரைத்துத் தமது போதகத்துக்கு தெய்வ முத்திரையிடுகிறார்.

(*d*) கடைசியாய்த் தாம் வாக்கினாலே படிப்பித்த தேவசிநேக பிறர்சிநேகக் கடமைகளை தமது நடக்கையினாலே ஒப்பிக்கும்படியாகத் தேவ பிதாவின் சித்தத்துக்குப் பணிந்து சகல ஜாதி மனிதரையும் இரட்சிக்கும்படி அவர்களுக்காகத் தமது உயிரைக் கொடுத்தார்.

பி.: நமது சீமையில் கொண்டாடப்படுகிற அஞ்ஞான மத ஞானிகளாவது, தெய்வங்களாவது பிறர்சிநேகத்துக்காக உயிரைக் கொடுத்திருக்கிறார்களா?

தாய்: அவர்களில் எவரும் தேவசிநேகம், பிறர்சிநேகத்தினிமித்தம் உயிரைக் கொடுக்கவில்லை.

1. கௌதம புத்தர் ஒருநாள் தன் சிஷனுகிய சந்தனன் என்னும் தட்டானுடைய வீட்டிலே விருந்து சாப்பிட்டபோது அதிலே பன்றியின் இறைச்சியை அருந்தி அஜீரணங் கண்டு மரித்தார். அவருடைய பிரேதத்தின் மேல் பரிமள தைலங்களை வார்த்து அதைச் சுட்டுப்போட்டார்கள். சில எலும்புகள் தவிர மற்றவையெல்லாம் சாம்பலாய்ப் போயின. * மாம்சம் புசிக்கிறது பாவமென்று போதிக்கிற பிராமணர் புத்த ஞானி மாம்சம் தின்று பாவியானுரோவென்று தீர்மானம் சொல்லக்கடவார்கள்.

2. கிருஷ்ணன் வெண்ணை திருடினதினுலே அசோதையம்மாள் அவனைப் பருத்த மத்தாலே அடித்தாளென்றும், கிருஷ்ணனுக்கு அதினுலே உண்டான புண்ணில் ஈயானது வந்து மொய்த்ததினுலே கிருஷ்ணன் குலுங்கினனென்றும் அஞ்ஞான வித்வானுகிய காளமேகப் புலவர் பாடியிருக்கிருர். † இதென்ன கண்ணராவி !

3. விஷ்ணுவின் மற்றொரு அவதாரம் என்னப்பட்ட இராமர் என்பவர் சூத்திரர் மேன்மை அடையப்படாதென்றும், பிராமணரை மேன்மைப்படுத்தவேண்டுமென்றும் இருந்தாரேயொழிய, சகல ஜாதி ஜனங்களின்பேரில் வைத்த பிறர்சிநேகத்தினுலே உயிரைக் கொடுத்தவரல்லவே.

ஆகையால் பரலோகத்துக்கும் பாதாளத்துக்கும் இருக்கிற வித்தியாசம், சேசுநாதர்சுவாமிக்கும், இத்தேசத்திலே வணங்கப்படுகிற ஞானிகள் தெய்வங்களுக்கும் உண்டென்பது உச்சிப்பகலிலும் தெளிவாய் விளங்குகிறது.

சேசுநாதர்சுவாமி மனிதரை எந்த பொல்லாப்புகளினின்று இரட்சித்தாரென்று சொல்லுவாயா ?

பி. : நரகத்திலும், பசாசின் அடிமைத்தனத்திலும், பாவத்திலும் நின்று இரட்சித்தார்.

தாய் : இந்தப் பொல்லாப்புகளினின்று நம்மை இரட்சிக்கிறதற்கு என்ன செய்தார் ?

---

* புத்த சரித்திரம் pp. 47-51.

† விநோதரசமஞ்சரி p. 887.



பி. : மகா அவமானத்துக்குரிய சிலுவையிலே அறையுண்டு நமக்காகத் தமது உயிரைப் பலியாகத் தேவபிதாவுக்கு ஒப்புக்கொடுத்து மரணத்தை அடைந்தார். ஏன் அவர் சிலுவையிலே மரித்தார் ?

தாய் : சகலவகை மரணத்திலும் சிலுவையிலே அறையப்பட்டுச் சாகிறது மகா மகா இழிவான மரணமாயிருந்தது. பாவத்துக்காக உத்தரிக்கும்படி மரித்த சேசுநாதர்சுவாமி, பாவத்தைப்போல இழிவான காரியம் எங்கும் இல்லையென்று நாம் ஆழ்ந்து உணரும்படி, சிலுவையிலே அடிமைகளிலும் நீச அடிமையும், பாதகர்களிலும் பெரும் பாதகனைப்போலே மூன்றுமணிநேரம் சிலுவையிலே தொங்கி மரணத்தை அடைந்தார். ஏனெனில் அக்காலத்திலே அடிமைகளுக்கும் மகா பாதகர்களுக்குந்தான் சிலுவை மரணம் விதிக்கப்பட்டிருந்தது.

சேசுநாதர்சுவாமி எந்த சுபாவத்திலே பாடுபட்டார் ?

பி. : தேவசுபாவம் பாடுபடமாட்டாதென்கிறதினுலே மனுஷ சுபாவத்திலே பாடுபட்டார். ஆனுல் சேசுநாதர்சுவாமியுடைய தேவசுபாவமானது துன்ப வேதனைகளை அவருடைய மனுஷ சுபாவம் உணராதிருக்கும்படி செய்யவில்லையா ?

தாய் : துன்ப வேதனைகளை மனுஷ சுபாவம் தாங்கும்படி தேவசுபாவம் விட்டுவிட்டதேயொழிய, அவைகளை உணராதபடி செய்யவில்லை. சேசுநாதர்சுவாமி மெய்யாகவே துன்ப வேதனைகளை அனுபவித்து உணர்ந்தாரென்று நாம் அறியும்படி சிலுவையில் அவர் தொங்கும்போது "நான் தாகமாயிருக்கிறேன்" என்றும், தமது பிதாவை நோக்கி: "என் பிதாவே ! நீர் ஏன் என்னைக் கைவிட்டீர்" என்றும் மொழிந்தார். பிதா அவரைக் கைவிட்டாரென்பதும் தேவசுபாவம் அவர் தமது வேதனையை உணரும்படி விட்டதென்பதும் ஒரே அர்த்தந்தான்.

பி. : சேசுநாதர்சுவாமி இந்தப் பூமியிலுள்ள சகல ஜனங்களையும் இரட்சித்தாரோ ?

தாய்: இந்தப் பூமி அடங்கலிலும் எக்காலத்திலுமுள்ள சகல ஜாதி மனிதரையும் சேசுநாதர்சுவாமி இரட்சித்தாரென்று சுவிசேஷத்திலே பல இடங்களிலே காணலாம்.

பி.: ஆனால் நமது தேசத்திலே கணக்கற்ற அஞ்ஞானிகள் சேசுநாதர்சுவாமிமேல் விசுவாசமில்லாமலிருக்கிறார்கள். அவர்களை இரட்சிக்கிறதெப்படி?

தாய்: அவர்கள் தங்கள் குற்றத்தினாலே அவிசுவாசிகளாயிருந்தால் இரக்ஷணியம் அடையமாட்டார்கள்.

பி.: அவர்கள் தங்கள் குற்றத்தினாலே அவிசுவாசிகளாயிருக்கிறார்களென்று நிதானிக்க நியாயமுண்டா?

தாய்: உண்டு. ஏனெனில் அர்ச். சின்னப்பர் எழுதியிருக்கிறபடி சேசுநாதர்சுவாமியுடைய வேதபோதனை உலகத்தின் கடைக்கோடி வரையிலும் ஒலிக்கப்பட்டது. ஆயினும் அதைக் கேட்டவர்களுள் அநேகர் அதை விசுவசிக்கவில்லை (உரோமர் 10, 13-18). நமது தேசத்தார்களில் அனேகானேகர் கேட்டுங் கேளாத அவிசுவாசிகளாயிருக்கிறார்கள்.

பி.: சேசுநாதர்சுவாமியைப்பற்றி ஒன்றும் அறியாதவர்களுக்கு இரக்ஷணியங் கிடைக்குமோ?

தாய்: சேசுநாதர்சுவாமியைப்பற்றி ஒன்றுங் கேள்விப்படாதவர்கள், தங்கள் மனச்சாட்சிக்கு இரண்டகம் பண்ணாமல் நடந்தால் சேசுநாதர்சுவாமியினுடைய இரட்சிப்பின் பலன் அவர்களுக்குக் கிடைக்கும். ஏனெனில் சேசுநாதர்சுவாமி பிறந்தபோது "நல்ல மனதுள்ளவர்களுக்குச் சமாதானம்" என்று சம்மனசுக்கள் பாடினார்கள்.

### வரலாறு.

சிலுவை மரமானது சேசுநாதர்சுவாமி அதிலே பாடுபடுமுன் சகலத்திலும் கழிசிறையான பொருளாக அவமதிக்கப்பட்டுவந்தது. சேசுநாதர்சுவாமி அதை எல்லாத்துக்கும் மேலான இரத்தினமாக மாற்றி அது அரசர்களுடைய கிரீடத்தின் உச்சியிலே இலங்கும்படி செய்தார். இதொன்



றிலேயே அவருடைய தெய்வ வல்லமை விளங்குகிறது. எப்படியெனில், சேசுநாதர்சுவாமி காலத்திலும் அவருக்குப் பின்னாளிலும் உலகத்தை வெகு கெம்பீரமாய் ஆண்டுவந்த உரோமாபுரி இராயர்கள் கிறீஸ்துவர்களைப் பிடித்து வதைத்துக் கொன்று சேசுநாதர்சுவாமியுடைய வேதத்தை அடியோடே அழிக்கவேண்டுமென்று பிரயத்தனம் பண்ணினார்கள். இங்ஙனம் 300 வருஷமளவாய் எடுத்த முயற்சிகளெல்லாம் வீணும் விழலுமாய்ப் போயிற்று. வேதசாட்சிகளுடைய உதிரம் ஆற்றுஜலம்போல் எங்கும் ஓடிக் கிறீஸ்துவர்கள் குபீரென்று முளைக்கும்படி பண்ணிற்று. கடைசியாய் 306-ம் வருஷம் உரோமாபுரி இராயனாக வந்த கொன்ஸ்தாந்தீன் கிறீஸ்து வேதத்தைக் கொஞ்சம் அறிந்தவராய் அதை ஏற்றுக்கொண்டவர்களை நெருக்கிடை செய்யவில்லை. இவருக்கு எதிரியாக மாக்ஸென்ஸியுஸ் இராஜா படையெடுத்துவந்தான். அவனுடைய சேனை அதிக வலுவுள்ளதாயிருந்தபடியால் தெய்வத்தின் விசேஷ அனுக்கிரகமில்லாமல் அவனை வெல்லமுடியாதென்று கொன்ஸ்தாந்தீன் உணர்ந்து, கிறீஸ்துவர்களுடைய கடவுளைப் பார்த்துத் தன்னை இரட்சிக்கத் தயைபுரியும்படி பிரார்த்தித்தார். ஒருநாள் உரும வேளையிலே தமது சேனையோடே போர் செய்யச் செல்லுகையிலே, இருந்தாப்போலே வானத்திலே சோதிப்பிரகாசமுள்ள ஒரு சிலுவை தோன்ற, அதன்மேலே "இந்த அடையாளத்தினாலே ஜெயிப்பாய்" என சுடர் வீசிய அக்ஷரங்கள் காணப்பட்டன. இதை இராயரும் அவருடைய சேனைகளும் தெளிவாய்க் கண்டார்கள். உடனே அரசர் நேர்த்தியான ஒரு சிலுவைக்கொடி செய்வித்து அத்தோடே எதிராளியுடன் யுத்தஞ்செய்து அவனை முழுதுந் தோற்கடித்து உரோமாபுரியின் ஏக சக்கரவர்த்தியானார். அதுமுதல் வேதகலாபனை ஒழிந்தது. கிறீஸ்துவர்கள் தங்கள் வேதத்தை விக்கினமின்றி அனுசரிக்கவுங் கோவில்கள் கட்டவும் தாராளமாய் உத்தரவு பிறப்பித்தார். இது 313-ம் ௵ கொன்ஸ்தாந்தீனுடைய இராச்சியமெங்கும் விளம்பரமானது. இதன்றியே யாரையும் எந்தக் காரணத்தையும்பற்றி சிலுவை மரணத்துக்குத் தீர்வையிடப்

படாதென்று விலக்கினார். தமது கையிலே ஒரு சிலுவையைப் பிடித்திருக்கிற பாவனையாக தமது சிலையொன்று செய்வித்தார். கடைசியிலே அவரும் ஞானஸ்நானம் பெற்றுக் கிறீஸ்துவராய் மரித்தார். இவ்வாறு சகலத்திலும் ஈனமாக நிந்திக்கப்பட்டுவந்த சிலுவை இப்போது இராஜாக்களுடைய கிரீடத்தின் உச்சியிலே வைரக்கல்லினும் உயர்ந்த வைரக்கல்லாய் இலங்குகிறது. இதற்கு அத்தாட்சியாக நமது அரசராகிய ஐந்தாம் ஜார்ஜ் என்பவரதும் அவருடைய பத்தினி மேரி இராணியாரவர்களதும் ஆகிய கிரீடங்களையும் இத்தேசத்தில் அச்சடிக்கப்பட்டிருக்கிற இராஜ ரூபாய்களையும் முத்திரைகளையும் பார்ப்பதே போதும். தமது தெய்வீகத்தை ஒப்பிக்கும்படி சேசுநாதர்சுவாமி செய்துவரும் நிலைமையான புதுமைகளில் இதொன்று என்று கிறீஸ்துவர்கள் அவருடைய திருநாமத்தை ஸ்தோத்தரிப்பார்களாக.

---

## 10. சேசுவின் ஜீவிய முடிவு தெய்வ நடத்தைக்குரிய முடிவு.

பி.: சேசுநாதர்சுவாமி தேவ சிநேகத்தையும் பிறர் சிநேகத்தையும் தமது வாக்கினாலுங் கிரிகையினாலும் படிப்பித்துக் கடைசியாய்ச் சகல மனுக்குலத்தையும் இரட்சிக்கும்படி தமது உயிரைக் கொடுத்தாரென்று அறிந்துகொண்டேன். இத்தேச ஞானிகள் தெய்வ சிநேகமும் பிறர் சிநேகமும் இன்னதென்று முதலாய்க் கல்லாத ஆத்துமாக்களென்று வெட்டவெளியாய்த் தெரியவருகிறது. ஆனால் சேசுநாதர்சுவாமியுடைய முடிவு அவருடைய தேவ சுபாவத்தைக் காட்டுகிறதென ஒப்பிக்கிறதெப்படி, அம்மா?

தாய்: சேசுநாதர்சுவாமி சிலுவையிலே தொங்கும்போதும் உயிர்விடும்போதும் நடந்த விசேஷங்கள் அவருடைய தெய்வீகத்தை வெகு துலக்கமாய்ப் பிரசித்தப்படுத்துகிறது. அவைகளில் சிலவற்றை இங்கே கூறுகிறேன்.



1. பாதகர்களுக்கெல்லாம் பாதகனாகவும் நீசர்களுக்கெல்லாம் நீசனாகவும் எல்லாராலுங் கைவிடப்பட்டு சேசுநாதர்சுவாமி சிலுவையிலே அறையுண்டு தொங்கும்போது யூத குருக்களும் ஞானிகளும் அவரைப்பார்த்து நகைத்துத் தூஷித்துக்கொண்டிருக்கையிலே அவருடைய பக்கத்தில் சிலுவையில் அறையப்பட்டிருந்த கள்ளர்களில் ஒருவன் அவரை நோக்கி: "ஆண்டவரே, நீர் உம்முடைய இராட்சியத்துக்குச் செல்லும்போது என்னை நினைவுகூரும்" என்று னல்லோ. ஆயுசுகாலமெல்லாம் கொடிய அக்கிரமங்களைக் கட்டிக்கொண்டுவந்த அந்தக் கள்ளன் தன்னிலும் அகோர துஷ்டனாகப் பாவிக்கப்பட்டுச் சாகப்போகிற சேசுநாதர் சுவாமியை ஆண்டவராகிய தெய்வமென்றும், மோக்ஷ இராட்சியத்துக்கு அரசனென்றும் விசுவசித்து, அவர் தன் பாவத்தைப் பொறுத்துத் தன்னை இரட்சித்து மோக்ஷத்திலே சேர்த்துக்கொள்ளும்படி பூரண நம்பிக்கையோடே மன்றாடின புதுமைக்கொப்ப இந்தப் பூலோகத்திலே அற்புதம் வேறுண்டோ?

சேசுநாதர்சுவாமி தெய்வமாயிராமல் வெறும் மனிதனாயிருந்தால் அந்தக் கள்ளனை நோக்கி: "நீ இன்றுதானே என்னோடு பரகதியில் இருப்பாய்" என்று வாய் கூசாமல் சொல்லமுடியுமா? ஆகையால் இந்த வர்த்தமானம் சேசுநாதர்சுவாமி மெய்யான தெய்வமென்று ஒப்பிக்கிறது.

2. சேசுநாதர்சுவாமி சிலுவையிலே மூன்று மணி நேரந் தொங்கித் தமது உதிரமெல்லாம் சிந்தினபின் உரத்த சத்தமாய்க் கூப்பிட்டு, "பிதாவே, உமது கரங்களில் என்னாத்துமத்தைக் கையளிக்கிறேன்" என்று சொல்லி உயிர் விட்டாரே. மனிதர் வியாதியினாலாவது காயத்தினால் இரத்தம் சிந்தியாவது பெலனற்றுச் சாகும்போது வாய் திறந்து பேசக்கூடாதவர்களாய் உயிர்விடுகிறது எவருக்குந் தெரிந்த காரியம். இதற்கு மாறாக சேசுநாதர்சுவாமி ஒரு நாள் முழுதும் யாதொன்றும் சாப்பிடாதிருந்து அடியினாலும் முள்முடியினாலும் கை கால்களில் தைக்கப்பட்ட ஆணிகளாலும் ஏக காயமாகித் தமது உதிரமெல்லாஞ் சிந்தி நாக்கு வரண்டு மரிக்கும்போது உரத்த சத்தமாய் "என்

பிதாவே, உமது கரங்களில் என்னாத்துமத்தைக் கையளிக்கிறேன்" என்று கூப்பிட்டதை அஞ்ஞானியாயிருந்த செந்தூரியன் கேட்டு "இவர் மெய்யாகவே தேவ குமாரன்" எனக் கூவினான் (மாற்கு 15-39). ஜனக்கூட்டத்திலும் அநேகர் தங்கள் மார்பில் பிழை தட்டிக்கொண்டு, "இவர் தெய்வ குமாரன்" என்று சொல்லித் தங்கள் வீட்டுக்குத் திரும்பினார்கள் (மத். 27, 54; லூக். 23, 48). இந்த வரலாறும் சேசுநாதர்சுவாமியினுடைய தெய்வ சுபாவத்தை வெளியாக்குகிறது.

3. சேசுநாதர்சுவாமி மரிக்கும்போது பௌர்ணமி, அதாவது பூரணசந்திரன் நாளாயிருந்தாலும், சூரியகிரணம் தோன்றினது. பூமி அதிர்ந்தது, கற்பாறைகள் பிளந்தன (மத். 27, 45-54). வான சாஸ்திரக் கணக்குப்படி பூரண சந்திரன் நாளிலே சூரிய கிரணம் தோன்றுவது கூடாத காரியம். அது தெய்வச்செயலாலே மாத்திரம் புதுமையாக நடக்கலாம்.

ஆகையால் நான் இப்போது எடுத்துக்காட்டிய மூன்று விசேஷங்களாலே சேசுநாதர்சுவாமியின் மரண முடிவானது அவருடைய தேவ சுபாவத்தை வெட்ட வெளியாகத் துலங்கப்பண்ணுகிறது.

சேசுநாதர்சுவாமி மரித்தபிற்பாடு அவருடைய திருச் சரீரத்துக்கு நடந்ததென்ன?

பி.: சேசுநாதர்சுவாமி மரித்ததை நிச்சயமாய் அறியும்படி சேவகர்களில் ஒருவன் ஒரு ஈட்டியினாலே அவருடைய திரு இருதயத்தை நோக்கிக் குத்தினான். உடனே அந்த இருதயத்தினின்று இரத்தமும் தண்ணீரும் புறப்பட்டது.

தாய்: உயிரற்ற அந்த சரீரத்தை அடக்கம் பண்ணினார்களோ?

பி.: யூத குருக்களுக்குப் பயந்து இரகசியத்திலே சேசுநாதர்சுவாமியுடைய சீஷர்களாயிருந்த அரிமத்தேயூர் ஜோசேப்பும், நீக்கோதேமும், இருந்தாப்போலே தைரிய



மடைந்து பிலாத்துவினிடம் போய்த் தங்கள் குருவின் சரீரத்தை இறக்கி அடக்கும்படி உத்தரவு பெற்றுக் கபால மலைக்கு ஏறிவந்து சேசுவின் திருமேனியைப் பரிமளங்களால் பூசிப் பாறைக்குள் குடையப்பட்டிருந்த ஒரு புதுக் கல்லறையில் அதைப் பொதிந்தார்கள். அந்தக் கல்லறையில் அதுவரையில் எவரும் புதைக்கப்படவில்லை. அதை அரிமத்தேயூர் ஜோசேப்பு ஏற்கனவே தமது உபயோகத்துக்காக வெட்டிவைத்திருந்தார்.

சேசுநாதர்சுவாமியுடைய சீவிய காலத்திலே ஒளிந்து மறைந்து சீஷர்களாயிருந்தவர்கள், சேசுநாதர்சுவாமி மரணமானவுடனே தைரியசாலிகளாய்ப் போனதெப்படி?

தாய்: சேசுநாதர்சுவாமி சிலுவையிலே மரிக்கும் சமயத்தில் நடந்த அதிசயங்கள் அவர்களுடைய பயத்தைப் போக்கி மனதுக்கு உற்சாகங்கொடுத்தது. கர்த்தர் தமது வேதத்தைப் போதிக்கும்போது கணக்கற்ற புதுமைகளைச் செய்திருந்தும் யூத குருக்களுக்குப் பயந்திருந்த இந்த இரு சீஷர்களும், சுவாமி அவமானப்பட்டு நீசர்களிலும் நீசராகச் சிலுவையிலே மரித்து எல்லாராலும் கைவிடப்பட்டுத் தொங்குகையில், அவரை அடக்கஞ் செய்யவேண்டுமென்று தைரியமாய்த் துணிந்து வந்ததே ஒரு பெரிய அதிசயமல்லோ. சேசுநாதர்சுவாமி தெய்வமாயிராவிட்டால், இவர்கள் இவ்விதம் துணிந்து வந்திருப்பார்களோ, பரிச்சேதமில்லை.

சேசுநாதர்சுவாமியுடைய சரீரங் கல்லறையிலிருக்கும் போது, அவருடைய ஆத்துமம் எங்கே போனது?

பி.: சேசுநாதர்சுவாமி உயிர்விடவே, அவருடைய திரு ஆத்துமம் தெய்வப் பிரகாசத்தோடே லிம்போ என்னும் பிதாப்பிதாக்கள் ஸ்தலத்துக்குப்போய் அங்கேயிருந்த புண்ணிய ஆத்துமாக்களுக்கு மோக்ஷங் கொடுத்ததென்று படித்திருக்கிறேன். ஆனால் லிம்போ அல்லது பிதாப் பிதாக்கள் ஸ்தலமென்றால், அது என்ன வகையான இடம், அம்மா?

தாய்: மனித ஜென்மத்துக்கு முதல் தந்தை தாயான
ஆதாமும் ஏவாளும் செய்த குற்றத்தினாலே அவர்களுக்கும்
அவர்களுடைய பிள்ளைகளாகிய சகல மனிதருக்கும்
மோக்ஷவாசல் அடைபட்டுப் போயிற்று. ஆகையால்
மனித ஜென்மம் துவக்கினது முதல் சேசுநாதர்சுவாமி மரித்
தது வரையில் மரணமான புண்ணியவாளர் எல்லாரும்
மோக்ஷத்துக்குப் போகக்கூடாதவர்களாய் லிம்போ என்று
சொல்லப்பட்ட ஒரு பாதாள ஸ்தலத்திலே சர்வேசுரனாலே
வைக்கப்பட்டிருந்தார்கள். சேசுநாதர்சுவாமியுடைய திரு
ஆத்துமம் இருந்தாப்போலே அவர்கள் மத்தியில் காட்சி
யாகி அவர்கள்மேல் தமது தெய்வீக ஒளியை ஜொலிப்பிக்
கவே அவர்கள் மோக்ஷத்துக்கு ஏறுமுன்னே தானே
மோக்ஷானந்த பாக்கியத்தைச் சுகிக்கத் துவக்கினார்கள்.
சேசுநாதர்சுவாமி அவர்களோடே மூன்று நாளிருந்தார்.

## வரலாறு.

சேசுநாதர்சுவாமி மரித்த அன்று யூத ஜனங்களுக்குப்
பெரிய பாஸ்குப்பண்டிகை நாளாயிருந்தது. இந்தப்
பண்டிகை வருஷாவருஷம் ஒரு பௌர்ணமி நாளில் கொண்
டாடப்படும். இந்த உற்சவத்தைக் கொண்டாடும்படி யூத
ஜனங்கள் எத்திசையிலும் இருந்து ஜெருசலேம் பட்டணத்
துக்கு வருவார்கள். பாஸ்கு என்றால் கடந்து போகுதல்
என்று அர்த்தமாகும். இந்தத் திருவிழா உற்பத்தியான
தெப்படியென்றால், உலகமெல்லாம் அஞ்ஞானத்தில்
அமிழ்ந்திக் கணக்கின்றிப் பற்பல தெய்வங்களை ஆராதித்து
வருகையில், இஸ்ராயேல் அல்லது யூத ஜனம் என்னப்பட்ட
வர்கள் மாத்திரம் ஒரே சர்வேசுரனை நமஸ்கரித்து வந்தார்
கள். சர்வேசுரன் அவர்களை விசேஷமாய் ஆசீர்வதித்தபடி
யால் அவர்களுடைய குடும்பங்கள் பலுகி விர்த்தியடைந்து
சுகமாய் வாழ்ந்து வந்தன. அவர்கள் குடியேறியிருந்த
நாடு எஜிப்து என்னும் அந்நிய தேசம். ஆனால் அஞ்
ஞானியான பாரவோன் என்னும் அவர்களுடைய இராஜா
அவர்கள்பேரில் பொறாமை வைத்து அவர்கள் பலுகாதபடி
மகா கஷ்டமான வேலைகளை அவர்கள்மேல் சுமத்தி அவர்
களுக்குப் பிறந்த ஆண் குழந்தைகளையும் ஆற்றிலே



கொண்டுபோய் எறியும்படி கற்பித்தான். இஸ்ராயேல்
ஜனங்கள் ஆண்டவரை நோக்கி ஓலமிட்டு அழுது தங்களை
இரட்சிக்கும்படி பிரார்த்தித்து வந்தார்கள். சுவாமி அவர்
களுடைய மன்றாட்டுக்கு இரங்கி மகாத்துமாவான மோயீ
சனை இராஜாவினிடம் அனுப்பி இஸ்ராயேல் ஜனங்கள்
அவனுடைய இராட்சியத்தை முழுதும் விட்டகன்று தங்க
ளுடைய ஆதிதேசம் குடிபோக விடும்படி கேட்கச்செய்
தார். அவன் அதற்குச் சம்மதியாததினாலே அவனுக்கும்
அவனுடைய தேசத்தாருக்கும் ஆண்டவர் பலவுக ஆக்
கினைகளை அனுப்பினார். கடைசி ஆக்கினையாக அந்தத்
தேசத்து அஞ்ஞானக் குடும்பங்களில் பிறந்திருந்த தலைச்
சன் பிள்ளைகளையெல்லாம் ஒரு சம்மனசானவர் ஒரே
இராத்திரியில் கொன்றுபோட்டார். இஸ்ராயேல் ஜனங்
கள் மோயீசன் அவர்களுக்கு ஏற்கனவே ஆண்டவர்
பேராலே கற்பித்தபடி, வீட்டுக்கு ஒரு ஆட்டுக்குட்டியைக்
கொன்று அதன் இரத்தத்தை வாசற்கதவிலே பூசியிருந்ததி
னாலே அவர்களுடைய பிள்ளைகளைச் சம்மனசானவர் கொல்
லாமல் அவர்களுடைய வாசஸ்தலத்தைக் கடந்துபோனார்.
மறுநாட் காலமே தேசமெல்லாம் ஏக ஒப்பாரியாயிருந்த
படியால் இராஜா இஸ்ராயேல் ஜனங்கள் தன் தேசத்தை
விட்டுத் தங்களுக்கு இஷ்டமான பூமிக்குச் செல்லும்படி
உத்தரவளித்தான். இவ்விதமாய் அவர்கள் பாரவோனு
டைய அடிமைத்தனத்தினின்று மீட்கப்பட்டார்கள். இந்த
மகா பெரிய உபகாரத்தை நினைவுகூர்ந்து கடவுளுக்கு
யூதர் நன்றியறிந்த ஸ்தோத்திரம் புரியும்படியாக வருஷா
வருஷம் பாஸ்காப் பண்டிகை நடத்தப்பட்டு வந்தது.
இஸ்ராயேல் ஜனங்கள் கொடுங்கோலனான பாரவோன்
அடிமைத்தனத்தினின்று மீட்கப்பட்டாப்போலே, கொடு
ரப் பசாசின் அடிமைத்தனத்திலும் அதனுடைய நிற்பாக்
கியம் நிறைந்த இராட்சியமாகிய நரகத்திலும் நின்று சகல
மனிதரும் சேசுநாதர்சுவாமியால் மீட்கப்பட்டார்களென்று
நாம் உணரும்படி சேசுநாதர்சுவாமி யூதர்களுடைய பாஸ்
குத் திருநாளன்றே பாடுபட்டு மரித்தார். இந்த அளவற்ற
உபகாரத்திற்கு நன்றியறிதலாக, அர்ச்சியசிஷ்ட வாரத்

திலே சுவாமி நமதுபேரில் வைத்த நேசத்தினாலே பட்ட திருப்பாடுகளை மகா மன உருக்கத்தோடே தியானித்து நமது பாவத்தினிமித்தம் அழவேண்டியிருக்கையிலே, நமது நாட்டில் அநேக ஸ்தலங்களிலே சுவாமியுடைய பாடுகளை வேடிக்கையான நாடகம்போலே காட்டிக் கள்ளு சாராயத்தைக் குடித்துப்போட்டுக் கூத்தாடுகிறது மிகவும் வெட்கத்துக்கும் பிரலாபத்துக்கும் உரிய காரியமாயிருக்கிறது. இந்த ஆவலாதி ஒழியும்படியாய் நல்ல கிறீஸ்துவர்கள் முயற்சி எடுப்பார்களாக.

---

## 11. கிறீஸ்துநாதரின் உயிர்ப்பு

## கிறீஸ்து வேதத்துக்கு *அடிப்படை சத்தியம்.

பி.: சேசுநாதர்சுவாமியுடைய ஆத்துமம் லிம்போ ஸ்தலம் போய் அங்கேயிருந்த புண்ணியாத்துமாக்களுக்கு மோக்ஷ பாக்கியங் கொடுத்ததென்று, அம்மா, நீங்கள் எனக்குக் கற்றுக்கொடுத்தீர்களே. சேசுநாதர்சுவாமி மோக்ஷத்துக்குப் போகுமுன்னே, அந்த ஆத்துமங்களுக்கு மோக்ஷ பாக்கியங் கொடுத்ததெப்படி?

தாய்: சேசுநாதர்சுவாமியுடைய திரு ஆத்துமத்திலே அளவற்ற சோதிமயமாய் இலங்கின தெய்வீகத்தை லிம்போ மகாத்துமாக்கள் சம்பூரணமாய்த் தரிசித்ததினாலே அவர்கள் மெய்யாகவே மோக்ஷபாக்கியத்தை அனுபவித்தார்கள். நல்ல கள்ளனும் அதினாலேதான் அன்றே மோக்ஷ பரகதி அடைந்தானென்று சேசுநாதருடைய வாக்கின்படி தெரியவருகிறது. மேலும் சிறு பாலர்களுடைய சம்மனசுக்கள் சர்வேசுரனுடைய முகத்தை இடைவிடாமல் தரிசிக்கிறார்களென்று கர்த்தர் திருவுளம்பற்றினாரே (மத். 18-10). ஆயினும் வேதசாஸ்திரிகள் வசனிக்கிறபடி இவ்

* அடிப்படை சத்தியம் = Fundamental truth (புத்த சரித்திரம் p. 66.)



வுலகத்திலே இருக்கிற சம்மனசுக்கள் சுபாவமாய் ஒரே நேரத்திலே மோக்ஷத்திலேயும் இருக்கிறதில்லையென்கிறதினாலே மனிதரின் காவல் சம்மனசுக்கள் இப்பூமியிலேயே இருந்துகொண்டு வெளிச்சத்தைப்போலே எங்கும் நிறைந்திருக்கிற சர்வேசுரனைத் தரிசித்து அளவற்ற பாக்கியத்தை அடைகிறார்கள். அந்தத் தரிசனையினாலே இவ்வுலகமே அவர்களுக்கு மோக்ஷ ஸ்தலம்போலாகிறதாமே. அவ்வண்ணமே லிம்போவாசிகள் தெய்வ மகத்துவத்தோடே தோன்றிய சேசுநாதர்சுவாமியைத் தரிசிக்கலானபோதே, லிம்போ ஸ்தலமானது அவர்களுக்கு மோக்ஷமாய்ப் போயிற்று.

சேசுநாதர்சுவாமியுடைய ஆத்துமம் லிம்போவிலிருந்த போது அவருடைய திருச்சரீரம் அடக்கப்பட்டிருந்த கல்லறையில் நடந்ததென்ன?

பி.: யூத குருக்கள் பிலாத்தனிடத்திற்போய், இந்த மாயக்காரன் தான் மரித்து மூன்று நாளிலே உயிர்ப்பேனென்று சொல்லியிருக்கிறான் (மத். 17-22). அவனுடைய சரீரத்தைச் சீஷர்கள் மோசமாய்த் திருடிக்கொண்டு போய் அவன் கல்லறையிலிருந்து உயிரோடே எழும்பினானென்று பிதற்றாதபடி, கல்லறையிலே காவல் வைக்க வேண்டுமென்று விண்ணப்பம் பண்ணினார்கள். பிலாத்தன் அவர்களுடைய விண்ணப்பத்துக்கு இணங்கி உத்தரவு அளித்தான். உடனே அவர்கள் கலலறையிலே காவல் வைத்து அதன் கதவிலே முத்திரையிட்டார்கள்.

தாய்: சுவாமியுடைய திருச்சரீரம் கல்லறையிலே எத்தனை நாளிருந்தது?

பி.: கிழமைக் கணக்கின்படி வெள்ளி, சனி, ஞாயிறு என மூன்று நாளிருந்தது.

தாய்: மகனே, இதுகாரியமாய், நீ அறியவேண்டியதாவது: யூத ஜனங்களுக்குப் பொழுதுபோகிற நேரந்தான் நாளின் துவக்கமாயிருக்கும். மோயீசன் உலக சிருஷ்டிப்பானது ஆறு நாளில் முடிந்ததென்று வகுத்துக்காட்ட

ஏற்பட்டபோது மாலையும் காலையும் ஒரு நாள் என்கிறு சொல்லிய காலையும் மாலையும் என்கிறுரில்லை (ஆதி. 1-5). யூதர்கள் அர்த்தமுள்ளதாகவே கணக்கிட்டு வந்தார்கள்.

சேசுநாதர்சுவாமி மரித்த மூன்றாம் நாள் சம்பவித்த தென்ன?

பி.: மூன்றாம் நாளாகிய ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில் சேசுநாதர்சுவாமியுடைய திரு ஆத்துமம் லிம்போவை விட்டு அங்கிருந்த புண்ணியவாளரோடே கல்லறைக்குச் சென்று தமது சரீரத்தில் பட்ட வேதனை உபாதைகளை அவர்களுக்குக் காட்டிற்று. சர்வாங்கமும் ஒரே இரணமாய் இரத்தக்கறை பிடித்து மனித உரு அற்றுக்கிடந்த அந்தத் தெய்வீக மேனியை அவர்கள் பார்த்துப் பிரமித்துத் தங்கள் பாவத்துக்காக அம்மாத்திரங் கொடிய பாடுபட்ட ஆண்டவருக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கையில், சுவாமியுடைய திரு ஆத்துமம் அந்தச் சரீரத்துக்குள் பிரவேசிக்கவே, இருந்தாப்போலே அதிலிருந்த காயங்களெல்லாம் மறைந்துபோக அந்தச் சரீரம் சூரியனைப்போலே மங்கா ஒளியுடனே, கல்லறையைவிட்டுத் தெய்வ வல்லமையினாலே எழும்பினது. இவ்விதம் உயிர்த்து எழுந்தருளிய இரக்ஷகரை லிம்போ ஸ்தலத்தார் எல்லோரும் ஆனந்தத்தோடே கண்டு ஆராதித்தார்கள்.

சேசுநாதர்சுவாமி உயிர்த்த வர்த்தமானம் கிறீஸ்து வேதத்தில் விசுவசிக்கவேண்டிய பிரதான சத்தியமோ?

தாய்: அது மகா பிரதான சத்தியம். ஏனெனில் அர்ச். சின்னப்பர் எழுதியிருப்பதுபோலவே, சேசுநாதர் சுவாமி உயிர்த்தார் என்பது பொய்யானால் கிறீஸ்துவேதமே பொய்யாகிறது. அதைப் போதிக்கிறவர்களும் நிர்ப்பாக்கியர்களிலும் நிர்ப்பாக்கியரும் பைத்தியகாரருமாகிறார்கள். (கொரி. I. 15, 17, 19.)

பி.: சேசுநாதர்சுவாமி உயிர்த்தாரென்று ஒப்பிக்கிறதெப்படி?



தாய்: 1. சேசுநாதர்சுவாமியுடைய திருச் சரீரம் அடக்கப்பட்டிருந்த கல்லறையைச் சுற்றிக் காவல்காரர் இருந்தபடியாலும், கல்லறையிலே முத்திரை போடப்பட்டிருந்ததினாலும், அந்தச் சரீரத்தை யாரோ திருடிக் கொண்டுபோனார்களென்று நினைக்கிறதற்கு இடமில்லை.

2. அச்சரீரம் மனுஷரூபம் குலைந்து இரத்தத்தில் மூழ்கியிருந்ததைப் பிலாத்தன் கண்டு, இதோ மனிதன் எனப் பரிதபித்தானே, அவ்விதம் மனுஷ உருவம் அற்று இழிவிலும் இழிவான சிலுவை மரத்திலே தொங்கிக்கிடந்த சரீரத்தை எந்தப் பைத்தியகாரன் ஒரு கல்லறைக் குழியினின்று திருடிக்கொண்டுபோக நினைப்பான்?

3. மற்றவர்களை இரட்சித்தவன் தன்னைத்தானே இரட்சிக்கமாட்டாமல் போனது ஏனென்று யூதசாஸ்திரிகள் தூஷித்தார்களே. கடைப்படாத ஒரு நீசன் என்று பேரெடுத்தவனுடைய பிரேதத்தைத் திருடிப்போய் அவன் உயிர்த்தானென்று சபதங்கூற யாருக்கு காவெழும்பும்?

4. சீஷர்கள் பயந்து சேசுநாதர்சுவாமியைக் கைவிட்டு ஓடிப்போனார்களே. இந்தக் கோழைகளோ, அவருடைய சடலத்தைத் திருடி ஒளித்துவைத்துக்கொண்டு அவர் உயிர்த்து எழுந்தாரென்று போதிக்கத் துணிகிறவர்கள்? அப்படிப்பட்ட துணிவு எப்படித்தான் அவர்களுக்கு வரக்கூடும்?

பி.: ஆனால் யூத குருக்களுக்குப் பயந்து சேசுநாதர்சுவாமிக்கு அந்தரங்கத்திலே சீஷனாயிருந்த அரிமத்தியா சூசையப்பர், சுவாமி மரித்தபின் தைரியமாய் எல்லாரும் அறிய அவரை அடக்கஞ் செய்தாரல்லோ. அதுபோலவே பயந்திருந்த சீஷர்களும் சேசுநாதர்சுவாமி இறந்தபின் தைரியமடைந்து அவருடைய சரீரத்தைத் திருடிக்கொண்டு போனார்கள் என்கவொண்ணாதோ?

தாய்: சேசுநாதர்சுவாமி மரிக்கிற சமயத்திலே நடந்தேறின அதிசயங்களை அரிமத்தியார் கண்டதினாலே, மனத்திடன் அடைந்து தன்னுயிரைக் கொடுக்கத் துணிந்து

அந்த அடக்கச் சடங்கை நிறைவேற்றினர். சேசுநாதர்சுவாமி மெய்யாகவே தெய்வமென்று சூசையப்பர் உறுதியாய் விசுவசியாதிருந்தால், அந்தத் தைரியம் அவருக்குப் பிரசேதம் வந்திருக்கமாட்டாது. அப்போஸ்தலர்களோ, சேசுநாதர்சுவாமி பட்ட பாடுகளைப் பார்த்து அவர்பேரில் விசுவாசக் குறைச்சலைக் காட்டினார்களே. அவர்கள் என்ன காரணத்தினாலே உயிர்க்காதவரை உயிர்த்தாரென்று பிரசங்கித் தாங்கள் அவமானமும் உபத்திரவமும்பட்டு உயிரைக் கொடுக்கும்படி அவருடைய சரீரத்தைத் திருடி ஒளித்து வைத்திருக்கத் துணிவார்கள்?

சுவாமியுடைய திருச்சரீரத்தை எவருந் திருடிக்கொண்டு போகவில்லையென்று ஒப்பிக்க இன்னம் வேறே நியாயங்கள் வேண்டுமோ?

பி.: அம்மா, நீங்கள் இதுவரையில் எடுத்துக்கூறின நியாயங்கள் போதும். ஆயினும் நீங்கள் பல நியாயங்களை எனக்குக் கற்றுக்கொடுத்தால், அவைகளையெல்லாம் நான் படித்துக்கொள்ள ஆசையாயிருக்கிறேன்.

தாய்: சேசுநாதர்சுவாமி உயிர்த்த வர்த்தமானம் கிறீஸ்து வேதத்துக்கு ஆதி அஸ்திவாரமாயிருப்பதினாலே அதை எத்தனை வகையாய் உறுதிப்படுத்துவோமோ, அவ்வளவுக்கும் நன்மை விளையும், விசுவாசம் மனதில் அழுந்தும். ஆகையால் இது விஷயமாய் இன்னஞ் சில நியாயங்களை உனக்கு அறிவிக்கிறேன்.

1. சேசுநாதர்சுவாமியுடைய சரீரம் கல்லறையில் இல்லை, அதிசயமான பிரகாசம் அங்கே வீசினது என்று காவல்காரர் அவர் மரித்த மூன்றாம் நாள் யூத குருக்களுக்கு அறிவித்தபோது, அந்தக் குருக்கள் உண்மையை ஜனங்கள் கண்டுபிடிக்காதிருக்கும்படி, அந்தச் சரீரத்தை, காவல்காரர் தூங்கும்போது, சீஷர்கள் திருடிக்கொண்டு போய்விட்டார்களென்று எங்கும் பறைசாற்றப் பண்ணினார்களே. காவல்காரர் அத்தனை பேரும் ஒருமிக்க அசாத்திய நித்திரை பண்ணினார்களென்று யார்தான் நம்புவாம்? சேசுநாதர்சுவாமி



யுடைய பெயர் அடியோடே தொலையவேண்டுமென்று ஆத்திரமாயிருந்த பரிசேயர் என்னப்பட்ட யூத ஞானிகள் தூங்குகிறவர்களான காவல்காரரையோ பொறுக்கி எடுத்து அனுப்பியிருப்பார்கள்? மேலும் காவல்காரர் அத்தனை பேரும் ஒருமிக்கத் தூங்குவது பெரிய குற்றமாயிற்றே. அந்தக் குற்றத்துக்கு யூத சங்கத்தாராவது பிலாத்துவாவது தண்டனை விதித்ததாகக் காணோம். ஆகையால் சேசுநாதர்சுவாமியுடைய சரீரத்தைத் திருடிக்கொண்டு போனார்களென்பது வெறும் பித்தலாட்டம்.

2. அர்ச். அகுஸ்தீன் ஆக்ஷேபிக்கிறதுபோலே. காவல்காரர் தூங்கும்போது சீஷர்கள் சுவாமியுடைய சரீரத்தைத் திருடிக்கொண்டு போயிருந்தால், அப்படித் திருடிக்கொண்டு போனதை காவல்காரர் தூங்கிக்கொண்டே பார்த்தார்களோ? தூங்கிக்கொண்டிருந்தால் தூங்காமல் கண்ணுறப் பார்த்தவர்கள்போல் சாட்சியஞ் சொல்லுவதென்ன? தூங்காமல் விழித்திருந்து பார்த்தால், நாங்கள் தூங்கும்போது களவுபோயிற்று என்பானேன்?

3. சேசுநாதர்சுவாமி மரித்த ஐம்பத்திரண்டாம் நாள் பற்பல தேசங்களிலிருந்து யூத ஜனங்கள் ஜெருசலேம் பட்டணத்துக்கு வந்து பெந்தக்கோஸ்த் என்னும் மகா உற்சவத்தைக் கொண்டாடி நிற்கையில், அர்ச். இராயப்பர் அவர்கள் நடுவில் தோன்றி, "ஓ, இஸ்ராயேல் ஜனங்களே, சில தினங்களுக்கு முன்னே இந்த நகரத்தாரால் சிலுவையில் அறைபட்டு மரித்தவர் கல்லறையை விட்டுத் தமது தெய்வீக வல்லமையினாலே உயிர்த்தெழுந்தருளினார். அவர் மனித சந்ததியை இரட்சிக்கும்படி தமது உயிரைக் கொடுத்தார். அவர் வழியாக அன்றி வேறே வழியாய் மனிதருக்கு இரக்ஷணியம் இல்லை" என்று பிரசங்கித்தாரல்லவோ. அவர் உரைத்த வாக்கியம் பொய்யாயிருந்தால் யூத ஞானிகளாகிய பரிசேயர் அவர் வாயை அடைக்க எதிர்வாதம் பண்ணிக் காவல்காரரைச் சாட்சிகளாகச் சபை நடுவில் ஏன் கொண்டு வந்து விடாமற் போனார்கள்? இராயப்பர் பிரசங்கத்தைக் கேட்டு உடனே 3000 பேர் ஞானஸ்நானம் பெற்றார்களே. அதினிமித்தம் யூதகுருக்களுக்கு ஆத்திரம் பொங்கினதேயொழிய,

சேசுநாதர்சுவாமி உயிர்க்கவில்லையென்று ஒப்பித்தவர் ஒருவரும் இல்லையே. சேசுநாதர்சுவாமியை அறியேனென்று பயத்தினாலே ஆணையிட்டுச் சபித்த இராயப்பருக்கு அவர் செத்தபிற்பாடு உயிர்த்தாரென்று சொல்லும்படியான தைரியம் எப்படியுண்டானது? மெய்யைச் சொல்ல நடுங்கினவர், இப்போது ஒரு அபாண்ட பொய்யைச் சொல்லி அதற்காகத் தன் உயிரைக்கொடுக்கத் துணிவாரோ? அதினாலே அவருக்கு வந்த இலாபமென்ன?

ஆகையால் இதுவரையில் துலங்கிய திருஷ்டாந்தங்களினாலே சேசுநாதர்சுவாமியுடைய சரீரத்தை எவருந் திருடிக்கொண்டு போகவில்லையென்பது திண்ணம். ஆகவே, மாய ஜாலத்தால் அந்தச் சரீரம் காணாமற் போயிற்று என்கலாமா?

பி.: சேசுநாதர்சுவாமி பேயினுடைய இராஜாங்கத்தை அழித்து அதன் கையினின்று சகல மனிதரையும் இரட்சிக்கும்படி இவ்வுலகத்துக்கு வந்திருக்க, அவரைத் தன் சர்வமெல்லாங்கொண்டு பகைக்கிற பசாசு தனது மாய வித்தையினாலே அவருடைய சரீரத்தைக் கண்ணுக்குக் காணாமற் போகப்பண்ணி அவர் தமது வல்லமையினாலே உயிர்த்தாரென்று உலகம் நினைக்கும்படி செய்ததென்று பைத்தியங்கொண்டவன் முதலாய்ச் சொல்லமாட்டான்.

தாய்: மகனே, நன்றாய்ச் சொன்னாய். சேசுநாதர்சுவாமி தாம் போதித்த திவ்விய வேதத்தை உறுதிப்படுத்தும்படி நோயாளிகளைக் குணப்படுத்தினார், பேய்களை ஓட்டினார், பிறவிக் குருடருக்குப் பார்வை கொடுத்தார், செத்தவர்களை எழுப்பினார். இந்த அதிசயங்களை சுவாமி பேய்வித்தையினாலே செய்கிறாரென்று யூதஞானிகள் பொறாமையினாலே அவதூறாகக் கூறினார்கள். சேசுநாதர்சுவாமி அவர்களை நோக்கிப் பேயானது தனது இராட்சியத்தையே பாழாக்கும்படியான மாய வேலையைச் செய்யுமோவென்று பதில் மொழிந்தார். அதினாலே அவர் உயிர்த்த விஷயத்தை யூதர்கள் மாயவித்தையென்று விளம்பரம் பண்ணக் கூசினார்கள். ஏனெனில் பேயை ஒரு பைத்தியகாரப் பேயாக்



காமல் இந்த வர்த்தமானத்தை அதன்மேல் சாட்டுகிறதைப் போல் மூடத்தனமில்லையென்று அவர்கள் உணர்ந்தார்கள்.

இது நிற்க, சேசுநாதர்சுவாமியுடைய திருச்சரீரத்தைக் காணாமல் போகச்செய்தது மனிதனுமல்ல, பேயுமல்ல என்பது உச்சிப்பகலினும் தெளிவாய்த் துலங்குகிறது. ஆகையால் திவ்விய கர்த்தர் தமது சீஷர்களையும், மற்ற ஜனங்களையும் யூத ஞானிகளையும் நோக்கி, "நான் மரித்த மூன்றாம் நாள் உயிர்த்து வருவேன்" என்று ஒருமுறைக்கு மும்முறையாக ஏற்கனவே தெளிவாய் அறிவித்தபடியே * (மத். 27, 63) தமது தெய்வீக வல்லமையினாலே மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தருளினார் என்பது நிலைபெற்ற உண்மை.

அது கிறீஸ்து வேதத்துக்கு அடிப்படை சத்தியம் என்று அர்ச். சின்னப்பரே மகா உறுதியாய் மொழிகிறார். அந்த மூன்றாம் நாளிலும் அதற்குப்பின்னாலும் நடந்தேறின வரலாறுகளும் அதை ஸ்திரப்படுத்துகின்றன. இந்த இருபது நூற்றாண்டுகளாய் அந்தச் சத்தியத்தைப் பொய்யாக்கும்படி அஞ்ஞானிகளும், யூதர்களும், நாஸ்திகரும், இரகசிய சபையாரும் இன்னம் மற்றக் கிறீஸ்துவேத விரோதிகள் அனைவோரும் தங்கள் தலைவெடிக்கச் செய்த சதியோசனைகள் எல்லாம் தகர்ந்து விழுந்து கிடக்கிறதை உலக சரித்திரங்கள் வெளிப்படையாகவும் மறைவாகவும் வெளிப்படுத்துகிறது.

## வரலாறு.

யூத ஞானிகள் ஒருநாள் சேசுநாதர்சுவாமியை நோக்கி, நீர் இவ்வளவு அதிகாரத்தோடே நூதனமான போதனைகளைப் போதிக்கிறதற்கு ஆதாரமாக ஒரு அற்புத அடையாளம் காட்டுமே என்றார்கள். திவ்விய இரட்சகர் அற்மாறுத்தாரமாக "இந்தக் கெட்ட ஜனம் நம்மிடத்திலே அற்புதஞ் செய்யக் கேட்கிறது. இவர்களுக்கு ஜோனாஸ் தீர்க்க

* மத். 17, 22; 20, 19; மாற். 9, 30; லூக். 11-30.

தரிசிக்கு நடந்த அற்புதத்துக்குச் சமானமான அதிசயம் ஒன்று காட்டப்படும். ஜோனாஸ் எப்படி ஒரு மீனினுடைய வயிற்றில் மூன்று நாள் இருந்து மூன்றாம்நாள் உயிரோடே வெளியேறினாரோ, அப்படியே மனுமகனும் பூமியின் உதரத்தில் மூன்றுநாள் இருந்து பிறகு உயிர்ப்பார்" என்றார் (மத். 12-40; லூக். 11- 30). இங்கே சேசுநாதர்சுவாமி ஜோனாசைச் சாட்டித் தம்மைக்குறித்து மொழிந்த தீர்க்கதரிசனத்தின் சாரத்தை யாவரும் உணரும்படி ஜோனாசுக்கு நடந்த வரலாற்றை இவ்விடம் கூறுகிறேன்.

ஜோனாஸ் தீர்க்கதரிசி வாழ்ந்தகாலத்திலே அசீரிய தேசத்தின் இராஜதானியாகிய நீனிவு நகரத்தார் வெகு அக்கிரமங்களிலே அமிழ்ந்தித் தேவ கோபத்தை மூட்டினார்கள். கடவுளானவர் ஜோனாசுக்குத் தரிசனையாகி, அவர் நீனிவு பட்டணஞ் சென்று அவ்வூரார் தபசு செய்யாவிட்டால் அந்த நகர் அழிந்துபோகுமென்று எச்சரிக்கும்படி கட்டளையிட்டார். ஜோனாஸ் அவ்வூருக்குப்போகப் பயந்து கப்பலேறி வேறேயொரு தேசத்துக்குப் பயணப்பட்டார். அவருடைய நடத்தை ஆண்டவருக்குப் பிரியப்படாததினாலே, கடல் பொங்கப் பெரும் புசலடிக்கக் கப்பல் மூழ்கிப்போகிற ஆபத்திலிருந்தது. அப்போது அதிலிருந்த மாலுமியும் பிரயாணிகளும் திகிலடைந்து தாங்கள் ஏற்றிக்கொண்டுபோன சரக்குகளையெல்லாம் கடலில் வீசியெறிந்தார்கள். பிறகு யாருடைய குற்றத்தினால் இந்த அபாயம் நேரிடுகிறதென்று அறியத் திருவுளச்சீட்டுப் போட்டார்கள். அது ஜோனாஸ் பேருக்கு விழுந்தது. உடனே எல்லோரும் அவரைச் சூழ்ந்துகொண்டு, நீ யார்? எந்த ஊர்? உனது தொழில் என்ன? என்று பலவாறு வினவ, அவர் உள்ளதைச் சொல்லி, "என் குற்றத்தினிமித்தந்தான் இந்தப் புசல் எழும்பினதென்பது நிச்சயம். ஆகையால் என்னைத் தூக்கிக் கடலிலே போடுங்கள், புசல் நின்றுபோகும்" என்றார். அவர்கள் துவக்கத்திலே வெகுவாய் அஞ்சினார்கள். ஆனால் ஜோனாஸ் அவர்களை நோக்கி, நான் விளையாட்டுக்கல்ல, காரியமாய் வினயமாய்ப் பேசுகிறேன் என்று அவர்களுடைய மனதை உறுதிப்படுத்தினதினாலே,



அவர்கள் அவரைத் தூக்கிக் கடலிலே போட்டார்கள். அக்ஷணமே புசல் அமர்ந்தது. தண்ணீரில் விழுந்த ஜோனாசை உடனே ஒரு பாரி மீன் விழுங்கிற்று. மீனினுடைய வயிறு அவருக்குக் கல்லறையானது. ஆயினும் தெய்வ அற்புத செயலால் அவர் அதிலே சாகாமல் தேவ தோத்திரங்களைப் பாடிக்கொண்டிருந்தார். இப்படி மூன்று நாள் இருந்தபின் அந்த மீன் அவரைக் கடற்கரையில் கொண்டுவந்து கக்கினது. தன்னுயிருக்காவது அவயவங்களுக்காவது யாதொரு மோசமில்லாமல் ஜோனாஸ் மீன் வயிற்றினின்று வெளியே வந்து ஆண்டவர் கற்பித்தபடி நீனிவு நகரத்தாருக்குப் புத்திசொல்லப் போனார்.

பழைய ஏற்பாட்டில் வரையப்பட்டிருக்கும் இந்தச் சம்பவத்தைச் சாட்டித்தான் சேசுநாதர்சுவாமி தாம் மரித்துக் கல்லறையில் மூன்றுநாளிருந்து மூன்றாம் நாள் உயிர்ப்போமென்று யூத ஞானிகளுக்கு ஏற்கனவே அறிவித்தார். இதுபோலவே பழைய ஏற்பாட்டில் கூறப்பட்டிருக்கிற அநேகாநேக சம்பவங்கள் சேசுநாதர்சுவாமியுடைய ஜீவியத்தை தீர்க்கதரிசனமாய்ச் சுட்டிக் காட்டுகிற காரணக்குறிகளாயிருக்கின்றன. சேசுநாதர்சுவாமியும் இந்தக் குறிகளை யூத ஞானிகள் ஆராய்ந்து பார்க்கும்படி அவர்களை ஏவினார். சேசுநாதர்சுவாமியுடைய பிறப்பையும், கொடிய மரணத்தையும் உத்தானத்தையும்பற்றி பழைய ஏற்பாடு தெளிவாய்ப் பேசுகிறது (மிக். 5-2; சங். 21, 1-20; சங். 15-10.).

இவ்வித வெளிப்படையான குறிகளை வேறு எந்த மதஸ்தரும் காட்டமுடியாது.

---

## 12. உயிர்த்த சேசுவின் அழகு சௌந்தரியம்.

தாய்: நான் இதுவரையில் ஒப்புவித்ததைக்கொண்டு மெய்யான புதுமை சத்திய வேதத்துக்குச் சாட்சியாகச் சர்வேசுரனாலே மாத்திரஞ் செய்யப்படக்கூடியதென்றும், ஆகையால் இதர மதங்களிலே மெய்யான புதுமைகள்

அந்த மதங்களுக்கு அத்தாட்சியாக நடக்கவேமாட்டாதென்றுந் தெளிவாகிறது. சேசுநாதர்சுவாமி உயிர்த்த புதுமை மறுக்கப்படாத சத்திய வர்த்தமானமென்பதற்கும் சந்தேகமில்லை. ஆனால், மகனே, உயிர்த்த சுவாமியுடைய சரீரம் என்ன விசேஷ இலக்ஷண சுரூபமாயிருந்ததென்று உனக்குத் தெரியுமா?

பிள்ளை: அது அக்ஷயம், சூக்ஷம், இலகு, பிரகாசம் என்னும் இலக்ஷணங்களை உடையதாயிருந்ததெனப் படித்திருக்கிறேன். ஆயினும் அவைகளின் அர்த்தம் எனக்குச் சரியாய்ப் பிடிபடவில்லை. அம்மா, எனக்குத் தயவுசெய்து சொல்லிக்கொடுங்கள். மண் சரீரம் பிரகாசிக்கிறதெப்படி?

தாய்: நீ இப்போது மனப்பாடமாய்க் கூறின இலக்ஷணங்கள் இன்னதென்று உனக்கு விபரமாய்க் காட்டுகிறேன். நன்றாய்க் கவனித்துக்கேள். வைரமணியானது நவரத்ன மணிகள் எல்லாத்தையும்விட அதிக ஒளியுள்ளது; கையால் தொட்டு ஸ்பரிசிக்கலான பொருட்கள் யாவற்றையும் பார்க்க அதிக அழுத்தமுள்ளதாமே. ஆயினும் வைரமணியின் மூலப்பகுதியும் நமது விரல்களில் நுணுக்கிற அடுப்புக்கரியின் மூலப்பகுதியும் ஒன்றுதானென்று சாஸ்திரிகள் ஒருப்பட நிச்சயிக்கிறார்கள். கண்ணாடியைச் சூரியனுக்குமுன் காட்டும்போது அது ஒரு சூரியனைப்போலே ஒளி வீசுகிறதல்லோ? என்றாலும், கண்ணாடியின் மூலப்பகுதிகள் ஓரிருவகை மண்ணொழிய வேறொன்றுமல்ல. மூலப்பகுதி, மூல பூதியம், மூல பிரகிருதி, மூல வேர், மூல வித்து என்னும் வார்த்தைகளுக்கெல்லாம் ஏறக்குறைய அர்த்தம் ஒன்றுதான். ஆகவே, நிசிதப்பொருளாகிய அடுப்புக்கரியும் மண்ணும் சுடர்வீசும் பொருளாக மாறக்கூடுமானால், தெய்வீகத்தோடே பிரியா முறையாய் ஒன்றித்திருக்கும் சேசுநாதர்சுவாமியின் திருச்சரீரம் அக்ஷயம், சூக்ஷம், இலகு, பிரகாசம் என்னும் மேலான இலக்ஷணங்களோடே உயிர்த்துவந்தது நம்பக்கூடாத அதிசயமல்லவே. திவ்விய கர்த்தர் மற்ற மனிதர்களைப்போலே இவ்வுலகத்திலே சீவித்த காலத்திலேயே ஒரு சமயத்தில் மறு ரூப



மாகிச் சூரியனைப்போலே துலங்கினாரென்று நாம் படிக்கிறோமல்லோ. அவர் உயிர்த்தபோதோவெனில், சூரிய பிரகாசம் கண்ணாடியில் துலங்குகிறாப்போலே திவ்விய கர்த்தருடைய ஆத்துமத்தின் சோதி அவருடைய சரீரத்திலே ஜொலித்தது.

பி.: உயிர்த்த சுவாமியை அப்போஸ்தலர்கள் பார்த்தபோது, அவர் மறு ரூபமான சமயத்தில் தோற்றுவித்த ஒளியோடே தோன்றினாரோ?

தாய்: உயிர்த்த தமது சரீரத்தை அப்போஸ்தலர்கள் கண்கூசாமல் பார்த்து, கைநடுங்காமல் தொட்டு மனந்தெளிந்து தேறி தாம் உயிர்த்த சத்தியத்தை உறுதியாக விசுவசிக்கும்படி சேசுநாதர்சுவாமி தமது திருமேனியின் சோதியை மறைத்து அவர்களுக்குக் காட்சியானார். ஆயினும் அவர் முகத்திலே சகலத்தையும் வெல்லும்படியான அழகு இலங்கினது. (சங். 44-3.)

பி.: அம்மா, நீங்கள் விவரித்ததைக்கொண்டு சேசுநாதர்சுவாமியின் திருச்சரீரம் பிரகாசத்தோடே உயிர்த்த வகையைக் கொஞ்சம் அறிந்துகொண்டேன். அதற்குமேல் அக்ஷயம், சூக்ஷம், இலகு என்னும் இலக்ஷணங்களால் அதற்கு உண்டான மகிமையென்ன?

தாய்: 1. அக்ஷயம் என்கிற வார்த்தைக்கு அழியாமையென்று அர்த்தமாகும். மனிதனுடைய சரீரம் இயல்பிலே பசி தாகம், இளைப்புக் களைப்பு, காயம், வலி, சாவு முதலிய பலவீனங்களுக்கு உட்பட்டது. சேசுநாதர்சுவாமியுடைய சரீரம் தெய்வீகத்தோடே எப்போதும் ஒன்றித்திருந்தபடியினாலே, அதை இவ்வித நிர்ப்பந்தங்கள் தீண்டுவதும் தீண்டாததும் அவரது திருச் சித்தத்தைப் பொறுத்ததாயிருந்தது. ஆயினும் நமதாண்டவர் நமக்கு மோக்ஷ வழியைக்காட்டி முன்மாதிரிகையாய் இருக்க சித்தமாயினதினால் நம்மைப்போலே அந்தப் பீடைகளையெல்லாம் ஏற்றுக்கொண்டார். ஆனால் அவர் உயிர்த்தமாத்திரத்தில் தமது மனுஷீக சரீரத்துக்குப் பசி தாகம் வலி

வேதனை சாவு முதலிய துன்பங்களின்றி என்றென்றைக்கும் பாக்கியமாய் வாழும்படியான வரத்தை அளித்தார். இவ்வாறு வாழுந் தன்மைதான் அக்ஷய இலக்ஷணமென்னப்படும். இந்த இலக்ஷணம் முந்தமுந்த ஆத்துமத்துக்கும், ஆத்துமத்தின் வழியாய்ச் சரீரத்துக்கும் அளிக்கப்படுகிறது. ஏனெனில் சரீரத்தினுடைய பெருமையும் சிறுமையும் அதற்கு உயிராகிய ஆத்துமத்தில் அடங்கியிருக்கிறது.

2. சூக்ஷம் என்றால் நுட்பம், அணு எனப் பொருள் கொள்ளும். ஒரு வஸ்து நீளம் அகலம் காத்திரம் முதலிய பரிமாணங்களுடன் இருந்தாலும் அவைகள் இல்லாத பாவனையாய் சம்மனசு அல்லது அரூபியைப்போலே நடக்கிற சக்தி அதற்கு உண்டானால் சூக்ஷம் என்னும் வரம் அது பெற்றிருக்கிறதென்க. அது நினைத்த இடத்துக்குப் போக வரவொட்டாமல் செய்வதற்கு மலையோ மண்ணோ எந்தப் பரிமாணப் பொருளும் குறுக்கே தடையாயிருக்கமாட்டாது.

சேசுநாதர்சுவாமி உயிர்த்தபோது அவருடைய திருச்சரீரத்துக்கு மனிதரூபத்துக்குரிய பரிமாணங்கள் மெய்யாகவே இருந்தாலும் அவைகளில்லாத அரூபியாகிய சம்மனசுவைப்போலே யாதொரு விக்கினமின்றி அது அவர் நினைத்த இடத்துக்குப் போகும்படியான சக்தியுடையதாயிருந்தது. இதினாலேதான் அப்போஸ்தலர்கள் ஒரு வீட்டுக்குள்ளே கதவெல்லாம் சாத்திக்கொண்டிருந்த சமயத்தில், இருந்தாப்போலே சேசுநாதர்சுவாமி அவர்கள் நடுவிலே தோன்றி, பயப்படாதேயுங்கள், உங்களைப்போலே எனக்கும் சதையும் எலும்பும் இருக்கிறதென்றார். அவர் கல்லறையைத் திறவாமல் அதினின்று வெளியே எழுந்தருளினதும் சூக்ஷவரத்தின் பயனாகும். அர்ச். கன்னிமரியம்மாளுடைய உதரத்தில் ஒன்பது மாதம் அடைபட்டிருந்தபின், சூரியகதிர் கண்ணாடியை ஊடுருவி வருகிறாப்போலே வெளியே உதித்த அதிசயமும் சூக்ஷம வரத்துக்கு உரிமையான புதுமை.



3. இலகு என்பது ஆகாயத்தைப்போலே பாரம் பளுவில்லாமல், மின்தாது (Electricity), சூரியகதிர், இன்னம் அரூபியான சம்மனசுக்கே நிகராக ஓரிடமிருந்து மற்றொரு இடத்துக்கு ஒரு க்ஷணத்திலே செல்லக்கூடிய சக்தியென்று வருணிக்கலாம். ஆகவே, சேசுநாதர்சுவாமியுடைய சரீரம் தெய்வீக ஆளோடே ஒன்றித்திருந்தபடியால், தெய்வீகம் நினைத்த இடத்துக்கு அது ஒரு க்ஷணத்திலே ஏகும்படியான வல்லமையைப் பெற்றிருந்தது. இந்த வல்லமையினாலே மனம் எங்கேயோ, சடமும் அங்கேயிருக்குமென்று அர்ச். அகுஸ்தீன் உரைக்கிறார். அதினிமித்தம் அப்போஸ்தலர்களுக்கு சேசுநாதர்சுவாமி கலிலேய தேசத்திலே காட்சிதர சித்தமானபோது அவருடைய சரீரம் அக்ஷணமே அவ்விடத்திலே சீஷர்களுக்குத் தரிசனமாயிற்று. திவ்விய இரட்சகர் மோக்ஷத்துக்கு ஏறுகிறதை அப்போஸ்தலர்கள் பார்த்துக்கொண்டு நின்றார்களென்று வேத புத்தகத்தில் வரையப்பட்டிருப்பதால் அவர் வானலோகத்துக்கு ஒரு மின்னலைப்போல் ஏகாமல் மெதுவாய் எழுந்தருளிப்போக மனதாயிருந்தாரென்று தெரிகிறது.

இந்த வரங்களையெல்லாம் சேசுவின் தெய்வீகமானது தன்னோடு இணைபிரியாமல் ஒன்றித்திருந்த அவருடைய திரு ஆத்துமத்துக்கு அளிக்க, அந்த ஆத்துமம் அவைகளைத் தன்னோடு ஐக்கியமாயிருந்த திருச்சரீரத்தில் துலங்கப்பண்ணி அதை ஒரு சம்மனசுக்கொப்பாக்கினது. இவ்வண்ணமாய், தாவீது இராஜா வசனித்த தீர்க்கதரிசனத்தின்படியே, சர்வேசுரன் சேசுநாதர்சுவாமியுடைய மனுஷீகத்தைச் சம்மனசுக்களின் சுபாவத்துக்குக் கீழாகச் சற்றுத் தாழ்த்தினாலும் அதை மகிமை பெருமையினாலே முடிசூட்டிப் படைப்புண்ட சகல வஸ்துக்களுக்கும் அரசாக்கினார் (சங். 8-6; எபிரே. 2-7).

பி.: சேசுநாதர்சுவாமி உயிர்த்தபிற்பாடு நாற்பதுநாள் உலகத்திலே ஜீவித்தாரே. அத்தனை நாட்களும் சாப்பிடாமலோ இருந்தார்?

தாய்: சேசுநாதர்சுவாமி தாம் மெய்யாகவே தமக்குரிய சரீரத்தோடே உயிர்த்திருக்கிறதைச் சீஷர்கள் உறுதியாய் நம்பும்படியாக அவர்கள் கண்ணுக்குமுன் சாப்பிட்டதாக வேதபுத்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது. மற்றப்படி பசிக்காக அவர் சாப்பிடவில்லை. கர்த்தர் பாடுபடுமுன்னே கடைசி அசனம் தமது சீஷர்களோடே செய்தபோது, நாம் இனி இந்த உலகத்திலே சாப்பிடப்போகிறதில்லையென்று அறிவித்தார் (லூக். 16-18). சம்மனசுக்கள் மனுஷ ரூபத்தோடே அபிரகாம் (ஆதி. 18, 8-9), தோபியாஸ் (தோபி. 12-18) முதலிய மகாத்துமாக்களுக்குத் தரிசனையான சமயத்தில் சாப்பிடுகிறதுபோலே பாவனை காட்டினார்களேயொழிய சாப்பிடுகிற சுபாவம் அவர்கள் எடுத்த சரீரத்துக்கு அமையவில்லை. ஏனெனில் அவர்களுடைய சரீரத்துக்கு ஒரு ஆத்துமம் இருந்ததில்லை. அவர்களுடைய தேகத்தில் மெய்யான இரத்தமுஞ் சதையும் எலும்பும் பிடிக்கவுமில்லை. உயிர்த்தருளின திவ்விய இரட்சகரோவெனில் மற்ற மனிதரைப்போலே ஆத்துமமும் சரீரம் உடையவராயிருந்ததினாலே, அவர் உயிர்த்தபின்னும் தமக்குச் சித்தமானபோது போசனம் பண்ணக்கூடியவராயிருந்தார். ஆனால் அக்ஷயம் என்கிற வரத்தினாலே சாப்பிடவேணுமென்கிற அவசியம் அவருக்கு அற்றுப்போயிற்று.

தாய்: மரித்த நமது திவ்விய இரக்ஷகர் திரும்ப உயிரோடே எழுந்தாப்போலே, மனிதரும் செத்தபிற்பாடு மறுபடியும் உயிர்ப்பார்களோ?

பி.: சகல மனிதரும் ஒருநாள் உயிர்த்து சேசுநாதர்சுவாமிக்கு முன்பாகத் தீர்வைக்குப் போவார்களென்று படித்திருக்கிறேன். ஆனால் எல்லாரும் சேசுநாதர்சுவாமியைப்போலே சோதிப்பிரகாச இலக்ஷணத்தோடே எழும்புவார்களா?

தாய்: அர்ச். சின்னப்பர் வசனிக்கிறபிரகாரம், சகல மனுஷரும் சேசுநாதர்சுவாமியுடைய வல்லமையினாலே மரித்தபின் உயிர்ப்பார்கள். ஆனால் திவ்விய இரக்ஷகரைப் பின்பற்றி அவருக்குப் பிரியப்பட ஜீவித்த பேர்கள் மாத்



திரந்தான் அவரைப்போலே அக்ஷயம் சூக்ஷம் முதலிய மகிமை இலக்ஷணங்களோடே உயிர்த்தெழும்புவார்கள். திவ்விய இரக்ஷகரைப் பின்செல்ல மனமில்லாமல் அவரை விட்டுப் பிரிந்து, பேயினுடைய புத்தியைக் கேட்டுத் தவறி விழுந்த பாவிகள் பேய்களைப்போலே அவலக்ஷணர்களாய் உயிர்ப்பார்கள்.

பி.: ஆத்துமம் அழியாத வஸ்துவாயிருக்கையிலே, அது உயிர்க்கிறதென்று எப்படிச் சொல்லலாம்?

தாய்: 1. ஆத்துமத்தின் பெருமையையுஞ் சிறுமையையும் அதன் சரீரம் தன் பாத்தியமாக்கிக்கொள்ளுகிறது. அதுபோலவே ஆத்துமம் மெய்யாகவே செத்து உயிர்க்காதபோதிலும், தன்னோடே ஏகமாய் ஒன்றித்து ஒரே சுபாவமாய் வாழ்ந்துவந்த தன் சரீரம் மண்ணாய் மக்கிப் போய்க் கிடந்தபின் திரும்பவும் தன்னோடே ஐக்கியமாகி உயிர்க்கும்போது தானே செத்து உயிர்த்தாப்போலே பெருமைகொள்ளும். சபிக்கப்பட்ட ஆத்துமமாயிருந்தால் அது தனது சரீரம் அவலக்ஷண ரூபமாய் எழும்பும்போது, வெட்கத்தினால் சகிக்கமுடியாமல் மலையும் குன்றும் தன்னை நசுக்கி நாசமாக்கிப்போடும்படி விரும்பி விரும்பிக் கேட்கும்.

2. இவ்வுலகத்தில் இருக்குமட்டும் ஆத்துமம் நன்மையிலாவது தின்மையிலாவது ஒரே நிலையாயிராமல் மாறி மாறி நடக்கிறது. சாவுக்குப்பின் புண்ணியாத்துமம் நன்மையிலும், பாவாத்துமம் தின்மையிலும் நித்தியகாலத்துக்கும் உறுதிப்பட்டுப்போகிறது. இதினாலேதான் மகாத்துமாவான அபிராம் நரகத்திலே வெந்து அலறிய ஆஸ்திக்காரனை நோக்கி, நீயிருக்கிற ஸ்தலத்திலிருந்து இவ்விடம் ஏறிவருவாருமில்லை, இவ்விடமிருந்து உன்னிடம் இறங்கி வருவாருமில்லையென்றார். ஆத்துமமானது தனக்குள்ள இந்த மாறா நிலைமையைச் சரீரம் உயிர்க்கும்போது அதற்கும் அளிக்கிறதினாலே ஆத்துமம் தன் சரீரத்தோடே உயிர்த்ததாகச் சொல்லப்படுகிறது. அதைத்தான் ஆத்தும

உயிர்ப்பென்கிறோம். ஆயினும் சாதாரண பேச்சிலே ஆத்தும உயிர்ப்பு என்னும் வாக்கியம் பரிசுத்த ஆத்துமாக்களைக் குறிக்கிறது.

## வரலாறு.

அர்ச். சின்னப்பருக்கு முதலில் சவுல் என்னும் பெயர் வழங்கிவந்தது. இவர் தார்ஸ் நகரத்திலே யூத குலத்தில் பிறந்து யூத மதத்திலே மிஞ்சின வைராக்கியரானார். சேசுநாதர்சுவாமி உலக இரக்ஷகரென்று அவர் நம்பவில்லை. அவர் உயிர்த்த வர்த்தமானத்தையும் விசுவசிக்கவில்லை. அப்போஸ்தலர்களுடைய வார்த்தைகளுக்குச் செவிகொடுத்துக் கிறீஸ்துவர்களான யூதரைப் பிடித்து அடித்துச் சிறையில் அடைத்து நிர்மூலமாக்கவேணுமென்று தன்னாலான பிரயத்தனமெல்லாம் பண்ணினார். இந்தப் பேய்க்கருத்தோடே தமாஸ்கு என்னும் பட்டணத்துக்குப் பயணப்பட்டார். அதற்குச் சமீபித்தபோது திடீரென ஒரு ஒளி அவரைச் சூழ்ந்துகொள்ள, அவர் தரையிலே விழுந்தார். அச்சமயத்திலே, சவுலே, சவுலே, நீ என்னை ஏன் உபாதிக்கிறாயென ஓர் குரலொலி சப்தித்தது. சவுல் திடுக்கிட்டு, ஆண்டவரே, நீர் யார் என்று கேட்டார். உன்னாலே உபாதிக்கப்படுகிற சேசு நான்தான் என்று மறுமொழி எழும்பினது. உடனே, சவுல் நடுங்கி, ஆண்டவரே, நான் என்ன செய்யும்படி உமக்கு சித்தம் என்று மன்றாடினார். "நீ எழுந்து பட்டணத்துக்குள்ளே போ, அங்கே நீ செய்யவேண்டியது இன்னதென்று அறிவாய்" என ஆண்டவர் திருவுளம்பற்றினார். காட்சி மறைந்தது. சின்னப்பர் எழுந்திருக்கும்போது தமது கண் குருடாய்ப் போனதாகக் கண்டார். கூடவந்தவர்கள் அவரை ஊருக்குள் கூட்டிக்கொண்டு போனார்கள். அப்பட்டணத்திலே அனனியாவென்னும் பக்திமான் ஒருவர் இருந்தார். சேசுநாதர்சுவாமி அவருக்குத் தரிசனையாகி, "அனனியா, இதோ இந்த ஊரில் தார்ஸ் நகரத்து சவுல் வந்து ஜெபித்துக்கொண்டிருக்கிறான். அவனை நீ பார்க்கப்போ" என்றார். அப்படியே அனனியா



அவர் இருந்த வீட்டுக்குப் போய் "சவுலே, என் சகோதரனே, உனக்கு வழியில் தரிசனையான ஆண்டவராகிய சேசு என்னை உன்னண்டை அனுப்ப நான் உன்னைத் தேடிவந்திருக்கிறேன். நீ பார்வை அடைந்து இஸ்பிரீத்து சாந்துவைப் பூரணமாய்ப் பெற்றுக்கொள்" என்றார். அக்ஷணமே அவருடைய கண்களை மூடிக்கொண்டிருந்த தோல் கரைந்து விழுந்தது. சவுல் பார்வை அடைந்து அனனியா கையாலே ஞானஸ்நானம் பெற்றார். அவர் கண்ட காட்சியினாலே சேசுநாதர்சுவாமி மெய்யாகவே உலக இரக்ஷகரென்றும், அவர் மரித்தோர்களோடே மரித்தோராய்க் கல்லறையிலே கிடக்காமல், அக்ஷயம், சூக்ஷம், இலகு, பிரகாசமென்கிற வரங்களால் அலங்கரிக்கப்பட்டு உயிர்த்தாரென்றும் ஆழ்ந்து உணர்ந்து, இந்த சத்தியத்தை ஒப்பிக்கிறதிலே தன்னை செலவழித்து தன் உயிரைக் கொடுக்கத் துணிந்தார். கொரிந்தியருக்கு அவர் எழுதிய முதல் நிருபத்திலும் சேசுநாதர்சுவாமி மேற்கூறிய நான்கு வரங்களோடே உயிர்த்த சத்தியத்தை வெகு அழுத்தமாய்ப் போதிக்கிறார் (1 கொரி. 15-ம் அதி.).

---

## 13. உயிர்த்த சேசுவின் தரிசனக் கோர்வை.

பி.: அக்ஷயம் சூக்ஷம் முதலிய இலக்ஷணங்களோடே உயிர்த்த நமது ஆண்டவர் உடனே மோக்ஷத்துக்கு ஏறாமல் இவ்வுலகத்திலே நாற்பதுநாள் இருந்தாரே. அந்த நாற்பது நாட்களில் அவர் செய்ததென்ன, அம்மா?

தாய்: நமது திவ்விய இரட்சகர் கல்லறையைவிட்டு உயிர்த்து முந்தமுந்த தமது அன்பான தாயாருக்குத் தரிசனமானார். இந்த வர்த்தமானம் சுவிசேஷத்தில் எழுதப்படவில்லை. ஏனெனில் அறிவுள்ள எவருக்கும் இது தன்னிச்சையாய்த் துலங்குமென்கிறதினாலே சுவிசேஷகர்கள் இதைச் சுட்டிக்காட்டாது விட்டுவிட்டார்கள். இதையும் இதைப்போன்ற வேறு பல விசேஷங்களையும் நாம்

யுக்திபுத்தியினாலே அறிந்துகொள்ளும்படிதான் அர்ச். அருளப்பர் தமது சுவிசேஷத்திலே சேசுநாதர்சுவாமி செய்த அநேகாநேக விஷயங்கள் எழுதப்படாமல் விடப்பட்டிருக்கின்றனவென்று வரைந்திருக்கிறார் (அரு. 20-30).

இரண்டாவது: மரியமதலேனம்மாளுக்கும், பிறகு அவளுடைய துணையாளிகளான புண்ணிய ஸ்திரீகளுக்கும் காட்சியானார்.

பி.: சுவாமி உயிர்த்த அன்றையத்தினம் நடந்த வர்த்தமானங்கள் சுவிசேஷத்தில் தெளிவாய் இல்லையென்று அதை வாசிக்க பல பேர்கள் சொல்லுகிறார்கள். அவைகளைக் காலக்கிரமப்படி வரிசையாய் எடுத்துக் காட்டுவீர்களானால் நலமாயிருக்கும், அம்மா.

தாய்: இதுகாரியத்திலே ஒரு பெரிய மகாத்துமாவுக்குத் தெளிவிக்கப்பட்டபடி நான் வரிசையாய் எடுத்துக் கோர்த்துக் காட்டுகிறேன். சாவதானமாய்க் கேள்.

1. சேசுநாதர்சுவாமியைக் கல்லறையில் அடக்கின பின் அரிமத்தியா சூசையப்பரும், தேவமாதாவும், மற்றவர்களும் ஜெருசலேம் பட்டணத்துக்குத் திரும்பினார்கள். யூத குருக்கள் கல்லறையிலே முத்திரையிட்டுச் சேவகரைக் காவலாக வைத்தது அவர்களுக்குத் தெரியாது.

2. மறுநாள் சனிக்கிழமை பொழுது இறங்கும் வேளையில் ஓய்வுநாள் கடமை முடிந்தது. உடனே மதலேனம்மாளும் மற்ற மரியம்மாளும், பரிமள தைலம் வாங்கிக்கொண்டு அதிகாலமே கல்லறையை நோக்கிச் சென்றார்கள் (மாற். 16, 1-2).

3. சுவாமி மரித்த தினத்தில் மத்தியானத்துக்குமேல் மூன்று மணிக்கெல்லாம் பொழுதுபோய் இருள் அடர்ந்ததுபோல், அவர் உயிர்த்த நாளில் காலை மூன்று மணிக்கெல்லாம் இராக்கருக்கல் கரைந்துபோயிற்று. புண்ணிய ஸ்திரீகள் ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில் வீட்டைவிட்



டுப் புறப்படும்போது கொஞ்சம் இருட்டு இருந்தது (அரு. 20-1). அவர்கள் கல்லறைக்கு வந்து சேரும்போது பொழுது விடிந்திருந்தது (மாற். 16-2).

4. அவர்களுக்குக் காவல்காரரையும் முத்திரையையும் பற்றி ஒன்றுந் தெரியாதபடியால், வழி நடந்துபோகையில் கல்லைப் புரட்டுகிறதெப்படியென்று மாத்திரம் பேசிக்கொண்டு போனார்கள். ஆனால் திவ்விய இரட்சகர்பேரில் அவர்கள் இருதயத்தில் பற்றியெரிந்த சிநேக எழுச்சி அந்த விக்கினத்தை ஒரு பொருட்டாக மதிக்கவில்லை.

5. அவர்கள் வழியில் வரும்போதே பூமி அதிர்கிறதைக் கண்டு பயந்து திடுக்கிட்டார்கள். நமதாண்டவர் அற்புதமாக அவர்களுடைய மனதை உறுதிப்படுத்தி அச்சமில்லாமல் போகும்படி செய்தார். பூமி அதிர்ந்த சமயத்தில்தான் வானலோகத்திலிருந்து ஒரு சம்மனசு இறங்கிக் கல்லறையை மூடியிருந்த பெரும் பலகைக்கல்லை அப்பால் தள்ளி அதன்மேல் உட்கார்ந்தார். அவருடைய முகம் மின்னலைப்போல் துலங்கினது. அவருடைய உடையோ மலைப்பனிபோல் தூய வெண்மையாய் இலங்கிற்று. காவல்காரர் நடுங்கின நடுக்கத்திலே இடி விழுந்தாற்போலே குப்புற விழுந்து செத்தவர்கள் சக்கடையாய்க் கிடந்தார்கள். சம்மனசு இறங்குமுன்னமேயே சேசுநாதர் சுவாமி உயிர்த்துத் தமது திருத்தாயாருக்குத் தரிசனையானார். மயங்கிக்கிடந்த சேவகர் தெளிந்து எழுந்து, சரீரத்தைக் கல்லறையில் காணாமல் வெட்கப்பட்டு, பட்டணத்துக்கு ஓடினார்கள்.

6. புண்ணிய ஸ்திரீகள் கல்லறைக்கு வந்தபோது அதின் வாசல் கல் புரட்டப்பட்டிருக்கிறதையும், அதின்மேல் பரலோக சௌந்தரிய வடிவுள்ள ஒரு வாலிபர் உட்கார்ந்திருக்கிறதையுங் கண்டு பயந்து பிரமித்தார்கள். கல்லைப் புரட்டின சம்மனசுதான் அவர்கள் கண்ணுக்கு ஒரு வாலிபனாகத் தோற்றமானார். அவர்களை நோக்கி, நீங்கள் பயப்படாதேயுங்கள், சிலுவையில் மரித்த சேசுவை நீங்

கள் தேடிவந்திருக்கிறீர்கள். அவர் இங்கே இல்லை, கல்லறையைவிட்டு உயிர்த்தெழுந்தருளினார், உள்ளே போய்ப் பாருங்கள் என்றார் (மாற். 16, 5-6). அப்படியே அவர்கள் உள்ளே பார்க்கையில் கெபிக்குள்ளே தெய்வலோக சுந்தரம் ஒழுகிய வேறு இரண்டு வாலிபரைக் கண்ணுற்றார்கள். அவர்களும் அந்தப் புண்ணியவதிகளை நோக்கி, உயிரோடிருக்கிறவரை நீங்கள் மரித்தவர்களுக்குள்ளே தேடுவதேன்? அவர் ஏற்கனவே தெரிவித்தபடி உயிர்த்தெழுந்தருளினார். நீங்கள் விரைவாய்ப்போய் இராயப்பருக்கும், மற்ற சீஷர்களுக்கும் இந்த மங்கள செய்தியை அறிவியுங்கள் என்றார்கள் (மாற். 16-7; லூக். 24, 4-6).

7. உடனே அந்த மாதுகள் தீவிரமாய் அப்போஸ்தலர்களிடம் ஓடிப்போய்த் தாங்கள் கண்டதையும் கேட்டதையும் தெரிவித்தார்கள். அவர்களுடைய பேச்சு அப்போஸ்தலர்களுக்கு ஒரு கனவு தட்டினாற்போல் தோன்றினது. ஆயினும் இராயப்பரும் அருளப்பரும் உண்மை விளங்கும்படி கல்லறைக்கு ஓடி பார்க்கப்போனார்கள். கெபிக்குள்ளே உற்றுப்பார்த்தார்கள். அதிலே சுவாமியுடைய திருமேனியை மூடியிருந்த பரிவட்டத்தையன்றி அவருடைய சரீரத்தை அவர்கள் காணவில்லை. சம்மனசுக்களுடைய காட்சியும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. அவர்கள் திரும்பிவந்து மற்ற அப்போஸ்தலர்களுக்கு ஆண்டவருடைய சரீரத்தைக் காணோமென்று சொன்னார்கள் (அரு. 20, 3-10).

8. இந்தச் சம்பவத்துக்குப்பின், மதலேனம்மாள் மீண்டும் கல்லறைக்கு ஏகி அழத்தொடங்கினாள். கெபிக்குள்ளே வாலரூபமாய்த் தோன்றிய சம்மனசுக்கள் அவளை நோக்கி, நீ ஏன் அழுகிறாய் என வினவினார்கள். என் ஆண்டவருடைய சரீரத்தை யாரோ எடுத்துப்போய்விட்டார்கள், தெரியவில்லை என்றாள்.

9. என்கவே, திரும்பிப் பின்னாலே பார்த்தாள். பார்க்கவே ஒரு தோட்டக்காரர் அங்கே நிற்கிறதாகக்



[illegible]ாள். அவர் அவளைப் பார்த்து, நீ ஏன் அழுகிறாய் [illegible]ார். அதற்கு மதலேனாள், ஆண்டவனே, நீர் [illegible] சுவாமியுடைய சரீரத்தை எங்கேயாவது எடுத்துப் [illegible]ருந்தால், தயைபுரிந்து சொல்லும், நான் அவரைக் கொண்டுபோக வந்திருக்கிறேன் என மொழிந்தாள். உடனே தோட்டக்காரருடைய மேரையாக வந்த சேசுநாதர்சுவாமி, மரியா என்றார். அந்த ஒரு வார்த்தையினால், அவர் சேசுநாதரென்று மதலேனாள் கண்டு அவர் பாதத்திலே விழுந்து அதை முத்தமிடப் போனாள். கர்த்தர் அவளைத் தடுத்து, என்னைத் தொடாதே, ஆனால் உடனே எனது சகோதரரான சீஷர்களிடம் போய் எனக்கும் அவர்களுக்கும் பிதாவாகியவரிடம் நான் ஏகுகிறேனென்று அறிவிப்பாயாக எனக் கற்பித்தார் (அரு. 20, 16-17).

10. அவள் ஆனந்தபரவசத்தில் அமிழ்ந்தி விரைவாய்ச் சீஷர்களிடஞ் செல்லுகையில் வழியில் தன் கூட்டாளிகளான மற்ற ஸ்திரீகள் தென்பட்டார்கள். தான் கண்ட காட்சியை அவர்களுக்குச் சொல்லிக்கொண்டு நடக்கையில் திவ்விய இரட்சகர் அவர்களுக்குத் தரிசனையானார். அவர்கள் அவர் பாதத்திலே விழுந்து அவரை ஆராதித்தார்கள் (மத். 28-9).

11. மேற்கூறியபடி மதலேனம்மாளுக்கும் மற்ற மரியம்மாளுக்கும் சுவாமி தரிசனை அளித்தபின், அழுது வெட்கப்பட்டுக்கொண்டிருந்த இராயப்பருக்குத் தனியே தோன்றி அவருடைய மனதைத் தேற்றினார் (லூக். 24-34).

12. அதன்பின் எம்மாவூஸ் ஊருக்குப் பயணம் போன இரு சீஷர்களுக்கு ஒரு வழிப்போக்கன் பாவனையாய்த் தோன்றி அவர்களோடு போசனஞ்செய்து இருந்தாற்போலே மறைந்தார். மறைந்தவர் சேசுநாதர்சுவாமியென்று நிச்சயித்து, உடனே அவர்கள் ஜெருசலேம் பட்டணத்துக்கு வந்து அப்போஸ்தலர்களிடம் தங்களுக்குச் சம்பவித்ததைத் தெரிவித்தார்கள். அப்போது பொழுது [illegible]ட்டாயிருந்தது (லூக். 24-29).

13. எம்மாவூஸ் சீஷர்கள் ஜெருசலேமுக்கு வந்தபோது சீஷர்கள் பயத்தினாலே ஒரு அறையிலே கூடி கதவைச் சாத்திக்கொண்டிருந்தார்கள். அங்கேதானே சேசுநாதர்சுவாமி கதவைத் திறவாமல் இருந்தாப்போலே உள்ளே தோன்றி, "உங்களுக்குச் சமாதானம் உண்டாக" என்றார். அவர்கள் ஏதோ ஓர் ஆவேஷத்தைக் கண்ணுற்றாப்போலே பயந்து நடுங்கினார்கள். சேசுநாதர்சுவாமி அவர்களை நோக்கி: "நீங்கள் ஏன் கலங்குகிறீர்கள்? என்னைத் தொட்டு என் கை கால்களில் இருக்கிற காயத்தழும்புகளைக் கூராய்ப் பாருங்கள். ஆவேஷ ரூபத்துக்கு எலும்பும் சதையுங் கிடையாது என்று சொல்லி, புசிக்கிறதுக்கு ஏதாகிலும் இருக்குமாவெனக் கேட்டார். அவர்கள் கொஞ்சம் மீனும் தேனும் கொணர்ந்துவைத்தார்கள். அவர் அதைச் சாப்பிட்டார். இந்த அடையாளங்களினாலே அப்போஸ்தலர்களுடைய மனது தெளியத் துவக்கினது. அவர் மெய்யாகவே உயிர்த்தாரென்று விசுவசிக்கலானார்கள் (அரு. 20-24).

சேசுநாதர்சுவாமி அவர்கள்மேல் ஊதி, "இஸ்பிரீத்து சாந்துவைப் பெற்றுக்கொள்ளுங்கள்; நீங்கள் யாருடைய பாவங்களை மன்னிப்பீர்களோ அவர்களுக்கு அவைகள் மன்னிக்கப்படும். யாருடைய பாவங்களை மன்னிக்கமாட்டீர்களோ, அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படாது" என்பதாய்ச் சொல்லி மறைந்தார். இவ்விதமாய் நமது திவ்விய இரட்சகர் உயிர்த்த அன்றுதானே நமக்கு இரட்சிப்பின் வாக்குத்தத்தமுங் கொடுக்கப்பட்டது. இந்த வர்த்தமானங்களெல்லாம் சுவாமி உயிர்த்த ஞாயிற்றுக்கிழமையில் நடைபெற்றவையாமே.

பி.: சேசுநாதர்சுவாமி கல்லறையைவிட்டு உயிர்த்தாரென்று சம்மனசுக்கள் சொல்லியும், மதலேனாளும் மற்ற மரியம்மாளும் நம்பாமல் அவருடைய சரீரத்தைத் தேடின காரணமென்ன?

தாய்: மகனே, சேசுநாதர்சுவாமி தாம் பாடுபட்டு மரித்து மூன்றாம் நாள் உயிர்ப்போமென்று வெகு தெளிவாய்ப்



பலமுறை சீஷர்களுக்கும் மற்றவர்களுக்கும் தெரிவித்தும் அவரை நம்பவில்லையே. மனிதரூபமான மெய்யான தெய்வத்தின் வார்த்தையை விசுவசியாதவர்கள், போலி மனிதனாய்த் தோன்றிய ஒரு சம்மனசின் சொல்லை மதிக்காமலிருப்பது அதிசயமோ? ஒரு சம்மனசு பிதாப்பிதாவாகிய அபிரகாமை நோக்கி, மலடியாகிய உன் மனைவி சாராளுக்கு ஒரு வருஷத்துக்குள்ளே ஒரு புத்திரன் பிறப்பானென்று அறிவித்தபோது, சாராள் நம்பாமல் சிரித்தாளல்லோ (ஆதி. 10-18). அப்படியே காபிரியேல் சம்மனசு சக்கரியாசைப் பார்த்து, நீயும் உன் பெண்சாதியும் முதிர்ந்த வயதுள்ளவர்களாகிவிட்டீர்கள். இருந்தாலும் உங்களுக்கு ஆண்டவர் ஒரு குழந்தையைக் கட்டளையிடுகிறார் என்று சொல்லுகையில் சக்கரியாஸ் நம்பி நம்பாதவர்போல்தானே இருந்தார். சேசுநாதர்சுவாமி வசனித்த ஓர் உவமையிலே நரகத்திலே விழுந்துகிடந்த ஆஸ்திக்காரன் ஒருவன் பூலோகத்திலே இன்னம் உயிரோடிருந்த தன் சகோதரர்கள் கெட்டு நரகத்தில் விழாமலிருக்கப் புத்திசொல்லும்படி மரித்த புண்ணியவான்களில் ஒருவரான லாசரை அனுப்பவேண்டுமென்று பிதாப்பிதாவான அபிரகாமை மன்றாடினதுக்கு, அவர் மறுமொழியாக, மகனே, உன் சகோதரர்கள் பூலோகத்திலே போதிக்கப்படுகிற தேவ வாக்கியங்[illegible]குச் செவிகொடாவிட்டால், மரித்தவர்களில் ஒருவர் [illegible]தெழுந்து பிரசங்கித்தாலும் அதை நம்பாமற்போ[illegible]பார்களெனக் கூறினார் (லூக். 16-31). ஆகையால் [illegible] விசுவாசத்தை இழந்தவர்கள் அதிசயங்களைக் கண்டு [illegible]சிப்பார்களென்பது தவறாத வழக்கல்ல, சட்டமுமல்லவென உணர்ந்து எல்லாரும் தங்களுக்கு அளிக்கப்பட்ட தேவ விசுவாச வரத்தை விலைமதிக்கப்படாத பொக்கிஷத்தைப்போலே காப்பாற்றவேண்டியதாமே.

## 14. நல்ல ஆயன்.

பி.: கல்லறையைவிட்டு உயிர்த்த நமது ஆண்டவர் நாற்பதுநாள் வரையில் இந்தப் பூமியிலே ஜீவித்துப் பல முறை தமது சீஷர்களுக்குத் தரிசனமாகித் தாம் மெய்யாகவே உயிர்த்த சத்தியத்தை அவர்கள் மாறாத உறுதியாய் விசுவசிக்கும்படி செய்தாரென்று, அம்மா, நீங்கள் கற்றுக்கொடுத்தீர்கள். அந்த நாற்பது நாட்களிலே சேசுநாதர்சுவாமி முடித்த பிரதான காரியம் வேறேதாகிலும் உண்டோ?

தாய்: சேசுநாதர்சுவாமி அர்ச். இராயப்பரைத் திருச்சபைக்குத் தலைவராக ஏற்படுத்தினதே அதிமுக்கியமான காரியம். இதுவிஷயமாய் நான் விவரிக்கிறதை அவதானமாய்க் கேள்.

நான் ஏற்கனவே உலக சரித்திர வரலாறுகளை அத்தாட்சியாகக் காட்டி, அர்ச். இராயப்பரும் அவருடைய ஸ்தானத்திலிருக்கிற அர்ச். பாப்புமார்களும் சேசுநாதர்சுவாமி உண்டாக்கின திருச்சபைக்குத் தலைவர்களென்று ஒப்பித்திருக்கிறேன். அச்சமயத்தில் சுவிசேஷத்தையும் ஒரு மெய்யான சரித்திர சாட்சியாக ஒருப்படக் கூறினேன். இப்போதோ சுவிசேஷ திருஷ்டாந்தத்தை விபரமாக எடுத்து உரைக்கப்போகிறேன். அது உன் மனதில் ஆழ்ந்து பதியவேண்டியது.

சேசுநாதர்சுவாமி சகல மனிதரையும் ஒரே மேய்ப்பனுடைய வசத்திலிருக்கும் ஆட்டுமந்தையாகப் பாவிக்கச் சித்தமானார். இதினிமித்தம் உலக முடிவிலே மனிதர் அனைவோரையும் பொதுத்தீர்வைக்குக் கூட்டும்போது அவர் மகிமை சிம்மாசனத்திலிருந்துகொண்டு சகலரையும் வெள்ளாடுகள் அல்லது செம்மறிகளாக வகுத்து வெள்ளாடுகளைத் தமது இடது பாரிசத்திலும், செம்மறிகளைத் தமது வலது பக்கத்திலும் நிறுத்துவோமென்று திருவுளம் பற்றினார்.



இந்த ஆட்டின் உவமை வேத புஸ்தகத்திலே பற்பல இடங்களிலே சேசுநாதர்சுவாமியுடைய திருச்சபையைக் குறிக்கிறது. உதாரணமாகச் சில வாக்கியங்களை இதோ அடியில் காணலாம்.

1. ஆட்டுக்கிடையின் வாசல் நானே, என் வழியாய் உட்புகுவோன் இரட்சிக்கப்படுவான் (அரு. 10, 7-9). நான் நல்ல மேய்ப்பன், என் ஆடுகளை நான் அறிவேன், அவைகளும் என்னை அறியும். என் ஆடுகளுக்காக என் உயிரைத் தருவேன். இந்தக் கிடையைச் சேராத வேறே ஆடுகளுண்டு. அவைகளையும் நான் கூட்டிவரவேண்டியது. அவைகள் என் குரலைக் கேட்கும். அப்போது ஒரே கிடையும் ஒரே மேய்ப்பனுமாகிவிடும் (அரு. 10, 14-16).

2. திவ்விய இரட்சகர் பட்டணம் பட்டிக்காடுகளில் சுற்றித்திரிந்து பிரசங்கித்துவருகையில் எங்கும் குடிகள் இடையனில்லாத ஆடுகளைப்போலே தவிக்கிறதைக் கண்டு பரிதபிக்கிறார் (மத். 9, 35-36).

3. ஒரு மனிதனுக்கிருக்கிற நூறு ஆடுகளில் ஒன்று தவறிப்போய்விட்டால் அவன் மற்ற தொண்ணூற்றொன்பது ஆடுகளை விட்டுவிட்டுத் தவறிப்போன ஆட்டைத் தேடிப்போவான். அது அகப்பட்டால் அதைத் தோளிலே போட்டுக்கொண்டு வீடுவந்து சந்தோஷங் கொண்டாடுவான். அப்படியே மனந்திரும்புகிற ஒரு பாவியினிமித்தம் பரலோக இராட்சியத்திலே ஆனந்தமுண்டாகும் (லூக். 15, 4-7).

4. கர்த்தர் அப்போஸ்தலர்களை நோக்கி, நீங்கள் தவறிப்போன இஸ்ராயேல் வீட்டு ஆடுகளிடம் போய் மோட்ச இராட்சியம் நெருங்கிவருகிறதெனப் போதியுங்கள் (மத். 10-6) என்கிறார்.

5. நான் குலைந்துபோன இஸ்ராயேல் வீட்டு ஆடுகளுக்காக அனுப்பப்பட்டேன் (மத். 15-24).

6. ஓநாய்கள் நடுவே ஆடுகளை அனுப்புகிறாப்போலே நான் உங்களை அனுப்புகிறேன் (மத். 10-16).

7. ஆயனை அடிப்பேன், ஆடுகள் சிதறடிக்கப்படும் என்று சேசுநாதர்சுவாமி பாடுபடுமுன்னே அப்போஸ்தலர்களைக் குறித்து வசனித்தார்.

8. ஆடுகளின் பெரிய மேய்ப்பராகிற நமது ஆண்டவர் சேசுக்கிறீஸ்துநாதர் (எபி. 13-20).

9. நீங்கள் சிதறிக்கிடந்த ஆடுகளாயிருந்தீர்கள். இப்பொழுதோ உங்கள் ஆத்தும மேய்ப்பரும் மேற்றிராணியுமானவரிடம் மனந்திரும்பி வந்திருக்கிறீர்கள் (1 இரா. 2-25).

10. உங்கள் விசாரணைக்கு ஒப்புவிக்கப்பட்ட சர்வேசுரனுடைய மந்தையை நீங்கள் மேய்த்துவாருங்கள். ஆதாயத்தை ஆசியாதேயுங்கள். அப்போது மேய்ப்பர்களுக்கெல்லாம் தலைவராயிருக்கிறவர் தம்மை வெளிப்படுத்தும் நாளில் வாடாத மகிமைக் கிரீடத்தைப் பெற்றுக்கொள்ளுவீர்கள் (1 இரா. 5, 2-4).

இந்த வாக்கியங்களாலே சுவிசேஷத்திலே மனித சந்ததி ஒரு மந்தையாகவும், சேசுநாதர்சுவாமி அதற்கு மேய்ப்பனாகவும் பாவிக்கப்படுகிறதாக எவருக்கும் புலப்படுகிறதல்லோ.

பழைய ஏற்பாட்டிலும் பல இடங்களில் உலக இரட்சகர் மேய்ப்பனாகவும், மனிதகுலம் ஒரு ஆட்டு மந்தையாகவும் கூறப்பட்டிருக்கிறது (ஜெரே. 31-10; எசேக். 33-24; சக். 13-7).

இதுநிற்க, சுவாமி உயிர்த்தபின், அர்ச். இராயப்பரும் வேறு பல சீஷர்களும் ஒருசமயத்தில் திபேரியாக் கடலில் மீன் பிடிக்கச் சென்றபோது, ஆண்டவர் அவர்களுக்குத் தரிசனையாகி, இராயப்பரை நோக்கி என் ஆட்டுக்குட்டிகளையும், ஆடுகளையும் மேய்ப்பாயாகவென மும்முறைக் கட்டளையிட்டாரே (அரு. 21, 15-17). இந்த ஆக்கியாபனையால் பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் தமக்கு உரிமையான மேய்ப்பன் என்னும் பட்டத்தை இராயப்ப



ருக்கு சேசுநாதர்சுவாமி சூட்டினாரல்லோ. இல்லையென்று யார்தான் வாய்கூசாமல் மனங்கோணாமல் பிதற்றுவார்?

தமது ஆடுகளையும் ஆட்டுக்குட்டிகளையும் மேய்க்கும்படி இராயப்பருக்குக் கற்பிக்கிறார். ஆகையால் இராயப்பர் மனிதகுலத்துக்கெல்லாம் மேய்ப்பனாகி, சேசுநாதர்சுவாமியுடைய ஸ்தானத்திலே ஸ்தாபிக்கப்பட்டாரென்பதற்கு எள்ளளவேனும் சந்தேகமில்லை. இதற்கு இசைவாக சுவாமி பாடுபடுமுன்னமேதானே இராயப்பரை நோக்கி, நீ பாறையாயிருக்கிறாய், இந்தப் பாறையின்மேல் என் திருச்சபையைக் கட்டுவேன், நரக வாசல்கள் அதை வெல்லமாட்டாது. பரலோக இராச்சியத்தின் திறவுகோல்களை உனக்குக் கொடுப்பேன். நீ பூமியிலே திறக்கிறது பரலோகத்திலும் திறக்கப்படும், நீ பூமியிலே கட்டுகிறது பரலோகத்திலும் கட்டப்படும் என்று வசனித்திருக்கிறார் (மத். 16, 18-19). கட்டுவேன், கொடுப்பேன் என்று எதிர்கால வார்த்தைப்பாட்டைக் கொடுத்தவர், இப்போது திபேரியாக் கடற்கரையிலே இராயப்பரிடமாய் அந்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்றி உறுதிப்படுத்துகிறார். இது தெளிவாயிருக்கிறதா?

பி.: ஆம், வெகு தெளிவாயிருக்கிறது. ஆகையால் சேசுநாதர்சுவாமியுடைய கிடையில் இருக்கிறவர்கள் அர்ச். இராயப்பரைத் தங்கள் மேய்ப்பராக ஏற்றுக்கொள்ள வேண்டியது. ஏற்றுக்கொள்ளாதவர்கள் சேசுநாதர்சுவாமியுடைய கிடையைச் சேர்ந்தவர்கள் அல்லவென்பது நிச்சயம்.

தாய்: சரியாய்ப் பேசுகிறாய். இன்னம் கேள். என்னுடைய ஆடுகள் என் குரல் ஒலியைக் கேட்குமென்று ஆண்டவர் திருவுளம்பற்றினாரே. அவைகள் அர்ச். இராயப்பருடைய குரல் ஒலியையுங் கேட்குமல்லவா?

பி.: அர்ச். இராயப்பருடைய குரலொலியை ஆடுகள் கேட்டால்தானே அவர் அவைகளை மேய்க்கமுடியும். மேய்ப்பனாகிய தொழில் விஷயத்தில், அர்ச். இராயப்பர்

சேசுநாதர்சுவாமிக்குரிய பட்டஞ் சூட்டப்பட்டிருக்கிறார். ஆகையால் அர்ச். இராயப்பருடைய குரலொலியைக் கேட்கிற ஆடு சேசுநாதர்சுவாமியின் குரலொலியைக் கேட்கிறதிற்குச் சந்தேகமில்லை. இராயப்பருடைய குரலொலியைக் கேளாத ஆடு சேசுநாதர்சுவாமியின் குரலொலியையுங் கேட்கிறதில்லையென்றும் கண்கூடாய் விளங்குகிறது. ஆனால் அர்ச். இராயப்பருடைய மரணத்தோடே அவருடைய குரலொலியும் ஒழிந்துபோயிற்றோ?

தாய்: பரிச்சேதமில்லை. சேசுநாதர்சுவாமி தமது திருச்சபையை ஒரு மந்தைக்கு ஒப்பிட்டுப் பேசும்போது "இந்தக் கிடையில் இல்லாத வேறே ஆடுகளும் எனக்குண்டு, அவைகளையும் நான் கொண்டுவந்து சேர்க்கவேண்டும்" என்றார் (அரு. 10-16). இதன்றியே ஒரு சமயத்தில் பரிசேயர் என்னப்பட்ட யூத ஞானிகள் சேசுநாதர்சுவாமி பாவிகளோடே பந்திபோசனஞ் செய்வதென்னவென்று குறையாக முறையிடுவதை ஆண்டவர் அறிந்து, "நான் நீதிமான்களையல்லவே, பாவிகளையல்லோ அழைக்க வந்தேன்" என மொழிந்தார்.

இந்த வாக்கியங்களின்படி கிடையில் இல்லாமல் சிதறிப்போன ஆடுகள் எவையென்றால், திருச்சபைக்குப் புறம்பேயிருக்கிற சகலருமாம். இவ்வகைப்பட்ட ஜனங்கள் உலகத்திலிருக்குமட்டும், இவர்களை அழைக்கிற சேசுநாதர்சுவாமியுடைய குரலொலியும் உலகத்தில் நிலைத்திருக்க வேண்டியது. ஆனால் இவர்கள் உலகம் முடியும் வரையில் இருப்பார்கள் என்பதிற் சந்தேகமில்லை. ஆகவே, பாவிகளை அழைக்கிற திவ்விய இரட்சகருடைய குரலொலியும் உலகம் முடியும் வரையில் சப்திக்கும் என்பது திண்ணம்.

பி.: அப்படியானால் அர்ச். இராயப்பருக்கு அளிக்கப்பட்ட சேசுநாதர்சுவாமியுடைய குரலொலி, இராயப்பரோடே ஒழிந்துபோகாமல், அவருடைய ஸ்தானத்திலேயிருக்கிறவர்களுக்கும் அளிக்கப்பட்டு உலகம் அழியும் வரையில் தொனிக்குமென்று நிர்ணயிக்கலாகிறது.

---



18004

## 15. உயிர்த்த சேசுவின் க[illegible]

பி.: சேசுநாதர்சுவாமி உயிர்த்தபின் அர்ச். [illegible]பரைத் தமது பிரதிநிதியாக நிலைநிறுத்தின சத்தியம் எனக்குக் கண்கூடாகத் துலங்குகிறது. இதன்றியே சுவாமியானவர் அப்போஸ்தலர்களுக்கும் மற்றும் சிலருக்கும் பலமுறை தரிசனையானாரென்று எனக்குப் படித்துக்கொடுத்தீர்களே. அந்தத் தரிசனைகளைக் காலக்கிரமப்படி ஒரு கோர்வையாய்த் தொடுத்துச் சொல்வீர்களானால், அவைகளை என் மனதில் தரித்துக்கொள்வது இலகுவாயிருக்கும்.

தாய்: நல்லது, மகனே, அப்படியே ஒரு சரமாக அவைகளை முடிந்து உன் ஞாபகத்தில் மாட்டுகிறேன். சுவாமியுடைய தரிசனங்கள் சுவிசேஷத்தில் காலமுறை தெளியத் தோற்றுவிக்காமல் வரையப்பட்டிருக்கின்றன. அவைகளை வேத வித்தியாபாரகர் ஆராய்ந்து கோர்த்து வைத்தவாறு உனக்கு வரிசையாய்க் கூறக்கேள். வேத வித்தியாபாரகர் என்றாலும் வேத சாஸ்திரிகள் என்றாலும் ஒன்றுதான்.

1. சுவாமி உயிர்த்த அன்று தயைபுரிந்து அருளிய காட்சிகள் ஆறு என்று உனக்குத் தெரியும். அப்போஸ்தலர்களுக்குக் கடாட்சிக்கப்பட்ட தரிசனம் நடந்தேறின சமயத்திலே அர்ச். தோமையார் பிரசன்னமாகவில்லை. பின்னால் எவரெவர் என்ன சொன்னாலும் அவர்கள் வார்த்தையை நம்பாமல், "நானே சுவாமியின் கை கால்களின் காயத்தழும்புகளை என் கண்ணாலே கண்டு, கையால் தொட்டுப் பார்த்தாலேயன்றி அவர் உயிர்த்தாரென்று விசுவசிக்க மாட்டேன்" என்று சாதித்தார். இப்படி ஒரு வாரம் கடந்தது. எட்டாம் நாளாகிய மறு ஞாயிறு தோமையாரும் மற்ற அப்போஸ்தலர்களும் வழக்கம்போலே கடைசிப் போசனம் நடந்த ஸெனாக்குலும் என்னும் மேல் மெத்தை அறையிலே கதவைப் பூட்டிக்கொண்டு கூடியிருக்கும் வேளையில் சேசுநாதர்சுவாமி அவர்கள் நடுவில் தோன்றி உங்களுக்குச் சமாதானமுண்டாக என வாழ்த்தினார். பிறகு

Q6(2)
N31

தோமையாரை நோக்கி, "தோமாஸ், என் அருகில் வந்து என் கை கால்களிலுள்ள கழும்புகளைத் தொட்டுப் பார்த்து விசுவாசியாயிரு. கண்டு விசுவசிப்பதிலும் காணுமுன் விசுவசிப்பதே பாக்கியப்பேறு உள்ளது" என்றார். இது ஏழாம் காட்சி.

2. திபேரியாக் கடற்கரையிலே நடைபெற்றது எட்டாங் காட்சி. இதன் விபரம் முன் பாடத்திலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இது அப்போஸ்தலர்களுக்கு அளிக்கப்பட்ட மூன்றாம் தரிசனமென்று சுவிசேஷகர் வரைகிறார். (அரு. 21-14).

இவ்விடத்தில் நாம் உத்தேசிக்கவேண்டியதாவது: பாஸ்குத் திருநாள் முடிந்து எட்டு நாளைக்குப்பின் அப்போஸ்தலர்கள் ஜெருசலேம் பட்டணத்தைவிட்டுத் தங்கள் சுய நாடாகிய கலிலேயாவுக்குத் திரும்பிப்போய்த் தங்கள் தங்கள் வீட்டிலே இருந்தார்கள் என்பதே. அர்ச். இராயப்பர் கப்பர்நாம் என்னும் தமது ஊருக்குப் போனார். அது திபேரியாக் கடலுக்கு அருகிலிருந்தபடியால், அக்கடலிலே மீன் பிடிக்கும்படி சில சீஷர்களைக் கூட்டிக்கொண்டு போயிருந்தார். அப்போதுதான் ஆண்டவர் தரிசனையாகி இராயப்பரைத் திருச்சபையின் மேய்ப்பனாக்கினார்.

3. ஒன்பதாம் காட்சியாவது: திவ்விய இரட்சகர் அர்ச். இராயப்பரைத் தமது பிரதிநிதியாகவும், திருச்சபைக்குத் தலைவராகவும் ஏற்படுத்தினபின், திருச்சபையை உற்பத்தியாக்குகிற மேரையை நூல்போட்டாப்போலக் காட்டும்படி பதினொரு அப்போஸ்தலர்களுக்கும் கலிலேயா நாட்டு மலையொன்றின்மேலே தரிசனையானார். அச்சமயத்தில் அவர்களை நோக்கி, "இதோ வானத்திலும் பூமியிலும் சர்வ அதிகாரமும் எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் நீங்கள் எங்கும் போய் சகல வருணத்தாருக்கும் போதித்து, பிதாவுடையவும் சுதனுடையவும் இஸ்பிரீத்துசாந்துவுடையவும் நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுங்கள். நான் உங்களுக்குக் கற்பித்தவைகள் யாவற்றையும்



ஒன்றும் தவறாமல் காக்கும்படி எல்லோருக்கும் உபதேசியுங்கள். இதோ நான் உலகம் முடியும்வரையில் உங்களோடே எந்நாளும் இருப்பேன்" (மத். 28, 16-20) என்றார். ஆகையால் திருச்சபையின் அதிகாரம் பெற்றவர்கள் திவ்விய இரட்சகர் போதித்த வேத சத்தியங்களை வாய்மொழியாய்ப் பிரசங்கிக்கவேண்டியதென்று கண்டுகொள்ள வேண்டியது. ஆகவே இதற்கு எதிர்மாறாகப் பதிதர் சுவிசேஷ புத்தகத்தை வாசித்து அவரவர் தங்கள் மனதுக்கு இசைந்தாப்போல் வேத சத்தியங்களைக் கற்றுக்கொள்ளக்கடவார்களென்று பிதற்றுகிறது மகா பிசகென்பது எவருக்கும் வெள்ளிடைமலைபோல் தெளிவாகும். இதன்றியே உங்களோடே உலகம் முடியும்வரையில் இருப்பேனென்ற ஆண்டவர் அர்ச். இராயப்பர் இறந்துபோவாரென்றும் அறிவித்திருக்கிறார் (அரு. 21, 18-19). சுவிசேஷக அருளப்பர் சாகமாட்டாரென்று சீஷர்கள் தப்பறையாக எண்ணினதாகவும் எழுதப்பட்டிருக்கிறது (அரு. 21-24). மற்ற அப்போஸ்தலர்களும் இறந்துபோவார்களென்று சேசுநாதர்சுவாமிக்குத் தெரியும். தெரிந்தும் அவர்களோடே எந்நாளும் இருப்போமென்று மொழிந்தார். ஆகையால் அப்போஸ்தலர்களுடைய பிரதிநிதிகள் தலைமுறை தலைமுறையாய் உலகாந்தபரியந்தம் கோர்வையாக வருவார்களென்பதும் திட்டமான சத்தியமாமே.

மேலும் சேசுநாதர்சுவாமி பாடுபடாமுன்னமேதானே ஜோனாஸின் குமாரனாகிய சீமோனை நோக்கி, நீ ஒரு பாறை; இந்தப் பாறையின்பேரில் எனது திருச்சபையைக் கட்டுவேன், நரக வாசல்கள் அதை மேற்கொள்ளமாட்டாது என்று மொழிந்தார். இங்கே பொய்க்கொள்கைகளும் பொய் வேதங்களும் நரக வாசல் என்னப்படுகிறது. ஏனெனில் பொய் வேதங்கள் நரக வழியும் வாசலுமாமே. ஆகையால் வேத விஷயத்தில் திருச்சபை தளர்ந்து விழாமல் நிலைமையாயிருக்கும்படியான தவறா வரத்தை இராயப்பருக்கு ஆண்டவர் அளித்தாரென விளங்குகிறதுமன்றி, இந்த ஒன்பதாம் காட்சியிலே நாம் எந்நாளும் உங்க

ளோடே இருப்போமென்று பொதுவிலே அப்போஸ்தலர்களுக்கு கர்த்தர் திருவுளம்பற்றினதினாலே அப்போஸ்தலர்களுடைய சங்கமும் வேதசத்தியங்களைப் போதிக்கிறதிலே தவறா வரம் பெற்றதென்பது நிச்சயம். ஆகையால் சேசுநாதர்சுவாமி படிப்பித்த வேதசத்தியங்களை உலகத்துக்குப் போதிக்குந் தொழிலிலே அர்ச். இராயப்பருடைய பிரதிநிதியாகிற அர்ச். பாப்பானவர் தவறா வரம் பெற்றிருக்கிறாரென்றும், அவ்வண்ணமே அப்போஸ்தலர்களுடைய ஸ்தானத்தில் இருக்கிறவர்களுடைய சங்கமும் வேதகாரியத்திலே தவறா வரம் அடைந்திருக்கிறதென்றும் துலக்கமாய்ப் புலப்படுகிறது. அப்படியில்லாமல் அவர்கள் தவறிப்போவார்களென்றால் சேசுநாதர்சுவாமி உலகம் முடியும்வரையில் அப்போஸ்தலர்களோடே நாம் இருப்போமென்ற வாக்குத்தத்தம் பொய்யானதென்கவேண்டியிருக்கும். எந்தக் கிறீஸ்துவன் வாய் கூசாமல் இவ்வித தூஷணத்தைக் கக்குவான்? சேசுநாதர்சுவாமி தமது திருச்சபையைப் "பாறையின்மேல் கட்டுவேன், நரக வாசல்கள் அதை வெல்லாது, உங்களோடே உலகமுடிவு பரியந்தம் இருப்பேன். உலகமெல்லாம் ஒழிந்துபோனாலும் என் வார்த்தைகளில் ஒரு புள்ளிமுதலாய்ப் பிசகாமல் பலிக்கும்" என்று வற்புறுத்தியும், அவருடைய போதகர்கள் மொத்தமாய் ஒருமிக்கப் பொய்யான கொள்கைகளை உபதேசிக்க ஏற்பட்டால் என்னமாகும்? உலக இரட்சகருடைய வேதத்தை நரக வாசலாகிற பேயின் போதகம் மேற்கொண்டது, அவருடைய வேதமும் பொய்யான மார்க்கமாகிவிட்டதென்றல்லோ திட்டமாகும். இவ்விதம் கிஞ்சித்தேனும் நினைக்கவும் பேசவும் தகாது என்பதினாலே, திருச்சபையானது வேதம் போதிக்கிறதிலே தப்பறைகளைக் கற்பிக்கமுடியாதென்க.

கடைசியாய், பாவிகளை அழைக்கவந்த உலக இரட்சகரின் குரலொலி இந்தப் பூலோகம் அழியுமட்டும் கேட்கப்படுமென்று ஏற்கனவே ஒப்பித்திருக்கிறேன். அது நிற்க, உலகம் நிலைக்கும்வரையில் சப்திக்கவேண்டிய



அந்தக் குரலொலி நாளாவட்டத்தில் பொய்களைக் கலந்து படிப்பித்தால் அது சுவாமியுடைய குரலொலியாகாமல் இடையன் வேஷம் பூண்ட ஓநாயின் (மத். 7-15; 20, 29-30) ஊளையாக அல்லோ மாறிப்போம். இந்த ஊளைச் சத்தம் சிதறிக்கிடக்கும் பாவிகளான ஆடுகளை மந்தையில் கொண்டுவந்து சேர்க்கமாட்டாமல் இன்னும் அதிகம் அதிகமாய்த் திக்காலுக்குத் திக்காலாயல்லோ துரத்திவிடும். அப்போது சேசுநாதர்சுவாமி பாவிகளைத் துரத்தியடிக்க வந்தாரென்கும்படியாகிறது. இது முற்றும் சுவாமியுடைய வாக்குக்கு எதிரிடையான பேச்சாயிருப்பதால் தேவ தூஷணமாகும். ஆகையால் சேசுநாதர்சுவாமியுடைய குரலொலியாகிற அப்போஸ்தலர்களும் அவர்களுடைய பிரதிநிதிகளின் கூட்டமும் உலகமுடிவுபரியந்தம் வேத போதகத்திலே தவறாத வரம் பெற்றிருக்கிறார்களென்று ஒப்புக்கொள்ளவேண்டிய சத்தியமாகின்றது.

4. பத்தாங் காட்சியாவது:—சேசுநாதர்சுவாமி கலிலேயா நாட்டிலே அப்போஸ்தலர்களுக்குப் பலமுறை தோன்றியருளின அற்புத செய்தி அச்சீமையெங்கும் பிரபலியமாகவே, அவர்பேரிலே விசுவாசமாயிருந்த அநேகம் பேர்கள் அங்கங்கேயிருந்து அப்போஸ்தலர்களிடத்தில் போய்ச் சேர்ந்தார்கள் என்பது அப்போஸ்தலர்களுக்குக் கடாக்ஷிக்கப்பட்ட தேவப் பிரசன்னம் தங்களுக்கும் கிடைக்கலாமென்கிற உறுதி நம்பிக்கையினாலே அவர்கள் இவ்விதம் வந்து கூடினார்களென்று நாம் உத்தேசிக்க நியாயமுண்டு. உலக இரட்சகர் அவர்களுடைய ஆசையைப் பூர்த்தியாக்கச் சித்தமாகி 500 பேர் சங்கமாயிருந்த ஒரு தருணத்தில் அவர்களுக்குப் பிரசன்னமானார். இந்தச் ம்பவத்தை அர்ச். சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதிய தல் நிருபத்தில் குறிப்பிட்டுத் தாம் அந்த நிருபத்தை ழுதுங் காலத்திலே அத்தரிசனத்தைக் காணக் கொடுத்து வக்கப்பட்டவர்களில் சிலர் இன்னம் உயிரோடிருக்கிறார்களென்று தெரிவிக்கிறார் (1 கொரி. 15-6).

சேசுநாதர்சுவாமி தாம் உண்டாக்கின திருச்சபையை ஆண்டு பரிபாலிக்கும் கர்த்தாக்களை நியமித்து ஸ்திரப்படுத்தியபின் அவர்களுடைய ஆளுகைக்கு உட்பட்ட விசுவாசிகளுக்குப் பிரசன்னமாகி அவர்களை ஆசீர்வதித்துத் தமது மந்தையாக ஏற்றுக்கொள்ளத் திருவுளமானாரென இந்தப் பத்தாங் காட்சியினாலே சர்வலோகத்துக்கும் வெளிப்படையாய் உணர்த்துகிறார். ஆகையால் சேசுநாதர்சுவாமி ஏற்படுத்தின திருச்சபையாகிறதற்கு அதிலே மேய்ப்பர்களும் மந்தையுஞ் சேர்ந்து ஒருங்குடன் ஒரே கிடையென்கிற பேர்பெற்று வாழவேண்டியது. இன்றியமையாத. இவ்வித உருவு இல்லாத சபை சேசுநாதர்சுவாமியால் உண்டானதல்லவென்பது திண்ணம்.

ப். பதினோராங் காட்சி:—மேற்கூறிய தரிசனத்துக்குப் பிற்பாடு, உலக இரட்சகர் அப்போஸ்தலராகிய சின்னயாகப்பருக்குத் தனிப்படத் தோற்றமானதாக அர்ச். சின்னப்பர் வெளிப்படுத்துகிறார் (1 கொரி. 15-7). ஏனெனில் இந்த அப்போஸ்தலர், சுவாமியைக் கொன்ற சண்டாளர்களாகிய பரிசேயரும் யூதவேதக் குருப்பிரசாதிகளும் தலைவர்களும் சர்வ அதிகாரமுஞ் செலுத்திவந்த ஜெருசலேம் பட்டணத்துக்கு மேற்றிராணியாராகிச் சத்திய வேதத்தைப் போதிக்கும்படி தெய்வ சித்தத்தால் நியமிக்கப்பட்டிருந்தார். இந்த மகாக் கடுமையான பார வேலையை அவர் தைரியமாய் ஏற்றுக்கொண்டு சுமக்கும்படி அவருக்கு இவ்வித தரிசனம் தனிப்பட அருளப்பட்டது. அங்ஙனமே, நல்லவர்களைத் தேற்றி உத்தம புண்ணிய நெறியில் மேன்மேலும் ஏற்றவும் பாவிகளை நல்வழியிலே திருப்பவும் சேசுநாதர்சுவாமியும் மோட்சவாசிகளும் திருச்சபையிலே எக்காலத்திலும் தனிக்காட்சிகளும் பலபேர் பார்க்கும்படியான பொதுக் காட்சிகளும் அளித்துவருகிறார்களென்று சரித்திர வரலாறுகளாலே தெரியலாகிறது. அவைகளில் அப்போஸ்தலரான அர்ச். சின்னப்பரை மனந்திருப்பின காட்சி மகாப் பேர்பெற்றது. இதை இங்கே சொல்லுகிறேன், கவனமாய்க் கேள். அப்போஸ்தலர்களுக்குத் தம்



சனையான சுவாமி கடையனான தனக்கும் காட்சியானாரென்று சின்னப்பரே விளம்புகிறார்.

## வரலாறு.

யூதர்களுக்குள்ளே பென்ஜமின் கோத்திரத்தாராய் (பிலி. 3-5) சவுல் எனவும் பவுல் எனவும் பெயருடைய அர்ச். சின்னப்பர் சிலீசியா சீமையிலுள்ள தார்சஸ் என்னும் வளமைநிறைந்த நகரில் பிறந்தார் (அப். நட. 22-3). அந்த ஊரார் உலகத்துக்கெல்லாம் அக்காலத்திலே தலைமைப் பட்டணமாயிருந்த ரோமாபுரியின் சிறந்த உரிமைச் சுதந்தரங்களையும் பெற்றிருந்தார்கள். அதினிமித்தம் அந்நகரத்தாரை யாதாமொரு குற்றத்தைப்பற்றிக் கட்டி அடிக்கவும் படாது, சிலுவையிலே அறையவும்படாது. சின்னப்பர் வளர்ந்து சிறு பிராயத்திலேயே மகா சாஸ்திரியான கமாலியேல் என்பவருடைய பாதத்தையண்டி யூத மதத்தின் போதனை ஆசாரங்களையெல்லாம் தீரக்கற்று தமது வேத கொள்கைகளிலே மகா வைராக்கிய ஆவேசங் கொண்டவராய் (அப். 26-1) பரிசேயர் என்னும் ஞானிகளுக்குள்ளே ஞானியென்று சொல்லும்படியான மேரையாய் நடந்துவந்தார் (1 கலா. 13-14). வாலிபப் பிராயத்திலேயே அவர் ஜெருசலேம் பட்டணத்திலே வாசம்பண்ணிவந்தது எல்லாரும் அறியப்பெற்ற விஷயமாயிருந்தது (அப். 26-4). இங்ஙனம் கெம்பீர கௌரவமாய் நடந்துவந்த சின்னப்பருக்கு சேசுநாதர்சுவாமியுடைய வேதப் யூத கோட்பாடுகளை அழிக்கப்பிறந்த சனியன் எனத் தோன்றிற்று. அதினாலே அவர் உள்ளம் பொங்கி நெஞ்சு அடிக்க வெறிகொண்டவர்போலே மதிமயங்கிக் கிறிஸ்து வேதத்தை முளையிலே பிடுங்கியெறியவேண்டுமென்று கங்[illegible]ங் கட்டிக்கொண்டார். அதுக்கேற்றுப்போலே அர்ச். [illegible]யப்பர் சேசுநாதர்சுவாமி உலகத்தை இரட்சிக்கவந்த [illegible]வ குமாரன் என்று பிரசங்கித்ததைப்பற்றிப் பொல்லாத [illegible]ர்கள் அவரைக் கல்லாலெறிந்து கொல்லும்போது சவுல் அந்தக் கொலைபாதகத்துக்கு உடந்தையாகி அந்தக் கொலைஞருடைய வஸ்திரங்களைப் பத்திரமாய்க் காத்துக்

கொண்டிருந்தார் (அப். 22-20). முடியப்பருடைய மரணத்துக்குப்பின் ஜெருசலேம் பட்டணத்திலிருந்த கிறிஸ்துவர்கள் சிதறிப்போக, அநேகர் தமாஸ்கு நகரத்துக்கு ஓடினார்கள். அவர்களைப் பிடித்து ஜெருசலேம் பட்டணத்துக்கு இழுத்துவந்து உபாதிக்கும்படி கருதின சவுல் யூத அதிகாரிகளிடத்தில் ஒரு நிரூபத்தைப்பெற்று தமாஸ்கு நகரத்துக்குப் பயணப்பட்டார் (அப். 22-5). அதை அடுத்துச் செல்லுகையில் இருந்தாப்போலே ஒரு சோதிப் பிரகாசம் அவரைச் சூழ்ந்துகொண்டது. உடனே அவர் தரையிலே விழுந்தார். அப்போது “சவுலே, சவுலே, நீ ஏன் என்னை உபாதிக்கிறாய்” என்று ஓர் ஒலி சப்தித்தது. சவுல் நடுநடுங்கி, “ஆண்டவரே, தேவரீர் யார்” என்றார். “நான்தான் நீ உபாதிக்கிற சேசு, குதிமுள்ளை உதைத்தால் யாருக்கு வலிக்கும்” என பதில் மொழி புறப்பட்டது. சின்னப்பர் திகிலடைந்து, ஆண்டவரே, நான் என்ன செய்யத் தேவரீருக்குச் சித்தமென்று நடுக்கத்தோடே கேட்டார். “நீ எழுந்து ஊருக்குள்ளே போ, அங்கே நீ செய்யவேண்டியதை அறிவாய்” என்று வான ஒலி. அவரோடே வந்த பேர்கள் சத்தத்தைக் கேட்டார்களேயன்றி யாரையும் கண்ணால் காணவில்லை. சவுல், தரையினின்று எழும்பும்போது அவர் கண்கள் வழக்கம்போலே நன்றாய்த் திறந்திருந்தாலும் கண் குருடானார். மற்றவர்கள் அவருடைய கையைப் பிடித்து நகருக்கு இட்டுக்கொண்டு போனார்கள். அங்கே மூன்றுநாள் யாதொன்றுஞ் சாப்பிடாமலும் குடியாமலும் குருட்டுக் கண்ணாகவே இருந்தார். அதற்குமேல் அனனியாஸ் என்னும் ஒரு மகாத்மா தேவ ஏவுதலினாலே தேடிவந்து அவரைக் கண்டமாத்திரத்தில், “தம்பி சவுல், வழியிலே உனக்குத் தரிசனையாகத் தயைபுரிந்த சேசுநாதர் என்னை உன்னிடம் அனுப்புகிறார். உன் கண்ணுக்குப் பார்வை வருவதாக, உன் உள்ளத்தை இஸ்பிரீத்துசாந்து நிரப்பக்கடவார்” என்னவே, சவுலுடைய குருடு பளிச்சென்று விட்டுப்போக அவர் உடனே ஞானஸ்நானம் பெற்றார். இஸ்பிரீத்துசாந்துவினுடைய மேலான வரங்களும் அவர் உள்



ளத்தைப் பூரிப்பித்தன. உடனே எவருக்கும் அஞ்சாமல் யூதர்கள் முன்னிலையிலே சேசுநாதர்சுவாமி மெய்யாகவே தேவகுமாரன் என்றும், பழைய ஏற்பாட்டிலே அறிவிக்கப்பட்ட உலக இரட்சகராகிய மெசியாஸ் என்றும் மகா வைராக்கியமாய்ப் பிரசங்கித்தார். அதுமுதல் தன்னுயிரை சேசுநாதர்சுவாமிக்காகக் கொடுக்கும்வரையில் அவர் செய்த பயணங்களும், பிரசங்கங்களும், எழுதின நிருபங்களும், புரிந்த அதிசயங்களும், பட்ட கொடும்பாடுகளும் சர்வலோகத்திலும் பறைசாற்றப்பட்டிருக்கிறது. இந்தப் பூமியிலே கொண்டாடப்படுகிற அலெக்ஸாந்தர், சேஸார், நெப்போலியன் முதலிய இராஜாக்களுடைய பெருமை அர்ச். சின்னப்பருடைய கீர்த்திக்குமுன் மின்மினிப்பூச்சியின் பெருமையைச் சூரிய மகத்துவத்தோடே ஒப்பிட்டாப்போலாகும். சின்னப்பருடைய அதிசய மனந்திரும்புதலும் அவருடைய மாட்சிமைபொருந்திய உன்னத நடபடிக்கைகளும் சேசுநாதர்சுவாமி சர்வேசுரனென்றும் உலக இரட்சகரென்றும் உச்சிப்பகலிலும் தெளிவாய் உலகத்துக்கு நாளதுவரையில் இடிமுழக்கம்போல் காதில் முழங்கப் பேரோசையிட்டுப் பிரசங்கிக்கின்றன.

---

## 16. உயிர்த்த சேசுவின் காட்சிமாலைக் தந்சம்.

பாஸ்குத் திருநாள் நடந்து எட்டு நாட்களுக்குப்பின் அப்போஸ்தலர்கள் தங்களுக்குச் சுயபூமியான கலிலேயா நாட்டுக்குப் போனார்கள். அங்கேதான் சேசுநாதர்சுவாமி பலமுறை அவர்களுக்குத் தரிசனமானார். பாஸ்குப் பண்டிகைக்குப் பின்வரும் ஐம்பதாம் நாள் பேன்தக்கோஸ்[illegible] என்னும் மகோற்சவக் கொண்டாட்டம் யூதர் வேத[illegible]ட்டின்படி நடைபெறும். அதற்காக அந்தந்த [illegible]ங்களில் உள்ள யூதர்கள் ஜெருசலேம் பட்டணத்துக் [illegible]திரண்டு வருவார்கள். அந்தத் திருவிழாவுக்குச் சில தினங்களுக்கு முன்னதாகவே திருநகருக்குச் செல்லும்படி

திவ்விய இரட்சகர் அப்போஸ்தலர்களுக்குக் கற்பித்தாரென்றால் பொருந்தும். ஏனெனில் அந்த நாள் வருமுன் தமது சீஷர்களை ஜெருசலேமில் கூட்டிச் சேர்த்துவைத்துவிட்டு சேசுநாதர்சுவாமி தமது நித்திய பிதாவினிடம் எழுந்தருளத் திருவுளமாயிருந்தார். அவ்வாறே சீஷர்கள் அவ்விடம் ஏகி ஓர் அறையில் ஒருமிக்கச் சேர்ந்திருந்த சமயத்தில் கர்த்தர் அவர்கள் நடுவில் தோன்றினார். அர்ச். மாற்கு சுவிசேஷத்தில் வரையப்பட்டிருப்பது இந்தக் கடைசிக் காட்சியைக் குறிக்கிறதாக நிதானிக்கவேண்டியது. அப்போதுதான் ஆண்டவர் அவர்களுடைய விசுவாசக் குறைச்சலைப்பற்றி அவர்களைக் கடிந்துகொண்டு, தாம் ஏற்கனவே கற்பித்தபடி (மத். 28, 17-20) உலகமெங்கும் பரவிச் சென்று தமது திவ்விய வேதத்தைப் போதித்து, விசுவசித்தவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்படி கட்டளையிட்டார். விசுவசித்து ஞானஸ்நானம் பெறுகிறவர்கள் இரட்சிக்கவும், விசுவசியாதவர்கள் சபிக்கவும்படுவார்களென்று தாம் இடப்போகிற நித்திய தீர்வையையும் வெளியாக்கினார்.

பி.: அப்படியானால் மோட்சத்துக்குப் போக விசுவாசமும் ஞானஸ்நானமும் இருந்தால் போதும், மற்றப்படி எவர் எப்படி நடந்தாலுஞ் சரிதான் என்கலாமோ?

தாய்: இந்தக் கேள்விக்குப் பதில் உத்தரம் மத்தேயு சுவிசேஷத்தில் 28-ம் அதிகாரம் 30-ம் வசனத்தில் எழுதப்பட்டிருக்கிறது. அவ்விடத்தில் சேசுநாதர்சுவாமி சீஷர்களை நோக்கி நான் உங்களுக்குக் கற்பித்தவைகள் யாவற்றையும் சகல ஜனங்களும் அநுசரிக்கும்படி போதியுங்களென்கிறார். ஆகையால் வெறுமனே விசுவசித்து வெட்டிக்கு ஞானஸ்நானம் பெற்றால் போதும், மோட்சமடையலாம் என்று நினைத்துப் பேசுகிறவர்கள் சேசுநாதர்சுவாமியினது குரல் ஒலியைக் கேட்கிறவர்கள் அல்ல.

பி.: விசுவசியாதவர்கள் அவல தீர்வைக்கு ஆளாவார்களென்றால், கிறீஸ்துவர்கள் அல்லாத பிறமதத்தார்கள் ஒருங்காக அதோகதியாய்ப் போகிறார்களோ?



தாய்: இதற்கு நான் சொல்லப்போகிற மறுமொழியைக் கவனமாய்க் கேள். சுவாமி பிறந்தபோது சம்மனசுக்கள் நல்ல மனதுள்ளவர்களுக்குச் சமாதானமென்று பாடினார்கள். சமாதானம், பாக்கியம், இரட்சண்ணியம் ஆகிய இவ்வார்த்தைகள் வேத புஸ்தகத்தில் ஒரே கருத்தைக் குறிக்கின்றன. சேசுநாதர்சுவாமி வளர்ந்து உலகத்துக்குத் தமது தெய்வீக வேதத்தைப் போதிக்கும்போது, ஜனங்களை நோக்கி, நீங்கள் ஒரு சிறு பிள்ளைபோல் ஆகாவிடில் மோக்ஷ இராட்சியத்தைச் சுதந்தரிக்கமாட்டீர்கள் என்றார். அவர் பாடுபட்டு மரித்து உயிர்த்து இரக்ஷண்ய வேலையை நிறைவேற்றிப் பரலோகத்துக்கு எழுந்தருளுகிற நாளிலே, தாம் கற்பித்த யாவற்றையும் சகல மனிதரும் ஒன்றுந் தவறாமல் அநுசரிக்கும்படி போதிக்கவேண்டுமென்று சீஷர்களுக்குக் கட்டளையிட்டு, விசுவசித்து ஞானஸ்நானம் பெறுபவன் இரட்சிக்கவும், விசுவசியாதவன் சபிக்கவும்படுவான் என முடிவுகட்டி வானலோகத்துக்கு எழுந்தருளுகிறார்.

இந்த முதல், இடை, கடை வாக்கியங்கள் மூன்று முகங் காட்டுகிறாப்போலேயிருக்கிறது. ஆயினும் அவைகள் ஒன்றொன்றுக்கு வியாக்கியானமேயல்லாது வேறல்ல. எவ்வகையாயென்றால், நல்ல மனதுள்ளவர்கள் சிறு பிள்ளைகள் தான். சிறுவர்களோ சூதுவாதில்லாத நல்ல மனதுகள். மேலும் நீ மற்றவர்களைவிடத் தாயாகிய என்மட்டில் அதிக விசுவாசம், நம்பிக்கை, பட்சம் வைத்திருக்கிறாய். அப்படியே சிறு பிள்ளைகள் தங்கள் தங்கள் தாய்மார்கள்மேல் அதிக விசுவாசம், நம்பிக்கை, நேசம் வைத்திருக்கிறார்கள். அவர்களுக்குத் தாழ்ச்சியோடே பணிகிறார்கள். நல்ல மனதுள்ளவர்கள் சிறுவரைப்போலே, சர்வ படைப்புகளுக்கும் மேலாக சர்வேசுரன்பேரில் விசுவாசம், நம்பிக்கை, சிநேகமெல்லாம் வைத்து மகா தாழ்ச்சியோடே அவருக்குக் கீழ்ப்படிகிறார்கள். இவர்கள் உலக இரட்சகருடைய வேத சத்தியங்களை அப்போஸ்தலர்களாவது அவர்களின் பிரதிநிதிகளாவது போதிக்கக் கேட்டால், அவைகளை விசுவ

தெந்து ஞானஸ்நானம் பெறுவார்களென்பது தேற்றம். இவ் விதம் தெய்வீக இரட்சகருடைய சீவியத்தின் அடியிலும், நடுவிலும், முடிவிலும் மனிதரின் ஈடேற்றத்துக்கு வழியாகக் கூறப்பட்ட மூப்பிரி வாக்கியங்களும் தங்களுக்குள் இசைந்து ஒரு கயிறாய்த் திரிபடுகிறதைக் காண்கிறோம்.

விசுவசியாதவன் சபிக்கப்படுவானென சுவாமி திருவுளம்பற்றினார். ஆனால் அவருடைய திருப்போதகத்தை விசுவசியாமல் தள்ளிப்போடுகிறவன், முந்தமுந்த அப்போதனைகளைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கவேண்டியது. இதினிமித்தம் அர்ச். சின்னப்பர் ரோமானருக்கு எழுதின நிருபத்திலே சேசுநாதர்சுவாமியைப்பற்றிக் கேள்விப்படாதவர்கள் எப்படி அவரை விசுவசித்து வணங்கமுடியுமென்கிறார் (உரோ. 10-14). ஆகையால் சேசுநாதர்சுவாமியையும், அவருடைய போதனையையும்பற்றிக் கேள்விப்படாதவர்களை அவிசுவாசிகள் என்கப்படாது. அவர்கள் அவலதீர்வைக்கு ஆளாவார்கள் என்று எண்ணவும் தகாது. இதுவே நியாய சித்தாந்தம். அதாவது நியாயத்தோடே பொருந்திய கொள்கை.

பி. அப்போஸ்தலர்களுடைய வேத போதனைகளை ஜனங்கள் எளிதில் விசுவசிக்கும்பொருட்டு சேசுநாதர்சுவாமி தமது அப்போஸ்தலர்களுக்கு விசேஷ வரங்கள் ஏதாகிலும் அளித்தாரா?

தாய்: அவர்கள் பற்பல புதுமைகள் செய்யும்படி வரங்கொடுத்தார். அவைகளில் சில "அப்போஸ்தலர்கள் நடபடி"யில் வரையப்பட்டிருக்கின்றன. மரித்தவர்களுக்கு உயிர்கொடுத்தார்கள், முடவர்களை நடக்கச்செய்தார்கள், தீராத பிணிகளை ஒரு வார்த்தையினாலே தீர்த்தார்கள், ஒன்றும் படியாதவர்களாயிருந்தாலும் அநேக பாஷைகளைப் பேசினார்கள். நமது தமிழ் நாட்டுக்கு வந்த அப்போஸ்தலரான அர்ச். தோமையார் மலையாள தேசத்திலே மலையாள பாஷையையும், மயிலாப்பூரில் தமிழ்ப்பாஷையையும் பேசினாரென்று எண்ணத்தகும்.



பி.: சேசுநாதர்சுவாமியுடைய அப்போஸ்தலர்களுக்கும் சீஷர்களுக்கும் அளிக்கப்பட்ட புதுமை வரங்கள் அவர்களுடைய பிரதிநிதிகளுக்கும் அருளப்பட்டதோ?

தாய்: தம்மை விசுவசிக்கிறவர்கள் பலபல அற்புதங்களைப் பண்ணுவார்களென்று ஆண்டவர் திருவுளம்பற்றியிருக்கிறார் (மாற். 16, 17-18). ஆகையால் சேசுநாதர்சுவாமியுடைய திருச்சபைக்கு அடையாளமாக, அதிலே புதுமை வரம் துலங்கவேண்டுமென்பதற்குச் சந்தேகமில்லை.

பி.: இக்காலத்திலே திருச்சபையிலே புதுமைகள் நடக்கின்றனவோ?

தாய்: 1. திருச்சபை உண்டானதுமுதல் எக்காலத்திலும் அதிலே புதுமைகள் நடைபெற்று வந்திருக்கிறதாகப் பாரம்பரியமாயும் சரித்திர நூல்களாலும் தெரிகிறது. இக் காலத்திலோ, பிரான்சுதேசத்திலுள்ள லூர்து நகரத்திலே அர்ச். அமலோற்பவமாதா தமதுபேரில் பத்திவிசுவாசமுள்ளவர்களுக்குப் பலனைப் புரிந்துவருகிற அற்புத புதுமைகள் உலகமெங்கும் பிரபலியமாயிருக்கிறதென்று தேசங்கள்தோறும் பாஷைகளெல்லாங் கிண்ணென்று ஓசையிடுகிறது.

2. நமது சீமையிலே சத்திய வேதத்தை நாட்டின அர்ச். சவேரியார் இறந்து இப்போது சுமார் 380 வருஷங்களாயின. அத்தனை வருஷங்களாகியும் அவருடைய சரீரம் அழியாமல் இந்தத் தேசத்திலேயே கோவைப் பட்டணத்தில் இருக்கிறது. சகலரும் அந்த அதிசயத்தைப் போய்ப் பார்க்கலாம். இந்தப் புதுமையினாலே அர்ச். சவேரியார் படிப்பித்த வேதம் சேசுநாதர்சுவாமி கற்பித்த சத்திய கத்தோலிக் வேதமென்று நேர்மையான நல்ல மனதுள்ள யாவருக்கும் தெளிவாய்த் தோன்றும்.

பி.: மெய்யான புதுமைகள் மற்ற மார்க்கங்களில் பாரம்பரையாய்ச் சம்பவிக்கிறதில்லையா?

தாய்: 1. நமது தேசத்தின் பற்பல மதங்களிலே பறைசாற்றப்படுகிற அதிசயங்கள் மெய்யான புதுமைகள்

அல்ல. புதுமை வரம் பெறாத மதங்கள் மனிதரால் உற்பத்தியானவைகள் என்கலோமேயொழிய தெய்வத்தால் உண்டான மார்க்கமெனக் காரணமில்லை.

2. பதித சமயத்தார்கள் தங்கள் மதங்களில் புதுமைகள் சம்பவிக்கிறதில்லையென்று ஒப்புக்கொள்ளுகிறதுமன்றி, அவைகள் கிறீஸ்துநாதருடைய திருச்சபையிலே இடையறாதென்று சாதிக்கிறார்கள். தங்களுக்குச் சுவிசேஷ புத்தகந்தான் ஏக சரணமென்று பறைசாற்றும் பதிதர் இவ்வாறு பிதற்றல் அதிசயமே. சேசுநாதர்சுவாமியுடைய வாக்கின்படி அவரது திருச்சபையில் மெய்யான புதுமைகள் சம்பவிக்குமென்று மேலே கூறினோம். ஆனால் பதிதமார்க்கத்தார் தங்கள் சபைகளிலே புதுமைகள் இல்லையென்று ஒப்புக்கொள்ளுகிறதினாலே, அவர்கள் சபைகளெல்லாம் பொய் மதங்களாயிருப்பது சொல்லாமலே விளங்கும்.

3. யூதர்கள் மதத்திலே சேசுநாதர்சுவாமியுடைய காலத்துக்குமுன்னே கணக்கற்ற அற்புதங்கள் நடந்ததுக்குச் சந்தேகமில்லை. பழைய ஏற்பாட்டை எடுத்து வாசித்தாலுஞ்சரி, இதன் உண்மை கண்ணில் பளிச்சென்றடிக்கும். ஆனால் சேசுநாதர்சுவாமி உயிர்த்த காலந்துவக்கி அந்த மார்க்கத்திலே புதுமை வரம் அடியோடே அற்றுப்போயிற்று. இந்த விஷயம் ஒன்றே யூதமதமானது சேசுநாதர்சுவாமியை உலகத்தை இரட்சிக்கவந்த தெய்வமென்று அங்கீகரிக்காததினிமித்தம் அது பொய்மதமாகிவிட்டதென்பதற்கு அத்தாட்சியாயிருக்கிறது. ஆகையால் வேதசாஸ்திரியாகிய அர்ச். தோமாஸ் மொழிகிறதுபோலே, மெய்யான புதுமை சர்வேசுரனாலே மாத்திரம் போடக்கூடிய முத்திரை; அந்த முத்திரையை எந்த வேதம் பெற்றிருக்கிறதோ, அதுதான் மெய்யான வேதம். மற்ற மதங்களெல்லாம் கள்ள முத்திரைபோட்டு ஏய்க்கிற கொள்ளிப் பேயினுடைய மாய்ஜாலமென்று நேர்மையான மனதுள்ளவருக்கும் புலப்படும். சேசுநாதர்சுவாமி காலம்வரையிலே கணக்கற்ற அற்புத அதிசயங்களாலே காப்பாற்றப்



பட்டுவந்த யூதவேதமானது சேசுநாதர்சுவாமியுடைய ஜீவிய காலத்துக்குப்பின் யாதொரு புதுமையுமின்றிக் கைவிடப்பட்ட வர்த்தமானம் நான் காட்டிய மெய்முத்திரை, பொய் முத்திரைக்கு உத்தமமான திருஷ்டாந்தமாயிருக்கிறது.

பி.: மெய்யான வேதத்தின் அறிகுறியாக அதில் புதுமை வரம் மலைமேல் ஏற்றிய தீபம்போல பிரகாசித்து மனக்குருடாகிய பேதமையை அகற்றிவிடுவது மெய்.
ஆனால் சேசுநாதர்சுவாமி அருளின இந்தக் கடைசிக் காட்
சியை, குஞ்சமென்று சொல்லுவானேன்?

தாய்: ஒரு மாலையிலே குஞ்சம் அதிகஞ் சிறந்ததல்லவா? அதுபோல சேசுநாதர்சுவாமி மோக்ஷத்துக்குப் போகிற அன்று அளித்த தரிசனமும் வாக்கும் அவர் புனைந்த சத்தியவேத மாலையைச் சிறப்பித்து முடிக்கிறது. ஆகையால் அதற்குக் குஞ்சமென்னும் சிறந்தபேர் இடுகிறது நியாயத்தோடே பொருந்தும்.

---

## 17. தாவீது இராஜாவின் நித்திய அரசாட்சி.

பி.: சேசுநாதர்சுவாமி உயிர்த்தபின் பலமுறையும் வாய்ச் சீஷர்களுக்குத் தரிசனையாகித் தமது அதி உன்னத செயலாகிய இரட்சண்ணிய திருச்சபை இராச்சியத்தை உற்பத்தியாக்கி அதை வளர்க்கவும் உலக முடிவுபரியந்தம் காக்கவும் உத்தம வழிபாடுகளை ஏற்படுத்தினாரென்று கற்றுக்கொண்டேன். புதுமை வரமானது அவருடைய திருச்சபைக்கு ஒரு முத்திரையென்றும் விளங்குகிறது. அதற்குமேல் சீஷர்கள் சுவாமியிடத்தில் யாதொரு மன்றாட்டும் கேட்கவில்லையோ?

தாய்: ஆம், பாரியான ஒரு மன்றாட்டைக் கேட்டார்கள். அதாவது, சேசுநாதர்சுவாமி இந்த மண் பூமியிலேயே ஒரு இராச்சியபாரத்தை ஸ்தாபிப்பார் என்கிற எண்ணம்

அப்போஸ்தலர்களுடைய மண்ணுங்கட்டிப் புத்தியை கல க்கிக்கொண்டிருந்தது. ஆகையால் ஆண்டவர் "இதோ உங்களை விட்டுப்போகிற நாள் வந்துவிட்டது, நாம் பரலோ கத்துக்கு ஏறி அங்கிருந்து நமது இஸ்பிரீத்துசாந்துவை அனுப்புவோம்" என்றபோது, சீஷர்கள், "சுவாமி, அப் படியானால், இஸ்பிரீத்துசாந்து இறங்கிவரும்போதோ, யூத ருடைய இராஜாங்கம் மறுபடியும் ஏற்படும்" என்று மகா ஆவலோடே வினவினார்கள்.

பி.: சேசுநாதர்சுவாமி அவர்களுக்கு என்ன பதில் சொன்னார், அம்மா ?

தாய் : திவ்விய கர்த்தர் உரைத்த பதிலாவது :—அந்த மேலான இரகசியத்தைத் தெரிந்துகொள்ளுதல் உங்களைப் பொருத்த காரியமல்ல. அது நமது பிதாவினுடைய வசத் திலிருக்கின்றது. நீங்கள் கொஞ்சத்துக்குள்ளே இஸ்பி ரீத்துசாந்துவை அடைவீர்கள். அவர்தான் இவ்வுலகத் திலே நமக்குச் சாட்சிசொல்லுவார். அவருடைய ஏவுதலி னாலே நீங்களும் பூமியின் எக்கோடியிலும் நமக்குச் சாட்சி யாயிருப்பீர்கள். இஸ்பிரீத்துசாந்து உங்களிடத்தில் இறங்கிவருமட்டும் நீங்கள் ஜெருசலேம் நகரைவிட்டுப் போகாமல் அங்கேதானேயிருங்கள். நான் என் பிதாவிடம் செல்லுகிறேன். நான் போகாவிடில் இஸ்பிரீத்துசாந்து உங்களிடம் எழுந்தருளி வரமாட்டார் (அரு. 16-7) என் றார். இந்த வாக்கியங்களில் சிலவற்றைத் திவ்விய கர்த்தர் கடைசி அசனஞ்செய்தபோது சொல்லியருளினார். அவை களை இவ்விடத்தில் ஒருங்குபடச் சேர்த்து வரைந்திருக் கிறேன். நான் இப்படி ஒன்றாய் இசைக்கிறதுக்கு அர்ச். லூக்காஸ் வாக்கியம் எனக்கு ஆதாரம் (லூக். 24 ; 44-49).

பி.: அம்மா, இங்கே எனக்கு ஒரு சந்தேகம் பிறக் கிறது. சேசுநாதர்சுவாமி இவ்வுலகத்திலே இருந்த கால மெல்லாம் இஸ்பிரீத்துசாந்துவாகிய சர்வேசுரனும் அவ ரோடே இருந்திருக்கிறாரே. அப்படியிருக்க நான் உங் களைவிட்டுப் போகாவிட்டால் அவர் உங்களிடம் எழுந் தருளி வரார் என்பானேன் ?



தாய் : சேசுநாதர்சுவாமியோடே இஸ்பிரீத்துசாந்து வாகிய சர்வேசுரன் எப்போதும் இருந்தது மெய். சேசு நாதர்சுவாமியின் போதகமெல்லாம் இஸ்பிரீத்துசாந்துவின் போதகமாயிருந்ததுக்கும் சந்தேகமில்லை ; ஆனால் யூதர்களு டைய புத்திக்குத் திவ்விய கர்த்தருடைய நடத்தை வார்த் தையைப்பற்றிப் பிரத்தியேகமான சாட்சி வெளிப்படை யாய்த் தோன்றவேண்டியிருந்தது. அவர்கள் சுவாமியை நோக்கி : "உம்மைக்குறித்து நீரே சாட்சி சொல்லுகிறது சரியல்ல, அது செல்லாது" என்றார்கள் (அரு. 8-13). யூதவேதத்திலும் இரண்டுபேர் யாதொரு விஷயமாய் வாக்குமூலம் ஒத்தாப்போலே கொடுத்தால் அதை உண்மை யாக அங்கீகரித்தல் நியாயமென்று எழுதப்பட்டிருந்தது. (அரு. 8-17).

இந்த எதிர்வாதத்தை ஆண்டவர் அறிந்து பலமுறை சீஷர்களையும் ஜனங்களையும் பார்த்து "நான் என் விஷய மாய்த் தனிப்பட இன்று சாட்சிசொல்லுகிறதில்லை (அரு. 8-16). என் பிதா எனக்குச் சாட்சியாயிருக்கிறார் (அரு. 8-18). நான் அனுப்பப்போகிற இஸ்பிரீத்துசாந்துவான வரும் எனக்குச் சாட்சி (அரு. 15, 26-27). என் பிதாவே அவரை அனுப்புவார் (அரு. 14, 16-17). ஆகையால் என்னுடைய பேச்சை நீங்கள் உண்மையாகக்கொள்ளக் கடன் என்றார் (அரு. 8-16).

அப்படியானால் இஸ்பிரீத்துசாந்துவினுடைய அத் தாட்சி எவ்விதத்திலும் மறுக்கவொண்ணாத் திட்ப நுட்பம் உடையதாயிருக்கவேண்டியிருந்தது. ஏனெனில் கொடிய கன்னெஞ்சராய்ப்போன யூதர்கள் சேசுநாதர்சுவாமி எத் தனை புதுமைகளைச்செய்து இரட்சண்ணிய வேதத்தைப் போதித்தாலும் அவரை நம்பாமல் பசாசு பிடித்தவன், பேய் மந்திரவாதியென்று அவரைத் தூஷித்தார்கள்.

திவ்விய இரட்சகர் யோர்தான் நதியிலே அர்ச். ஸ்நாபக அருளப்பர் கையாலே ஞானஸ்நானம் பெற்றபோது இஸ்பி ரீத்து சாந்துவாகிய சர்வேசுரன் மாடப்புறா வடிவாய் அவர்

மேல் இறங்கி நின்றார். அத்தருணமே வானத்தினின்று ஒரு குரல் தானே "இவர் எனது நேச குமாரன்" என்று ஒலித்தது. இந்த வர்த்தமானத்தைச் சுவிசேஷகர் நாலு பேரும் குறிப்பிடுகிறார்கள். இதோ பிதாவும் இஸ்பிரீத்துசாந்துவும் சேசுநாதர்சுவாமி இவ்வுலகத்திலே ஜீவிக்கும் போதே அவர் யாரென்று பிரசித்தமாய் அறிவிக்க, அப்படி அறிவித்தும் யூதர்கள் சேசுநாதர்சுவாமியை நம்பாமல் குருட்டு வைராக்கியரானார்களே. அதற்குமேல் யூத மதஸ்நான ஸ்நாபக அருளப்பர் சேசுநாதர்சுவாமி உலகத்தை இரட்சிக்கவந்த தேவசுதனென்று சகலருக்கும் தெளிவாய்ப் பிரசங்கித்தார். அவருடைய பிரசங்கமும் யூதர்களுடைய காதில் செல்லவில்லை.

யூதருடைய நடபடிக்கை இவ்வாறானால், சேசுநாதர் சுவாமி இவ்வுலகத்திலிருக்கும்போது இஸ்பிரீத்துசாந்து மறுபடியும் வந்து சொல்லக்கூடிய சாட்சியம் வெட்டியாய்ப் போயிருக்கும். அதையெல்லாம் யூதர்கள் சேசுநாதர் சுவாமியுடைய மாந்திரிய மாயச்செயலென்று சலஞ்சாதிப் பார்கள். ஆனால் திவ்விய கர்த்தர் உலகத்தை விட்டு மறைந்துபோனபின் இஸ்பிரீத்துசாந்து அவரைப்பற்றி வெளிப்படையாய் அத்தாட்சி கொடுத்தால் யூதர்கள் அந்த அத்தாட்சியை மறுக்க இடமிராது. இராதிருந்தும் யூதர்கள் இன்னம் சேசுநாதர்சுவாமியை விசுவசியாமல் தள்ளிப் போட்டால் இஸ்பிரீத்துசாந்து அவர்கள்மேல் கனமான குற்றஞ் சுமத்துவார் (அரு. 16, 8-9). அவர்கள் தங்கள் அவிசுவாசத்திலே மடிவார்கள் (அரு. 8-21). இத்தன்மையாக மகாத்துமாவான சிமேயோன் வசனித்தவண்ணம், "சேசுநாதர்சுவாமியுடைய வரவு இஸ்ராயேல் ஜனங்களில் அநேகருக்கு இரட்சணியமாகவும் வேறு அநேகம் பேருக்கு அவகேடாகவும் முடியும்." எந்த வகையிலாவது ஒருவரையறக்கும்படி ஆண்டவர், "நான் இவ்வுலகத்தைவிட்டு என் பிதாவிடம் போய் அங்கிருந்து இஸ்பிரீத்துசாந்துவை உங்களிடம் அனுப்புவேன். அவரும் நீங்களும் எனக்கு அத்தாட்சி சொல்லுவீர்கள். நான் பூமியில் இருக்குமட்



டும் அவர் இங்கே வருகிறதுக்குக் காரணமில்லை, வந்தாலும் பிரயோசனமில்லை" என்றார்.

தவிர, அப்போஸ்தலர்களுடைய மன நிர்வாக சிரைப் பார்க்கையில், இஸ்பிரீத்துசாந்து அவர்கள்மேல் இறங்கி வரும்படி சேசுநாதர்சுவாமி அவர்களை விட்டுத் தமது பிதாவினிடம் ஏகுதல் ஒருவகையில் அவசிய காரியமாயிருந்தது. ஏனெனில் நமதாண்டவர் அவர்களை நோக்கி, "கண்டு விசுவசிப்பதைவிடக் காணாமுன் விசுவசித்தலே நலம்" என்றார். அவர்பேரில் அப்போஸ்தலர்களும் சீஷர்களும் வைத்திருந்த விசுவாசம் கண்காட்சியோடே ஒட்டிய குணறின விசுவாசமாயிருந்தது. திவ்விய கர்த்தர்மேல் அவர்கள் கொண்ட பட்சமும் அம்மேரையாகவே ஊனம்பிடித்த ஒரு பிரீதியன்றி, ஊன்றிய உரமான தேவசிநேகமல்ல. இந்தக் குறைச்சல்கள் இஸ்பிரீத்துசாந்துவானவர் அவர்கள் உள்ளத்தில் தமது வரங்களைச் சம்பூரணமாய்ப் பொழிகிறதுக்குத் தடையாகின. சேசுநாதர்சுவாமி அப்போஸ்தலர்களை விட்டுக் கண்ணுக்கு மறைந்துபோனாலோ, அப்போது வேண்டும் வேண்டாம் அவர்களுடைய விசுவாசம் கண்தரிசனைக்கு எட்டாத சுத்தமுடையதாகிவிடும். அவர்களுடைய பட்சமும் அவ்வித விசுவாசத்தில் நின்று எழும்பும் தூய தேவசிநேகமாய் இலங்கும். ஆகவே, இஸ்பிரீத்துசாந்துவாகிய சர்வேசுரன் அவர்கள் உள்ளத்தில் எழுந்தருளி வந்து அவர்களைத் தமது உன்னத வரங்களினாலே பூரிப்பிக்க விக்கினம் ஒன்றுமிராது. இது நிமித்தந்தான் திவ்விய இரட்சகர், "நாம் உங்களை விட்டுப்போவது உங்களுடைய நன்மைக்குத்தான். நாம் போகாவிடில் இஸ்பிரீத்துசாந்து வரமாட்டார்" என்று மொழிந்தார். இந்தப் பதில் மொழிகளினாலே இஸ்பிரீத்துசாந்துவானவர் எழுந்தருளி வந்து தமது ஞான இராட்சியமாகிய திருச்சபையை உறுதிப்படுத்தி அதைத் தாவீது இராஜாவின் புது இராஜாங்கமாக்கி அது உலகமுடியும் வரையில் நிலைபெறச் செய்வாரென்று சேசுநாதர்சுவாமி மறைமுகமாய் அறிவித்து மோட்சத்துக்கு எழுந்தருளிப்போகச் சித்தமானார்.

வறுத்து விளம்பமுடியாது. அதினிமித்தந்தான் அர்ச். சின்னப்பர் அந்தப் பாக்கியத்தை ஒரு தரிசனையில் கொஞ்சம் ருசிபார்த்தபின், "அதைப்போலே மனிதர் கண் பார்த்ததுமில்லை, அவர்கள் காது கேட்டதுமில்லை, மனிதருடைய புத்திக்கு அது எட்டப்போகிறதுமில்லை" என்று பிரமித்து மொழிந்தார்.

பி.: ஆனாலும் மோட்ச இராட்சியத்தின் அதி உன்னத சிங்காரத்தைப்பற்றி வேத புத்தகத்தில் ஏதாகிலும் எழுதப்படவில்லையா?

தாய்: அந்த அத்தியந்த இராட்சியத்தின் மாட்சிமையைப்பற்றி அர்ச். அருளப்பர் தமது காட்சி ஆகமத்தில் சில குறிப்புகளை வரைந்திருக்கிறார். அவருக்கு அளிக்கப்பட்ட காட்சியாவது:—ஒரு சம்மனசு அவரை உயர்ந்த ஒரு மலைமேலே ஏற்றிச் சர்வேசுரனாலே படைக்கப்பட்டுப் பரலோகத்தினின்று இறங்கிய ஒரு பரிசுத்தமான இராட்சியத்தை அவருக்குக் காட்டினார் (காட்சி 21-10). அதின் பிரகாசமெல்லாம் தெய்வத்தின் பிரகாசமேயன்றி வேறல்ல (காட்சி 21-23). அந்தத் தெய்வக் கதிர் மகா சுத்தமான கண்ணாடிக்கொப்பாகிய தூய்மையான வைரக்கல் அல்லது இரத்தினக்கல்லில் பாய்ந்தால் எப்படியோ அப்படியே ஜெகஜோதியாய் ஜொலித்தது. அதின் சுற்றுமதில்கள் உயர்ந்து ஓங்கி நின்றன. அவைகளுக்கு தலைவாசல்கள் பன்னிரண்டு (காட்சி 21-21). ஒவ்வொரு வாசற்படிக்கும் சூரிய காந்தி வீசும் சம்மனசு ஒருவர் காவல். அந்த வாசற்படிகளில் மூன்று வடக்கேயும், மூன்று தெற்கேயும், மூன்று கிழக்கேயும், மூன்று மேற்கேயும் நோக்கிற்று. அந்த நகரம் சதுர அளவாய் முடிக்கப்பட்டிருந்தது. அதின் நீளம், அகலம், உயரம் எல்லாம் ஒரே கணக்குத்தான். மதில் சுவர்களும் அதற்குள் எழும்பிய கோடானகோடி அரண்மனைகளும் செங்கல்லால் அல்ல, நவரத்னங்களாகிய முத்து, பவளம், மாணிக்கம், நீலம், வைரம், வைடூரியம், புஷ்பராகம், மரகதம், கோமேதகம் ஆகிய விலைமதிக்கவொண்ணாத கற்களால் அடிப்படைமுதல் கொடிமுடி



வரையில் அமைக்கப்பட்டுத் தூய பொற்சாந்தால் இசைக்கப்பெற்று இலங்கின. அவ்வாறே பன்னிரு வாசற்படிக் கதவுகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு முத்தால் இயற்றப்பட்டது. பட்டணத்து வீதிகளெல்லாம் ஒரு நுட்ப மாசு முதலாயில்லாத கண்ணாடியை ஒத்த பசும்பொன் தகட்டால் பாவுண்டு பளபளவென்று இலங்கின (காட்சி 21-21). இந்தப் பிரபஞ்சலோக சூரியனாவது சந்திரனாவது அங்கே கிடையாது. இதுவெல்லாம் இருளெனப் பேர்பெறும். தெய்வத்தினிடமாகவும் சேசுநாதர்சுவாமியின் மனுஷீகமிடமாகவும் வீசுகிற அளவற்ற சோதி ஒளிதான் அந்த நகருக்குப் பிரகாசம். அங்கே எப்போதும் பகலேயொழிய இராக்காலமேயில்லை (காட்சி 21-25). அந்தப் பட்டணத்து வீதிநெடுக கண்ணாடிபோல சுத்தமான உயிர்தரும் ஜலம் பாய்ந்து ஓடுகிறது. அதை மோக்ஷவாசிகள் அருந்தி ஒரு நாளும் சாவு துன்பத்தைக் காணாமல் நித்திய காலமும் நீடூழி வாழ்வார்கள் (காட்சி 22, 2-5). இப்படி எவ்வகையிலும் மட்டற்ற பாக்கியத்தைச் சம்மனசுகளுக்கும் மனிதருக்கும் அளிக்கத் திருவுளமான தெய்வத்தின் பூரண நன்மைத்தனத்தை மோக்ஷவாசிகள் யாவரும் தரிசித்துப் பரவசத்தில் அமிழ்ந்தினவர்களாய் அவரை ஓயாமல் சலியாமல் வாழ்த்தி ஸ்துத்தியம்பாடி அகமகிழ்வார்கள்.

பி.: ஆ! மோட்ச அலங்கார பாக்கியத்தைப்பற்றிக் கேட்கும்போது இவ்வுலகச் சிறப்பு வளமையெல்லாம் நாறுகிற குப்பைமேடு என்கவல்லோவேண்டியது.

தாய்: அதற்குச் சந்தேகமில்லை. அதினாலேதான் மோட்ச அலங்காரத்தைச் சற்று தரிசித்த அர்ச். சின்னப்பர், இவ்வுலக மகிமை பெருமை சுக செல்வம் யாவும் பரலோக காட்சிக்குமுன் சாணியும் சகதியுமென்று உரைக்கிறார். வானலோகத்தின் மகத்துவம் இன்னம் வேறே காரணத்தினாலே நான் வர்ணித்ததைவிட பத்துமடங்கு அதிகமாய்க் கதித்து ஓங்குகிறதென்கவேண்டியது. ஏனெனில் நான் கூறிய சோதிப்பிரகாச தோற்றம் மோட்சத்தில் வசிக்கிற ஒவ்வொருவரிடத்திலும் விளங்குகிறது. ஆகை

பால் அங்கேயிருக்கிற ஒவ்வொரு சம்மனசும் புண்ணியாத்
துமமும் தனித்தனியே சூரியனைப்போலும் தூய நவமணி
போலும் சுடர்விசுகிறார்கள். அப்படியானால் படைப்
புண்ட சகல வஸ்துக்களின் பிரதாப இலட்சணங்களையெல்
லாம் மட்டற்ற வகையால் மேற்கொண்டிருக்கிற தேவதாய்
மோட்சத்திலே எவ்வளவு பிரதாப சோபனமாய் இலங்கு
கிறாளென்று மனிதரும் சம்மனசுக்களும் ஒன்றுகூடினாலும்
அவர்கள் புத்திக்கு எட்டாவண்ணம் அளவின்றி உயர்ந்
திருக்கிறதுக்குச் சந்தேகமில்லை. இது நிற்க, தெய்வத்
தோடே ஒன்றித்திருக்கிற சேசுநாதர்சுவாமியின் மனுஷீ
கம் மோக்ஷத்திலே பிரவேசித்தபோது எம்மாத்திரம் ஜெக
ஜோதியாய்த் தேஜோமயமாய்ப் பிரகாசித்ததென்று தெய்
வந்தான் விளம்பவல்லதொழியப் படைக்கப்பட்ட வஸ்துக்
களாலே ஏலுந் தன்மையல்ல.

---

## 19. மோட்சத்தில் சேசுவின் கொலு இருப்பு.

பிள்ளை : அம்மா, சேசுநாதர்சுவாமி தமது அளவற்ற
தயவினாலே நமக்குத் திறந்தருளிய பரலோகத்தின் பெரு
மையை நமது அற்பப் புத்தியினாலே தியானிக்கும்போதே
இந்தப் பூலோகத்திலே எடுப்பாய் ஒய்யாரமாய்த் துலங்கு
கிற மாடமாளிகை கோபுர கொத்தளங்களெல்லாம் களி
மண்ணாலாகிய குச்சுவீடாகவல்லோ தோன்றுகிறது. அம்
மாத்திரஞ் சிறந்த மோட்சத்துக்கு நீங்களும் நானும் சுதந்
தரவாளிகளானோம் என்கிற நினைவு மகா மகா ஆனந்தத்
தைப் பயக்கிறது. அந்த அதி உன்னத இராட்சியத்துக்
குள் விஜயஞ்செய்த சுவாமியுடைய மனுஷீகத்துக்கு என்ன
கெம்பீர ஒட்டோலக மகிமை பண்ணப்பட்டதென்று
அறிய விருப்பமாயிருக்கிறேன்.

தாய் : உன் விருப்பத்துக்களவாக எனக்குத் தெரிந்
ததை வெளிப்படுத்துகிறேன். ஜாக்கிரதையாய்க் கேள்.
மோட்ச கபாடங்கள் திறக்கப்படவே நமது திவ்விய இரட்ச
கர் உள்ளே சென்றார். உடனே தேவ பிதாவானவர் தமது



அளவற்ற நேசத்தோடே
க குமாரனாகிய அவரை
வாழ்த்தி, அவரை நோக்கி: "இதோ நமது வலது பாரிசத்
தில் உமது சிங்காசனம் நித்திய காலத்துக்கும் நிலைபெற்
றிருக்கும். உமது சதிகாரரை உமது பாதங்கள் மிதிக்கும்
மணையாகப் போடுங்காலம் எப்போ வருமென்று உமக்குத்
தெரியும். அதுவரையில் நமது வலது பாரிசத்தில் வீற்
றிருந்து நீர் உயிர்கொடுத்துப் பேயின் கையினின்று மீட்ட
உலகத்தை ஆண்டு நடத்தி வருவீராக" (சங். 109, 1-6)
என்று வசனித்து அவரைச் சகல படைப்புகளுக்கும்
மேலாக உயர்த்தித் தெய்வீக பிரதாப சோபன மாட்சிமைக்
குரிய சிம்மாசனத்தில் ஏற்றி அவருக்குச் சர்வலோகங்
களின்மேலும் சகல சிருஷ்டிகளின்மேலும் சம்பூரண அதி
காரங் கொடுத்தார். உடனே மோட்ச பிரஜைகளான சகல
சம்மனசுகளும் அர்ச்சியசிஷ்டர்களும் அவரைச் சாஷ்
டாங்கமாக விழுந்து ஆராதித்தனர். இதைத் தெளிவிக்
கும்படியாகத்தான், "வானலோகத்தாரும் பூதலத்தாரும்
பாதாளத்தாரும் முழந்தாட்படியிட்டு சேசுவின் திருநாமத்
தை நமஸ்கரிப்பார்கள்" என்று உரைத்தார் அர்ச். சின்னப்
பர். (பிலி. 2-10.)

பி. : நித்திய பாக்கியம் நிறைந்த மோட்சத்தை மனி
தருக்குத் திறந்துவிட்ட சுவாமியைச் சர்வலோகமும்
போற்றிப் புகழ்ந்து ஆராதிக்கிறது மகா நீதி நியாயந்
தானே. அவர் சகல சிருஷ்டிகளுக்கும் மேலாக அள
வின்றி உயர்த்தப்பட்ட நிமித்தம் மனிதகுலமெல்லாம் அக
மகிழ்ந்து அக்களிக்கவேண்டியது. ஆனால் சேசுநாதர்
சுவாமி பிதாவாகிய சர்வேசுரனுடைய வலது பாரிசத்தில்
உட்கார்ந்திருக்கிறாரென்று படிக்கிறோமே. தெய்வத்துக்கு
வலது பக்கமேது, இடது பக்கமேது?

தாய் : தெய்வத்துக்கு மகா நுட்பமான சூட்சும
சரீரம் உண்டென்று அஞ்ஞானிகள் தப்பாகப் போதிக்
கிறார்கள். ஆதலால் அவர்களுக்குத் தெய்வத்தின் வலது
அல்லது இடது பாரிசமென்பது விகாரமான பேச்சாகத்
தோன்றாது. ஆனால் சர்வேசுரனுக்குச் சரீரமே கிடை

பாது என்பது ஓர் படித்தறிந்த சத்தியம். அவருக்கு வலது கையுமில்லை இடது கையுமில்லை. ஆயினும் நமது உலக ஆசாரத்திலே, ஒரு அரசனுடைய வலது பக்கத்தில் வீற்றிருப்பவன் மகிமையிலும் வல்லமையிலும் அரசனுக்கு இரண்டாவது என்று சகலராலும் மதிக்கப்படுவான். அது போலவே தெய்வத்துக்குப்பின் சேசுநாதர்சுவாமியுடைய மனுஷ சுபாவம் மகிமை வல்லமையில் இரண்டாவதாக விளங்குகிறதென்று நாம் தெளிந்துகொள்ளும்படி அந்த வாக்கியம் பிரயோகிக்கப்படுகிறதாமே.

பி.: சேசுநாதர்சுவாமி உட்கார்ந்திருக்கிறார் என்பானேன்?

தாய்: திவ்விய இரட்சகருடைய சரீரமானது அட்சயம், சூட்சம், இலகு, பிரகாசமென்கிற வரங்களைப்பெற்று மோட்சலோக சரீரமாகிவிட்டதினாலே அவர் இவ்வுலக மனிதருக்கொப்ப நிற்கிறார், நடக்கிறார், உட்கார்ந்திருக்கிறாரென்று நாம் கருதப்படாது. ஆனாலும் மனிதர் எந்தக் காரியத்தையும் ஐம்புலன்களுக்குப் படும்படியான ஒரு சாயல் அல்லது உருவாகப் பாவித்தால்தான் அதைக் கண்டுபிடிப்பார்கள். உட்கார்தல் ஒருவகை இருப்பு. அவ்வகை இருப்பிலே அடங்கிய உட்கருத்தை உத்தேசித்து சேசுநாதர்சுவாமி தமது திவ்விய பிதாவின் வலதுபாரிசத்திலே உட்கார்ந்திருக்கிறார் என்கிறோம். அதின் பொருளை இதோ அடியில் விளம்புகிறேன்.

(1) உட்கார்தல் என்பது ஒரு வேலைக்குப்பின் இளைப்பாற்றியைக் குறிக்கிறது. அவ்வண்ணமே சேசுநாதர் சுவாமியுடைய மனுஷீகம் மகா மகாக் கடுமையான நமது இரட்சண்ணிய வேலையை முடித்துச் சகல மனிதருக்கும் மோட்ச வாசலைத் திறந்துவிட்டபின், இனி ஒரு வேலையும் வேதனையுமில்லாமல் நித்திய பாக்கியம் நிறைந்த இளைப்பாற்றியை அனுபவிக்கிறது.

(2) உட்கார்ந்திருத்தலானது நிற்றல் ஓட்டம் ஆட்டமில்லாத உறுதி நிலைமைக்கு அடையாளம். அதுக்கு



சவாக சேசுவின் மனுஷீகம் தமது மோட்ச சிங்காசனத்திலே உறுதியாய் வீற்றிருந்து சர்வலோக அதிபதியாய் நித்தியகாலமும் நிலைபெற்ற அரசாட்சி செலுத்தும்.

(3) சிங்காசனத்தில் ஏறி உட்கார்தல் அதிகார வல்லமையைக் காட்டுகிற ஒரு குறி. ஒரு இராஜா தனது பத்திராசனத்தில் உட்கார்ந்தால் அவர் யாதொரு கட்டளை அல்லது தீர்ப்புச் சொல்லப்போகிறாரென்று பிரஜைகள் அச்சத்தோடே நோக்கமாயிருப்பார்கள். அவ்வாறே சேசுநாதர்சுவாமி பிதாவாகிய சர்வேசுரனுடைய வலது பாரிசத்திலே உட்கார்ந்திருக்கிறாரென்கிற வாக்கியத்தாலே, அவர் சகல சம்மனசுகளுக்கும் மனிதருக்கும் கட்டளையும் தீர்வையுமிடவேண்டிய கர்த்தத்துவம் உடையவரென்று காண்கிறோம்.

சேசுநாதர்சுவாமியின் மனுஷீகம் வீற்றிருக்கும் பத்திராசனம் இரத்தினக்கல்லால் இழைக்கப்பட்டுச் சூரியனைப் போலே பிரகாசிக்கிறது. (எசே. 1-26, 28; சங். 88-38.) அந்தச் சிம்மாசனத்தை ஏழு வர்ண இரத்தினக் கல்லுகளால் இயற்றப்பட்ட ஒரு பச்சை வில் சூழ்ந்துகொண்டிருக்க ஒவ்வொரு வர்ணக்கல்லும் சூரியகாந்தி வீசுகிறது. (காட்சி. 4-3.)

இங்கே அறியவேண்டிய ஒரு விசேஷமாவது— மோட்ச இராச்சியமும் அதன் சிங்காசனமும் முழுமையும் தங்கமும் நவரத்னமுமாயிருக்கிறதென்று வர்ணிக்கிறதிலே ஆழ்ந்த உட்கருத்தும் ஞானமும் அடங்கியிருக்கிறது. ஆனால் அதை இவ்விடத்தில் விவரிப்பது அவசியமான காரியமல்ல; மோட்ச இராச்சியத்தின் பேரின்ப பாக்கியத்தைப்பற்றிய பாடத்தில் அறிந்துகொள்வாய்.

பி.: ஆ! ஆ! அம்மாத்திரம் மகிமைப்பிரதாபரூபமான மோட்ச இராட்சியத்துக்கல்லோ பறந்துபோகும்படி அப்போஸ்தலர்களைப்போலே நாம் ஆத்திரப்படவேண்டியது!

தாய்: ஆம், மகனே, நமது ஆசை நோக்கம் நினைவு கனவு எல்லாம் அந்த மோட்சத்தையே ஓயாமல் தாவிக் கொண்டிருக்கவேண்டியது. அதுக்காகவே நீ சிறுபத்திலேயே அப்போஸ்தலர்கள் பாவனையாக சேசுநாதர் சுவாமியை மாத்திரம் உன்னிருதய நேசமாக வைத்துக் கொள். நீ அவருடைய சிநேகத்திலே நிலைநின்றால் அவரோடே மோட்சத்திலே எந்நாளும் வாழ்வாயென்பது நிச்சயம்.

பி.: தேவ கிருபையினாலும் தேவதாயின் உதவியினாலும் நான் சேசுநாதர்சுவாமியின் சிநேகத்திலே நிலைத்து நித்தியகாலம் அவரோடே ஜீவிப்பேனென்று பூரணமாய் நம்புகிறேன்.

தாய்: உன் தீர்மானம் உத்தமமானது. அந்த நல்ல மனதிலே நீ உறுதிப்படும்படி ஒரு வர்த்தமானத்தைக் கூறுகிறேன், கருத்தாய்க் கேள். அர்ச். பெர்நார்தீன் இதை வெளிப்படுத்தியிருக்கிறார்.

## வரலாறு.

தெய்வபக்தி விசுவாசம் நிறைந்த ஒரு பிரபு சேசுநாதர்சுவாமி ஜீவித்து மரித்த திருஸ்தலங்களைத் தரிசிக்க ஆசைப்பட்டுத் திருயாத்திரை செய்தார். ஜெருசலேம் பட்டணம் இருக்கிற பலஸ்தீனா சீமையில் வந்திறங்கினவுடனே நல்ல பாவசங்கீர்த்தனம்பண்ணித் திவ்விய சற்பிரசாதம் வாங்கினார். அதன்பின் நமதாண்டவர் மனிதாவதாரம் பண்ணி ஜீவித்த நசரேத் ஊரையும் அவர் பிறந்த பெத்லேம் நகரையுஞ் சந்தித்தார். பிறகு சுவாமி ஞானஸ்நானம் பெற்ற யோர்தான் நதியையும் அவர் நாற்பது நாள் உபவாசமாயிருந்த வனாந்தரத்தையுந் தரிசித்தார். பிற்பாடு தபோர் மலைமேலேறி அங்கே சுவாமி மறுரூபமான அதிசயத்தைத் தியானித்து ஆண்டவரை வணங்கினார். அதற்குமேல் சேசுநாதர்சுவாமி நமதுமேல் வைத்த அளவற்ற நேசத்துக்கு அடையாளமாகிய திவ்விய சற்பிரசாதத்



தைப் படைத்த அசனசாலைக்குச்சென்று அதில் நடைபெற்ற அதி உன்னத பரம ரகசியத்தைத் தியானிக்கையில் அவர் இருதயம் மெழுகுபோல் உருகினது. அந்தச் சாலையைவிட்டு சுவாமி இரத்த வியர்வை வியர்த்துப் பிடிபட்ட பூங்காவனத்தையும், அவர் கசைகளால் அடிபட்டு முண்முடி சூட்டப்பட்ட சிறைச்சாலை முற்றத்தையும் கண்ணுற்றபோது அவர் உள்ளம் பதைக்க இரு கண்களும் கலங்கின. அந்த முற்றத்தை நீங்கித் திவ்விய இரட்சகர் சிலுவையில் அறையுண்டு உயிர்விட்ட கபாலமலை மேலேறி அங்கே மூன்று மணிநேரம் சிலுவையில் தொங்கி அவஸ்தைப்பட்ட சுவாமியுடைய உருவற்ற ரூபத்தையும், அவருடைய விலாக்காயத்தையும் மனதில் உன்னிச் சிந்தித்துப் பெருமூச்சுவிட்டுத் தேம்பி அழுதார். அதற்கப்பால் அவர் அடக்கப்பட்ட கல்லறையை வணங்கிக் கடைசியாய் அவர் தமது மோட்ச இராட்சியத்துக்கு ஏறுகிற சமயத்தில் அவருடைய தெய்வீக பாதம் மிதித்த இடமாகிய ஒலிவேத் மலையின் உச்சியைக் கண்ணுறத் தரிசித்து, சுவாமி எழுந்தருளிப்போன வானலோக பாதையை அண்ணாந்து பார்த்தார். அத்தருணத்தில் அவருடைய இருதயத்தில் பெருகிப் பொங்கின தேவசிநேகப் பிரளயத்தை அடக்க முடியாமல், "ஆ, என் சேசுவே! ஆ, என் சேசுவே, இனி உலகத்திலே எங்கே உம்மைத் தேடிப்போவேன்? நீர் அதை நீங்கி எழுந்தருளிப் போய்விட்டீரே! நானும் உம்மைப் பின்தொடர்ந்துவர அனுக்கிரகஞ் செய்தருளும். நீர் வீற்றிருக்கிற மோட்சத்துக்கு என்னையும் இழுத்துக் கொள்ளும்" என்று பெருமூச்செறிந்தார். உடனே அவ்விடத்திலேதானே மூர்ச்சையாய் விழுந்து உயிர்விட்டார். தேவசிநேகத்தினாலே அவர் இருதயம் இரண்டாய் வெடித்துப்போனது. அதில் "சேசுவே, என் சிநேகம்" என்று வரையப்பட்டிருக்கிறதைச் சகலரும் கண்டு அதிசயித்து ஆண்டவரைத் தோத்தரித்தார்கள்.—(Rodez.)

## 20. அப்போஸ்தலர் செய்த பத்துநாள் ஒடுக்கம்.

தாய்: சேசுநாதர்சுவாமி ஒட்டோலகமாய் மோட்ச
இராட்சியத்துக்கு எழுந்தருளி தமது நித்திய பிதாவின்
வலதுபுறத்திலே மகா மகிமைப் பிரதாபத்தோடே வீற்
றிருக்கிறாரென்று அறிந்துகொண்டோம். அவர் பரலோ
கத்துக்கு ஏறுகிறதை அதிசயத்தோடே அண்ணார்ந்து
பார்த்துக்கொண்டிருந்த சீஷர்களுக்கு நடந்ததென்ன?
மகனே, தெரியுமா?

பி.: அவர்கள் வானத்தை நோக்கிப் பரவசத்தில்
அமிழ்ந்தி நிற்கையில் இரண்டு பரம தூதர்கள் வெள்ளாடை
பூண்ட வாலர்களின் பாவனையாகத்தோன்றி, "ஓ! கலி
லேய புருஷாத்துமாக்களே, நீங்கள் வானத்தை உற்றுப்
பார்த்துக்கொண்டே நிற்பானேன்? பரலோகத்துக்குச்
சென்றிருக்கும் சேசுநாதர் திரும்பவும் வருவார்" என்றார்
கள். (அப். 1-11.) இதைக் கேட்டதும் அவர்கள் எருச
லேமில் தங்கும்படி ஓர் வீட்டுக்குப் போனார்கள்.

தாய்: சீஷர்கள் எந்த வீட்டிலே தங்கப்போனார்கள்?

பி.: சேசுநாதர்சுவாமி கடைசி இராப்போசனம்
செய்த அறையிலே போய்க் கூடினார்கள்.

தாய்: கணக்குக்கு எத்தனை பேர்?

பி.: தேவமாதாவும், சீஷர்களும், சில புண்ணியவதி
களுமாக 120 பேர் (அப். I, 13-15) அந்த அறையிலேயே
கூடிச் செபத்திலிருந்தார்கள்.

தாய்: எத்தனை நாள் அப்படிச் செபத்திலிருந்தார்
கள்?

பி.: பத்துநாள் ஒடுக்கஞ் செய்தார்களென்கலாம்.

தாய்: நன்றாய்ச் சொன்னாய். அங்கங்கே கிறீஸ்துவர்
கள் ஞான ஒடுக்கத்தில் இருக்கிறதாகப் பார்க்கிறாயே.
மூன்று நாள் முதல் எட்டுநாள் வரையில் ஒரு வீட்டில்



அடக்கமாயிருந்து மௌனங்காத்து நானாவித ஞானமுயற்சி
களைத் தொடர்ச்சியாய்ச் செய்கிற உத்தம ஏற்பாட்டை
முந்த முந்த அப்போஸ்தலர்களே நமக்குப் படிப்பித்தார்கள்
என்கவேண்டியது.

பி.: அந்தப் பத்து நாட்களிலும் சீஷர்கள் நடத்தின
ஞானமுயற்சிகள் என்னென்ன, அம்மா?

தாய்: இது விஷயமாய் மகாப் புண்ணியவதியான மரி
யாகிரேத் அம்மாளுக்கு ஒரு காட்சியிலே அறிவிக்கப்
பட்டதை நான் உனக்கு வெளிப்படுத்துகிறேன். அதா
வது:—(1) தினம் ஒருமணி நேரம் பரிசுத்த மாதா அப்
போஸ்தலர்களுக்குத் தமது திருக்குமாரன் படிப்பித்த
வேத சத்தியங்களை விவரித்துக் காட்டுவாள். (2) இன்
னொரு மணிநேரம் சீஷர்கள் சேசுநாதர்சுவாமியின் ஜீவிய
நடபடிக்கைகளைப்பற்றித் தங்களுக்குள்ளே சம்பாஷிப்பார்
கள். (3) பிறகு வாய்ச்செபமாகப் பரமண்டல மந்திரத்
தையும், தாவீது இராஜாவின் சங்கீதமாலையையும் பாடுவார்
கள். குருக்கள் தினம் ஜெபிக்கிற சங்கீதமாலை (Breviary)
அப்போஸ்தலர்களோடே ஆரம்பித்ததென்கலாம். (4)
மற்ற நேரம் தனித்தனியே வேத சத்தியங்களைத் தியானிப்
பார்கள். (5) சாயங்காலம் ஒருவேளைமாத்திரம் கொஞ்சம்
ஆகாரம் புசிப்பார்கள். (6) கடைசியாய் நித்திரை செய்
யப் போவார்கள். ஆனால் நித்திரைநேரம் சுருக்கமாய்த்தா
னிருந்தது.

பி.: அம்மா, நான் இங்கே ஒரு சந்தேகங் கேட்க உத்
தரவு கொடுங்கள். சுவாமியுடைய வாழ்நாள் நடபடிக்கை
ஏற்பாடுகளைப்பற்றி அப்போஸ்தலர்கள் உல்லாசமாய்ச் சல்
லாபித்து வந்தார்களே. அப்பொழுது தங்கள் சபையை
விட்டுத் தவறிப்போன யூதாசைக்குறித்து யோசனை ஏதா
வது செய்யவில்லையா?

தாய்: உன் வினாவுக்கு நான் விடைசொல்ல வேண்டி
யதுதான். பொருளாசையினாலே புத்தி மயங்கிக் கெட்டுப்
போய் அவலமாய் நான்றுகொண்டு செத்த யூதாஸ் நிமித்

தம் சீஷர்கள் மிகவும் துயரம் அடைந்திருந்தார்கள். இப்படியிருக்க அர்ச். இராயப்பர் தேவதாயாரின் ஆலோசனையைக் கேட்டுச் சபை நடுவில் எழுந்து எல்லாரையும் நோக்கி வசனித்தார் பின்வருமாறு :—

சகோதர புருஷர்களே, இஸ்பிரீத்துசாந்துவாகிய சர்வேசுரன் தாவீது இராஜன் வாக்கால் ஏற்கனவே தெரிவித்தபடியே, நம்முடனொத்தவனாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்த யூதாஸ் தவறிவிழுந்து மடிந்தானல்லோ (சங். 40-10); அவனுடைய ஆசனத்தை மற்றொருவன் அடைவானாகவென்று தேவசங்கீதத்தில் கூறப்பட்டிருக்கிறதே (சங். 108-8). ஆனபடியினாலே நமதாண்டவர் யோர்தான் நதியில் ஞானஸ்நானம் பெற்றதுமுதல் அவர் பரலோகத்துக்கு ஆரோகணமான வரையில் நம்மோடுகூட இருந்தவர்களில் ஒருவரை சுவாமி உயிர்த்த சம்பவத்துக்கு சாட்சியாக அகத்தியந் தெரிந்துகொள்ளவேண்டுமென்றார்.

சீஷர்கள் அர்ச். இராயப்பருடைய தீர்மானத்துக்கு ஒன்றாய் இணங்கி பார்ஸபாஸ், மத்தியாஸ் என்ற இருவரைக் குறிப்பிட்டுத் தெய்வம் தமது திருவுளத்தை கிருபை புரிந்து தெளிவிக்கும்படி பிரார்த்தித்து இருவர் பேராலேயுஞ் சீட்டுப்போட்டார்கள். அது மத்தியாஸ்மேல் விழுந்தது. உடனே அவர் அப்போஸ்தலராக இலக்கிடப்பட்டார்.

இங்கே நாம் ஆழ்ந்து பார்க்கவேண்டிய சில விஷயங்கள் உண்டு. (1) தாவீது இராஜாவின் சங்கீத வாக்கியங்களில் சிலது (சங். 68-26; 108-8) யூதாசைக் குறிப்பிடுகிறதென்று வியாக்கியானம் பண்ணும்படி அர்ச். இராயப்பருக்கு அதிகாரம் யார் கொடுத்தார்? (2) அந்தத் தேவதுரோகிக்குப் பதிலாக இன்னின்ன பொருத்தமுள்ள ஒருவரை அவசியம் நியமிக்கவேண்டுமென்று அவர் கட்டளை கொடுக்கத் துணிந்ததென்ன? திருச்சபையை ஆளும்படி சேசுநாதர்சுவாமி அவரை ஏற்படுத்தியிராவிட்டால் இராயப்பர் அந்தப் பெரிய சபையிலே தேவமாதாவின் சமுகத்



திலே இப்படிப் பேசத் துணிவாரோ? சுவாமியை அறியேனென்று சாதித்தவர் தலையை ஏறெடுத்துப் பார்த்திருப்பாரோ? பரிச்சேதமில்லை. ஆகவே, சேசுநாதர்சுவாமி தமது திருச்சபையாகிற மந்தையை ஆண்டு மேய்க்கும்படி அர்ச். இராயப்பரை நியமித்தாரென்பது நிச்சயம். அங்கு கூடியிருந்த மற்ற அப்போஸ்தலர்களும் சீஷர்களும் இராயப்பரைத் தங்களுக்குத் தலைவராக ஒப்புக்கொண்டதும் திண்ணமான காரியம்.

இதன்றியே தாவீது இராஜாவின் வாக்கினாலே இஸ்பிரீத்துசாந்துவாகிய சர்வேசுரன் பேசினதாக அர்ச். இராயப்பர் வசனித்ததை யோசித்துப்பார்த்தால், வேத புஸ்தகங்கள் இன்னதென்று திட்டம் பண்ணுவதற்கான அதிகாரம் திருச்சபைத் தலைவருக்கு உரியதென்று தெரிந்துகொள்ளுவோம். மேலும் வேத புஸ்தகங்களில் அடங்கிய கருத்தைக் கண்டுபிடித்து உணருகிற ஞானம் அப்போஸ்தலர்களுக்கு அருளப்பட்டதாக அர்ச். லூக்காஸ் மொழிகிறார். (லூக். 24-45.)

ஆனால் பதிதர் போதிக்கிறதுபோலே எவரும் சுவிசேஷத்தைப் படித்துத் தங்கள் புத்திக்குத் தோன்றுகிற அர்த்தந்தான் இஸ்பிரீத்துசாந்து தங்களுக்கு ஏவுகிற ஞானமென்று எண்ணுகிறதாயிருந்தால், சேசுநாதர்சுவாமி வேத புஸ்தகங்களில் அடங்கிய உட்பொருளைக் கண்டு உணரும்படி அப்போஸ்தலர்களுக்கு வரம் அளித்தாரென்று சுவிசேஷகர் எழுத யாதொரு காரணமுமில்லையல்லோ. ஆகையால் வேத புஸ்தகங்களுக்கு யாரும் விரித்துரை செய்யலாமென்று சாதிக்கிறவர்கள் சுவிசேஷ வாக்கை கனமாய் மதியாதவர்கள். அதினாலே வேத புஸ்தகங்களிலுள்ள சிலவற்றை ஏற்றுக்கொண்டு சிலவற்றைத் தள்ளிப்போட்டார்கள். சேசுநாதர்சுவாமி அவர்களுக்கு யாதொரு அதிகாரமுங் கொடாதிருக்க, அவர்கள் தங்கள் யுக்திப்படி இவ்விதமாறுபாடுகளைக் கடைப்பிடித்து அவைகளை நேரான இரட்சண்ணிய மார்க்கமென்று பிதற்றுகிறது எவ்வளவு விபரீதமான நடத்தையென்று சொல்லவேண்டியதில்லை.

கடைசியாய் அப்போஸ்தலர்கள் ஏகாந்தமாய்த் தியான செபத்திலிருந்த சமயத்திலே அர்ச். மத்தியாஸ் அப்போஸ்தலராகத் தெரிந்துகொள்ளப்பட்டார். அவ்வண்ணமே ஞான ஒடுக்க முயற்சி செய்கிறவர்களுக்கு இருக்க வேண்டிய பிரதான நோக்கம் ஆண்டவர் தங்களுக்குக் குறிப்பிட்டிருக்கும் நிலைமையான அந்தஸ்தைத் தெரிந்துகொண்டு அதிலே உட்படுவதுதான். அந்த ஞான முயற்சி நாட்களிலே இஸ்பிரீத்துசாந்துவாகிய சர்வேசுரன் சிலரை இல்லற வாழ்க்கையிலே செல்லும்படி விட்டு, வேறு சிலரைத் துறவறம் குருப்பட்டம் முதலிய மேலான அந்தஸ்துக்கு அழைக்கலாம். அவருடைய திருச் சித்தத்திற்குத் தாராளமாய் இணங்கி நடக்கிறவர்கள் மெய்யாகவே பாக்கியமான ஸ்திதியில் வாழ்வார்கள். அந்தத் திருவுளத்தை அலட்சியம் பண்ணித் தங்கள் இலௌகீக ஆசைப்படி செல்லுகிறவர்களுக்கு ஆத்தும ஈடேற்றம் அநேகமாய் அந்தரப்பாடாய் முடியும். ஆகையால், மகனே, நீ தேவசித்தம் இன்னதென்று கண்டால், தள்ளாடாமல் அதை ஒரே உறுதியாய்க் கடைப்பிடித்து நில். ஞான ஒடுக்கம் செய்யக்கூடிய தருணம் வாய்க்கும்போது அதைத் தவறவிடாதே. இதுவிஷயமாய் சில வருஷங்களுக்குமுன் ஒரு கிறீஸ்துவர் மொழிந்ததாவது :—

## வரலாறு.

என் புன்சொல்லால், நடந்த ஓர் சங்கதியை அடியில் வரைகிறேன். சில வருஷங்களுக்குமுன் * ஓஸ்காட்டேரில் (Oscott) கனம் ப்ளேற்றர் (Plator) சுவாமியாரவர்கள் ஞான ஒடுக்கங் கொடுத்தார். அதுக்கு சுமார் 84 பேர் போயிருந்தார்கள். அவர்களில் பாதிப்பேர் முதல் மூன்று நாள், மற்றொரு பாதி அடுத்த மூன்றுநாள் தியானஞ் செய்தார்கள். அவர்கள் நானாவித நிர்வாகத்தார். சிலர் பாரிவர்த்தகர், சிலர் சாமானிய வணிகர், சிலர் பலவகைத் தொழிலாளிகள், சிலர் கூலியாட்கள், சிலர் உத்தியோகஸ்தர்கள். ஒருவர் பதித மதத்தார். இவர் இதர மதத்தாராயினும்

* ஒஸ்காட்டேர் இங்கிலாந்து தேசத்தில் இருக்கிறது.



மற்றவர்களைப்போலே நாள் ஒழுங்குகளையெல்லாம் சுமுத்திரையாக அநுசரித்துவந்தார். நானும் ஒருவனாகத் தியானஞ்செய்யப் போனேன்.

தியானக்காரர் எல்லாரும் வந்துசேரவே, ஒவ்வொருத்தருக்கும் ஒரு அறை வகுக்கப்பட்டது. நாள் ஒழுங்கும் அவரவர் கையிலிருந்தது. இரா அசனவேளை வந்தபோது விசாரணைக்காரர் போஜன நேரத்தில் பேசும்படி உத்தரவு அளித்து, "இதுதான் முதல் பேச்சும் கடைசிப் பேச்சுமாயிருக்கட்டும். இதற்குப்பின் ஒடுக்கம் முடியும் வரையில் சாப்பிடும்போது மவுனங்காக்கவேண்டியிருக்கும்" என்றார். இராச்செபஞ் செய்தபின் பிரசங்காசிரியர் ஞான முயற்சிகளைச் செய்யும் வகையைப்பற்றிய விபரங்கள் சொன்னார். விசேஷமாய்க் குறிக்கப்பட்ட நாள் சட்டப்படி நடப்பதும், மவுனங்காப்பதும் முக்கியமான காரியமென்று ஊர்ஜிதப்பண்ணினார். பிறகு நித்திரைக்குப் போனோம். காலமே எழுந்திருக்கவேண்டிய நேரத்தில் "தேயோ கிராஸியாஸ்" (Deo gratias) என்று உரத்த சத்தங் கிளம்பிற்று. அதற்கு எல்லாரும் தெரிந்தபடி பதில் சொல்லி எழுந்தோம். யாரையாவது தூக்கம் அமுக்கிக்கொண்டிருந்தால் எழுப்புவோன் அவர் பதில் சொல்லுமட்டும் அவரை விட்டுப் போகார். பிறகு எல்லாரும் பூசை காணப் போனோம். அதற்குப்பின் புத்தி போதகம், தியானம், பொதுச்செபம், தனிச்செபம், சுற்றுநடைச் செபம், சிலுவைப்பாதை, செபமாலை, அசனம், இளைப்பாற்றி முதலிய முயற்சிகள் ஒன்றுக்குப்பின்னொன்று திறமையாய் இசைக்கப்பட்டு தன்னிச்சையாய் உருண்டது. அதினாலே ஒவ்வொரு நாளும் இலகுவாய், இன்பமாய்ப் பயன் உற்றதாய்க் கடந்தது. எங்கள் பிரசங்க சாதுரியரும் துலக்கமாயும், வெகு திட்டமாயும், வசீகரணமாயும் பிரதான வேதசத்தியங்களைப் போதித்தார். "மனிதன் கதி," "மரணம், தீர்வை," "ஊதாரிப்பிள்ளை" ஆகிய தியானங்களைக் கேட்டவன் எக்காலும் அவைகளை மறக்கமாட்டான். பூசை, பிரார்த்தனை, செபமாலை, சிலுவைப்

பாதை முதலிய ஞான முயற்சிகள் மனதில் அழுந்திப் பக்தியை மூட்டிக்கொண்டிருந்தன.

இப்போது நான் என் வீட்டுக்கு வந்து அந்த சோபன நாட்களை நினைக்கும்போதெல்லாம் "என்னாண்டவரின் இல்லத்துக்கு நான் போவேனென்று எனக்குச் சொல்லப்பட்டதினாலே நான் மனங்களிகூறுகிறேன்" என்பதாக தாவீது அரசன் உரைத்த வாக்கியம் என்னுள்ளத்தில் எழும்புகிறது.

ஆகையால் மகனே, உனக்குச் சமயம் வாய்க்கும்போதெல்லாம் ஒடுக்கத்துக்குப் போய் அது முடிந்து வீட்டுக்கு வரும்போது திரும்பி எப்போது அந்தப் பாக்கியமான காலம் வருமென்று ஆசையோடே காத்திரு. அப்பொழுது உன் ஜீவியகாலமெல்லாம் உனக்குச் சோபன நாளாய்த் தோன்றும்.

---

## 21. இஸ்பிரீத்துசாந்துவின் தெய்வீகம்.

தாய்: அப்போஸ்தலர்கள் ஏகாந்தமாய் பத்து நாள் ஞானவொடுக்கஞ் செய்தார்களென்று படித்தாயல்லவா? அந்த ஒடுக்கத்திலே அவர்களுக்கு அளிக்கப்பட்ட பாக்கிய வரமென்ன தெரியுமா?

பி.: பத்தாம் நாள் தங்கள்பேரில் இஸ்பிரீத்துசாந்துவாகிய சர்வேசுரன் எழுந்தருளிவரும்படியான உன்னத பாக்கிய வரம் பெற்றார்கள்.

தாய்: இஸ்பிரீத்துசாந்துவின் விஷயமாய் உனக்கு ஏதாகிலும் தெரியுமா?

பி.: ஆம். அவர்தான் பிதாவுக்கும் சுதனுக்குமுள்ள அந்நியோந்நிய நித்திய நேசம். இந்த நேசம் தன்னிலே ஒரு ஆளாகவிருக்கிறது. இந்த நேசத்தைத்தான் திரித்துவத்தின் மூன்றாம் ஆளென்கிறோம்.



தாய்: ஆளென்றால் தன்னிலே தானாய் ஒரு காரியத்தை யோசிக்கவும் விரும்பவும் செய்யவும் சக்தியுள்ள பாருளென்று அல்லோ அர்த்தமாகும். இஸ்பிரீத்துசாந்து ஒரு ஆள் என்று உன்னாலே ஒப்பிக்கமுடியுமா?

பி.: நீங்கள் கற்றுக்கொடுத்தால் நான் படித்து ஒப்பிப்பேன்.

தாய்: வேதபுஸ்தகம் முழுதும் இஸ்பிரீத்துசாந்து ஒரு ஆளென்று காட்டும்படியான வாக்கியங்களினால் நிறைந்திருக்கிறது. அவைகளில் சிலவற்றை இங்கே எடுத்து உரைக்கிறேன், கேள். சேசுநாதர்சுவாமி வசனித்ததாவது:—

(1) நான் பிதாவை மன்றாடிக் கேட்பேன். அவர் என்நாளும் உங்களோடே வசிக்கும்படி தேற்றுகிறவராகிய வேறொருவரை அனுப்பியருளுவார். அவர்தான் சத்திய இஸ்பிரீத்துவானவர். (அரு. 14-16, 17.)

(2) பிதாவானவர் என் பேராலே தேற்றுகிறவராகிய இஸ்பிரீத்துசாந்துவை அனுப்புவார். அவர் உங்களுக்கு எல்லாவற்றையும் படிப்பிப்பார். நான் உங்களுக்குச் சொன்ன யாவற்றையும் நினைப்பூட்டுவார். (அரு. 14-26.)

(3) இப்போது நான் என்னை அனுப்பினவரிடம் போகிறேன். நான் போகாவிடில் தேற்றுகிறவர் உங்கள் பேரில் எழுந்தருளிவரார். ஆனால் நான் போனாலோ அவரை உங்களிடத்துக்கு அனுப்புவேன். (அரு. 16-5, 7.)

(4) அர்ச். சின்னப்பர் எழுதினதாவது:—இவை யாவையும் ஒரே இஸ்பிரீத்துவானவர் செய்து அவரவருக்குத் தமது இஷ்டம்போலே பகிர்ந்தளிக்கிறார். (1 கொரி. 12-11.)

இந்த வாக்கியங்களாலே முதலாவது, இஸ்பிரீத்துசாந்து ஞானமும் வல்லமையும் செயலுமுடையவரென்று யாருக்கும் புலப்படும். ஆகையால் அவர் ஒரு ஆளென்பதற்குச் சந்தேகமில்லை. இரண்டாவது, பிதாவானவர் என் பேராலே இஸ்பிரீத்துசாந்துவை அனுப்புவாரென்றும்,

நான் பிதாவினிடம் போகாவிட்டால் இஸ்பிரீத்துசாந்து அப்போஸ்தலர்கள்பேரில் எழுந்தருளிவரமாட்டாரென்றும் சேசுநாதர்சுவாமி வசனித்தபோதே ஆளாகியமட்டில் இஸ்பிரீத்துசாந்து பிதாவுமல்ல சுதனுமல்ல, ஆகையால் அவர் வேறேயொரு ஆளென்று விளங்குகிறது.

பி.: இஸ்பிரீத்துசாந்து தன்னிலே ஒரு ஆளென்று நன்றாய்த் தெரிகிறது. ஆனால் அவர் பிதாவுக்கும் சுதனுக்குஞ் சரிசமானமாகிய தேவசுபாவமுடையவரென்று எப்படி ஒப்பிக்கிறதம்மா?

தாய்: இதை இலகுவாய் ஒப்பிக்கலாம். எப்படியென்றால்: (1) சேசுநாதர்சுவாமி அப்போஸ்தலர்களை நோக்கி, "நீங்கள் உலகமெங்குஞ் சென்று பிரசங்கித்து, பிதாவுடையவுஞ் சுதனுடையவும் இஸ்பிரீத்துசாந்துடையவும் நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுங்கள். விசுவசித்து ஞானஸ்நானம் பெறுகிறவன் ஈடேறுவான்" என்றாரல்லோ. இதினாலே ஈடேற்றத்துக்கு இன்றியமையாத சாதனமாகிய ஞானஸ்நானம் சரிசமானமாய் மூன்றாட்கள் பேராலேயுங் கொடுக்கப்படவேண்டுமென்று கர்த்தர் கற்பிக்கிறார். ஆகையால் இஸ்பிரீத்துசாந்து பிதாவுக்கும் சுதனுக்கும் சரிசமானமாகியவர் என்று அங்கீகரிக்கவேண்டியது.

இது காரணமாகத்தான் மூன்றாட்கள் பேராலேயும் ஞானஸ்நானம் பெற்ற தம்மையும் மற்றக் கிறீஸ்துவர்களையும் அர்ச். சின்னப்பர் ஒரே இஸ்பிரீத்துவினிடத்தில் ஒரே உடலாகும்படி ஞானஸ்நானம் பெற்றவர்களென்கிறார். அவ்வாறே "யாதாமொருவன் ஜலத்தினாலும் இஸ்பிரீத்துசாந்துவினாலும் மறுபடியும் பிறந்தாலொழிய சர்வேசுரனுடைய இராட்சியத்துக்குள் பிரவேசிக்கமாட்டான்" என்று சேசுநாதர்சுவாமி வசனிக்கிறார். (அரு. 3-5.) இவ்விடத்திலே சேசுநாதர்சுவாமி தமக்கும் தமது பிதாவுக்கும் இஸ்பிரீத்துசாந்து சரிசமானமானவரென்று காட்டும்படி இஸ்பிரீத்துசாந்துவின் பேரைமாத்திரங் குறிக்கிறார். இஸ்பிரீத்துசாந்து பிதாவுடையவுஞ் சுதனுடையவும் உயிர்நேசமாயிருந்து அவர்கள் இருவரிடத்திலும் நின்று புறப்படுகிற



னாலே, இஸ்பிரீத்துசாந்து என்கும்போது மற்ற இருவருடைய பேரும் அதிலே தொக்கி நிற்கிறதென்கத்தகும்.

(2) மனிதருக்கு வெவ்வேறாக அளிக்கப்படுகிற வரங்களை ஒரே சர்வேசுரன்தான் அருளுகிறாரென்று வரைந்த அர்ச். சின்னப்பர், சற்றுப்பின், அந்த வரங்களையெல்லாம் ஒரே இஸ்பிரீத்துவானவர் கொடுக்கிறாரென்கிறார். (1 கொரி. 12-6, 11.) ஆகையால் இஸ்பிரீத்துசாந்து பிதாவையுஞ் சுதனையும்போலே ஒரே தெய்வ சுபாவம் உடையவரென்பதற்குச் சந்தேகமில்லை.

(3) பரலோகத்திலே சாட்சி சொல்லுகிறவர்கள், பிதா, சுதன், இஸ்பிரீத்து என்னும் மூன்று பேராம். இந்த மூன்றுபேரும் ஒன்றாயிருக்கிறார்கள் என்கிறார் அர்ச். அருளப்பர். (அரு. 1 நிரு. 5-7.) இந்த வாக்கியத்தாலே இஸ்பிரீத்து பிதாவுக்கும் சுதனுக்கும் எவ்வித தெய்வ இலட்சணங்களிலும் சரியொத்தவரென்று உச்சிப் பகலினுந் தெளிவாயிருக்கிறது.

ஆனால் தெய்வீகத்திலே பிதாவும் சுதனும் இஸ்பி
ரீத்துசாந்தும் சரிசமானமானவர்களென்றாலும், சுதனு
டைய செயல் எல்லாம் பிதாவின் செயல் என்கப்படாது,
இஸ்பிரீத்துசாந்துவின் செயல் எல்லாம் சுதனுடைய
செயல் என்கவும் கூடாது. உதாரணமாக, சுதன் மனிதாவ
தாரம் எடுத்தாப்போலே பிதாவும் எடுத்தாரென்கவொண்
ணாது. இஸ்பிரீத்துசாந்து மாடப்புறா ரூபமாய் சேசுநாதர்
சுவாமிபேரில் இறங்கினாப்போலே பிதாவும் அந்த ரூபத்
தோடே சேசுநாதர்சுவாமிமேல் இறங்கி வந்தார் என்க
முடியாது. பிதாவாகிய சர்வேசுரன் யோர்தான் நதிக்கரை
யிலே "இதோ, என் பிரிய குமாரன்" என்று சேசுநாதர்
சுவாமியைக் குறித்துச் சொன்னாப்போலே இஸ்பிரீத்து
சாந்து பேசலாம் என்கலாமோ? பரிச்சேதமில்லை. ஆகை
யால் சுதனும் இஸ்பிரீத்துசாந்தும் பிதாவுக்குள்ளேயிருந்
தாலும் மூன்றுபேரும் தத்தமக்குரிய சில செயல் உள்ளவர்
களாயிருக்கிற நிமித்தம் மூன்று ஆட்களாயிருக்கிறார்கள்.
சுபாவத்தைப் பார்த்தாலோ பிதாவினுடைய ஏக தெய்வ

சுபாவந்தான் சுதனுக்கும் உண்டு, இஸ்பிரீத்துசாந்து வுக்குமுண்டு. ஆகையால் ஏக திரித்துவ கடவுள் என்கிற பேர் வழங்குகிறது. இது ஓர் பரம இரகசியம். இதை முற்றிலும் வரையறுத்துக் கண்டுபிடிப்பது நீச மனுஷனின் புத்தியினலாகாது. அளவுகடந்த அதி உத்தம தெய்வீகத்தின் தன்மை அளவுள்ள மானிட புத்திக்கு எட்டாது.

இந்த மூன்றாட்களுக்குள்ளே இரண்டாமவராகிய சுதன் மனுஷாவதாரம் பூண்டு உலகத்தைத் இரட்சித்து ஈடேற்றத்துக்கு ஏக வழியாகச் சத்திய வேதத்தை ஏற்படுத்தி மோக்ஷத்துக்கு ஆரோகணமானார். அங்கிருந்து அவர் அனுப்பிய இஸ்பிரீத்துசாந்துவாகிய மூன்றுமாள் அந்தச் சத்தியவேத சபையை நிலைப்படுத்தி விருத்திக்கப் பண்ணின விஷயம் இனிமேல் விபரிக்கப்படும்.

---

## 22. திருச்சபையின் உயிரும் வலுவும் இஸ்பிரீத்துசாந்து.

பிள்ளை : அம்மா, நீங்கள் இதுவரையில் இரண்டாமவராகிற சேசுநாதர்சுவாமி செய்தருளின உலக இரட்சண்ணிய வேலையைப்பற்றிப் பேசினீர்கள். அதற்குப்பின் மூன்றுமாளாகிய இஸ்பிரீத்துசாந்துவானவர் நடத்தின அற்புத வர்த்தமானங்களைக் குறித்துத் தெரிவிப்பேன் என்றீர்களே. அந்த விபரத்தைக் கேட்க ஆசிக்கிறேன். அதை எவ்வளவாகிலும் சொல்லிக்கொடுங்கள்.

தாய் : இஸ்பிரீத்துசாந்துவாகிய சர்வேசுரன் அப்போஸ்தலர்களின்மேல் எழுந்தருளிவந்து அவர்களைத் தமது உன்னத வரங்களால் பூரணமாய் நிரப்பி சேசுநாதர் சுவாமி ஏற்படுத்தின சத்திய வேதத்தை உலகமெங்கும் போதித்து பரம்பப் பண்ணுவதற்கான எத்தனங்களாக அவர்களை உருவாக்கினார். அவர் சிஷர்கள்மேல் எவ்வாறு எழுந்தருளி வந்தார் தெரியுமா ?



பி. : சிஷர்கள் பத்து நாள் வரையில் செபத்தியானத்
தில் செலவழித்தார்கள். பத்தாம் நாள் காலையிலே சற்றேற
றக்குறைய ஒன்பது மணி வேளையில் திடீரென்று அகோர
புசல் வானத்தினின்று எழும்ப, அப்போஸ்தலர்கள் கூடி
யிருந்த மனை வீடு முழுதும் கிடுகிடென முழங்கிற்று.
அக்ஷணமே அக்கினி நாக்கின் ரூபமாக இஸ்பிரீத்துசாந்து
வாகிய சர்வேசுரன் அவர்களில் ஒவ்வொருத்தர்மேலும்
இறங்கிவந்து தங்கினார். அப்போதே அவர்களுடைய
புத்தி மனது நினைவெல்லாம் பரம வரங்களால் பூரிப்பிக்
கப்பட்டன.

தாய் : நீ சொல்லுகிற பதில் சரிதான். இஸ்பிரீத்து
சாந்துவாகிய சர்வேசுரன் அப்போஸ்தலர்களின்மேல்
எழுந்தருளி அவர்களுக்கு அளித்த மேலான கொடைகளா
கிய வரங்களினாலே அவர்கள் வேறு மனிதரானார்கள்.
சேசுநாதர்சுவாமி படிப்பித்த வேதசத்தியங்களைத் தீர்க்க
மாய் உணர்ந்தார்கள். அவருடைய இராட்சியம் தாங்கள்
அந்நாள்வரையில் குருட்டுத்தனமாய் எண்ணினாப்போலே
இந்த உலக சம்பந்தமானதல்ல, அது சகல ஆத்துமங்களை
யும் ஆண்டு இரட்சிக்கிற திருச்சபைதானென்று கண்டு
பிடித்தார்கள். அப்படிப்பட்ட திருச்சபையிலே சகல
ஜாதி ஜனங்களையுஞ் சேர்க்கவேண்டுமென்ற தைரியமும்
ஞானத்திரமும் ஒரு அக்கினிச் சூளைபோலே அவர்கள்
இருதயத்தில் குபீரெனக் கிளம்பினது. இதற்காக,
வேண்டுமானால், தங்கள் உயிரைமுதலாய்க் கொடுக்கத்
தயாராயிருந்தார்கள்.

பி. : கோழைகளும் உலக வாஞ்சை நிறைந்தவர்களு
மாயிருந்த அப்போஸ்தலர்கள் ஒரு க்ஷணத்திலே இவ்வளவு
மேலான அறிவையும் தைரியத்தையும் அடைந்தது என்ன
அதிசயமாயிருக்கிறது !

தாய் : அதுவரையில் இல்லாத ஞானமும் தைரியமும்
ஞானத்திரமும் இஸ்பிரீத்துசாந்துவினிடத்திலே அவர்கள்
பெற்றுக்கொண்டதற்கு அத்தாட்சி அந்நேரமே வெளிப்
படையாய்த் தோன்றினது.

பி. : அதெப்படி அம்மா ?

தாய் : அந்தச் சமயத்திலே யூதர்களுக்குள்ளே பென்றக்கோஸ்த் (Pentecost) என்ற முக்கியமான ஓர் உற்சவம் நடந்தது. அதினிமித்தம் பற்பல தேசங்களிலிருந்து ஜனம் திரண்டு அப்பட்டணத்தில் வந்து கூடிற்று. இப்படியிருக்க இருந்திருந்தாப்போலே பெருங் காற்று அப்போஸ்தலர்கள் குடியிருந்த திக்கிலே வீசவே, ஊரெல்லாரும் திகிலடைந்து அந்தத் திசையை நோக்கி ஓடி அதென்னவென்று அறியப்போனார்கள். அப்போது இராயப்பர் அவர்களை அமர்த்தி, “ எருசலேம் நகரத்தாரே, என் வார்த்தைக்குச் சற்று செவிகொடுங்கள். உங்களுக்குத் தெரிந்திருக்கிறபடியே, உங்கள் நடுவில் ஜீவித்துவந்த நசரேனு சேசுநாதர் அதிசய அற்புதங்களினாலும், புதுமைகளினாலும் விளங்கினாரே. அவரை நீங்கள் துஷ்டர் கையில் பிடித்துக்கொடுத்துச் சிலுவையில் அறைந்து கொன்றீர்கள். அவர் மரித்தபின் உயிரோடே கல்லறையைவிட்டு எழும்பினார். இந்த அதிசய வர்த்தமானத்துக்கு நாங்கள் எல்லாருஞ் சாட்சிகளாயிருக்கிறோம். இப்படி அற்புதமாய் உயிர்த்தவர் பரலோக இராட்சியத்துக்கு ஏறி அங்கிருந்து தமது இஸ்பிரீத்துசாந்துவை எங்கள் பேரில் அனுப்பியிருக்கிறார். (அப். நட. 2-33.)

“ அந்த இஸ்பிரீத்துசாந்துவின் வல்லமையைத்தான் நீங்கள் இப்போது எங்களிடத்தில் அதிசயத்தோடே பார்க்கிறீர்கள். அவர்தான் நாங்கள் போதிக்கும் சுவிசேஷத்தை நீங்கள் கண்டுபிடிக்கும்படி பண்ணுகிறவர். உங்கள்பேரிலும் அவர் இறங்கிவரவேணுமானால், உங்களால் சிலுவையில் அறைபட்ட சேசுநாதர்சுவாமிதான் உங்கள் முன்னோருக்கும் உங்களுக்கும் அறிவிக்கப்பட்ட கிறீஸ்துவென்றும் இரட்சகரென்றும் பூரணமாய் விசுவசித்து ஞானஸ்நானம் பெறக்கடவீர்கள். ஏனெனில் சகல மனிதருக்கும் அவர் ஒருவரே இரட்சண்ணிய வழியன்றி வேறே கிடையாது சர்வலோகத்திலும் ” என்றார்.



பி. : அர்ச். இராயப்பருடைய புத்தியைக் கேட்டவர்களில் யாராவது மனந்திரும்பினார்களா ?

தாய் : சற்றேறக்குறைய மூவாயிரம்பேர் சேசுநாதர்சுவாமிதான் உலகத்தை இரட்சிக்கவந்த கடவுளென்று விசுவசித்து ஞானஸ்நானம் பெற்று ஒருங்குடன் ஒரே கூட்டமாய் வாழத் துவக்கினார்கள். நாம் இப்போது காண்கிற கத்தோலிக் திருச்சபையின் ஆரம்பமிதுவே. இவ்வண்ணமாக சேசுநாதர்சுவாமி ஏற்கனவே மொழிந்தபடி, இஸ்பிரீத்துசாந்து அவருக்குச் சாட்சி சொன்னார் ; அவர் அப்போஸ்தலர்களுக்கு அளித்த மேலான தைரிய வரத்தினாலே அவர்களும் அஞ்சா நெஞ்சத்தோடே சேசுநாதர்சுவாமிக்குச் சாட்சிசொல்லத் துவக்கினார்கள். (அரு. 15-26, 27.)

பி. : அம்மா, சேசுநாதர்சுவாமி முப்பத்துமூன்று வருஷம் ஜனங்கள் நடுவிலே ஜீவித்துக் கணக்கற்ற அதிசயங்களைச் செய்திருந்தாலும் அவரை விசுவசித்தவர்கள் சொற்பப்பேராகத்தானே இருந்தார்கள். இப்படியிருக்க அர்ச். இராயப்பர் ஒரே பிரசங்கத்திலே மூவாயிரம் பேர்களைத் திருப்பினதெப்படி ?

தாய் : சேசுநாதர்சுவாமி தாம் உண்டாக்கின நேசதிருச்சபையின் பிறப்பையும் வளர்ப்பையும் விருத்தியையும் பரம ஒழுக்கத்தையும் தமது நேசமாகிய இஸ்பிரீத்து[illegible]த்தில் ஒப்படைத்தார். தமது மனுஷீகம் இஸ்பிரீத்துசாந்துவின் அற்புத செயலாலே உற்பத்தி[illegible] தெய்வீகத்தோடே ஐக்கியமாக்கப்பட்ட[illegible]. அதுபோலே திருச்சபையின் கிறீஸ்துவர்கள் [illegible] இஸ்பிரீத்துசாந்துவினுடைய கொடைகளினாலே சுவீகார தெய்வப் பிள்ளைகளாக உற்பத்தியாகி வளர்ந்து இவ்வுலகத்திலும் பரலோகத்திலும் நித்தியா நித்திய காலம் தம்மோடே எ[illegible]க்கவேண்டுமென்கிற அத்தியந்த ஆசையே சத்திய திருச்சபையை சேசுநாதர்சுவாமி ஏற்படுத்தும்படி ஏ[illegible]. இது சிநேகத்தின் கிரிகை

யானபடியால் இஸ்பிரீத்துசாந்துவானவர் இவ்வித சந்தானத்தைப் பிறப்பிக்கிறது இயல்பாயிருந்தது.

சேசுநாதர்சுவாமி கடைசி இராப்போசனம் செய்த வேளையிலே அப்போஸ்தலர்களை நோக்கி, என்பேரில் விசுவாசமாயிருப்பவன் நான் செய்யுங் கிரிகைகளையுஞ் செய்வான், அவைகளுக்கு மேலாகவுஞ் செய்வானென்றருளினார். (அப். 14-12.) இந்த வாக்கின்படியே, அர்ச். இராயப்பர் செய்த முதல் பிரசங்கத்திலேயே மூவாயிரம் பேர் ஐயமின்றிக் கிறீஸ்துவர்களாகிறார்கள். இதன்றியே அர்ச். இராயப்பர் அங்கங்கே பிரசங்கிக்கப்போகையில் வழியில் கிடத்தப்பட்டிருந்த நோவாளிகளின்மேல் அவருடைய நிழல் பட்ட மாத்திரத்தில் அவர்கள் ஆரோக்கியமடைவார்கள். (அப். நட. 5-15, 16). இந்த அதிசயங்களைத் தமது இஸ்பிரீத்துசாந்து பண்ணும்படி சேசுநாதர்சுவாமி சித்தமாயிருந்தார். இதினாலேதான் "இஸ்பிரீத்துசாந்து சிலருக்குப் பாஷை வரமும், சிலருக்குத் தீர்க்கதரிசன வரமும், சிலருக்குப் புதுமை வரமும் அளிக்கிறார்" (1 கொரி. 12-10, 11) என்று அர்ச். சின்னப்பர் மொழிந்ததுமன்றி "இஸ்பிரீத்துசாந்துவினாலேயல்லாமல் மற்றப்படி என்னாண்டவராகிய சேசு என்று சொல்லக்கூடியவன் எவனுமில்லை" என்கிறார். (1 கொரி. 12-2.) இவ்வாக்கியங்களினாலே சேசுநாதர்சுவாமியுடைய திருச்சபையை இஸ்பிரீத்துசாந்துவானவர்தான் அப்போஸ்தலர்கள் வழியாய் வளர்த்து பரிபாலனம் பண்ணி வந்தாரென்று தெளிவாகிறது. ஆனால் திருச்சபைக்கு மேய்ப்பரான அர்ச். இராயப்பருடைய ஸ்தானத்தில் அர்ச். பாப்பானவரும், மற்ற அப்போஸ்தலர்களுடைய ஸ்தானத்தில் பாப்பானவரின் அதிகாரத்துக்குட்பட்ட மற்ற மேற்றிராணிமார்களும் இருக்கிறார்களென்று ஏற்கனவே விபரித்தேனல்லோ? ஆகையால் இஸ்பிரீத்துசாந்துவாகிய சர்வேசுரன் அர்ச். பாப்பானவர் வழியாகவும் அவருக்குள்ளடங்கிய மேற்றிராணிமார்கள் வழியாகவும் சேசுநாதர்சுவாமியுடைய திருச்சபையை உலகம் முடியுமட்டும் வளர்த்து ஆதரிப்பாரென்கிறது குன்றாத சத்தியம்.



இஸ்பிரீத்துசாந்துதான் திருச்சபையினுடைய உயிர், அவரில்லாமல் திருச்சபைக்கு உயிரில்லை. இதினாலேதான் இஸ்பிரீத்துசாந்துவானவரில்லாமல் மனிதனிடத்தில் ஒன்றுமில்லையென்று திருச்சபை பாடுகிறது.

பி.: சேசுநாதர்சுவாமி பாடுபட்டு மரித்துத் தம்மை முழுதும் திருச்சபைக்குக் கொடையாக அளிக்கிறார். இஸ்பிரீத்துசாந்தும் தமது வரங்களையெல்லாம் திருச்சபை மேல் வருஷிக்கிறார். இந்த இரண்டு கொடைகளுக்கும் வித்தியாசமுண்டா?

தாய்: சேசுநாதர்சுவாமி மனித சுபாவமெடுத்து உலகத்தின் இரட்சண்ணிய கர்த்தாவானார். அவர் தமது பாடுகளினால் சம்பாதித்த பேறுபலன்கள் திருச்சபையின் பொக்கிஷம், திருச்சபையின் ஆஸ்தி. இஸ்பிரீத்துசாந்து இந்தப் பொக்கிஷத்திலே இருந்து எடுத்துத் திருச்சபையிலுள்ள ஒவ்வொரு ஆளுக்கும் வேண்டிய வரங்களைப் பகிர்ந்து கொடுக்கிறார். இதினாலேதான் வேத புஸ்தகத்திலே "தேவ வரப்பிரசாதங்கள் பகிர்ந்து கொடுக்கப்படுகிறது. பரிமாறுகிறவரோ, இஸ்பிரீத்துசாந்து" என்று அர்ச். சின்னப்பர் வரைகிறார். (1 கொரி. 12-4.) ஆனால் போலிக்கிறீஸ்துவர்களுடைய இருதயத்திலே இந்த வரங்கள் பாயமாட்டாது. இது பின்வரும் அத்தாட்சியினாலே விளங்கும்.

## வரலாறு.

அப்போஸ்தலர் காலத்திலே யூதேயா தேசத்தை ஒட்டியிருந்த சமாரியா நாட்டிலே சீமோன் என்னும் ஒரு அஞ்ஞான மாந்திரிகனிருந்தான். அவனிருந்த சீமையிலே அப்போஸ்தலர் சத்திய வேதத்தைப் போதிக்கவே அநேகர் மனந்திரும்பினார்கள். சீமோனும் ஞானஸ்நானம் பெற்றான். பிறகு, மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றவர்களின்மேல் அப்போஸ்தலர் தங்கள் கையை வைத்து இஸ்பிரீத்துசாந்து அவர்கள் இருதயத்தில் இறங்கி வரும்படி பிரார்த்தித்தார்கள். இஸ்பிரீத்துசாந்து அவரவர்களுடைய

பத்தி விசுவாசத்துக்கு ஏற்றபடி தமது வரங்களை அவர்களுக்கு அளித்தார். அந்த வரங்களுடைய மேன்மையும் பிரசித்தமாய் விளங்கினது. இதை சீமோன் கண்டு அர்ச். இராயப்பருக்குக் கொஞ்சம் பணத்தை நீட்டித் தனக்கும் இஸ்பிரீத்துசாந்துவை இறங்கப்பண்ணுகிற வரம் வேண்டுமென்று கேட்டான். அர்ச். இராயப்பர் அவனை நோக்கி, "உன் பணம் உன்னோடே நாசமாவதாக; இந்த வரத்திலே உனக்குப் பங்குபாகமில்லை; உன் மனம் வெகுவாய்க் கோணிப்போயிற்று; உன் பாவத்தை சுவாமி பொறுக்கும்படி தபசுசெய்து மன்றாடு" என்றார். அவன் அப்படியே செய்கிறேன் என்று பேச்சுக்குச் சொன்னானேயொழியத் தன் மாந்திரிக வேலையை விட்டுவிடவில்லை. (அப். நட. 8.) சில காலத்துக்குப்பின் அர்ச். இராயப்பர் உரோமாபுரிக்குப் போனபோது, இந்த சீமோனும் அங்கே வந்திருந்தான். அவன் அந்தப் பட்டணத்தில் தன் வித்தையைப் பாராட்டி, வானத்துக்கு ஏறிப்போகிறேனென்று மேலே ஏறத் துவக்கினான். பசாசு அவனை மேலே தூக்கிப்போகிறதை அர்ச். இராயப்பர் கண்டு சேசுநாதர்சுவாமியைப் பார்த்து மன்றாடினார். உடனே பேய்கள் அவனை ஆகாயத்திலே விட்டுவிட்டு ஓடிப்போகவே அவன் பொத்தெனத் தரையிலே விழுந்து அவலமாய் மடிந்தான்.

மகனே, இந்த வர்த்தமானத்திலே நீ படிக்கவேண்டிய புத்தி என்னவென்றால், இஸ்பிரீத்துசாந்து உன்னிருதயத்தில் குடியிருக்கவேணுமானால் நீ சிறுபத்திலேயே மெய்யான விசுவாசமும் பத்தியுமுள்ள பிள்ளையாயிருக்கவேண்டும்.

---



## 23. அர்ச். தோமையார் இந்தியாவுக்கு வந்தாரா?

தாய்: சேசுநாதர்சுவாமி தமது திருச்சபை இஸ்பிரீத்துசாந்துவின் சிநேக வல்லமையினாலே பிறந்து வளர்ந்து விருத்தியாகவேண்டுமென்று சித்தமானார். அவ்வண்ணமே திவ்விய இஸ்பிரீத்துசாந்து அப்போஸ்தலர்கள்மேல் எழுந்தருளிவந்து அவர்கள்மூலமாக சேசுவின் திருச்சபை ஜெருசலேம் பட்டணத்திலேயே முந்தமுந்தப் பிறக்கும்படி செய்தருளினார். சேசுநாதர்சுவாமியைக் கள்ளஞானியென்றும் பாதகரிலும் பாதகனென்றும் தூற்றி அவரைக் கொலைசெய்தவர்களுள் அநேகர் சில தினங்களுக்குள்ளே தாங்கள் புரிந்தது மகா பெரிய அக்கிரமமென்று ஒப்புக்கொண்டு மனந்திரும்பிக் கிறீஸ்துவர்களானார்கள். இது இஸ்பிரீத்துசாந்துவினால் நடந்த ஒரு அதிசயமென்பதற்குச் சந்தேகமில்லை.

இது முதல் அதிசயம். இதற்குப்பின் இஸ்பிரீத்துசாந்துவானவர் அப்போஸ்தலர்கள் உலகமெங்கும் பறந்துபோய் சேசுவின் திருச்சபையை அந்தந்தத் தேசங்களில் ஊன்றும்படி செய்தது இரண்டாம் அதிசயம். சேசுநாதர்சுவாமி அப்போஸ்தலர்களை நோக்கி, "நீங்கள் உலகமெங்கும் பரவிப்போய் நாம் உங்களுக்குப் படிப்பித்தவைகளையெல்லாம் சர்வஜாதி ஜனங்களுக்கும் போதியுங்கள்" என்ற கட்டளையை இஸ்பிரீத்துசாந்து பூரணமாய் நிறைவேற்றினார்.

பிள்ளை: அப்படியானால் அப்போஸ்தலர்களில் யாராவது நமது தேசத்துக்கு வந்தார்களோ?

தாய்: பன்னிரு அப்போஸ்தலர்களில் ஒருவராகிய அர்ச். தோமையார் இந்துதேசத்துக்கு வந்து மலையாளத்திலும் சோழமண்டலத்திலும் சத்தியவேதத்தைப் போதித்து மயிலாப்பூரிலே வேதசாட்சியானார்.

பி.: அர்ச். தோமையார் நமது தேசத்துக்கு வந்தாரென்று ஒப்பிக்கமுடியுமா?

தாய்: தடையின்றி ஒப்பிக்கலாம். இந்தியாவில் அர்ச். பாப்பானவருடைய ஸ்தானபதியாகவிருந்த காலஞ்சென்ற ஜலெஸ்கி (Zaleski) ஆண்டவர் அர்ச். தோமையாரைப்பற்றி எழுதியருளின நூலை வாசித்தால் நேர்மையுள்ள புத்திமான் எவனும் அர்ச். தோமையார் இந்துதேசத்துக்கு வந்தது உண்மையென்றே ஒப்புக்கொள்ளுவான். அந்தப் புஸ்தகத்திலுள்ள நியாயங்களில் சிலவற்றை இதோ கூறுகிறேன், நன்றாய்க் கவனித்துக்கேள்.

1. மலையாளத்துக் கிறீஸ்துவர்கள் தாங்கள் அப்போஸ்தலரான அர்ச். தோமையாருடைய கிறீஸ்துவர்களென்றும் அந்த அப்போஸ்தலர் தங்கள் சீமையிலே வேதம் போதித்தாரென்றும் தலைமுறை தலைமுறையாகப் பாராட்டிக்கொண்டு வருகிறார்கள். அவர்களில் அனேகானேகர் பிரிவினைக்காரராய்ப்போனாலும் ஆதியிலே அப்போஸ்தலராகிய அர்ச். தோமையாரே மலையாளத்திலே சேசுநாதர் சுவாமியுடைய வேதத்தைப் போதித்தாரென்று ஒருப்படமொழிகிறார்கள்.

அந்த நாட்டிலே கிறீஸ்துவர்களுக்குள்ளே அர்ச். தோமையாருடைய பேர் உலகாதியந்தம் நிலைக்கும்படி ஒவ்வொரு குடும்பத்திலும் ஒரு பிள்ளைக்காவது தோமையென்னும் நாமம் இடப்படுகிறது.

2. அர்ச். தோமையார் இந்துதேசத்துக்கு வந்த விஷயமாக ஒரு கதா வரலாறு கிறீஸ்து பிறந்த முதல் மூன்று நூற்றாண்டுக்குள்ளே எழுதப்பட்டுப் பிரசித்தம் பெற்று வருகிறது. ஆனால் அதிலே நம்பவொண்ணாத கதைகள் சில இருந்ததினாலும் அதிலே குறிப்பிட்டிருந்த கந்தப்ப ராஜன் யாரென்று தெரியாமலிருந்ததினாலும் கற்றோர்கள் அதை முற்றும் கதையென்றே தள்ளிவிட்டார்கள். அர்ச். தோமையார் அந்த கந்தப்ப ராஜனுடன் வெகு புழக்கமாயிருந்ததாக மேற்படி புஸ்தகத்திலே வரையப்பட்டிருந்தது. இவ்விஷயத்தையும் ஒரு கட்டுக்கதையெனப் பாவிக்கும்படியாயிற்று.



இவ்விதம் எல்லாம் ஈரொட்டானபாடாய் நிற்கையிலே, சென்ற நூற்றாண்டிலே, அதாவது எழுபது எண்பது வருஷங்களுக்கு முன்னே வட இந்தியாவிலே அபூர்வமான சில பழைய நாணயங்கள் பூமியைத் தோண்டும்போது சிற்சில இடங்களில் அகப்பட்டன. அவற்றில் அக்ஷரங்கள் சில வரைந்திருப்பதையும் கண்டார்கள். புராதன பாஷைகளில் தேர்ந்த சில ஐரோப்பிய பண்டிதர் அவைகளை வாசித்து அதில் மகாராஜா கந்தப்பரசு என வரைந்திருப்பதாக நிச்சயித்தார்கள். அப்போதுதான் மேற்கூறிய கதா வரலாற்றிலே அர்ச். தோமையாரும், வட இந்தியாவில் அரசாண்ட கந்தப்ப ராஜாவும் குறிப்பிடப்பட்டிருப்பதை நினைவுகூர்ந்தனர். அதன்மேல் வெவ்வேறு ஆராய்ச்சி பரிசோதனைகள் செய்ததில் இந்தக் கந்தப்ப ராஜனைப்பற்றி வேறெந்த நூல்களிலும் பேச்சில்லை. ஆனால் அர்ச். தோமையாரும் அந்த இராஜாவும் ஒரே காலத்தில் ஜீவித்தவர்களென்று உறுதியெண்ணமுண்டானது. அர்ச். தோமையார் இந்துதேசத்துக்கு எழுந்தருளிவந்ததும் மெய்யென்று பிரபலியமாயிற்று. இந்த வர்த்தமானத்தை ஒப்பிக்கிறதற்கு உதவியான நாணயங்கள் இங்கிலீஷ், பிரான்ஸ், ஜெர்மானியா தேசங்களுக்கு அனுப்பப்பட்டு வெகு பத்திரமாய் நாளதுபரியந்தம் காப்பாற்றப்பட்டு வருகின்றன.

3. கி.பி. 373-ம் வருஷத்தில் மரணித்த அர்ச். எபிரேம் சீரிய பாஷையிலே பாடிய கீர்த்தனைகளில் பின்வருமாறு காண்கிறோம்:

(a) “பேயானது ஊளையிட்டு, ஐயோ, நான் இந்தியாவில் கொலைசெய்த அப்போஸ்தலன் என்னை எதெஸா நகர் வரையில் தொடர்ந்து வந்திருக்கிறான். யூதாஸ் இஸ்காரியோத்தின் கல்லறையை எனக்குக் காட்டுங்கள். அதைப் பார்க்கிறது எனக்குத் தைரியங்கொடுக்கும், ஆனால் தோமையுடைய கல்லறையில் மறைவாயிருக்கிற சக்தி என்னை உபாதிக்கிறது.”

(b) இரட்டைப் பிள்ளையாய்ப் பிறந்த தோமையாரே! நீர் வாழ்க, ஓ, அப்போஸ்தலரே, நீர் வாழ்க, வாழ்க.

இந்தியா தேசத்தைத் தம்முடைய ஏக சுதனுக்குப் பத்தினி யென்னும் மகிமைக்கு உயர்த்தும்படி இராஜாதி ராஜனை கடவுள் அந்தச் சீமையை உமக்கு ஒப்படைத்தார். கறுவலான அப்பத்தினியை வெண்பனியிலும் அதிக அழகாய்த் துலங்கும்படி செய்தவர் நீரல்லோ.

(c) காரிருள் இந்தியாவை மூடிக்கொண்டிருந்தது. தோமாஸ் ஒளிவீசும் சூரியனைக எழும்பி அந்த இருட்டை ஓட்டி அத்தேசத்திலே பிரகாசவெள்ளம் பாயப்பண்ணினார்.

கி. பி. 320-ம் வருஷம் பிறந்து 373-ம் வருஷத்தில் இறந்த அர்ச். எபிரேம் என்பவர் திவ்விய கர்த்தர் வாசம் பண்ணின பலஸ்தீன தேசத்துக்கு வடகிழக்கிலுள்ள மேஸொப்போத்தாமியா தேசத்தில் பிறந்த ஆசியா கண்டத்து அர்ச்சியசிஷ்டவர்; பேர்போன வேதசாஸ்திரி. இவர் தமது ஆயுள்காலமெல்லாம் பெரும்பாலும் மேற்படி தேசத்தின் பிரதான நகரான எதெஸாவுக்கு அருகிலே ஒரு ஏகாந்தியாய்ச் சீவித்தார். இந்த எதெஸா நகருக்கு அர்ச். தோமையாருடைய சரீரம் மயிலாப்பூரிலிருந்து கொண்டு போகப்பட்டதாகப் பாரம்பரியமாய்ச் சொல்லப்பட்டு வருகிறது. பசாசுக்கு அது பிடிக்காமல் வலியிட்டு முறையிடுகிறதாக அர்ச். எபிரேம் மேற்கூறிய சங்கீதத்தில் பாடுகிறார். ஆகையால் அர்ச். தோமையாருடைய சரீரம் அர்ச். எபிரேம் காலத்தில் அல்லது அதுக்கு முந்தி எதெஸா நகருக்கு வந்திருக்கவேண்டியது. எதெஸா நகரத்துக் குருக்கள் அர்ச். தோமையாருக்குப்பின் இந்துதேசத்துக்கு வேதம் போதிக்க வந்தார்கள். (Mgr. Zaleski.) மேஸொப் போத்தாமியா தேசத்திலே சீரிய பாஷை வழங்குகிறதினாலும் அர்ச். எபிரேம் தமது கிரந்தங்களில் பலவற்றை சீரிய பாஷையிலே எழுதினதினாலும் மலையாளத்துக் கிறீஸ்தவர்கள் சீரிய கிறீஸ்தவர்கள் என்னப்படுவதினாலும் மெஸொப்போத்தாமியாவுக்கும், மலையாள தேசத்துக்கும்



போக்குவரவுப் பழக்கம் இருந்ததென்பதற்கு ஐயமில்லை. இது நிற்க, மலையாளத்துக் கிறீஸ்துவர்கள் சீரிய கிறீஸ்து வர்களென்று அழைக்கப்படுகிறதுபோலே அர்ச். தோமை யார் கிறீஸ்துவர்களென்றும் கூப்பிடப்படுகிறார்களே. ஆகையால் சீரிய குருக்கள் மலையாளத்துக்கு வந்தது போலே அர்ச். தோமையாரும் மலையாளத்துக்கு வந்தா ரென்பது திண்ணம்.

4. திருச்சபையிலே முதன்மையாக விளங்கிய வேத பாரகரில் அர்ச். கிறகோரி நஸியான்சான் (Gregory Nazianzan) ஒருவராமே. இவரும் ஆசியா கண்டத்திலே மேஸொப்போத்தாமியா நாட்டுக்கு வடமேற்கிலேயுள்ள காப்பதோசிய சீமையிலே கி. பி. 328-ம் வருஷம் பிறந்தார். இவர் குருப்பட்டம் பெற்று கொன்ஸ்தான்திநோப்புலி (Constantinople) நகருக்கு அதிமேற்றிராணியாராக நிய மிக்கப்பட்டபோது அப்பட்டணத்தாரில் அநேகர் அவர் அந்நிய நாட்டானென்று முறுமுறுத்தார்கள். அர்ச். கிற கோரியார் அவர்களை நோக்கி, "ஓ ஜனங்களே, நான் இந்த ஊருக்கு அந்நியன்தான். ஆனால் அப்போஸ்தலர்களும் போன இடமெல்லாம் அந்நியர்களாய்த்தானே இருந்தார் கள். அப்படியே இந்திய தேசத்துக்குப்போன தோமை யார் அங்கே அந்நியராயிருக்கவில்லையோ" என்று பதில் உரைத்தார்.

அக்காலத்திலே உலகத்தை ஆண்டுவந்த உரோமாபுரி இராயர்களுடைய வாசஸ்தலமாயிருந்த கொன்ஸ்தான்தி நோப்புலியின் ஜனங்களுக்கு அர்ச். தோமையார் இந்திய தேசத்துக்குச் சென்று வேதம் போதித்த செய்தி நிச்சய மாயிருந்ததினாலே அர்ச். கிறகோரியார் அவர்களுக்கு இவ்வித மறுமொழி சொல்லியிருக்கிறார். அது வெறும் பேச்சாய் மாத்திரமிருந்தால் அந்தப் பட்டணத்தார் கிறகோரியாரை அதிகமாய்ப் பழித்திருப்பார்களேயொழிய அவர்களுடைய பெருமை அடங்கியிருக்கமாட்டாது.

5. உலகமெங்கும் சிறந்து ஓங்கி விளங்கும் அர்ச். கிறீஸோஸ்தம் அருளப்பரும் ஆசியா கண்டத்து அர்ச்

சிஷ்டவர்களில் ஒருவராம். இவர் சீரியதேசத்து இராஜதானியான அந்தியோக்கியாபுரியில் கி. பி. 347-ம் வருஷம் பிறந்தார். பிற்காலத்தில் இவரும் கொன்ஸ்தான்திநோப்புலியின் அதிமேற்றிராணியாராயிருந்தார். இவர் எழுதியதென்னவெனில், "அப்போஸ்தலர்களுக்கும் எபிரேய பாஷையொன்றுதானே தெரிந்திருந்தது. அவர்கள் அந்நியரான சீத்தியருக்கும், இந்தியருக்கும், சாமாசியருக்கும் பிரசங்கித்ததெப்படி? இஸ்பிரீத்துசாந்து அவர்களுக்குப் பாஷைவரம் அளித்ததினாலேயன்றி மற்றப்படியல்லவே. அவர்கள் உரோமையருக்கும், பார்சியருக்கும், சீத்தியருக்கும், மோரித்தானியருக்கும், இந்தியருக்கும் நடுவில் எங்கே பார்த்தாலும் பீடங்கள் கட்டினார்கள்."

இந்த வாக்கியத்தின்படி இந்தியருக்கு மத்தியில் பீடம் எழுப்பின அப்போஸ்தலர் அர்ச். தோமையாரல்லவென்றால் வேறே யாரென்று கற்றறிந்தோர் சொல்வார்களாக.

6. சத்திய திருச்சபையிலே அங்கீகரிக்கப்பட்ட வேத புஸ்தக மொழிபெயர்ப்பை இலத்தீன் பாஷையில் முடித்தவர் அர்ச். எரோணிமுஸ் என்னும் வேதபாரகர். இவர் கி. பி. 331-ம் வருஷம் பிறந்தார். தமது ஆயுசு காலமெல்லாம் சுவாமி பிறந்த பெத்லேமூரில் செலவழித்து வெகு அருமையான பிரபந்தங்களை இயற்றினார். அவர் மொழிந்த ஒரு வாக்கியத்தை இந்தியர் எந்நாளும் மறக்கலாகாது. அதாவது: "கிறீஸ்துநாதர் தோமையாரோடே இந்தியாவிலும், இராயப்பரோடே உரோமாபுரியிலும் ஆக எங்கே பார்த்தாலும் குடியாயிருக்கிறார்" என்னும் தங்கமான வசனந்தான்.

இந்த மூதுரையைச் சற்று ஆழ்ந்து பார்த்தால் அர்ச். இராயப்பர் உரோமாபுரியிலிருந்தது எவ்வளவு நிச்சயமோ, அர்ச். தோமையார் இந்தியாவிலிருந்ததும் அவ்வளவு நிச்சயமென்று துலக்கமாய் விளங்கும்.

ஆகையால் திவ்விய இஸ்பிரீத்துசாந்துவானவர் இந்தியரிலே விசேஷ கிருபைக்கண் வைத்து ஆதி துவக்கத்திலேயே தமது அப்போஸ்தலரான அர்ச். தோமையாரை



அனுப்பிச் சத்தியமறையை இந்தச் சீமையிலே போதிக்கும்படி செய்தாரென்பதற்குச் சந்தேகமில்லை. அதுக்கு இந்திய கிறீஸ்துவர்கள் தங்கள் திண்ணிய விசுவாசத்தினாலும் நல்ல நடத்தையினாலும் பதில் நன்றி காட்டாமல், இன்னம் நாளதுபரியந்தம் அஞ்ஞானிகளைப்போலே நடந்துகொள்வது ஞாயமா? இவர்கள் சாகும்போது எவ்வளவோ பயங்கரமான கணக்கு சொல்லப்போகிறார்களென்று யோசிக்கும்போது திரேகமெல்லாங் குலுங்குகிறது.

---

## 21. அர்ச். தோமையார் இந்திய தோமையார் ஆகிறார்.

இஸ்பிரீத்துசாந்துவாகிய சர்வேசுரனுடைய விசேஷ ஏவுதலாலே அர்ச். தோமையார் நாம் இருக்கிற இந்தத் தக்ஷண நாட்டுக்கு வந்தாரென்று நாம் விசுவசிக்கிறதற்கு வேண்டிய நியாயமிருக்கிறது. நமது வேதப் பற்றுதலைக் குளிரச்செய்யும்படி அதிகப் படித்து எல்லாத்திலும் குறை பார்க்கிற சிலபேர்வழிகள் இதற்கு எதிர்மாறாக மொழிவதை நாம் கவனிக்கவேண்டியதில்லை. அர்ச். தோமையார் வரவு நமக்கு உறுதியான வேத விசுவாசத்தை முக்கிய பலனைத் தரக்கூடிய சக்தியுடையது. அந்த சக்தி கிறீஸ்துவர்களுக்குள்ளே இன்னம் வலுக்கொண்டிருக்கிற புத்தி நியாயத்துக்கு ஒவ்வாத உலக ஜாதி ஆசார வழக்கங்கள் ஒழிந்து, இவ்வுலக விஷயத்திலும் மறுலோக விஷயத்திலும் சீர் சிறப்பை வளர்ப்பிக்கிற ஒற்றுமைப் பந்தனம் ஓங்கித் தலையெடுக்கும்படி செய்ய வல்லதாகும். ஆகையால் அர்ச். தோமையாரைக் குறித்து இன்னஞ் சில புகழ்ச்சிகளை அறிகிறது யாவருக்கும் நன்மையாயிருக்கும். போன பாடத்திலே ஆசியா கண்டத்திலே வாழ்ந்த சான்றோர் அர்ச். தோமையார் விஷயமாய் மொழிந்த வாக்கை எடுத்துரைத்தேன்: இப்போது அவரைப்பற்றி ஐரோப்பா கண்டத்தாருடைய வாக்குமூலத்தை வெளிப்படுத்துவேன். மகனே, உற்றுக்கேள்.

1. இத்தாலியா தேசத்திலே நான்காம் நூற்றுண்டில் மிலான் (Milan) என்னும் ஒரு இராஜதானி சிறந்து விளங்கிற்று. சென்னை இராஜதானியைப்போலே அதுவும் ஒன்றாயிருக்குமென்று நாம் கருதிக்கொள்ளலாம். அதை அர்ச். அம்பிரோசியார் (St. Ambrose) கவர்னராக (Governor) ஆண்டுவந்தார். பிறகு குருப்பட்டம் பெற்று அந்த இராஜதானி நகரத்துக்கு மேற்றிராணியாரானார். இவர் திருச்சபையில் பேர்போன வேதசாஸ்திரிகளில் ஒருவராய் அக்காலத்து உரோமாபுரி இராயனால் பூசிக்கப்பட்டு, 397-ம் ௵ மரித்தார். இந்த சாஸ்திரி அப்போஸ்தலர்களைப்பற்றிப் பேசுகையில், "கரடுமுரடான மலைகளுங் குன்றுகளும் அவர்கள் கைக்கு எட்டினதாயிருந்தன. ஆகையால் தடையில்லாமல் தோமையார் இந்தியா தேசத்துக்கு ஏகினார், மத்தேயு, பார்சியதேசந் தாண்டினார்" என வசனித்தார். இந்த மகாத்துமாவும் சாஸ்திரியும் இவ்வாறு உரைத்தபோதே, அர்ச். தோமையார் இவ்விடம் எழுந்தருளிவந்த சங்கதியானது இத்தாலியா தேசத்திலே உரோமாபுரி இராயன் வீற்றிருந்த மிலான் ஸ்தலத்திலே சாதாரணமாய் எவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயமாயிருந்ததென்பதற்குச் சந்தேகமில்லை.

2. பிராஞ்சுதேசத்திலே எக்காலத்திலும் பேர்விளங்கிய தூர் (Tours) நகரின் மேற்றிராணியாரான அர்ச். கிரகோரியார் தாம் வாசித்துப் பார்த்த "அர்ச். தோமையார் பாடுகள்" என்னும் புஸ்தகத்திலே, "அந்த அப்போஸ்தலர் இந்தியாவிலே வேதசாட்சியானார்; அவருடைய சரீரம் வெகுகாலத்துக்குப்பின் சிரியாநாட்டு எதெஸா ஊருக்குக் கொண்டுபோகப்பட்டதென்று எழுதியிருக்கிறது" என்றபின், "இந்தியா தேசத்தைப் போய்ப் பார்த்துவந்த தேயோடோர் என்னும் பாட்டைசாரியை நான் கண்டு பேசினேன். அவரோ அர்ச். தோமையார் அடக்கப்பட்டது இந்தியாவிலுள்ள ஓர் ஊர், அதில் ஒரு மடமும் பாரியான கோவிலும் கட்டியிருக்கிறார்கள்" என்று எனக்குத் தெரிவித்தார் என வரைந்தார். இதைக்



...றறிந்த புத்திமான்கள் ஆராய்ந்து பார்க்கக் கோறுகிறேன். இங்கே குறிப்பிடப்பட்ட கிரகோரியார் 538-ம் ௵ பிறந்து 598-ம் ௵ மரித்தவர்.

3. 673-ம் ௵ பிறந்து 735-ம் ௵ இறந்த அர்ச். பேதா (St. Bede) ஒரு இங்கிலீஷ்காரர். திருச்சபையில் கீர்த்திபெற்ற வேதபாரகரில் ஒருவர். அக்காலத்தில் அறியலான சகல கல்வி சாஸ்திரங்களையும் தீரக்கற்றவர். இவர் இயற்றிய பிரபந்தங்கள் அநேகமென்க. அவைகளுக்குள் ஒன்றில் வாசிக்கலானதென்னவெனில், அர்ச். இராயப்பர் உரோமை நகரையும், அந்த்ரேயாஸ் கிரேசிய தேசத்து அக்காயா (Achaia) நாட்டையும், சந்தியாகப்பர் இஸ்பாஞியா சீமையையும், தோமையார் இந்தியா தேசத்தையும் காணியாட்சியாக அடைந்தார்களென்றும்.

4. அடுத்த நூற்றுண்டில் (850-900) ஆல்ப்ரிக் (Aelfric) என்னும் தபோதனர் ஒருவர் வாழ்ந்தார். இவரும் இங்கிலீஷ்காரர். ஏதோ காரணமாய் இவர் அர்ச். தோமையார் விஷயமாய் முந்தின யுகங்களில் பிரசுரமான "ஆக்தா" என்னும் புத்தகத்தைத் தமது தேசப்பாஷையிலே மொழிபெயர்த்தார். இந்த மொழிபெயர்ப்பினாலே அர்ச். தோமையாருடைய பெயர் எங்கும் பிரபலியமானது. இத்தர் தன் பதிதமதக் கொடியைப் பறக்கவிட்டபோது அந்த நூலின் பெருமை மறைந்தாப்போலிருந்தது. இக்காலத்திலே பதித மார்க்கத்தாரே அதை மதிக்கும்படியாய் நேர்ந்திருக்கிறது.

5. இங்கிலீஷ் தேசத்தை ஆண்டுவந்த முதன்மையான அரசர்களில் ஒருவராகிய ஆல்ப்ரேட் (Alfred) தாம் செய்திருந்த ஒரு நேர்ச்சிக்கடனைச் செலுத்தும்படி ஸிகேல்ம் (Sighelm), ஆதல்ஸ்றன் (Athelstan) என்ற இருவரை அர்ச். தோமையார் கல்லறையைச் சந்திக்கச் சொல்லி அனுப்பினார். இவ்விருவரில் ஸிகேல்ம் மேற்றிராணியார் பட்டம் பெற்றவர். இருவரும் 883-ம் ௵ இங்கிலீஷ் இராச்சியத்தைவிட்டுப் புறப்பட்டு அர்ச். தோமையார் சரீரம் இருந்த எதெஸா நகர் பாதிக்குப் பாதி சமீபமா

யிருந்தாலும், அங்கே செல்லாமல், நேரே 6000 மைலுக்கு அதிகமான பயணத்தை முடித்து இந்தியா தேசத்தை அடைந்து அர்ச். தோமையார் பாடுபட்ட ஸ்தலத்தை வணங்கினார்கள். பிறகு தங்கள் தேசத்துக்குத் திரும்பி வரும்போது இந்தியாவிலிருந்து விலையேறப்பெற்ற ரத்னக் கற்களையும் பரிமளவர்க்கங்களையும் தங்கள் அரசனுக்குச் சந்திப்பாகக் கொண்டுவந்தனர்.

6. இங்கிலீஷ் இராச்சியத்தின் சரித்திரத்தை முந்த முந்த எழுதத் தலைப்பட்டவர்கள் அர்ச். பேதும், தபோதனரான மாம்ஸ்பரி வில்லியமும் (William Malmesbury) என்க. அர்ச். பேதுவைப்பற்றி ஏற்கனவே பேசியாயிற்று. வில்லியம் என்பவர் 1100-ம் ஆண்டில் ஜீவித்தவராமே. இவர் இயற்றின சரித்திர நூலிலே, ஆல்ப்ரேட் அரசன் உரோமாபுரிக்கும், இந்திய தோமையாருக்கும் உயர்ந்த காணிக்கைகளை அனுப்பினாரென்கிறார். இந்தப் பவளச் சொல்லையும் இந்தியர் நன்றியுள்ளவர்களானால் எந்நாளும் மறக்கவேமாட்டார்கள். ஏனெனில் இந்த வாக்கியத்தினாலே அர்ச். தோமையாருக்கு இந்தியாசீமை சுயதேசம் போலானதென்று ஐரோப்பியர் மதித்துவந்ததாகத் தெளிவாகிறது. இதன்றியே ஆல்ப்ரேட் இராஜன் மற்ற திருஸ்தலங்களைவிட்டு உரோமாபுரிக்கும், இந்தியாவில் தோமையார் கல்லறைக்கும் ஒரே சமயத்தில் காணிக்கை அனுப்பின காரணமென்ன? உரோமாபுரியில் அர்ச். இராயப்பர் மரணமானது எவ்வளவு பிரபலியமோ, அவ்வளவு அர்ச். தோமையார் இந்தியாவில் மரணமானதும் பிரபலியமானதினால்தானல்லோ ?

கடைசியாய் இங்கிலீஷ்காரர் ஆயிரம் வருஷத்துக்கு முன்னமேதானே இந்தியா சீமையைப் பிரியமாய் நோக்கிப் பார்த்திருப்பதையும், இக்காலத்திலே அவர்கள் அதில் நல்லரசாட்சி செலுத்துவதையும் தோரணையாக இணைத்தால், இருதேசத்தையும் ஒரு கோலின்கீழ் அமைக்கும்படி ஆதிமுதல் கடவுளின் சித்தமென்று நாம் உணர்ந்துகொள்ளலாகும்.



7. 1252-ம் ௵ மூன்றாம் இன்னோசென்சியார் என்னும் பாப்பானவர் கீழ்த்திசை ஜனங்களுக்குச் சத்தியவேதத்தைப் பிரசங்கிக்கும்படி ஒரு மிஷனெரிச் சபையை ஏற்படுத்தினார். அச்சபையைச் சேர்ந்த மோன்றக்கோர்வீனோ ஜான் (John Montecorvino) என்பவர் சீனதேசத்து இராஜதானியாகிய பெக்கின் (Pekin) நகரத்து அதிமேற்றிராணியாராக நியமிக்கப்பட்டார். இந்தியா சீமை அவர் போகிற வழியிலிருந்தபடியால் அங்கே தங்கி அர்ச். தோமையாருடைய கல்லறைக்கு அருகில் பதின்மூன்று மாதஞ்செலவழித்ததாகவும், அங்கே நூறுபேருக்கு ஞானஸ்நானங் கொடுத்ததாகவும் அவரே தமது சீமைக்கு எழுதின ஒரு காகிதத்தில் அறிவிக்கிறார்.

8. பாட்டைசாரி என்று உலகமெங்கும் பட்டப்பெயர் வாங்கின மார்க்கோப் போலோ (Marco Polo) என்னும் கத்தோலிக்கர், 1293-ம் ௵ இந்திய தேசத்தைச் சந்தித்தார். அவர் வெளிப்படுத்திய புஸ்தகத்தில் " அர்ச். தோமையாருடைய சரீரமானது மலபார் மாகாணத்திலே ஒரு சிற்றூரிலே இளைப்பாறுகிறது. அதைக் கிறீஸ்துவர்களும் துலுக்கருமே கூட்டமாய்த் தரிசிக்க திருயாத்திரை செய்கிறார்கள். துலுக்கர் அவருக்கு மிகவும் சங்கை செய்து அவரை அர்ச்சியசிஷ்டவர் என்று கூப்பிடுகிறார்கள். அன்றியும் அர்ச். தோமையார் கொலையுண்ட ஸ்தலத்திலுள்ள மண்ணைக் கிறீஸ்துவர்கள் தோண்டிக்கொண்டு போகிறார்கள். தேவ கிருபையினாலும் அர்ச். தோமையாருடைய மன்றாட்டினாலும் அந்த மண்ணினுடைய உபயோகமானது சுரத்தைப் போக்குகிறது " என்று மொழிகிறார்.

இங்கே கவனிக்கவேண்டிய ஒரு விசேஷமாவது, ஐரோப்பியர் தென் இந்தியாவை மலபார் தேசமென்று அக்காலத்திலே சொல்லிவந்தார்களென்பதாம்.

9. ஆறாம் கிளேமென்ஸ் என்னும் பாப்பானவரால் சீன இராட்சியத்து அரசனிடம் ஸ்தானாபதியாக அனுப்பப்பட்ட மாரிஞ்ஞோல்லி ஜான் (John Marignolli)

மேற்றிரானியார், 1349-ம் ௵ இந்தியாவில் அர்ச். தோமை யார் கல்லறையைச் சந்தித்துப் பின்வருமாறு எழுதியிருக் கிறார்: " இந்தியாவின் இந்தப் பாகத்துக்கு மலபார் என் னும் பேர் வழங்குகிறது. இதில் அர்ச். தோமையார் தமது கையால் கட்டின கோவில் இன்னும் நிற்கிறது. அவர் பார்த்தியரையும், மேதியரையும், இந்தியரையும் மனந் திருப்பிக் கடைசியில் இந்தியாவிலுள்ள மீராப்போலிஸ் என்னும் ஊரில் வேதசாட்சியானார். அவ்விடத்தில் அவ ருடைய இரத்தம் நாளது வரையில் பூசிக்கப்பட்டுவருகிறது" என்கிறார்.

இங்கே குறிக்கப்படுகிற மீராப்போலிஸ் என்னும் ஊர் மயிலாப்பூர்தானென்று கற்றோர் இலேசில் மதித்துக் கொள்ளுவார்கள்.

10. இருபத்து மூன்று வருஷகாலமாய் (1421–1444) தேசாதி தேசங்களெல்லாஞ் சுற்றித்திரிந்த நீக்கொ லாஸ் தீக்கோன்தீ (Nicolas di Conti) என்பவர் இந்தியா தேசத்தையுஞ் சந்தித்து அதிலே கடற்கரையோரத்தில் இருக்கும் மயிலாப்பூர் என்னும் ஊரிலே அர்ச். தோமை யாருடைய சரீரம் அடக்கமாகியிருக்கிறதெனை வரிந்திருக் கிறார்.

11. 1498-ம் ௵ போர்த்துக்கீஸ்காரர் இந்திய தேசத்துக்குப் புதிதான கடற்பாதை கண்டுபிடித்து மலே யாள தேசத்தில் வந்து கரைபிடித்தார்கள். அவ்விடத்தில் அநேகம் கிறீஸ்துவர்கள் இருப்பதை அதிசயத்தோடே கண்டு அவர்கள் எப்படி கிறீஸ்துவர்களானார்களென்று விசாரிக்கும்போது, அவர்கள் மறுமொழியாக, நாங்கள் அப்போஸ்தலரான அர்ச். தோமையார் கிறீஸ்துவர்கள். அவர் மயிலாப்பூரில் வேதசாட்சியானாரென்று எல்லாரும் ஒருவாய் ஒருமொழியாகச் செப்பினார்கள். அதுமுதல் வெகு வருஷகாலமாய்ப் போர்த்துக்கீஸ்காரர் செய்த ஆராய்ச்சியெல்லாம் அர்ச். தோமையார் இந்திய தேசத் துக்கு வந்த வர்த்தமானத்தை ஸ்திரப்படுத்தினவேயொழிய அதை இளப்பமாக்கவில்லை.



கடைசி அத்தாட்சியாக, இந்திய தேசத்துக்கு இரண் டாம் அப்போஸ்தலராக விசேஷ தேவ கிருபையால் அனுப்பப்பட்ட அர்ச். சவேரியார் 1545-ம் ௵ அர்ச். தோமையார் கல்லறையைச் சந்திக்கும்படி மயிலாப்பூர் சென்று அங்கே நாலுமாதத்துக்கு அதிகமாய்த் தங்கியிருந் தார். அர்ச். தோமையார் மயிலாப்பூரில் மரித்தாரென்று அர்ச். சவேரியார் விசுவசித்தபோதே, அவருடைய ஞானப் பிள்ளைகளாகிய நாமும் கூச்சமில்லாமல் விசுவசிக்கலாம். அவர் இது விஷயத்தில் ஏமாந்துபோனால் நாமும் ஏமாந்து போனோமென்கிறது நமக்குப் பெருமையேயன்றிச் சிறுமை யல்ல. அவருக்கு எதிர்மாறாகத் தங்கள் பேரறிவைக் கெம் பீரமாய்ப் பாராட்டுகிற கம்பர்களை நம்பி ஈறுங்கடையில் நாம் ஏமாந்துபோனால் இவ்வுலகில் இகழ்ச்சிக்காளாவோம்.

இதினிமித்தந்தான் அர்ச். பிராஞ்சீஸ் சபையின் சரித் திர கர்த்தாவான கீர்த்திபெற்ற மார்செல்லீன் என்பவர், நான் இதுவரையில் கூறிய மேற்கோள்களையும் இன்னம் வேறு திருஷ்டாந்தங்களையும் ஆராய்ந்து சீர்தூக்கிப் பார்த்த பின், " அர்ச். தோமையார் இந்திய சீமையிலே சத்திய வேதத்தைப் பிரசங்கித்து அதுக்காக அத்தேசத்திலே உயிரைக் கொடுத்தது நிச்சயம். இதன்மட்டில் எள்ளள வேனும் எவனாவது ஐயுறவுபட்டால் அவன் ஒரு செருக் கன், தறுதலையான், எடுத்தடி மடக்கனாயிருக்கவேண்டி யது" என முடிவு கட்டுகிறார்.

ஆகவே இக்காலத்துப் பதிதர் அர்ச். தோமையார் இந்தியா தேசத்துக்கு வராததுபோலும், சேசுநாதர்சுவாமி யின் திருச்சபையை இத்தேசத்திலே தாங்கள் நூதனமாய் உண்டாக்குகிறதுபோலும் நடிக்கிறார்கள். இதனால் தங் ளுக்கும் அர்ச். தோமையாருக்குஞ் சம்பந்தம் இல்லை யென்று காட்டுகிறார்கள். அப்படியானால் அவர்கள் போதிக் கிற மதம் அர்ச். தோமையார் படிப்பித்த வேதமல்ல வென்கவேண்டியதல்லோ? அவர் படிப்பித்த வேதமல்லா விட்டால் அது அப்போஸ்தலர்களுடைய வேதமுமல்ல. அப்போஸ்தலர்களுடைய வேதமல்லவானால் அது சேசு

நாதர்சுவாமி ஏற்படுத்தின சத்திய வேதமாயிருக்கக்கூடா தல்லோ? அது சேசுநாதர்சுவாமியுடைய வேதமாயிராத போதே அதைப் பிரசங்கிக்கிறவர்கள் சுவிசேஷ போதக ரல்லரென்று நிர்ணயிக்கக்கடவோம்.

---

## 25. அர்ச். தோமையார் திருச்சபை உரோமாபுரி திருச்சபையா?

தாய் : போன இரண்டு பாடங்களிலும் அர்ச். தோமையார் இந்தியா தேசத்து அப்போஸ்தலரென்று ஒப்பிக்கும்படியான மேற்கோள்களையும் அவைகளினின்று சுரக்கும் நியாயங்களையும் விரிவாய் எடுத்துரைத்தேன். அந்த மேற்கோள்கள் இன்னொரு சத்தியத்தை வெள்ளிடை மலை போல் துலங்கப்பண்ணுகிறது. அதாவது, சேசுநாதர் சுவாமியுடைய திருச்சபைக்குத் தலைவராகிய அர்ச். இராயப்பர் உரோமாபுரியில் ஸ்தாபித்த வேதமும் அர்ச். தோமையார் இந்தியாவில் ஏற்படுத்திய வேதமும் ஒரே சத்திய வேதமென்பதாம். இந்த உண்மைக்கு அர்ச். எரோணிமுஸ், அர்ச். பேது, ஆல்ப்ரேட் இராஜா, அர்ச். பாப்பானவரால் அனுப்பப்பட்டவர்களாகிய மாரிஞ்ஞோலி மேற்றிராணியார், அர்ச். சவேரியார் முதலிய சாஸ்திரிகளும் மகாத்துமாக்களும் அத்தாட்சியாயிருக்கிறார்கள். ஆகவே, சத்திய வேதசாட்சி சக்கரத்துக்கு உரோமாபுரி நடுமையாக, இந்திய தேசம் அதன் கடைசி எல்லைக்குறியாக நின்று வரை காட்டுகின்றது. வரைகாட்டினால் இந்தியா திருச்சபைப் போதனைகள் உரோமாபுரித் திருச்சபைப் போதனைகளோடே முற்றும் ஒருமித்திருக்கவேண்டியதல்லோ. எந்தப் போதனையிலாவது பேதித்தால் அப்போதனை அர்ச். தோமையாருடைய போதனையல்லவென்று இந்திய திருச்சபையார் அதை வெறுத்து நீக்குவது அவசியம்.

பிள்ளை : அர்ச். தோமையார் இவ்விடம் வந்தபோது அஞ்ஞானத்தில் அமிழ்ந்தி ஆணும் பெண்ணுமான முப்



பத்து முக்கோடித் தெய்வங்களைக் கும்பிட்டுவந்த இந்தியருக்குச் செய்த உபதேசமென்ன ?

தாய் : கத்தோலிக் என்னப்பட்ட உரோமாபுரித் திருச்சபையானது போதிக்கிற ஞானோபதேசத்தைத்தான் அர்ச். தோமையாரும் இந்தியாவில் போதித்தார். ஆகையால் உரோமாபுரித் திருச்சபையை அண்டிப் பணிந்து அதன் போதகத்தை மனப்பூரணமாய்க் கைப்பற்றி அதற்கு இணங்கி நடந்தால் இந்திய கிறீஸ்துவர்கள் நாங்கள் அப்போஸ்தலரான அர்ச். தோமையாருடைய கிறீஸ்துவர்கள் என்று பெருமை பாராட்டலாம்.

பி. : உரோமாபுரித் திருச்சபையின் இலக்ஷணங்களென்ன ?

தாய் : உரோமாபுரித் திருச்சபைக்குச் சாதாரண பேர் கத்தோலிக் திருச்சபையென்ற காரண நாமம். இந்தக் கத்தோலிக் திருச்சபையின் பிரதான இலக்ஷணம் உரோமாபுரியிலே அர்ச். இராயப்பருடைய ஸ்தானத்தில் வீற்றிருக்கும் அர்ச். பாப்பானவருக்கு வேதவிசுவாசம், நல்லொழுக்கம், திருச்சபை அரசாட்சி ஆகிய இவைகளைச் சார்ந்த விஷயங்களில் மனம்பொருந்திக் கீழ்ப்படிந்து நடப்பதென்க. அர்ச். பாப்புமார்கள் குரலொலி அர்ச். இராயப்பருடைய குரலொலியென்றும், அர்ச். இராயப்பருடைய குரலொலி சேசுநாதர்சுவாமியின் குரலொலியென்றும் ஏற்கனவே விபரமாய் ஒப்பித்திருக்கிறேன். ஆகையால் அதைப்பற்றி நூதனமாய் இவ்விடம் கூறவேண்டியது ஒன்றுமில்லை.

பி. : மலையாளத்திலேயுள்ள சிரிய கிறீஸ்துவர்களை யாரென்கவேண்டியது ?

தாய் : இவர்கள்தான் ஆதிமுதலில் அர்ச். தோமையாருடைய உபதேசத்தைக் கேட்டுக் கிறீஸ்துவர்களானவர்கள். பிற்காலத்தில், அதாவது, அநேக நூற்றாண்டுகளுக்குப்பின் சிரிய தேசத்திலிருந்து சில பிரிவினைக் குருக்கள் அவர்கள் நடுவில் நுழைந்து சில பேதகமான போதனைகளை அவர்களில் அநேகருக்குப் புகட்டி பிரிவினைச் சபைகளை

நாட்டினார்கள். கடந்த நூற்றாண்டில் பதிதப் பாதிரிகளும் மலையாளத்தில் சீரிய கிறீஸ்துவர்களுக்குள் புகுந்து சிலரைப் பதிதராக்கினார்கள்.

இவ்வாறு சீரிய கிறீஸ்துவர்கள் முப்பாகமாய்ப் பிரிந்திருக்கிறார்கள். முக்கியமான முதற்பாகம் கத்தோலிக்கர். அவர்களின் தொகை ஆறு இலட்சம் (6,00,000). அவர்கள் நான்கு மேற்றிராணிமார்களுடைய பராமரிப்பில் வாழ்கிறார்கள். அந்த நான்கு மேற்றிராணிமார்களும் தகுண நாட்டு சுய இந்தியரே தவிரப் புறதேசத்தாரல்ல.

பி.: அர்ச். தோமையார் கிறீஸ்துவர்களை சீரிய கிறீஸ்துவர்களென்பானேன்?

தாய்: அர்ச். தோமையாருடைய சுயதேசம் சீரியா சீமை. இந்த அப்போஸ்தலர் மரித்தபின் சீரியாவின் பிரதான நகர்களில் ஒன்றாகிய எதெஸாவிலிருந்து குருக்கள் மலையாள தேசத்திலே சத்தியவேதத்தைக் காப்பாற்றி விருத்தியாக்கும்படி தொடர்ச்சியாய் வந்துகொண்டிருந்தார்கள். (Mgr. Medleycott.) அதினிமித்தந்தான் அர்ச். தோமையாருடைய சரீரம் மயிலாப்பூரிலிருந்து எடுபட்டு எதெஸா ஊருக்கு அனுப்பப்பட்டது. இந்த வழியாக அர்ச். தோமையார் கிறீஸ்துவர்களுக்கு சீரிய கிறீஸ்துவர்களென்னும் பெயர் வழங்கிற்று.

பி.: தற்பொழுது ருஷியர், ருஷியரென்று பேச்சு அநுதினம் காதில் ஒலிக்கிறதே. அவர்களுடைய மதாசாரம் எத்தன்மையதாம்?

தாய்: ருஷியர் தேசம் ஐரோப்பாவின் வடபாகத்திலே வெகு விஸ்தாரமான ஒரு பூமி. அவர்கள், அஞ்ஞானத்திலிருந்து ஒன்பதாம் நூற்றாண்டிலே மேற்றிராணியாரான அர்ச். இஞ்ஞாசியாரின் முயற்சியினால் சத்தியமறையில் கூட்டப்பட்டார்கள். ஆனால் சில காலங்களுக்குப்பின் அர்ச். பாப்பானவருடைய அதிகாரத்தைவிட்டு விலகிப் பிரிவினைக்காரராய்ப் போனார்கள். அவ்வித பிரிவினையின் சாத்தியமாக ருஷிய சக்கரவர்த்தியானவரைத் தங்கள் சபை



யின் தலைவராகத் தெரிந்துகொண்டு அவர் அதிகாரத்துக்கு அமைந்து நடந்தார்கள். ஆனால் சேசுநாதர்சுவாமி அர்ச். இராயப்பருக்கு தாம் அளித்த ஸ்தானபதிக்கமானது ருஷிய மன்னனுக்குச் செல்லும்படியாக தீர்மானிக்கவில்லை. ஆகையால் ருஷியர் மெய்யான பிரிவினைக்காரர்கள் என்பதற்குச் சந்தேகமில்லை. இராஜ குடும்பத்தை அழித்துவிட்டு ருஷியாவை ஆண்டுவரும் போல்ஷவிக்கர் இந்தப் பிரிவினைச் சபையை நிர்மூலமாக்க வழி தேடிக்கொண்டிருக்கின்றனர்.

பி.: இங்கிலீஷ் மிஷன், அமெரிக்கன் மிஷன், ஜெர்மன் மிஷன் முதலிய நானாவித மிஷன்கள் நமது தேசத்திலே அங்கங்கே முளைத்திருக்கின்றனவே, அவைகளெல்லாம் ஒரேவகை மார்க்கங்களோ?

தாய்: அவைகளெல்லாம் தங்களுக்குள்ளேயே ஒவ்வாமல் கிளம்பின வெவ்வேறு மதங்களாமே. கத்தோலிக் திருச்சபையின் கண்ணுக்கு அவைகளெல்லாம் சாடாக புரோட்டெஸ்டாண்டு அல்லது பதித மதங்கள் எனத் தள்ளுண்டுபோய்க் கிடக்கின்றன.

இங்கிலீஷ் மிஷனுக்கு இங்கிலீஷ் இராஜாவும், ஜெர்மன் மிஷனுக்கு ஜெர்மன் அரசனும் தலைவர்களாயிருந்து சட்டக் கூறுபாடுகளை ஏற்படுத்துகிறதினாலே இங்கிலீஷ்காரர் ஜெர்மன் மதத்திலும், ஜெர்மானியர் இங்கிலீஷ் மார்க்கத்திலும் அந்நியோந்நியமாய் ஒருபோதும் சேரமாட்டார்கள்.

அமெரிக்கன் மிஷன் என்பது அமெரிக்காவின் ஐக்கிய நாட்டு (United States) சில வேத சங்கத்தாருடைய அமலுக்குள் அடங்கியிருக்கிறது. அவர்களுக்கும் அர்ச். பாப்பானவருக்கும் யாதொரு சம்பந்தமுங் கிடையாது. ஆகையால் ஏதேச்சையாய்க் கிளம்பின பதித மதங்களில் அமெரிக்கன் மிஷன் ஒன்றென்று கணக்கிடப்பெறும்.

பி.: நமது தேசத்தை ஆளுகிற இங்கிலீஷ் இராஜாங்கத்தார் எப்போதும் பதிதராகவே வளர்ந்துவந்தார்களோ?

தாய்: இல்லை, இல்லை. இங்கிலீஷ்காரர் இந்திய தேசத்தாரைப்போலே துவக்கத்திலே அஞ்ஞானிகளாய் நமது நாட்டிலே நடக்கிறபிரகாரமே பேய்களுக்குப் பயந்து அவைகளைச் சாமிகளாகக் கும்பிட்டு, பலிகொடுத்து வந்தார்கள். அவர்களைச் சத்தியநெறியில் திருப்பும்படியாக அர்ச். கிரகோரியார் என்னும் பாப்பானவர் அர்ச். அகுஸ்தீன் என்னும் குருவானவரை அனுப்பினார். இவருடைய போதகத்தினாலும் புதுமைகளினாலும் இங்கிலீஷ்காரர் சத்திய வேதத்தின் உட்படத் துவக்கினார்கள். இந்த வர்த்தமானம் ஆறாம் நூற்றாண்டிலே சம்பவித்த காரியம். அதுமுதல் பதினாறாம் நூற்றாண்டுவரையில் இங்கிலீஷ்காரர் கத்தோலிக்கராய் அர்ச். பாப்பானவருக்குக் கீழ்ப்படிந்து நடந்தனர். பதினாறாம் நூற்றாண்டின் துவக்கத்தில் சிம்மாசனம் ஏறின எட்டாம் ஹென்றி காமத்தினாலே புத்திமயங்கி 1534-ல் இங்கிலீஷ் கிறீஸ்துவர்களுக்கு அவர்களுடைய இராஜாவே ஞான அதிகாரி என்று பதித மார்க்கத்தை ஏற்படுத்தினான். அர்ச். பாப்பானவருக்குக் கீழ்ப்படிந்துவந்த கத்தோலிக் இங்கிலீஷ்காரரைப் பிடித்து உபாதித்துக் கொலைசெய்தார்கள். அப்போது உற்பத்தியான மதந்தான் இன்னம் இங்கிலீஷ்காரரைத் தொடர்ந்து பீடிக்கிறது. இந்தத் தென்னாட்டிலே இங்கிலீஷ் பதிதர்கள், லண்டன் சர்ச்சு, சர்ச்சு மிஷன், இங்கிலீஷ் சர்ச்சு எனப் பலவாறாய்ப் பிரிந்து வேதம் போதிக்கின்றனர்.

பி.: இன்னம் ஓரிரு கேள்வி கேட்கிறேன். லூத்தர் மதம் கிளைத்ததெப்படி?

தாய்: மொத்தத்திலே ஜெர்மன் மதமும் லூத்தர் மதமும் ஒன்றுதான். லூத்தர் ஒரு ஜெர்மானியர். அவர் துவக்கத்திலே கத்தோலிக்வேத குருவாயிருந்தவர். நாளாவட்டத்தில் விரதத்துவ வார்த்தைப்பாட்டை மீறி வெருண்டு மருண்டு திருச்சபைக்குத் தலைவராக அர்ச். பாப்பானவர் வேண்டியதில்லை, வேத புஸ்தகத்தை அவனவன் தன்பாட்டுக்குப் படித்து அதிலே தனக்குத் தோன்றுகிறபடி விசுவாசமாயிருந்தால், அந்த விசுவாசம் அவனை இரட்



சிக்குமென்று பிதற்றி வேத புஸ்தகத்தை மனம்போலே யாரும் புரட்டுகிறதற்கு விசாலவழி திறந்தார். இதினாலே லூத்தர் சகல பதித மதங்களுக்கும் தகப்பன் என்கலாம். லூத்தர் பதினாறாம் நூற்றாண்டில் ஜீவித்த மனுஷன்.

பி.: பதிதருக்கும் பிரிவினைக்காரருக்கும் உள்ள வித்தியாசக் குறிகளென்ன?

தாய்: பதிதர்கள் (1) அர்ச். பாப்பானவருக்கு வேத விஷயங்களில் கீழ்ப்படியமாட்டார்கள். (2) சுவிசேஷ வாக்கியங்களைத் தங்கள் தங்கள் புத்திக்குத் தோன்றுகிறது போலே புரட்டி அவைகளுக்குத் தங்கள் மனம்போலே வியாக்கியானஞ் செய்கிறார்கள்.

பிரிவினைக்காரர் ஆதிமுதல் படிக்கப்பட்ட வேத விசுவாச சத்தியங்களை மாற்றாமல் விசுவசிக்கிறார்கள். ஆனால் அர்ச். பாப்பானவருடைய கட்டளைக்கு வேத விஷயங்களிலே முதலாய்க் கீழ்ப்படியமாட்டார்கள்.

ஆகையால் பதிதரானாலுஞ்சரி, பிரிவினைக்காரரானாலுஞ்சரி, இருவகையாரும் அர்ச். இராயப்பர் சேசுநாதர் சுவாமி பேராலே கட்டின திருச்சபைக்குப் புறம்பாயிருக்கிறார்கள். திருச்சபைக்குப் புறம்பே இரட்சண்ணியமில்லை. இந்தப் பெரும் நிற்பாக்கியம், மகனே, உனக்கு வராதபடி அர்ச். பாப்பானவருக்கும் அவரால் நியமிக்கப்படுகிற வேத அதிகாரிகளுக்கும் பூரண மனதோடே நீ கீழ்ப்படிந்து நடப்பாயாக.

ஏனெனில் இங்கே விவரிக்கப்பட்ட சங்கதிகளைக் கொண்டு, எந்த வேதத்தில் இருந்தாலும், என்னென்னத்தை விசுவசித்தாலும் சரி, எப்படியும் இரட்சண்ணியம் அடையலாமென்று படித்தவர்களுள் சிலர் நினைப்பது முழு மோசமான எண்ணம். அவ்வித எண்ணத்துக்கு நீ கனவிலும் இடங்கொடாதே. அர்ச். தோமையார் படிப்பித்த வேதமும் உரோமாபுரி திருச்சபையின் வேதமும் ஒன்றேதவிர இரண்டல்ல. ஆகையால் அர்ச். பாப்பானவரால் இத்

தேசத்துக்கு அனுப்பப்படுகிற வேத அதிகாரிகளாகிய மேற்றிராணிமார்கள் குருக்கள் இவர்களுக்குக் கீழ்ப்படிந்து தாழ்ச்சியோடே நடந்துகொள்.

---

## 26. அர்ச். பாப்புக்குரிய தவறா வரம்

பே[illegible] பாடங்களில் ஒப்பித்தபிரகாரம் இந்தியாவில் அர்ச். தோமையார் நட்ட திருச்சபையும் உரோமையில் அர்ச். இராயப்பர் பயிராக்கின திருச்சபையும் ஒன்றே ஒன்றுதான். ஆகையால் திருச்சபைக்குத் தலைவராகிய அர்ச். பாப்பானவர் உரோமையிலே அர்ச். இராயப்பருடைய ஆசனத்திலே வீற்றிருக்கிறதினிமித்தம் இந்திய கிறீஸ்துவர்கள் அர்ச். பாப்பானவருக்கும் அவர்பேரால் தங்களை ஆண்டுவரும் மேற்றிராணிமார் குருப்பிரசாதிகளுக்கும் திருச்சபைக்கு உரித்தானவைகளிலே பூரண மனசாய்க் கீழ்ப்படிந்து நடப்பது அத்தியாவசியம். இத்தன்மையான சிரவணமில்லாமல் தலையோடே ஒன்றிப்பில்லை, அவ்வொன்றிப்பில்லாமல் ஒரே திருச்சபையில்லை, "ஒரே மந்தையில்லை, ஒரே மேய்ப்பனில்லை," (அரு. 10: 16) இரட்சணியமுமில்லை. ஏனெனில் சுயமேய்ப்பனில்லாத ஆட்டை ஓநாய் கொண்டுபோம். (அரு. 10: 12.)

காரியம் இவ்வாறானால், அதிலே மற்றொரு சித்தாந்தம் விளைகிறது. என்னவெனில், திருச்சபைக்குரிய விஷயங்களில் அர்ச். பாப்பானவருடைய குரலொலி சேசுநாதர்சுவாமியுடைய குரலொலியாயிருப்பதும் அத்தியாவசியமென்பதே. அதாவது, அர்ச். பாப்பானவர் சேசுநாதர்சுவாமி படிப்பித்த ஞானோபதேசத்தை வழு நழுவாமல் காப்பாற்றிப் போதிக்கிறவராயிருக்கவேண்டியது. இதுக்குத்தான் தவறாத வரமெனப் பேராகிறது. இந்த மேலான வரத்தைச் சேசுநாதர்சுவாமி அர்ச். இராயப்பருக்கு அளித்



பிள்ளை: ஆம், வேத சத்தியங்களைத் திருச்சபைக்குப் போதிக்கிறதிலே அர்ச். பாப்பானவர் தவறமாட்டாரென்று படித்திருக்கிறேன். ஆனால் வேத வாக்கியங்களைக்கொண்டு அர்ச். இராயப்பருக்குத் தவறா வரம் அருளப்பட்டதென்று ரூப்பிக்கிறதெப்படி?

தாய்: இதை திருஷ்டாந்தமாய்க் காட்டுகிறதுக்கு சுவிசேஷத்திலே பல மேற்கோள்கள் உண்டு. அவைகளில் சிலவற்றை இவ்விடம் கூறுகிறேன்.

1-வது. வேத புஸ்தகத்திலே கணக்கற்ற இடங்களிலே உலக மனிதர் யாவரும் ஒரு மந்தையாகப் பாவிக்கப்படுகிறார்கள். அதுக்கு இசைவாகவே சேசுநாதர்சுவாமி தமது திருச்சபையை ஒரு மந்தையாகப் பாவித்துத் தமக்குரிய மேய்ப்பன் என்னும் பட்டத்தை அர்ச். இராயப்பருக்கு அளிக்கிறார். (அரு. 21: 15-17.) மெய்யான ஆயன் தன் ஆடுகள் ஓநாய்களின் கையில் அகப்படாவண்ணங் காப்பான். ஒரு ஆடு காணாமற்போனால் அதைத் தேடிப்பிடித்துத் தன் தோளின்மேற் போட்டுக்கொண்டு வந்து கிடையிற் சேர்ப்பான். கூலிக்கு மேய்ப்பவனோவெனில் ஓநாயைக் கண்டால், ஆடு போனாலும் போகட்டும், தான் தப்பிப் பிழைத்தால் போதுமென்று மந்தையை ஓநாய்களுக்கு இரையாக விட்டுவிட்டு ஓடிப்போவான். (அரு. 10: 11-12.)

2-வது. இந்தத் தொழுவத்தைச் சேராத வேறு ஆடுகளும் எனக்குண்டு. அவைகளையும் நான் கொண்டுவந்து சேர்க்கவேண்டும். அவைகள் என் குரலொலிக்குச் செவி கொடுக்கும். அப்போது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகிவிடும். (அரு. 10: 16.)

3-வது. ஜோனாவின் மகனாகிய சீமோனே, நீ பாக்கியவான்.........நான் உனக்கு அளிக்கும் வாக்கு என்னவெனில், நீ இராயாய் (=பாறையாய்) இருக்கிறாய். இந்த இராயின்மேல் (=பாறையின்மேல்) என் திருச்சபையைக் கட்டுவேன். நரக வாசல்கள் அதை மேற்கொள்ளமாட்

டாது. இதன்றி பரலோக இராட்சியத்தின் திறவுகோல்களை உனக்கு அளிப்பேன். பூமியில் நீ எதைக் கட்டுவாயோ, பரலோகத்திலும் அது கட்டப்படும், பூலோகத்திலே எதைக் கட்டவிழ்ப்பாயோ, பரலோகத்திலும் அது கட்டவிழ்க்கப்படும். (மத். 16 : 17-19.)

4-வது. சீமோனே, சீமோனே, இதோ சாத்தான் உங்களைக் கோதுமையைப்போலே புடைக்கும்படி உத்தரவு கொடுக்க மன்றாடினான். நானோ உன் விசுவாசம் தவறாதபடி உனக்காக வேண்டிக்கொண்டேன். ஆகையால் நீ ஒருதரம் மனந்திரும்பியபின் உன் சகோதரர்களை உறுதிப்படுத்துவாயாக ! (லூக். 22 : 32.)

5-வது. "பரலோகத்திலும் பூலோகத்திலும் எனக்குச் சர்வ அதிகாரமும் கொடுக்கப்பட்டிருக்கிறது ; ஆகையால் நீங்கள் போய்ச் சகல ஜாதி ஜனங்களுக்கும் உபதேசித்துப் பிதாவுடையவும் சுதனுடையவும் இஸ்பிரீத்து சாந்துடையவும் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுங்கள். நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவற்றையும் அவர்கள் அனுசரிக்கும்படியாகப் படிப்பியுங்கள். இதோ உலகம் முடியுமட்டும் எந்நாளும் உங்களோடேகூட இருக்கிறேன்" என்றார்.

மேற்கூறிய வேத வாக்கியங்களால் வெளிப்படையாகப் புலப்படுவது என்னவெனில் :—1-வது. சேசுநாதர்சுவாமிக்குப் பதிலாய் அர்ச். இராயப்பர் சகல மனித சந்ததிக்கும் மேய்ப்பராகிறார். சகல மனிதரும் அவருடைய மந்தையில் சேரவேண்டியவர்கள்.

2-வது. சேசுநாதர்சுவாமியின் மந்தையை ஓநாய்களினின்று காக்கும் தொழில் அர்ச். இராயப்பருக்குரியது. ஏனெனில் தமது மந்தையாகிய திருச்சபைக்குள்ளே ஓநாய்களும் திருடரும் அடைப்புமேல் குதித்து வந்து பாயும்படியாயிருக்கும். அப்போது நல்ல ஆயன் ஆடுகளைக் காப்பாற்றத் தன்னுயிரை முதலாய்க் கொடுப்பான். "நான் என்னாடுகளுக்காக என்னுயிரைக் கொடுக்கிற நல்ல மேய்ப்



ன்" என்று திவ்விய இரட்சகர் வசனித்தார். (அரு. 10 : -15.) வேத விரோதிகள் அபத்தமான கொள்கைகளைப் போதித்து திருச்சபையின் மக்களைக் கெடுக்கத் தேடும்போது, சேசுநாதர்சுவாமிக்குப் பதிலாயிருக்கும் அர்ச். இராயப்பர் திருச்சபையைக் காப்பாற்றும்படி தவறிவிழாத மேய்ப்பராயிருப்பார் என்பது இதன் பொருள்.

3-வது. தமது தொழுவத்தைச் சேராத வேறே ஆடுகள் உண்டு, அவைகளைக் கொண்டுவந்து சேர்க்கவேண்டும். அவைகள் என் குரலொலியைக் கேட்கும் என சேசுநாதர் சுவாமி திருவுளம்பற்றுகிறாரல்லோ. சுவாமியுடைய கிடையிலில்லாத இந்த ஆடுகள் கத்தோலிக் மதத்தில் இன்னும் சேராதவர்களைக் குறிக்கிறதாமே. இரட்சண்ணிய வழி தவறிப்போய் அலையும் இந்த ஆடுகளையும் சுவாமியுடைய மந்தையிலே திருப்பிக் கொண்டுவரும்படி இராயப்பர் நியமிக்கப்படுகிறார். ஆனால் அவைகள் சேசுநாதர்சுவாமியின் குரலொலியைக் கேட்டால்தான் திரும்பி வரலாயிருக்கும், கேளாவிட்டால் இல்லை. ஆகையால் அர்ச். இராயப்பருடைய குரலொலி சேசுநாதர்சுவாமியின் குரலொலியாக மாறவேண்டியது. அவ்வாறு மாறும்படிக்கு அர்ச். இராயப்பர் சேசுநாதர்சுவாமியுடைய வேதத்தைப் போதிக்கிறதிலே தவறா வரம் பெற்றவராயிருப்பது அவசியம்.

4-வது. சேசுநாதர்சுவாமி ஜோனாஸின் மகனாகிய சீமோனைத் தமது சீஷனாயிருக்க அழைத்தபோது அவருடைய பெயரை மாற்றி கேபாஸ் என்று அவருக்கு நாமங் கொடுத்தார். கால்தேய பாஷையாகிய இந்த மொழி பாறை என்று அர்த்தம்பெறும். இந்த அர்த்தத்தைத்தான் திவ்விய இரட்சகர் உபயோகித்துத் தமது சீஷனை நோக்கி : "நீ பாறையாயிருக்கிறாய், இந்தப் பாறையின் மேல் என் திருச்சபையைக் கட்டுவேன். அதை நரக வாசல்கள் மேற்கொள்ளமாட்டா" தென்றார். சேசுநாதர் சுவாமி சகலரும் மோக்ஷத்துக்குப் போகிற ஏக வழியாயிருப்பதினாலே அவருடைய ஸ்தானத்திலே வைக்கப்பட்ட அர்ச். இராயப்பர் நரகத்துக்குச் செல்லுகிற வழியும் வாசலு

மாறிய மெய் ஞானத்தையும் பெயாட்டங்களையும் போதிக்கக்கூடாதவராகிறார். ஆகையால் உலக இரட்சகர் அவருக்கு வேத சம்பந்தமான காரியங்களிலே தவறாமல் அசையாத பாறைபோலே இருக்கும்படியான வரத்தை அளித்தாரென்பது நிச்சயம்.

5-வது. 'சேசுநாதர்சுவாமி மோக்ஷத்துக்குப் போகிற வழியும், வாசலுமாயிருந்து தமது வழி செல்லுகிற சகல மனிதருக்கும் மோக்ஷ கபாடத்தைத் திறந்துவிடுகிறார்.

ஆகையால் மோக்ஷ வாசல்களின் திறவுகோல்கள் திவ்விய இரக்ஷகருடைய கையிலிருக்கின்றன. பரலோகத்திலும் பூலோகத்திலும் அவருக்கு சர்வாதிகாரமும் உண்டு. (மத். 28 : 18.) அப்படியிருக்க அந்தத் திறவுகோல்களைச் சுவாமி அர்ச். இராயப்பர் கையில் கொடுத்து மோக்ஷ வாயில்களை மனிதருக்குத் திறக்கவும் பூட்டவும் அவருக்குப் பூரண தத்துவம் அளித்தபோதே, இராயப்பர் இந்தப் பூமியிலே சேசுநாதர்சுவாமியுடைய மெய்யான பிரதிநிதியாக நியமிக்கப்பட்டிருக்கிறாரென்று அறிவாளர் யாவரும் அத்தியம் ஒப்புக்கொள்ளவேண்டியது. ஆகவே இராயப்பர் சேசுநாதர்சுவாமியுடைய மெய்யான சாயலாய் மனிதருக்கு மோக்ஷ வழியும் வாசலுமாகிறார். ஆகையால் சேசுநாதருடைய திரு வேதத்தைப் போதிக்கிறதிலே அவர் தவறவேமுடியாது.

6-வது. அப்போஸ்தலர்களைச் சாத்தான் தந்திர சோதனையாகிய சுளகிலே போட்டுக் கொழிக்க உத்தரவு கேட்கிறதென்று சுவாமி அவர்களுக்கு அறிவித்தபின், இராயப்பரை மாத்திரம் தனியே தெரிந்துகொண்டு, நான் உன் விசுவாசம் நழுவிப்போகாவண்ணம் பிரார்த்தித்தேன்; நீ ஒருதரம் மனந்திரும்பினபின் உன் சகோதரர்களாகிய மற்றவர்களை உறுதிப்படுத்தென்கிறார். இந்த வாக்கியத்தினாலே அர்ச். இராயப்பர் மற்ற மனிதரைப்போலே தவறக்கூடியவர்தானென்றும் அவ்வாறு தவறி விழுவாரென்றும் தெளிவாகிறது. அதற்குமேல் மனந்திரும்பி சேசுநாதர்



[redacted]வாமி அளிக்கும் ஒரு விசேஷ வரத்தினாலே தவறிப் போகக்கூடிய மற்றவர்களை வேத விசுவாசத்திலே ஸ்திரப்படுத்தும்படியான சக்தி அடைகிறார். இதுவே வேதம் போதிப்பதிலே தவறா வரமென்னப்படும்.

பி.: அர்ச். இராயப்பர் எப்போது தவறி விழுந்தார், அம்மா?

தாய்: சேசுநாதர்சுவாமி பாடுபடுகிற சமயத்திலே அவரை நான் அறியேனென்று ஆணையிட்டார். இதினாலே அவர் கனமான பாதகத்தைக் கட்டிக்கொண்டதற்குச் சந்தேகமில்லை. அர்ச். இராயப்பர் நம்மைப்போலே ஒரு மனிதன்தானே. ஆகையால், நாம் நமது சுயநடத்தையிலே பிசகிப்போகிறாப்போலே அவரும் தன்பாட்டுக்கு நடத்தும் விஷயங்களிலே குற்றவாளியாகக்கூடியவரன்றி மற்றப்படியல்ல. ஆனால் சேசுநாதர்சுவாமியுடைய பேராலே அவருண்டிய வேதத்தைத் திருச்சபைக்குப் போதிக்கும்போது அவருடைய போதனையிலே பிழை வராதபடி விசேஷ வரம் பெறுகிறார்.

பி.: கத்தோலிக் திருச்சபையை ஆண்டுவருகிற அர்ச். பாப்புகள் இராயப்பருடைய ஸ்தானத்திலேயிருக்கிறார்களென்று நீங்கள் முந்தியே ஒப்பித்திருக்கிறீர்கள். அப்படியிருக்க அவர்களுக்கும் சேசுநாதர்சுவாமியுடைய வேதத்தைப் போதிக்கிறமட்டில் தவறாத வரமுண்டோ?

தாய்: ஆம், உண்டென்பதற்கு எள்ளளவேனும் ஐயமில்லை. வேதபோதனையிலே அர்ச். பாப்பானவருடைய குரலொலியும் இராயப்பருடைய குரலொலியும் ஒன்றே. ஆகையால் அர்ச். இராயப்பர் பேசினாப்போலேதான் அர்ச். பாப்புகளும் பேசவேண்டியது. தவறிப்போய் விகாரமாய்ப் பேசினால் இராயப்பருடைய பேச்சுகள் திருச்சபையில் இல்லாமற்போகும். அப்போதனை திருச்சபையில் அற்றுப்போனால், சேசுநாதர்சுவாமி தமது உயிரைக் கொடுத்துப் பிறப்பித்த சபை ஒழிந்துபோயிற்று. அது ஒழிந்தால் சேசுநாதர்சுவாமி மனிதரை ஈடேற்ற

மனிதாவதாரமெடுத்துப் பாடுபட்டதெல்லாம் பலனற்ற வெட்டி வேலையென்கலாகும். இந்த அபாண்டத்தைப் பரிச்சேதஞ் சொல்லமுடியாது என்கிறதினாலே அர்ச். இராயப்பருக்கு வேதம் போதிப்பதிலே அளிக்கப்பட்ட தவறா வரம் அவருடைய பிரதிநிதியான அர்ச். பாப்பானவருக்கும் அருளப்பட்டிருக்கிறது என்பது சத்தியமான காரியம். இதை மாறாத விசுவாச சத்தியமாகச் சகல கிறீஸ்துவர்களும் ஒப்புக்கொள்ளக் கடமையென்று 1869-ம் வருஷம் உரோமை நகரில் வத்திக்கான் ஸ்தலத்தில் கூடிய திருச்சபை பொதுச் சங்கம் கட்டளை பிறப்பித்ததுமன்றி, இதை முழு மனதோடே ஒப்புக்கொள்ளாமல் இதற்கு விரோதமாய்ப் பேசுகிறவன் சாபத்துக்கு ஆளாகிறானென்று தீர்வையிட்டது.

இந்த உலகத்திலே, மகனே, சகல மனிதரும் தப்பறையான போதனைகளை வேத காரியத்திலே பிதற்றக்கூடியவர்களாமே. இந்த பலவீனத்தை அறிந்த நமது ஆண்டவர் நமக்கு ஈடேற்ற வழியைப் பிசகாமல் காட்டும்படி அர்ச். இராயப்பருக்கும் அவருடைய பிரதிநிதியாகிய அர்ச். பாப்பானவருக்கும் தவறாத வரத்தை அளிக்கத் தயைபுரிந்தார். இந்த மகா பெரிய உபகாரத்துக்கு நீ எந்நாளும் நன்றியறிந்து திருச்சபை படிப்பிக்கிற சத்தியங்களை மாறா உறுதியோடே விசுவசிக்கக்கடவாய்.

---

## 27. தவறா வரமும், சாஸ்திர முறுக்கும்.

பிள்ளை: அம்மா, நீங்கள் போன பாடத்திலே படித்துக்கொடுத்த பிரகாரம், அர்ச். இராயப்பரும் அவருடைய பிரதிநிதியாகிய அர்ச். பாப்பானவரும் சேசுநாதர்சுவாமியுடைய வேதத்தை உலகத்துக்கு உபதேசிக்கிறதிலே தவறாத வரம் பெற்றிருக்கிறார்களென்பது நிச்சயம். இதை விசுவசியாதவர்கள் திருச்சபைக்குப் புறம்பாகத் தள்ளுண்டு போகிறார்களென்பதற்கும் மறுபேச்சில்லை. ஆயினும்



இதின்மட்டில் வேத விரோதிகள் வீண் குதர்க்கங்களை எழுப்புகிறபடி அர்ச். பாப்பானவருக்கு அருளப்பட்ட தவறா வரத்தின் வரையளவு இன்னதென்று திட்டமாய்ச் சொல்லக் கோருகிறேன்.

தாய்: சேசுநாதர்சுவாமியால் அர்ச். இராயப்பர்பேரிலும் அவருடைய பிரதிநிதியாகிய அர்ச். பாப்பானவர்பேரிலும் இருவகைக் கடமை சுமத்தப்பட்டிருக்கிறது. (1) மனிதர் ஈடேறுவதற்கு அவசியமான வேத சத்தியங்களையும் நல்லொழுக்கத்தையும் போதிப்பது முதல் கடமை. (2) சேசுநாதர்சுவாமியுடைய திருச்சபையைக் காப்பாற்றி விர்த்தியாக்குகிறது இரண்டாங் கடமை.

சேசுநாதர்சுவாமி படிப்பித்த வேத சத்தியங்களையும் நல்லொழுக்கத்தையும் உலகத்துக்குப் போதிப்பதிலேதான் அர்ச். பாப்பானவருக்குத் தவறா வரம் உண்டென்கிறோம். இத்தவறாத வரத்தின் (Conditions) சங்கேதங்களாவன :—

1-வது. அர்ச். பாப்பானவருடைய போதகத்தை நம ஆண்டவர் வெளிப்படையாய் அல்லது குறிப்பர்த்தமாய் (Implicitly) தெரிவித்திருக்கவேண்டியது. ஏனெனில் திவ்விய இரட்சகர் அப்போஸ்தலர்களை நோக்கி: "நான் உங்களுக்குக் கற்பித்தவைகளையெல்லாம் சகல ஜனங்களுக்கும் பிரசங்கிப்பீர்கள். விசுவசித்து ஞானஸ்நானம் பெறுகிறவன் ஈடேறுவான்" என்றார். ஆகையால் அர்ச். பாப்பானவர் தாமாய் ஒரு வேத போதனையை நவமாய் உண்டாக்கப்படாது.

2-வது. அர்ச். பாப்பானவர் சேசுநாதருடைய பிரதிநிதியாகத் திருச்சபை முழுமைக்கும் திட்டமான யாதொரு வேத சத்தியத்தைப் போதிக்கவேண்டியது. அப்படியே தேவமாதா அமலோற்பவி என்பது வேத சத்தியமென 9-ம் பத்திநாதர் பிரசித்தம்பண்ணினபோது தாம் சேசுநாதர்சுவாமியுடைய பிரதிநிதியாயிருப்பதினாலும் ஆண்டவர் தமக்கு அளித்த அதிகார பலத்தினாலும் தேவதாயின் அமலோற்பவம் வேதசத்தியமென்று கூறினார்.

இப்படியல்லாமல் அர்ச். அகுஸ்தீன், அர்ச். தோமாஸ் முதலிய சாஸ்திரிகளைப்போலேமாத்திரம் யாதொரு வேத போதனையை அர்ச். பாப்பானவர் பிரசங்கித்தால் அப்போது தவறாத வரம் அவருக்கில்லை. மேற்படி சாஸ்திரிகளைப்போலே இவரும் வேத சம்பந்தமான பிரபந்தங்களை யெழுதினால், அவைகளைத் தவறா வரத்தால் எழுதினாரென்ன வொண்ணாது. அவைகளில் பிசகுகள் இருந்தால் ஆச்சரியப்பட இடமில்லை.

3-வது. தாம் போதிக்கிற குறிப்பான யாதொரு வேத சத்தியத்தைச் சகல கிறீஸ்தவர்களும் ஒருப்பட ஒருமனமாய் விசுவசிக்கக் கடனென்று விளம்பரம்பண்ண வேண்டியது. ஆகையால் யாதொரு தேசத்துக்குமாத்திரம் வேத விஷயமாய் அர்ச். பாப்பானவர் அனுப்பும் நிருபம் தன்னிலே தவறாத வரத்தினின்று பிறந்த நிருபமென்று மதிக்கலாகாது.

4-வது. கடைசியாய் மேற்சொன்னவாறு திருச்சபையார் அனைவரும் விசுவசிக்கக் கடமையென்று அறிவிக்கப்பட்ட யாதொரு வேத சத்தியத்தை முழுமனதோடே விசுவசியாதவன் திருச்சபைக்குப் புறம்பாகத் தள்ளுண்டு போகவேண்டியது. ஏனெனில் அப்போஸ்தலர்களுடைய வேதப் படிப்பினையை விசுவசியாதவன் சாபத்துக்குள்ளாகிறானென்று ஆண்டவர் திருவுளம்பற்றியிருக்கிறார். (மாற். 16: 16.) ஆகையால் அர்ச். இராயப்பருடைய பிரதிநிதியாகிய அர்ச். பாப்பானவர் திருச்சபையாவற்றுக்கும் மேற்சொல்லியபடி கற்பிக்கும் வேத சத்தியத்தை முழுமனதோடே விசுவசியாதவன் சபிக்கப்பட்டவனாகிறான். திருச்சபைக்குப் புறம்பாகவும் தள்ளுண்டு போகிறான்.

பி.: அம்மா, தேவமாதா அமலோற்பவியென்று வேத சத்தியமாகத் திருச்சபைக்கெல்லாம் தெரிவிக்கலானபோது, நீங்கள் குறிப்பிடுகிற சங்கேதங்கள் அனைத்தும் நிறைவேறினதா?



தாய்: ஆம், மகனே, அர்ச். பாப்பானவர் அச்சமயத்திலே பிரசித்தப்படுத்திய பொது நிருபத்தின் முடிவிலே அவர் வரைந்ததை இங்கு எடுத்துரைக்கிறேன். நன்றாய்க் கேள்.

9-ம் பத்திநாதர் கூறிய வாக்கியமாவது:—"சேசுநாதர் சுவாமியினதும் அப்போஸ்தலர்களாகிய அர்ச். இராயப்பர் சின்னப்பரினதும், நமதுமான அதிகாரத்தினாலே மாறாத நிலைமையுள்ள வேதசத்தியமாகப் பிரஸ்தாபமாக்குவதென்னவெனில், அர்ச். கன்னிமரியம்மாள் உற்பவமான முதல் நிமிஷத்திலேயே, சர்வேசுரன் உலக இரக்ஷகரான சேசுக்கிறீஸ்துவின் பேறுபலன்களை முன்னிட்டே எடுத்து நோக்கி அவளுக்குச் செய்யத் திருவுளமான விசேஷ தயவினாலும் மாப்பினாலும், ஜென்மப்பாவத்தின் கறை யாதொன்றுமின்றிக் காப்பாற்றப்பட்டாள். இந்தச் சித்தாந்தம் சர்வேசுரனாலே தெரிவிக்கப்பட்ட வேத சத்தியம். ஆகையால் இச்சத்தியத்தை விசுவாசிகள் அனைவரும் மாறா உறுதியோடே விசுவசிக்கக்கடவார்கள். தவறி யாதாமொருவன் நாம் இங்கு விளம்பரமாக்கும் உண்மைக்கு மாறுபாடான எண்ணங்கொண்டால் அவன் தன்னைத்தானே சபித்துக்கொள்ளுகிறான், அவனுடைய விசுவாசம் மோதி உடைந்துபோயிற்று; அவனும் திருச்சபையின் ஐக்கிய ஏகோபிப்பினின்று நழுவி விழுந்து போனான் என்று அறியக்கடவானாக."

இவ்வாக்கியங்களில் நான் ஏற்கனவே குறிப்பிட்ட சங்கேதங்கள் பளிச்செனத் துலங்குவதால் அவைகளைப் பற்றி விவரித்துப் பேசவேண்டியதில்லை.

பி.: வேத சத்தியங்களைச் சர்வேசுரன் குறிப்பார்த்தமாய்த் தெரிவிக்கிறதெப்படி?

தாய்: அர்ச். கன்னிமரியம்மாள் அமலோற்பவியென்பது குன்றாத வேத சத்தியமென்கிறேன். இதை சேசுநாதர் சுவாமி வெளிப்படையாகப் போதித்தாரென்க இடமில்லை. ஆனால் பரிசுத்த கன்னிகை படைப்புண்ட வஸ்துகளுக்

எல்லாம் மேலாகச் சர்வேசுரனுடைய தாய் என்னும் அதி உன்னத பட்டத்துக்கு உயர்த்தப்பட்டாள். தேவ வரங்களால் பூரிக்கப்பட்டவள் என்கிற இந்த இரு பரம இரகசியங்களைச் சர்வேசுரன் வேதத்திலே வெளிப்படுத்தின போதே, தேவமாதா அமலோற்பவியென்னும் சித்தாந்தம் அவைகளில் உட்பொருளாகத் தொகுப்பாய் அடங்கியிருக்கிறது. ஆகையால் தேவதாயின் அமலோற்பவம் உள்ளார்த்தத்திலே சர்வேசுரனால் தெரிவிக்கப்பட்ட வேத சத்தியமென்கப்படுகிறது.

பி.: இந்தப் பிரபஞ்சலோகத்துக்கடுத்த வித்தை சாஸ்திரங்களைப்பற்றி அர்ச். பாப்பானவருடைய அபிப்பிராயம் தவறாத வாக்கு என்கலாமோ?

தாய்: வேத சம்பந்தமான போதனைகளை முதலாய் அர்ச். பாப்பானவர் தம்பாட்டுக்கு ஜனங்களுக்குப் பிரசங்கிக்கும்போதாவது பிள்ளைகளுக்கு உபதேசிக்கும்போதாவது தவறா வரத்தோடே பேசுகிறார் என்கவொண்ணாது. இது இத்தன்மையானால் அண்டபிண்ட லோகத்துக்குரிய சரித்திரங்கள் வித்தைகள் சாஸ்திரங்களிலே அர்ச். பாப்பானவரின் கொள்கை தன்னியல்பிலே தவறா வரத்தின் முத்திரை பெற்றதென்கப்படாது.

ஆயினும் யாதொரு பௌதீக சாஸ்திரியின் கொள்கை வேத சத்தியத்துக்கு எதிரிடையாயிருக்கிறதென்று பாப்பானவருக்குப் புலப்பட்டால் அக்கொள்கை பிரசித்தமாகாமல் இருக்கும்படி அந்தச் சாஸ்திரிக்குக் கற்பிக்க அர்ச். பாப்பானவருக்கு அதிகாரமுண்டு. அவ்வித கட்டளைக்குப் பணியக் கடனுமே. ஏனெனில் அர்ச். பாப்பானவருக்கு விசுவாசிகள் கீழ்ப்படிகிற காரணம் அவருக்குத் தவறா வரம் இருக்கிறதென்றல்ல, அவர் சேசுநாதர் சுவாமியுடைய பிரதிநிதியாகத் திருச்சபையை ஆளுகிற இராஜாவாயிருப்பதினாலே.

பி.: ஆனால் பதிதரும் மற்ற இதர மதத்தாரும், ஆழ்ந்த விசுவாச வேரற்ற சத்தியவேதக் கிறீஸ்துவர்களும்



ருங்குடன் எழும்பி உலகத்திலே மனித புத்தியை விர்த்தி செய்து விசாலமாக்குகிற கல்வி, வித்தை, சாஸ்திர சித்தாந்தங்களுக்கு அர்ச். பாப்புகள் எதிரிடையாய் நிற்கிறார்களென்று இகழ்ந்து பேசுகிறார்களே, அவர்கள் வாயை அடைக்கிறதெப்படி?

தாய்: மகனே, நீ எடுத்துக்காட்டிய விலலங்கத்துக்கு ஏற்ற பதில்மொழியைக் கண்டு உணரும்படி ஒரு மூலாதார சத்தியம் உன் மனதில் ஊன்றவேண்டியது. அதாவது, வேத விசுவாசமும் தெய்வபக்தியும் உலக அறிவுக்கெல்லாம் உயர்ந்த ஞானமென்பதே. சர்வலோகமும் இயல்பிலே ஒப்புக்கொள்ளுகிற சித்தாந்தமிது. நமது சீமையெங்கும் பேரோங்கி விளங்கிய திருவள்ளுவர் இச் சத்தியத்தை வெகு தெளிவாய்ப் போதிக்கிறார். அஞ் ஞானியாயிருந்தும் அவர் இதுவிஷயமாய் விளம்பியதென்னவெனில்:—

"கற்றதனால் ஆயபயன் என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்" என்றவாறு.

இதின் பொருளாவது, மெய்யான ஞானத்தை உடைய தெய்வத்தின்மேல் பக்தியில்லாமல் என்னென்ன வித்தை கற்றாலும் பிரயோசனமில்லையென்றாம். இவ்வாக்கியத்தை முந்தப் பசாசின்மேல் காட்டித் தெளிவிக்கலாம். உலகமுண்டானது முதல் அது முடியும்வரையில் அதில் வசிக்கும் சகல மனிதருடைய புத்தி சூட்சத்தையெல்லாம் தொகுத்து ஒருவரிடத்தில் ஏற்றினாலும் ஒரு பேய்க்குள்ள வித்தை சாஸ்திரங்களின் கால் அளவுக்கு வராதென்பது உண்மை. ஆயினும் இந்த அணைகடந்த தீரத்துவத்துடன் தெய்வ பக்தி ஒரு அணுப்பிரமாணமென்கிலும் பேய்க்குக் கிடையவே கிடையாதே. அண்டபிண்டத்தையெல்லாம் அளாவும் அதனுடைய சாஸ்திர ஜாலத்தினாலே அதுக்கு வந்த பலனென்ன? அறிவுக்களவாக அதன் துன்ப வேதனை அதிகரிக்கிறதேயன்றி வேறே லாபமில்லை. மனிதன் என்னென்ன விதம்விதமான வித்தைகளையும் பயின்றாலும் பேய்க்குள்ள புத்தி சூட்சத்தை அவன் அடையப்

[illegible]றதில்லை. அடைந்தாலும் அதை விற்றுத் தெய்வ பக்தியை வாங்கிக்கொள்வது உத்தமமென்று மேற்கூறிய திருவள்ளுவர் வாக்கியமானது படிப்பிக்கிறது. பேய்க்கும் [illegible]டவர் உத்தரவுகொடுத்தால் அது உடனே [illegible]புமென்பதற்குச் சந்தேகமில்லை. அந்தப் [illegible]யும், [illegible], அதற்கு வழியிலுங் கிடைக்கப்போ[illegible]ன்பதையும் அறிவார் எல்லோரும்.

இது நிற்க, அர்ச். பாப்பானவர் கிறீஸ்துவர்களுடைய வேத விசுவாசமும் தெய்வ பக்தியும் பழுது அடையாதபடி யாதொரு சாஸ்திரி தன் வித்தையைப் பிரசித்தமாக்க வேண்டாமென்று கற்பித்தால், அதுக்குப் பணிந்து நடப்பது அந்தச் சாஸ்திரியின் கடமை. ஏனெனில் வேத விசுவாசமும் அதில் ஊன்றியிருக்கிற தெய்வ பக்தியும் எந்த வித்தை சாஸ்திரத்துக்கும் மேற்பட்டது. இதுக்கு மாறாகத்தான் உலக வித்தை அதிகஞ் சிறந்ததென்று பாராட்டினால், மனித சுபாவத்துக்கு இயல்பாயிருக்கவேண்டிய புத்தி, அவனுக்கு இல்லையென்று தீர்க்கலாயிற்று. இன்னுஞ் சொல்லவேண்டுமானால் பேய்க்கு இவ்விஷயத்திலேயுள்ள நேர்மையான புத்தி அவனுக்கில்லாமல் போயிற்று. ஏனெனில் பேய் தன்னால் கூடுமானால், தன் புத்தியின் வித்தைகளையெல்லாம் விற்றுத் தெய்வ விசுவாச பக்தியைக் கைக்கொள்ளும்.

மனிதர் கற்றுக்கொண்ட அதிமிக வித்தை சாஸ்திர சூட்சங்களாலே வந்த பயனென்னவென்று, கடந்த ஐரோப்பிய யுத்தத்தில் சகலரும் கண்கூடாய்ப் பார்த்துப் பிரமித்துப் புலம்பினதை அறியாதவர் யார்? சகலவிதப் படிப்புகளிலும் தேர்ச்சியடைந்து ஓங்கியெழும்பிய மே[illegible] பலர் தங்கள் தந்திர சூத்திரங்களாலே இந் 20-ம் நூற்றாண்டிலே வானத்தை அளாவுதல் கை[illegible]மென்று கெம்பீரமாய்ப் பேசிவந்தார்களே. தங்க[illegible] வித்தையினாலே மானிட உயிர் நீடிக்கும், பீடை பிணி[illegible] பறந்தோடும், கிழவர் வாலிபர் ஆவார்கள், நரைமயிர் [illegible] மயிராகும், சோர்ந்துபோன இரத்தம் துடித்துக்கொண்



டோடும், கிட்டிவந்த சாவு விட்டெடுத்தோடும், இந்தப் பாழ்லோகம் வாழ் உலகமாய் மாறுமென்று வீம்புகாட்டிப் பறைசாற்றினார்களே. இனி மோக்ஷம் ஏது, தெய்வமேது, இப்பூதலமே பரகதியாம், மனுஷனே தெய்வமாமென்று தொடைதட்டிக் கைகொட்டிச் சபதங் கூறினார்கள் புத்தியில்லோர் பலர்.

ஐயோ, இந்த மனோராச்சிய பூலோக பரகதியெல்லாம் யுத்தத்தில் சிட்டாய்ப் பறந்து கட்டாய்ப் போய்விட்டதே! தங்கள் சூட்ச வித்தையைப் பாராட்டிவந்த சாஸ்திரிகள் உற்பத்தியாக்கின சாக்காட்டு எந்திரங்களாகிய பீரங்கிகள், வெடிகுண்டுகள் (Bombs), பாஷாணவாயு, விஷப்புகைகளால் திடீர் திடீரெனக் கொலையுண்டு மடிந்தவர்களின் தொகையானது குறைந்த பட்சம் 25 லட்சமாகும். இதன்றியே காயப்பட்டுக் கால் ஒடிந்து, கைமுறிந்து, கண் தெறித்து, காது கிழிந்து, மூக்கறுந்து, பல்லுடைந்து, குடல் பிதுங்கி, நெஞ்சடைத்து, ஈரல் பிளந்து, இருதயஞ் சுருங்கி, ஈரக்குலை இரத்தங் கக்க, பிழைத்தாலும் அருமையான மக்களுக்கும் அன்பான மனையாளுக்கும் ஆறுதலற்ற பாரமாய் யாதொரு தொழிலுஞ் செய்து பிழைக்க ஏலாமல் காலத்தைக் கழிக்கவேண்டியிருக்குமேயென்று மூளை சிதறி அலறிப்பதறி அழுதுகொண்டு ஆஸ்பத்திரிகளிலும் இன்னும் மற்ற இடங்களிலும் கிடந்து ஏக்கம் பிடித்துப் புரளுகிற பராக்கிரம சேவகர் எத்தனைபோ லட்சம். கடலில் ஓடிய வியாபாரக் கப்பல்களும் யுத்தக் கலங்களும் வெடிகுண்டுகளால் தகர்க்கப்பட்டு அமிழ்ந்திப்போனது எத்தனை. அவைகளில் மாய்ந்த உயிர்களின் கணக்கென்ன? எவ்வளவு லட்சக்கணக்காய்ப் பணச்சேதமுண்டாயிற்று? பட்டணங்களும் ஊர்களும் சிறந்த மாடமாளிகைகளும் கோபுர கொத்தளங்களும், தேவாலயங்களும், புத்தக மனைகளும், வித்தியாசாலைகளும், மகா மகா அருமையான பிரபந்தங்களும் அக்கினிக்கிரையானது. கற்றோர்களென்றும், நாகரீக சிரோமணிகளென்றும் பேரெடுத்த சாஸ்திரிகளுடைய கூர்ந்த சூட்சத்தாலே ஐயோ, பரிதாபம்,

இந்தக் கண்ணராவி, எந்தக் காட்டுமிராண்டிகள் காலத்திலும் கண்டதில்லை, கேட்டதில்லை. ஐயோ, "கற்றதனாலாய பயன் என்கொல்" என்று கோல் என நகைப்போமோ? கோவென்று அழுது புலம்புவோமோ?

இவ்வாறு சாஸ்திரிகள் உலகத்தைக் கருமாயமாய் அழிக்கையிலே, அர்ச். பாப்பானவர் மாத்திரம், யாதொரு சாஸ்திரியை நோக்கி, நீ உன் கொள்கையை உனக்குள்ளே வைத்துக்கொள், வெளியிடாதே. வெளியிட்டால் ஜனங்களுக்குள் வேத விசுவாசமும் தெய்வ பக்தியும் சீர்குலையுமென்று மொழிந்தால், வீறுப்புக்கொண்டு கூர் கெட்ட சாஸ்திரிகள் எழும்பி, பாப்பானவர் கல்வி சாஸ்திர விருத்தியைக் கெடுத்து மனிதரை கார் இருளில் அடைத்து ஆளப் பார்க்கிறார் என்று பிதற்றி, பித்தம் மிஞ்சிப்போய்ப் பத்திரிகைகளிலெல்லாம் கொம்பு ஊதுகிறார்கள்.

வேத விசுவாசமும் தெய்வ பக்தியும் வித்தை சாஸ்திரங்களுக்கு மேலாக மதிக்கப்படவேண்டுமென்பது மனிதர் இயல்பாய் உணர்கிற சித்தாந்தம். இதுக்கொப்பாக அர்ச். பாப்பானவர் யாதொருவனுடைய கல்வி சாஸ்திரத்தினாலே வேத விசுவாசத்துக்கும் தெய்வ பக்திக்கும் ஒவ்வாத கெட்ட புத்தி திருச்சபையில் எழும்புமென்று கண்டு, அவனுடைய புஸ்தகங்களைப் பிரசுரஞ் செய்யப்படாது, வாசிக்கப்படாதென்று விலக்குகிறது மிகவும் நியாயமான போங்காமே.

பி.: இந்த விலக்கல் தமக்குள்ள தவறா வரத்தின் பலத்தினாலே செய்கிறாரோ?

தாய்: தவறா வரத்தைச் செலுத்துவதற்குரிய சங்கேதங்கள் தோன்றாதபோது அதன் பலத்தினாலேயல்ல, பொதுவிலே திருச்சபையின் மேய்ப்பனென்கிற பட்டத்துக்குரிய அதிகாரத்தினாலே அந்த விலக்கங்கள் செய்கிறார். இவ்விதம் விலக்கப்பட்ட கிரந்தங்களையாவது, கொள்கைகளையாவது வேத விசுவாசத்துக்கு ஏற்றவண்ணம் அர்த்தஞ்சொல்லி விளக்கிக்காட்டினால் அர்ச். பாப்பானவர் தாம்



போட்ட மறியலை எடுத்துப்போடுகிறார். நடந்த ஒரு பெரிய வர்த்தமானம் இதைத் தெளிவிக்கும்.

## வரலாறு.

உலகத்திலே நாளதுவரையில் நடக்கிற பேச்சின்படி, சூரியன் ஓடுகிறது, பூமி நிற்கிறது. வேதகிரந்தமும் இந்த உலக வழக்கத்தை அநுசரித்துச் சூரியன் ஓடுகிற பாவனையாகத்தான் பேசுகிறது. நானூறு வருஷங்களுக்கு முன் தோன்றின லூத்தர் என்பவர் சுவிசேஷத்துக்கு அவனவன் புத்திப்படி அர்த்தம் பண்ணலாமென்று போதித்து ஐரோப்பிய கண்டத்திலே திக்காலுக்கொரு பதித மதம் ஏற்பட வழி திறந்தார். இதினாலே ஒரே இராட்சியத்திலே கட்சிகளும் சண்டைகளும் கொலைகளும் விளைந்தன. இப்படிக் கலகங்கள் நடக்கிற காலத்திலே சத்திய வேதத்திலே பிறந்து வளர்ந்த காலீலேயோ (Galiloo) என்பவர் கணித நூல், வான சாஸ்திரங்களைத் தீரக்கற்று, "சூரியன் ஓடுகிறதில்லை, பூமிதான் சூரியனைச் சுற்றி ஓடுகிறது. பூமி தன்னையுஞ் சுற்றி உருளுகிறது" என்று போதிக்கத் துவக்கினார். இந்த நூதனம் கற்றோருக்கும் கல்லாதாருக்கும் வெகு விகாரமாகத் தோன்றினதினாலே காலீலேயோவை நகைத்தார்கள். இவருடைய கொள்கை வேத வாக்கியத்துக்கும் விரோதமாயிருக்குமோவென்றும் பரிசோதிக்கும்படி நேரிட்டது. அதற்கு அர்ச். பாப்பானவர் சில வித்தியாபாரகரை நியமித்தார். அவர்கள் விசாரணை செய்து காலீலேயோவின் கொள்கை பதிதப் புத்தியினாலே வந்ததென்று தீர்த்து அவரைக் கண்டித்து அதை வெளியிடப்படாதென்று தீர்த்தார்கள். ஆனால் பிற்காலத்தில் நல்ல மனமும் வேத விசுவாசமும் குறையாத பல சாஸ்திரிகள் காலீலேயோ என்பவருடைய கொள்கை வேத வாக்கியத்துக்கு மாறுபாடானதல்லவென்று அர்ச். பாப்பானவருக்கு ஒப்பித்தார்கள். அதன்மேல் மேற்கூறிய கொள்கையின்மேல் போடப்பட்டிருந்த மறியலைப் பாப்பானவர் எடுத்துப்போட்டு அவரவர்கள் இஷ்டப்படி அதை வெளியிடலாமென்று உத்தரவளித்தார்.

நீங்கள் என்றும் கவனிக்கவேண்டியதென்னவெனில், கலிலேயோவுக்குச் செய்யப்பட்ட விலக்கம் தவறா வரத்தின் சக்தியினாலேயல்ல என்பதாம். ஏனெனில் அதற்கு வேண்டிய சங்கேதங்கள் குறைபடுகிறது. *திருச்சபையைப் பழுதில்லாமல் காப்பது அர்ச். பாப்பானவருடைய கடமையாயிருப்பதால், சாஸ்திரம் அழிந்தாலும் பாரமல்ல வேத விசுவாசத்துக்குக் குறை வரப்படாதென்று மறியல் செய்தாரேயொழிய வித்தை சாஸ்திரங்களுக்கு எதிரிடை பண்ணவேண்டுமென்கிற துர் எண்ணம் பரிச்சேதம் அவரிடத்திலில்லை. ஆகையால், மகனே, வேத விரோதிகள் அர்ச். பாப்பானவருக்கு விரோதமாய்க் கக்குகிற புறணிகளை எள்ளளவேனும் செவிகொடுத்துக் கேளாதே. சாஸ்திரம் ஒழிந்தாலும் ஒழியட்டும், வேத விசுவாசம் ஒரு அணுவளவென்கிலும் குறையப்படாது என்கிற உறுதிப் புத்தி உன் மனதில் வேரூன்றியிருக்கவேண்டியது. யாரும் எதிர்வாதஞ் செய்யத் தலைப்பட்டால்,

"கற்றதனால் ஆயபயன் என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழார் எனின்"

என்று பாடு. அதுவே எல்லார் வாயையும் அடக்கும் பதிலாகும்.

---

## 28. கத்தோலிக் வேதத் தொகுதி ஒற்றுமை.

பிள்ளை: அம்மா, நீங்கள் விவரித்தபடி அர்ச். பாப்பானவருக்குரிய தவறா வரத்தின் இலக்கணத்தை அறிந்து கொண்டேன். அவருடைய ஏக அதிகாரம் திருச்சபையின் நிலைமைக்கு அத்தியாவசியமென்பது தன்னாலே விளங்குகிறது. இது சேசுநாதர்சுவாமியுடைய வேதத்துக்குப் பிரதானமான குறிதான். இதையன்றி வேறு குணங்களும் சத்திய திருச்சபைக்கு உண்டோ?

தாய்: ஏகத்துவம் அல்லது ஒருமைப்பாடு திருச்சபையின் இரண்டாம் இலக்ஷணமாகும். இது திருச்சபை



யின் ஏக தலைமைத்துவத்தினின்று பிறக்கிறது. திருச்சபைக்குத் தலைவர் ஒரேயொருவரன்றி பலபேர்களல்ல. அவரை அர்ச். பாப்பு என்கிறோம். அவருக்கு சேசுநாதர் சுவாமி படிப்பித்த வேத சத்தியங்களைப் போதிப்பதிலே தவறா வரம் அளிக்கப்பட்டிருக்கிறது. இந்த வரமோ இதர மதத்தாரைப்போலே ஒன்றுக்கு ஒன்று ஒவ்வாத போதகங்களை அர்ச். பாப்பானவர் போதிக்காதபடி காக்கிற கேடயமாகும். (எபே. 6 : 16.)

ஆகவே இந்த மண்ணுலகத்திலே தேசங்களெத்தனை? பாஷைகளெத்தனை? வர்ணாசாரங்கள் எத்தனை? இராஜாங்கங்கள் எத்தனை? உடை உணவு வகைகள் எத்தனை? சீமை வழக்கங்களெத்தனை? அவைகள் எத்தனையாயினுஞ் சரி, எம்மாத்திரந்தான் தத்தமக்குள் பேதகமாயிருந்தாலுஞ் சரி, அவைகளையெல்லாம் சேசுநாதர்சுவாமியுடைய திவ்விய வேதம் ஒருங்குடன் சேர்த்து ஒரே தகப்பனாகிய அர்ச். பாப்பானவருக்குள் அமர்ந்து ஒரே இல்லமாகிய திருச்சபையிலே ஏக குடும்பமாய் வாழும்படி செய்கிறது.

பி.: இந்த ஏகத்துவத்தின் இயல்பை வேத புஸ்தகம் எப்படி வர்ணித்துக்காட்டுகிறது?

தாய்: வேதபுஸ்தகம் திருச்சபையின் ஏகத்துவத்தை வெகு சிறப்பாய் விளம்புகின்றது. அதிலடங்கிய சில மேற்கோள்களை அடியில் கூறுகிறேன்.

1-வது. நான் மன்றாடுகிறது (அப்போஸ்தலர்களாகிய) இவர்களுக்காக மாத்திரமல்ல, இவர்களுடைய வாக்கியத்துக்குச் செவிகொடுத்து என்னை விசுவசிப்பவர்களுக்காகவும் (பிதாவே, உம்மை) நான் மன்றாடுகிறேன். பிதாவே, நீர் என்னிடத்திலும், நான் உம்மிடத்திலும் ஒன்றாயிருக்கிறாப்போலே, அவர்கள் எல்லாரும் ஒன்றாயிருப்பார்களாக. நாம் ஒன்றாயிருக்குமாப்போலே அவர்களும் ஒன்றாயிருக்கும்படி நீர் எனக்குத் தந்தருளின மகிமையை நான் அவர்களுக்கு அளித்தேன். அவர்கள் ஒற்றுமையில் உத்தமராகும்பொருட்டு நான் அவர்கள் அகத்தில் இருப்பேன்,

நீர் என் அகத்தில் இருப்பீர், அப்போது உலகமானது நீர் என்னை அனுப்பினீரென்றும், நீர் என்னைச் சிநேகித்து வருகிறாப்போலே அவர்களையும் சிநேகித்து வருகிறீரென்றும் உணர்ந்துகொள்ளும். (அரு. 17 : 20-23.)

2-வது. " அர்ச். சின்னப்பர் எபேசியருக்கு வரைந்த நிருபம் முழுதும் திருச்சபையின் ஏகத்துவத்தைப் பாராட்டுகிறது. எபேசியர்களுக்குச் சின்னப்பர் சொல்லிய புத்தியாவது :—" சமாதானக் கட்டினால் மன ஒற்றுமையைக் காப்பாற்றுவதில் அக்கறை வையுங்கள். திருச்சபைக்கு உள்ளதெல்லாம் ஒரேயொரு சரீரமும் ஒரேயொரு ஆத்துமமும் அல்லாதே வேறில்லை.

ஆண்டவர் ஒரே ஒருத்தர், விசுவாசம் ஒன்றே ஒன்று, ஞானஸ்நானமும் ஒன்றேயொன்று, தெய்வம் ஒன்றே ஒன்று. அவர் சகலருக்கும் தகப்பன்." (எபே. 4 : 3-6.)

3-வது. பிதாவானவர் கிறீஸ்துநாதரைத் திருச்சபைக்குத் தலையாக்கினார். திருச்சபையோ அவருடைய சரீரமாயிருக்கிறது. (எபே. 1 : 22-23.) தலையாகிய கிறீஸ்துநாதரோடே நாம் சிநேகத்தால் ஒன்றித்து எல்லாவற்றிலும் வளரக்கடவோம். தலையாகிய கிறீஸ்துநாதரிடத்தில் சரீர முழுதும் தனது சர்வ அங்கமூட்டுக்களின் உதவியினாலே இசைவாகப் பிணைக்கப்பட்ட அந்த அங்கங்கள் ஒன்றுக்கொன்று உபகரணமாயிருந்து தமக்குரிய அலுவலைத் தங்கள் சக்திக்கேற்றபடி முடித்து வளர்ந்து பூரண விருத்தியைப் பெறுகிறது. (எபே. 4 : 15-16.)

4-வது. தன் சரீரத்தை எப்போதாவது பகைத்தவன் ஒருவனுமில்லை. அதுக்கு ஆகாரங் கொடுத்தல்லோ ஆதரிக்கிறான். அவ்வாறே கிறீஸ்துநாதர் திருச்சபைக்கு ஆகாரங் கொடுத்து ஆதரிக்கிறார். ஏனெனில் நாம் அவருடைய சரீரத்தின் அங்கங்களாய் அவருடைய மாம்சத்தில் மாம்சமாயும், எலும்புகளில் எலும்பாயும் இருக்கிறோம். (எபே. 5 : 29-30.)



5-வது. நாம் ஒருவர் ஒருவருடைய அவயவங்களாயிருக்கிறோம். (எபே. 4 : 25.) கிறீஸ்துநாதருடைய சமாதானம் உங்கள் இருதயங்களில் துள்ளி அக்களிப்பதாக. இந்தச் சமாதானத்துக்கென்றே நீங்கள் ஒரே சரீரமாகும்படி அழைக்கப்பட்டிருக்கிறீர்கள். இதற்காக நன்றியறிந்திருங்கள். (கொலோ. 3 : 15.)

6-வது. நமக்குள்ள சரீரம் ஒன்றாயிருந்தாலும் அதுக்குப் பல உறுப்புக்களுண்டு. அந்த உறுப்புக்கள் ஒரே தொழிலைச் செய்கிறதில்லை. அதேபிரகாரம் பலபேராகிய நாம் கிறீஸ்துநாதருக்குள் ஒரே சரீரமாகி, ஒவ்வொருத்தரும் ஒருவர் ஒருவருடைய அங்கமாயிருக்கிறோம்; ஒவ்வொருத்தரும் வெவ்வேறு வேலைகளுக்கான வரங்களைப் பெறுகிறோம். (உரோ. 12 : 4-9.)

7-வது. நீங்கள் அப்போஸ்தலர்கள் தீர்க்கதரிசிகள் என்னப்பட்ட அஸ்திவாரத்தின்மேல் கட்டப்பட்டவர்கள். அதற்குக் கிறீஸ்து சேசு ஆதிமூலக் கல்லாயிருக்கிறார். மாளிகை முழுதும் அவர்மேல் இசைவாய்ப் பொருத்தி இணைக்கப்பட்டு ஆண்டவருக்குள் பரிசுத்த தேவாலயமாக வளருகிறது. (எபே. 2 : 19-21.)

8-வது. கிறீஸ்துநாதர் மனிதரால் தள்ளுண்டுபோனாலும் சர்வேசுரனால் தெரிந்தெடுத்து மதிக்கப்பட்ட ஜீவக் கல்லாமே. நீங்களும் ஜீவக் கற்களுக்கொப்பாய் ஞான மாளிகையாகக் கோப்பாய்க் கட்டப்பட்டிருக்கிறீர்கள். (1 இரா. 2 : 4-5.)

9-வது. ஜோனாவின் புத்திரனாகிய சீமோனே, நீ பாக்கியவான்......உனக்கு நான் சொல்லுகிறதென்னவெனில், நீ கேபாஸ் (பாறை) ஆயிருக்கிறாய். இந்தப் பாறையின்மேலே என் திருச்சபையைக் கட்டுவேன். நரக வாசல்கள் அதை மேற்கொள்ளமாட்டாது. (மத். 16 : 17-18.)

10-வது. நெருக்கமான வாசல் வழியாய் நுழைந்து போங்கள். ஏனெனில் அதோகதிக்குக் கொண்டுபோகும்

வாசல் அகன்றதும் அதின் வழி விசாலமுமாயிருக்கின்றது. அதில் புகுவோரும் அநேகம். ஜீவியத்துக்குக் கொண்டுபோகும் வாசல் எவ்வளவோ நெருக்கமும் அதன் வழி எவ்வளவோ இடுக்கமுமாயிருக்கின்றது. அதற்குச் செவ்வையாய்ச் செல்வோரும் சொற்பப்பேர். (மத். 7 : 13 [illegible])

11-வது. இந்தத் தொழுவத்துக்குள் சேராத வேறே ஆடுகளும் எனக்குண்டு. அவைகளையும் நான் இங்கு நடத்திவந்து சேர்க்கவேண்டியிருக்கிறது. அவைகள் என் குரலொலியைக் கேட்கும். அப்போது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமொன்றாகும். (அரு. 10 : 16.)

12-வது. "நாம் சேசுக்கிறீஸ்துவின் பூரண பிராயத்தை அடைந்து சாங்கோபாங்க மனிதராய் விசுவாசத்தில் ஒன்றித்திருக்கவேண்டுமேயொழிய, பச்சைக் குழந்தைகள்போலத் தள்ளாடி நிற்கப்படாது. உலகத்திலே தங்கள் வஞ்சகத்தினாலும், சூட்ச சூது தந்திரத்தினாலும் அபத்தப் போதனைகளுக்குள் நம்மை இழுக்கப் பார்க்கிற மானிடர்கள் உண்டு. திசைக்குத்திசை மாறி அடிக்கிற காற்றுக்கொப்பான அவர்களுடைய போதகங்கள் நம்மைச் சுழற்றி அடித்து வாரிக்கொண்டு போகாதபடி நாம் எச்சரிக்கையாயிருக்கக்கடவோம். அந்தக் கபட மாயக்காரர் நம்மை மோசம் போக்காவண்ணம் ஆண்டவர் தமது சரீரத்தை ஒரே கோப்புக்கட்டாக எழுப்பும்படி சிலரை அப்போஸ்தலர்களாகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பர்களாகவும், வித்தியாபாரகராகவும் ஏற்படுத்தியிருக்கிறார். அவர்களுடைய அலுவலின் முயற்சியினாலே நாம் கிறீஸ்துநாதருடைய சரீர உறுப்புகளாக வேண்டியது." (எபே. 4 : 11-12.)

தெய்வம் ஒன்றாயிருப்பதுபோலே அவர் வெளிப்படுத்தின [illegible]மும் ஒன்றாயிருந்து அதில் உட்பட்டவர்கள் [illegible]ம் வேத விசுவாசத்தில் ஒருமைப்பட்டிருக்கச் செய் [illegible] இலக்ஷணத்தை உடையதாயிருக்கின்றது. இந்த [illegible]ணம் ஏக சத்திய மறையாகிற கத்தோலிக்க வேதத்



மாத்திரம் உண்டென்று சகலரும் தெளிவாய் உணரும் வேதாகமத்திலிருந்து அநேக மேற்கோள்களை எடுத்து உரைத்தேன். இவைகள் திருச்சபையின் ஏகத்துவத்தை பலவகையாய்த் துலக்கிக் காட்டுகின்றன.

1-வது. தெய்வத்தினிடமாய்ப் பிதாவுக்குஞ் சுதனுக்கும் உள்ள ஒன்றிப்பிலே ஆட்கள் இரண்டானாலும் சுபாவமொன்றே. அங்ஙனமே உலகமெங்கும் பரவியிருக்கிற கத்தோலிக்கர் தேசம், பாஷை, வர்ணாசாரம் முதலிய விஷயங்களில் வெவ்வேறாக இருந்தாலும், வேத விஷயத்தில் ஒரே சுபாவம் உடையவர்கள்போல இருக்கிறார்கள். இத்தன்மையான ஏகத்துவம் தமது திருச்சபையாருக்குள் குடிகொண்டிருக்கும்படியாகத்தான் கிறீஸ்துநாதர் தமது பிதாவை மன்றாடினார். (அரு. 17 : 20-23.)

2-வது. தேவ பிதாவுக்குஞ் சுதனுக்கும் இருக்கிற ஒற்றுமை உத்தம தகப்பனுக்கும் பிள்ளைக்கும் உள்ள பூரண ஒற்றுமையாமே. அவ்வாறே ஒரே குடும்பம்போலேயிருக்கிற கத்தோலிக் சபையிலே அர்ச். பாப்பானவர் தந்தையாகவும், கிறீஸ்துவர்கள் பிள்ளைகளாகவும் வேதவிஷயமாய் ஒத்துவாழ்கிறதைக் காண்கிறோம். பாப்பானவர் என்னும் பதத்துக்கே தகப்பன் என்று அர்த்தம் பெறும்; உலகமெல்லாம் அவரைத் தகப்பனென்று அழைக்கிறது. அவரும் சகல கிறீஸ்துவர்களையும் தமது பிள்ளைகளென்று அழைக்கிறார். இது எக்காலத்திலும் ஏற்பட்ட வழக்கமாயிற்று.

3-வது. தெய்வீக ஒன்றிப்பைத் தியானித்தபின் தேவசுதன் எடுத்த மனுஷீகத்தை உற்றுப்பார்த்தால் அர்ச். சின்னப்பர் கெம்பீரமாய் வருணிக்கிறதுபோலே, திருச்சபை அனைத்தும் கிறீஸ்துநாதரின் சரீரமாயிருக்கிறது. அதற்குத் தலை அவரே, கிறீஸ்துவர்களோ அவருடைய உடம்பு கை கால் முதலிய அங்க பாகங்கள். இந்த ஒப்பனையும் போதாதென்றாற்போலே சின்னப்பர் அதிக உச்சமாய் எழும்பிக் கிறீஸ்துவின் மாம்சமும் திருச்சபையின் மாம்சமும் ஒன்று, கிறீஸ்துவின் எலும்பும் திருச்சபை

யின் எலும்பும் ஒன்றுதானென்கிறார். (எபே. 1: 22-23; 4: 15-16; 4: 25; 5: 29-30.)

சேசுநாதர்சுவாமியின் தலையும் எலும்பும் தசையும் திருச்சபையின் தலையும் எலும்பும் தசையும் ஒன்றுதான் என்கிற வாக்கியத்துக்குப் பொருளென்ன? சேசுநாதர் சுவாமியுடைய சரீரத்தின் எலும்புகளாலும் தசைகளினாலும் அசைந்து அந்தந்த வேலையைச் செய்துவந்த அவருடைய கை கால் முதலிய உறுப்புக்கள் தலையால் குறிக்கப்பட்ட அவருடைய புத்தி மனதின்படி பிசகாமல் நடந்தன. அதுபோல்வே அவருடைய திருச்சபையிலே இருக்கிறவர்கள் அவருடைய எலும்பு தசைகள் கை கால்களுக்கு ஒப்பனையாக, அவருடைய தலையிலுள்ள வேத ஞான சத்தியங்களை மாறுபாடில்லாமல் விசுவசித்து நடக்கவேண்டியதென அர்த்தமாகும். இதுக்கு எதிரிடையாகப் பதித மார்க்கத்தார் எண்ணுமாப்போலே அவனவன் வேதாகமத்தைப் படித்துத் தன் தன் புத்திக்குப் படுகிறதை விசுவசிப்பதே நியாயமென்றால், அப்போது திருச்சபைக்கு அங்கங்கள் எத்தனையோ தலைகளும் அத்தனையாகுமே. ஆனால் சேசுநாதர்சுவாமிக்கும் திருச்சபைக்கும் ஏக தலையும் ஏக சரீரமுந்தானென்று அர்ச். சின்னப்பர் சம்பிரதாயமாய்ப் பேசுகிறதினாலே கத்தோலிக் திருச்சபையை விட்டு விலகின பதித மார்க்கங்கள் சேசுநாதர்சுவாமியுடைய திருச்சபையல்லவென்பது உச்சிப்பகலினும் வெட்டவெளியாய்த் தெரிகிறது.

கத்தோலிக் சபையாரோவெனில், வேத சத்தியங்களைத் தங்கள் யுக்திப்படி மதிக்காமல் தலையாகிய அர்ச். பாப்பானவர் சொல்லுகிறபடி ஒரே மனமாய் விசுவசிக்கிறார்கள். அர்ச். பாப்பானவர் சேசுநாதர்சுவாமியுடைய பிரதிநிதி. ஆகையால் கத்தோலிக்கர் அர்ச். பாப்பானவர் சொற்படி விசுவசிக்கும்போது, தலையாகிய சேசுநாதர்சுவாமியோடே ஒற்றுமையாகி அவருடைய அங்கமாகிறார்கள்.

4-வது. சேசுநாதர்சுவாமி தமது திருச்சபையை அசையாத பாறைமேல் எழும்பும் ஒரு மாளிகைக்கு ஒப்பிடு



இந்த உவமானத்தை அர்ச். சின்னப்பர் விவரித்து [illegible]க்கிறதாவது: திருச்சபையென்றால் அது உயிருள்ள [illegible]ாளிகை. ஒரு மாளிகையை முடிக்கவேண்டுமானால் [illegible]க்கு பற்பல சாமான்கள், தளவாடங்கள் அவசியம். அவ்வண்ணமே திருச்சபையாகிய உயிருள்ள மாளிகை யெழும்படி அதன் தளவாடங்களாகிய கிறீஸ்துவர்கள் பற்பல அலுவல்கள் செய்யவேண்டியது. என்றாலும், எல்லாரும் ஒத்து இசைந்து திருச்சபையாகிய மாளிகையைக் கோப்பாக முடிக்கவேண்டியதென்று அர்த்தஞ் சொல்லுகிறார். இவ்வித ஒற்றுமை பொருந்திய மாளிகை கத்தோலிக் திருச்சபையேயன்றி மற்றொன்று உண்டானால் அதை அறிந்தவர்கள் குறிப்பிட்டுக் காட்டுவார்களாக. கத்தோலிக் சபையில் அர்ச். பாப்பானவர் தலைமையாயிருந்து மேற்றிராணிமார்கள், குருக்கள், பிரசங்கிகள், வேதசாஸ்திரிகள், சந்நியாசிகள், கன்னியாஸ்திரிகள், தர்ம முயற்சிச் சபையார்கள் இவர்களுடைய உபகரண வேலைகளினாலே திருச்சபையாகிற மாளிகையானது எழும்பும்படி செய்கிறதை உலகமெல்லாம் வெள்ளிடை மலைபோல் பார்த்து அதிசயிக்கிறது.

5-வது. கடைசியாய் திருச்சபையை உலக இரட்சகர் ஒரு மந்தைக்கு இணையிட்டு ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாக அது விளங்கவேணும் என்கிறார். இந்த உவமானக்குறி கத்தோலிக் சபை ஒன்றுக்கேயல்லாமல் மற்ற எந்த மதத்துக்குஞ் செல்லாது என்று ஒப்பியாமலே தெளிவாகும்.

ஆகையால் மகனே, நீ இப்போது கேட்ட உபதேசத்தினாலே, வேத விஷயத்திலே ஒற்றுமை ஏகத்துவம் சேசுநாதர்சுவாமியுடைய திருச்சபைக்கு இன்றியமையாத சாதகமென்று உன் மனதில் தீர்க்க உணர்ந்து அதைக் காக்கிற கத்தோலிக் திருச்சபையோடே ஒரே ஐக்கியமாயிருந்து அதுக்கு எதிரிடையான இதர மதங்களை வெறுத்து நீக்கிவருவாயாக.

## 25. இரண்டேயன்றிப் பிறப்பு ஏழுவ

பிள்ளை : அம்மா, நீங்கள் போன தடவை என பண்ணிய உபதேசத்திலே சேசுநாதர்சுவாமியின் சபை பூமியின் எத்திசையிலும் பரவிப் பற்பல இ னாய்ப் பிரிந்து யாதையிலும் வர்ணாச்சிரமத் குடி கூட்டு வாழ்க்கையிலும் (Social life) நடை உ யிலும் வெவ்வேறு போக்காயிருந்தாலும், வேத விஷயத்திலே ஒரே ஆத்துமமும் ஒரே சரீரமுமுள்ள ஒரே சுபாவமா யிருக்கிறதென்று படிப்பித்தீர்கள். இத்தகைய ஒற்றுமை யானது அர்ச். பாப்பானவருடைய ஆட்சிக்குள் வாழுகிற கத்தோலிக் வேதத்திலேமாத்திரம் பளிச்சென்று கண் ணுக்குத் துலங்குகிறது என்றும் தெளிவித்தீர்கள்.

ஆனால் திருச்சபை ஒரே ஆத்தும சரீரத்தையுடைய ஒரே சுபாவமாயிருக்கிறபோதே அதற்கு ஒரே அரசாட்சி யும் ஒரே சட்டதிட்டமும், ஒரே வகைக் கல்வி சாஸ்திர மும், ஒரே ஆசாரமுறைமைகளும் இருக்குமென்றே நிதா னிக்கும்படியாயிருக்கிறது. ஏன் அப்படியில்லை ?

தாய் : அப்போஸ்தலர்கள் சேசுநாதர்சுவாமியுடைய இராட்சியம் இந்த மண்ணுலகத்தைச் சேர்ந்ததாக்குமென் றிருந்தார்கள். திவ்விய இரட்சகரோ இவ்வுலகத்துக்கும் தமது இராட்சியமாகிய பரலோகத்துக்கும் யாதொரு சம் பந்தமுமில்லை, நேர்விரோதமென்று வெகு துலக்கமாய்க் காட்டத் திருவுளமானார். இது விஷயமாய் வேதநூலில் வசனிக்கப்படும் சில வாக்கியங்களாவன :—

(1) என் இராட்சியம் இவ்வுலகத்துக்கானதல்ல. இவ்வுலகத்துக்கானதாயிருந்தால் என்னுடைய சேவகர் எனக்காகப் போர்பொருதுவார்களே. அப்படிப் பொருது வோர் எனக்கு இல்லாதபடியால் எனது இராஜாங்கம் இவ்வுலகத்து இயல்பானதல்ல. ஆயினும் நான் இராஜா என்பது உண்மை. (அரு. 18 : 36-37.)

(2) மாம்சமும் இரத்தமும் சர்வேசுரனுடைய இராட் சியத்துக்கு உரிமையுடையதல்ல. (1 கொரி. 15-50.)



(3) மண்ணுலான முதல் மனிதன் மண்ணவன். ரகத்து உதித்த இரண்டாம் மனிதன் விண்ணவர். 1 கொரி. 15-47.)

(4) எந்த மனிதனும் மறுபடியும் திரும்பப் பிறவா விடில் சர்வேசுரனுடைய இராட்சியத்தைக் காணப்போகிற தில்லை. (அரு. 3-3.)

(5) நாம் தெய்வ புத்திரரென்று இஸ்பிரீத்துசாந்து வானவர் நம்முடைய புத்திக்கே சாட்சி கொடுக்கிறார். அவருக்குப் பிள்ளைகளானால் அவருடைய சுதந்தரவாளிக ளாகிறோம். ஆம், தெய்வத்தினுடைய சுதந்தரவாளிகளும், கிறீஸ்துநாதருக்கு உடன்சுதந்தரவாளிகளுமாய்ப் போகி றோம். (உரோ. 8 : 16-17.)

(6) இராயப்பா, உன் கையில் பரலோகத் திறவுகோல் களைக் கொடுப்பேன். நீ பூமியில் கட்டுகிறது பரலோகத்தி லும் கட்டப்படும், நீ பூமியில் அவிழ்க்கிறது பரலோகத்தி லும் அவிழ்க்கப்படும்.

(7) இவ்வுலகமானது துர்க்குணன் கையில் வைக்கப் பட்டிருக்கிறது. (1 அரு. 5-19.)

(8) விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காம விகாரம், விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகை விரோதங் கள், வைராக்கியம், கோபம், சண்டைகள், பிரிவினைகள், பதிதத்தனங்கள், பொறாமை, கொலை, வெறி, களியாட்டுகள் முதலிய அக்கிரமங்களுக்காளாகிறவர்கள் கடவுளின் இராட் சியத்துக்கு உரிமையடையப்போகிறதில்லை. (கலா. 5 : 19-21.)

(9) எனக்குப் பரலோகத்திலும் பூலோகத்திலும் சர்வ அதிகாரமும் அளிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் நீங்கள் போய் சகல ஜனங்களுக்கும் பிரசங்கித்து ஞானஸ்நானம் கொடுங்கள். நான் உங்களுக்குக் கட்டளை யிட்டவைகளையெல்லாம் அநுசரிக்கும்படி போதியுங்கள். நான் உங்களோடே உலகம் முடியும்வரையில் இருக்கி றேன். (மத். 28 : 19-20.)

இவ்விடம் பொறுக்கியெடுக்கலான வேதவாக்கியங்களால் நிர்ணயமாவது என்னவெனில் :—1. சேசுநாதர் சுவாமி மெய்யாகவே சர்வலோகத்துக்கும் இராஜாவாயிருந்தாலும் அவருடைய இராஜாங்கம் நிலையற்ற இவ்வுலக இராஜாங்கத்தைப் போன்றதல்லவென்று தெரிவித்து, அப்போஸ்தலர்களுடைய பிசகான யோசனையை அவர் திருத்துகிறார். ஆகையால் சேசுநாதர்சுவாமியுடைய இராட்சியமாகிய திருச்சபை வேறு, உலக இராட்சியபாரம் வேறு. இரண்டும் ஒன்றல்ல. உலக இராட்சியம் அழிவுக்குரிய இலௌகீக பெருமை செல்வத்தைக் கவர்கிறது. திருச்சபையோ அதைப் புறக்கணித்து அழியாத பரலோக பெருமை பாக்கியத்தை நோக்கிச் செல்லுகின்றது.

2. தமது திருச்சபையார் எல்லோரும் திரும்பிப் பிறவாமல் மோட்ச இராட்சியத்தைக் காணார்களென்று திவ்விய கர்த்தர் திருவுளம்பற்றுகிறார். இந்த வசனத்திலே மறு பிறப்பு என்பது நமது சீமை ஜனங்கள் நியாயாதாரமின்றி நம்புகிற வழு பிறப்பல்லவே. நமது ஆண்டவர் விவரிக்கிறபிரகாரம் இது ஜலத்தினாலும் இஸ்பிரீத்துசாந்துவினாலும் உற்பவமாகிற ஞானஸ்நானப் பிறப்பேயன்றி வேறல்ல. (அரு. 3-5.) ஆகையால் மனிதர் திரும்பித் தாய் வயிற்றில் புகுந்து மறுதரம் பிறந்து திருச்சபைக்குப் பிள்ளைகளாவார்களென்று நினைக்கவொண்ணாது. (அரு. 3-4.) திருச்சபையாரில் ஒவ்வொருவரும் ஞானஸ்நானத்தால் மறுபடியும் பிறந்து, உறுதிபூசுதல், நற்கருணை, பச்சாத்தாபம் முதலிய வரப்பிரசாத சாதனங்களால் பலனடைந்து வளர்ந்து ஓங்கி மோக்ஷ இராட்சியத்தைப் பற்றிக்கொள்ளவேண்டியது.

இந்த ஞானஸ்நானப் பிறப்பின் இயல்பை நாம் தெளிவாய்க் கண்டுபிடிக்கும்படி அர்ச். சின்னப்பர் மாம்சமும் இரத்தமும் சர்வேசுரனுடைய இராட்சியத்துக்கு உரிமை பெற்றதல்லவென்கிறார். (1 கொரி. 15-50.) ஆகையால் திருச்சபைக்குள்ள ஒரே சரீரமும் ஒரே இரத்தமும் ஒரே சுபாவமும் பரலோக இனத்தைக் குறிக்கிறதேயன்றிப்



பிரபஞ்ச இனத்தைச் சுட்டிக்காட்டுகிறதன்று. இந்த நூதன இனசம்பந்தமானது கடைசியிலே அழிவுக்குரிய நமது சடலத்தை அழியாத மாம்சமும் இரத்தமுமுள்ள சரீரமாக மாற்றுமென்று அவரே வேத சத்தியமாகத் தெளிவாய்ப் போதிக்கிறார். (1 கொரி. 15. 35-44.)

இது நிற்க, நமது உலகப் பிறப்புக்கும் ஞானஸ்நானப் பிறப்புக்கும் இனபேதகமிருப்பதால் இரண்டுக்குள்ளும் சாகுந்தனையும் ஓயாத போராட்டம் நடைபெறுமென்பது தன்னாலே விளங்கும். இந்த யுத்தத்தில் உலகப் பிறப்பு வென்றால் அது அழிகிற மாம்சமும் இரத்தமுமாயிருப்பதால் பரலோக இராட்சியத்தைக் காணமாட்டாது. (1 கொரி. 15-50.) ஞானஸ்நானப் பிறப்பு வென்றாலோ, [illegible] இஸ்பிரீத்துசாந்துவினாலே உற்பத்தியான அழியாத [illegible]த்தைச் சேர்ந்ததால், நமது மாம்சமும் இரத்தமும் அட்சய வரம் பெற்றுப் பரலோக இராட்சியத்தைக் கைக்கொள்ளும்.

அர்ச். சின்னப்பர் குறிப்பிடுகிற அக்கிரம குணங்களாகிய காமம், குரோதம், குடிவெறி, விக்கிரக ஆராதனை, பேய் மந்திரங்கள் முதலியவைகள் நமது நடத்தையில் தலையெடுத்தால் நம்மிடத்தில் உலகப் பிறப்பானது ஞானஸ்நானப் பிறப்பை வென்றதெனத்தகும். இப்படி வெற்றியடைந்த உலகப் பிறப்புக்குப் பரலோக இராட்சியத்திலே யாதொரு பாத்தியமுங் கிடையாது. (கலா. 5. 19-21.) ஞானஸ்நானப் பிறப்பு உலகப் பிறப்பை வென்றால், அது நமது மாம்சத்தில் எழும்புகிற அக்கிரம குணங்களைச் சாகடிக்கும். இந்த வெற்றியினாலே நாம் தெய்வ புத்திரர்களாய்ப் பரலோகத்துக்கு உரிமைக்காரர் ஆகிறோம். (உரோ. 8. 13-17.) வானகத்து உதித்த இரண்டாம் மனிதராகிய கிறீஸ்துநாதரைப்போலே நாமும் விண்ணவராய் அவருக்கு உடன் பங்காளிகளாய் மோட்சத்திலே 'இராஜாக்களாய் வாழ்வோம். (1 கொரி. 15-47.)

ஆதி ஆகமத்திலே எழுதியவாறு தெய்வ குமாரர்கள் மனித குமரிகளை இஷ்டப்படி மணம்புரிந்தார்கள். மனிதன்

வெறும் மாம்சமாகிவிட்டான். ஆகையால் எனது இஸ்பிரீத்துவானது அவனோடே வாசஞ்செய்யாது என்று கடவுள் வசனிக்கிறார். இவ்விடத்தில் தெய்வ குமாரர்கள் ஞானஸ்நானப் பிறப்புக்கும் மனித குமரிகள் உலகப் பிறப்புக்கும் குறிப்பாயிருக்கிறார்கள். இஷ்டப்படி மணம்புரிந்தார்களென்கும்போது உலகப் பிறப்பு ஞானஸ்நானப் பிறப்பை வென்றதென அர்த்தம்பெறும். அதற்கு ஆக்கினையாகத்தான் ஜலப்பிரளயம் வந்து உலகத்தை அழித்தது. அதுபோலவே இவ்வுலக பிறப்பு நெருப்பினால் சுட்டெரிக்கப்படும். அத்தோடே இவ்வுலக இராஜரீகமும் நாசமடையும்.

இவ்வுலகம் துர்ச்சனன் கையில் வைக்கப்பட்டிருக்கிறதென்று வேத வாக்கியஞ் சொல்லுகிறது. (1 அரு. 5-19.) திருச்சபையோ சற்குணம் நிறைந்த சேசுநாதர்சுவாமியுடைய இராட்சியமாயிருப்பதால், இரண்டும் ஒத்து நடக்கமாட்டாது. இதினிமித்தந்தான் திருச்சபையின் பிறப்பு முதல் நாளதுபரியந்தம் அது உலக இராஜாங்கங்களோடே சேவகரில்லாமற் போராடி வருகிறதைக் காண்கிறோம். அழிவுள்ள பிறப்பும் அழியாப் பிறப்பும் ஒன்றாயிருக்க முடியாது.

பி.: அம்மா, நீங்கள் மொழிகிறது ஆழ்ந்த படிப்பினையாயிருக்கிறது. உலக இராஜரீகம் எந்த வேளையிலும் நிர்மூலமாகலாம், திருச்சபை அரசாட்சி எந்நாளும் ஒரே அழியா நிலைமையிலிருக்கும். திவ்விய கர்த்தரும் நான் எந்நாளும் உங்களோடேயிருக்கிறேன் என்று அப்போஸ்தலர்களுக்குத் திருவுளம்பற்றியிருக்கிறார்.

ஆனால் இதுகாரியத்தில் ஒரு எதிர்வாதம் முளைக்கிறது. திருச்சபையிலுள்ள அங்கத்தார் யாவருக்கும் இருபிறப்புண்டாயிருக்கிறதே. திருச்சபையில் ஒற்றுமையிருக்கிறதெப்படி?

தாய்: அர்ச். சின்னப்பர் எபேசியருக்குப் போதித்தபடி, திருச்சபையார் தலையாகிய சேசுநாதர்சுவாமியுடை



அவயவங்களாயிருக்கிறார்கள். ஆகவே அவர்களை மனிதனுடைய அங்கங்களோடே ஒப்பிட்டு ஒரு முடிவு கட்டலாம். நமது சரீர உறுப்புகளுக்குள் போராட்டம் நடப்பதைப் பரீட்சையினால் அறிகிறோம். கண்ணானது தூக்கத்தைக் கெடுத்து வேடிக்கை பார்க்க ஆசிக்கிறது, காது கீதவாத்தியங்களைக் கேட்டுப் பொழுதைப்போக்கத் தேடுகிறது, உடம்பு, படுத்தால் நேரத்தோடே எழும்பாமல் வேலையைக் கடத்திவிடப் பார்க்கிறது. இவ்வித எதேச்சை நடக்கையால் அங்கங்களெல்லாம் துன்பப்படுகிறது. இத்தருவாயில் நேர்மையான புத்தியும் திடமான மனதுமுள்ளவன் இந்தத் தாறுமாறுகளை அடக்கி நியாயத்துக்குக் கீழ்ப்படுத்துவான். தன் ஐம்பொறிகளுக்குள் ஒற்றுமையைக் காப்பாற்றுவான். கோணப் புத்திக்காரன் சீரழிந்து சிதைவான்.

அவ்வாறே திருச்சபை அங்கங்களிடமாய் இருபிறப்பும் போராட்டங்களை மூட்டிவிடலாம். அவைகள் இருவகையாய்ப் பிரியும். உலகப் பிறப்பு தனக்குள்ளேயே சண்டைக்கு நிற்கலாம்; அதினாலே ஒரு இராட்சியம் இன்னொரு இராட்சியத்தை மேற்கொள்ள முயன்றுழலும். ஞானஸ்நானப் பிறப்புக்கு இழிவு வராமல் இவ்வித இலௌகீக யுத்தம் நடக்கும்பட்சத்தில் திருச்சபையின் ஒற்றுமை குன்றாது. ஏனெனில் திருச்சபையின் ஒருமைப்பாடு ஞானஸ்நானப் பிறப்போடே ஐக்கியப்பட்டதாமே. இது முதல்வகை யுத்தம். கடந்த ஐரோப்பிய யுத்தத்திலே சத்திய திருச்சபையார் இரு கட்சியிலும் நின்று சண்டை புரிந்தாலும் அதினாலே தன்னிலே திருச்சபையின் ஏகத்துவத்துக்கும் பழுது இல்லை. ஏனெனில் அது முற்றும் உலகப் பிறப்புக்கான யுத்தம்.

இன்னொரு வகைப் போராட்டத்திலே உலகப் பிறப்பு ஞானஸ்நானப் பிறப்போடே சண்டைக்கு நிற்கும். இது ஒரு மனிதனுடைய ஐம்புலன்களும் தங்களுக்குள்ளே எதிர்த்து நிற்கிறதற்குச் சமானமாகும். அச்சமயத்திலே நேர்மையுள்ள புத்திக்கு இணையாகத் தவறா வரம் பெற்றிருக்

ளும் அர்ச். பாப்பானவர் திருச்சபையின் அங்கங்களுக்குத் தலையாயிருப்பதினாலே அவர் தமக்குள்ளடங்கிய உறுப்புகளை ஒற்றுமைக்குக் கொண்டுவர முயற்சி செய்வார். தலைக்கு அவயவங்களாகிய திருச்சபையார் பணிந்து நடந்தால், திருச்சபையின் ஏகத்துவங் கெடவில்லையெனத்தகும். யாராவது பணியாமல் போர் தொடுத்தால், தலையாகிய அர்ச். பாப்பானவர் அந்த அங்கத்தைத் துண்டித்து எறிந்துபோடுகிறார். இவ்வித சிக்ஷையினாலே திருச்சபையின் ஒற்றுமை காப்பாற்றப்படுகிறது. இதற்கு உதாரணமாக, ஜெர்மானிய சீமையிலே லுத்தரும், இங்கிலீஷ் இராச்சியத்திலே 8-ம் என்றியும் திருச்சபையினின்று வெட்டுண்டு எறியப்பட்டதை யாவரும் அறிவார்கள். அவர்களுடைய ஞானஸ்நானப் பிறப்பை உலகப் பிறப்பு அடியோடே அழித்துப்போட்டது.

பி.: உலக கல்வி சாஸ்திர விஷயங்களிலே சத்திய திருச்சபையாருக்குள்* இருக்கிற பேதகக் கொள்கைகளாலே திருச்சபையின் ஏகத்துவங் குலைகிறதில்லையோ?

தாய்: இலௌகீக சாஸ்திர கலைக்கியானக் கொள்கைகள் உலகப் பிறப்புக்குரியவைகள். இவைகள் ஞானஸ்நானப் பிறப்புக்குரிய விசுவாசத்துக்கு விரோதமாயிராத மட்டில், திருச்சபையின் ஒருமைப்பாட்டுக்கு விக்கினமில்லை. விசுவாசத்துக்கு எதிரிடையாய் நின்றால், அங்கமாயிருக்கவேண்டிய கற்றோர், தலையாகிய அர்ச். பாப்பானவருக்குப் பணியாத பட்சத்தில் திருச்சபையின் அங்கமாயிராமல் தள்ளுண்டு போகிறார்கள். தங்கள் புத்தியின் கொள்கைக்கு விசுவாச சத்தியங்கள் கீழ்ப்பட்டதென்று [illegible]ற புத்திபக்தர் (Rationalists) இவ்வர்க்கத்தைச் சேர்ந்தவர்களே. மாடர்னிஸ்தரும் (Modernists) இந்த இனத்தார்தான். இவர்கள் காலத்தோடே மாறுகிறவர்கள்.

பி.: உலக ஆசார முறைமைப் பேதகங்கள் திருச்சபையின் ஒற்றுமைக்கு ஒவ்வாதவைகளா?



தாய்: இவைகளும் உலகப் பிறப்பினின்று உதிக்கிறவைகள். ஞானஸ்நானப் பிறப்பு இவைகளில் எதெதை ஆகாதென்று திட்டமாய்க் கண்டித்து விலக்குகிறதோ அதையெல்லாம் திருச்சபையின் அங்கத்தார் நீக்கிப்போடக் கடன். அப்படி நீக்காவிடில் திருச்சபையின் அங்கத்தைவிட்டுப் பிரிக்கப்படுவார்கள். இவ்வித அங்கபங்கம் திருச்சபையின் ஒற்றுமையைக் காப்பாற்றுகிறது.

பி.: கனமான பாவிகளெல்லாரும் திருச்சபையை விட்டுப்பிரிந்தவர்கள், அதன் அங்கமல்லவென முடிவுகூறலாமா?

தாய்: அப்படியல்ல. ஒருவன் கனமான பாவியாயிருந்தாலும் திருச்சபையின் தலையோடே ஐக்கியமாய் அது படிப்பிக்கிற விசுவாச சத்தியங்களைப் பூரண மனதோடே கைக்கொண்டால், அவன் திருச்சபையோடே சேர்ந்தவன் தான். ஆனால் அவனுடைய பாவத்தினாலே அவன் கொடிய பிணியினாலே பீடிக்கப்பட்ட அங்கம்போல் இருக்கிறான். ஆயினும் அந்தப் பிணி நல்ல பாவசங்கீர்த்தனத்தினாலே எந்த நேரத்திலும் அவனை விட்டு விலகக்கூடியது. விலகின க்ஷணமே அவன் மோக்ஷத்துக்குச் சுதந்தரவாளியாகிறான்.

நான் இதுவரையில் கற்பித்தவைகளைக்கொண்டு, மகனே, நீ செய்யவேண்டியதென்னவெனில், உன் ஞானஸ்நானப் பிறப்பை நீ சகலத்துக்கும் மேலாக மதிக்கவேண்டும். உலக சாஸ்திரங்களையும் அதன் காலின்கீழ் வைத்து மிதித்து நட. அப்போது நீ மெய்யாகவே தெய்வ புத்திரனாய்ப் பரலோகத்திலே நித்திய காலத்துக்கும் இராஜாவாய் வாழ்வாய். ஏனெனில் தலையாகிய சேசுநாதர்சுவாமியுடைய அவயவமாய் நீ இருக்கிறாய். இன்னஞ் சொல்லவேணுமானால் அவருடைய மாம்ஸமும் இரத்தமுமாய்ப் போகிறாய். ஆ! இதென்ன பாக்கியம்பெற்ற ஒற்றுமை!

## 30. திருச்சபையின் அங்கமாயிராத மதங்கள்

தாய்: போன பாடத்திலே நான் விவரித்தபடி சத்திய திருச்சபையார் அனைவரும் ஞானஸ்நானப் பிறப்பினாலே ஒரே சரீரமும் ஒரே ஆத்துமமும்போன்ற ஒரே ஆளாகிறார்கள். அப்படியானபோதிலும் அவர்கள் மண்ணுலகத்தில் வசிக்குமளவும் அவர்களுடைய உலகப் பிறப்பு அவர்களை விட்டு நீங்காது. அந்தப் பிறப்புக்குரிய அவயவங்கள் ஞானஸ்நானப் பிறப்புக்கு விரோதிகளாய் எழும்பிப் பலவாறு ஆவலாதி வரும்படியான கலகத்தை மூட்டிவிடக் கூடும். இதை உத்தேசித்துத்தான் சேசுநாதர்சுவாமி தமது சீஷர்களை நோக்கி: உங்கள் கையாவது, கண்ணாவது இடறலாயிருந்தால் அதை வெட்டியெறியுங்களென்றார். (மத். 18. 8-9.) அப்படி வெட்டிப்போடுவதினாலே ஒரு மனுஷனின் ஏகத்துவங் குன்றுதென்றாற்போலாயிற்றல்லோ. மனுஷனிடத்திலே தலைமையாயிருக்கிற மனசுதானே கீழ்ப்படியாத உறுப்பைத் தறித்துப்போடுகிறது. அதுக்கொப்பாகவே திருச்சபைக்குத் தலையாகிய அர்ச். பாப்பானவர் சத்தியவேத விசுவாசத்துக்கு இடறலாக எழும்பும் பதிதர், பிரிவினைக்காரர் முதலியவர்களைத் திருச்சபையின் உறுப்பாக இருக்கப்படாதென்று நறுக்கித் தள்ளுகின்றார். இவ்வித சிட்சையினாலே சத்திய வேதத்தின் ஒற்றுமை கெடாமல் உறுதிப்படுகிறது.

ஆகையால் திருச்சபையின் ஏக ஒற்றுமைக் குறிகளை இவ்விடம் தொகுப்பாய் வரைகிறேன். அவைகள் உன் மனதில் எப்போதும் ஆழமாய்ப் பதிந்திருக்கவேண்டியது.

(1) திருச்சபையை வேத விஷயத்தில் ஒற்றுமையாய் நடத்துகிறதற்கு ஒரு தலையிருக்கிறது. அந்தத் தலையைத்தான் அர்ச். பாப்பானவர் என்கிறோம்.

(2) அந்தத் தலையானது ஈடேற்றத்துக்கு அவசியமென்று படிப்பிக்கிற வேத சத்தியங்களையெல்லாம் ஒன்றிலும் தவறாமல் அங்கத்தாரெல்லாரும் முழுமனதோ



அற்ப சொற்ப சந்தேகத்துக்கு முதலாய் இடங்கொடாமல் விசுவசிக்கிறார்கள்.

(3) திருச்சபையாரை ஈடேற்ற வழியிலே தொட்டில் முதல் கல்லறை வரையில் கைபிடித்துக் கூட்டிக்கொண்டு போகிறதற்கு ஒரே மாதிரி தேவதிரவியாநுமானங்கள் சில வெளிச்சடங்குகள் வழியாய்க் கொடுக்கப்படுகின்றன.

(4) இந்த மூவகை ஒற்றுமைக்குறிகளை மனதிலும் வாக்கிலும் ஒப்புக்கொள்ளாதவர்கள் திருச்சபையின் உறுப்பாக இராமல் பிறந்திப்பட்டவர்களாகிறார்கள்.

பி.: அம்மா, பதிதர், பிரிவினைக்காரர் முதலானோர் திருச்சபையின் உறுப்புகள் அல்லவென்று கண்டுபிடிக்கிறேன். ஆனால் ஐரோப்பியருள் மாடர்னிஸ்தர், ராஷனலிஸ்தர் என்போர் திருச்சபையின் உறுப்புகள் என்கலாமா?

தாய்: மாடர்னிஸ்தர் என்றால் நவீனர், இக்காலத்தார் என இயல்பாய் அர்த்தம் பெறும். ஆனால் இந்த இருபதாம் நூற்றாண்டில் அது ஒரு காரணச் சிறப்புப் பெயராகி விகாரமான ஒருவகை வேதக்கொள்கையைச் சுட்டுகின்றது. உலகத்திலே காலத்துக்கேற்ற கோலமென்று வழங்குகிறதல்லோ பழமொழி. அத்தன்மையே காலத்துக்கேற்ற வேதகோலம் இடுகிறவர்களுக்கு காலவேதர், நவீனர், அல்லது மாடர்னிஸ்தர் என்னும் காரணப் பெயர் இடப்பட்டிருக்கிறது. இவர்களுடைய புத்தியைக் கேட்டால் எந்த வேதத்திலும் ஒரே நிலைமையான மாறாத சத்தியமே கிடையாது. எல்லாம் அந்தந்தக் காலத்துக்கு ஒத்த அபிப்பிராயங்களாய்மாத்திரம் இருக்கவேண்டியது. ஆகையால் பரம சுபாவ (Supernatural) சத்தியங்களாகிய திரித்துவ ஏகத்துவம், மனுஷாவதாரம், மனித இரட்சிப்பு, நித்திய மோட்சம், நரகம் முதலியவைகள், காலவேதருக்குச் சுத்த அபிப்பிராயங்களேயொழிய நித்தியகாலமும் நிலைபெற்ற சத்தியப் பிரமாணங்களல்ல. இவர்கள் வேத ஏற்பாடுகளைத் தோன்றல், திரிதல், கெடுதல் என்னும் விகாரங்களுக்கு உள்ளாக்குகிறார்கள். அவர்களுக்கு

இன்றைக்கு உண்மையாகத் தோன்றுவது நாளைக்குத் திரிதலாகும், மூன்றும் நாள் கெடுதலெனத் தள்ளுண்டுபோம். இவ்வித காலவேதர் கிறீஸ்துவர்களேயல்ல, மெய்யான அவிசுவாசிகளென முடிவு கூறவேண்டியது. இவர்களுக்குள் தலையெத்தனையோ நினைவும் எண்ணமும் அத்தனையாய்ப் பிரிந்தோடுவதால், மெய்யான வேதத்துக்கு அவசியமான ஒற்றுமை இவர்களிடம் இருக்கமுடியாது. ஆகையால் இவர்களுடைய மார்க்கம் பொய்யான மார்க்கமென்பது சொல்லாமலே விளங்கும்.

பி.: காலவேதருக்கும் (Modernists) ராஷனலிஸ்தர் என்னும் புந்தி பக்தருக்கும் (Rationalists) வித்தியாசமுண்டோ?

தாய்: இருவரும் ஒரே பேறுன இரட்டைப் பிள்ளைகளாம். ராஷனலிஸ்தர் என்னும் புந்தி பக்தர் மனித புத்திக்கெட்டாத வேத சத்தியங்களையும் புதுமைகளையும் பொய்யென்று ஒருங்குடன் தள்ளிப்போடுவார்கள். அவர்கள் பரம சுபாவ (Supernatural) உண்மைகளாகிய திரித்துவ ஏகத்துவம், மனித இரட்சிப்பு, நரக மோட்சங்களின் நித்தியம் முதலியவைகளை விசுவசிக்கமாட்டார்கள். இவ்வித சத்தியங்கள் தாங்கள் கற்றறிந்த உலக சாஸ்திரங்களுக்குப் பொருந்தாதென்று போதிப்பார்கள். மனித புத்திக்கு மேற்பட்டது மேலுமில்லை கீழுமில்லை, பேயுமில்லை சம்மனசுமில்லையென்பது ராஷனலிஸ்தர் கொள்கையாம். தெய்வமும் இல்லையென்றாற்போலாகிறது. அப்படியானால் மனிதனுடைய புத்திதான் இவர்களுக்குத் தெய்வம் எனக்கவும். ஆகையால் இவர்களுக்குப் புந்தி பக்தர் என நாமஞ் சூட்டுகிறது நியாயமே.

ஆனால் இதிலே ஒருத்தர் புத்திக்கு எட்டினது மற்றொருவர் புத்திக்கு எட்டாதே. எல்லாரும் சம்பர்ளாக முடியுமோ? கற்றவர்களுக்கு ஏறுகிறது கல்லாதார் புத்திக்கேறுமா? ஆகையால் கற்றவனுடைய போதகத்தைக் கல்லாதவன் தனக்கு அது பிடிபடவில்லையென்று தள்ளுபடி செய்வானல்லோ? ஆகவே ராஷனலிஸ்தருடைய



மார்க்கத்திலே ஒரு வழி செல்லமுடியாது, யாதொரு ஒற்றுமையும் கிடையாது. அவனவன் தன் தன் புத்தியைக் கும்பிட்டுக்கொண்டிருக்கும்படி நேரிடும். ஆனால் அவனவனுடைய புத்தி நாள்தோறும் தவறிப் பிசகி விழுகிறதைக் கண்கூடாய்க் காண்கிறோமே! புத்தி தவறுகிறது மனித சுபாவத்துக்கு இயல்பென்று பழமொழியும் வழங்குகிறது.

பி.: நமது தேசத்து ஜனங்களின் மார்க்கத்துக்கு யாதொரு பேர் உண்டா? அதில் ஒற்றுமை ஏதேனும் இருக்குமா?

தாய்: உன் கேள்வி வினையமானது. அது நம்மைச் சூழ்ந்திருக்கிற ஜனங்கள் மனதில் வினையத்தைப் பிறப்பிக்கும்படி கோறுகிறேன். நமது சுயதேசம் வடக்கே இமயமலை துவக்கித் தெற்கே கன்னியாகுமரி வரையில் 1800 மைல் தூரம் நீளமுள்ளதாய் கிழக்கு மேற்கில் இரண்டு கடல்களுக்கு நடுவில் அடங்கினதாய்ப் பரவி அமைக்கப்பட்டிருக்கிறது. ஆதிகாலத்திலே இதற்கு ஏகபேர் வைக்கப்படவில்லை. அப்படியே அதில் குடியிருந்த ஜனங்களுக்காவது அவர்கள் அனுசரித்த மத ஆசாரத்துக்காவது யாதொரு ஏக பெயர் அல்லது பொதுப்பெயர் கிடையாது. வடமொழி என்னப்பட்ட சமஸ்கிருத பாஷையிலே வரையப்பட்ட கிரந்தங்களில் சிந்துதேசம் என்னும் பெயர் வழங்குகிறது மெய். ஆனால் அந்தப் பதத்தின் அர்த்தம் இமயமலையில் உற்பத்தியாகும் சிந்து நதியைச் சூழ்ந்த ஒரு பாகத்துக்கே அன்றி மற்றப் பாகங்களுக்குச் செல்லாது. அந்தப் பேர் தேசத்தின் மற்றப் பகுதிகளை தனக்குப் புறச்சிமையாக்குகிறது. தமிழ்ப் பாஷையிலேயும் சிந்துதேசம் என்பது இந்தியாவிலும் அதைச் சூழ்ந்துமுள்ள 56 தேசங்களிலும் 18 பாஷைகளிலும் ஒன்றை மாத்திரம் குறிக்கிறது. ஆகவே இந்தியாவில் வசிக்கும் குடிகளையும் அவர்களுடைய மதாசாரங்களையும் ஒருப்படத் தோ[illegible]தற்காக சிந்து ஜனம் சிந்து வேதம் என[illegible]கள் நமது தேசத்தில் வழங்கின பேச்சுகளாகும்.

இது நிற்க, சிந்து என்னும் வார்த்தையை அந்நிய தேசத்தார் இந்தியா எனத் திரிபுவிகாரப்படுத்தினார்கள். இதற்கு ஒரே உறுதியான அத்தாட்சி வேதாகமத்தின் பழைய ஏற்பாடே. அதில் ஒரு வாக்கியத்தை இங்கு மேற்கோளாக எடுத்துரைக்கிறேன். அதாவது, "இந்தியாவின் பல வர்ணச் சரக்குகளும், விலையுயர்ந்த கோமேதகக் கல்லும் நீலமணிகளும் ஞானத்துக்கு இணையாகாது" என யோபு ஆகமத்தில் வரையப்பட்டிருக்கிறது. (யோபு. 28. 16.)

பிற்காலத்தில் சிந்து நதிக் கணவாய்ப் பூமியை பார்சியர் பிடிக்கவந்தனர். இவர்கள் சிந்து என்னும் பதம் தங்கள் பாஷையில் வழங்கிய ஹிந்து என்னும் பதம்போலே சப்தித்ததால், சிந்து நதியை ஹிந்து நதியென்று கூப்பிட்டார்கள். அதற்குமேல் துலுக்கர் இந்தியாவின் வடபாகத்தை ஜெயித்து அதுக்கு ஹிந்துஸ்தான் எனப் பெயரிட்டார்கள். கடைசியாய் அவர்கள் இந்தியாவின் தென் பகுதிகளிலும் தங்கள் வெற்றிக்கொடி பறக்கவிட்ட காலத்தில் ஹிந்துஸ்தான் என்னும் பெயர் இந்தியா தேசமுழுமைக்கும் பொதுப் பெயராயிற்று. ஆகையால் கத்தோலிக் வேதப் பழைய ஏற்பாட்டின் வழியாய் இந்தியாவென்றும், பார்சியர்கள் துலுக்கர்கள் வழியாய் ஹிந்துஸ்தான் என்றும் இரு பெயர்கள் நமது தேசத்துக்கு உண்டானது. துலுக்கரை வென்ற ஆங்கிலேய நாட்டார் இந்த இருபேரையும் ஏற்றுக்கொண்டு பிரயோகிக்கிறார்கள். ஆயினும் இந்த இருபதாம் நூற்றாண்டில் இந்தியா என்பது நமது சீமையையும் இந்தியர் என்பது அதின் ஜனங்களையும் குறிப்பதில் அதிக அப்பியாசத்துக்கு வருகிறது. இந்து என்பதோ இத்தேசத்து ஜனங்களின் மார்க்கத்தின் நாமகரணமாக உபயோகிக்கப்படலாகிறது. ஆனால் இது அந்த வார்த்தைக்கு ஒரு நூதனமான பயன் என்பதற்குச் சந்தேகமில்லை. ஏனெனில், எழுபது வருஷங்களுக்குமுன் எழுதப்பட்ட புஸ்தகங்களில் இந்து என்னும் தனிச்சொல் வேதத்தைச் சுட்டாமல் தேசம் அடங்கலையும் குறித்தது.



நான் இதுவரையிலும் விஸ்தரித்ததைக்கொண்டு நமது இந்தியாவிலே தேச ஏகத்துவமுமில்லை, ஜன ஏகத்துவமுமில்லை, வேத ஏகத்துவமுமில்லையென்று உச்சிப்பகலினும் துலக்கமாய் விளங்குகிறது. ஏகத்துவத்தை ஒப்பிக்கிற முத்திரையாகிய பேர் யாதேனும் இல்லாதபோதே ஏகத்துவம் உண்டாயிருப்பதெப்படி?

மற்ற ஒற்றுமைக்குறைகளை ஒழித்து வேத ஒற்றுமைக் குறையைப்பற்றி மாத்திரம் இவ்விடம், மகனே, உனக்குக் கொஞ்சம் உபதேசம் சொல்லுகிறேன். கவனித்துக் கேள்.

(1) இந்தியாவின் ஜனங்கள் என்னத்தை விசுவசித்தாலும் சரி, விசுவசியாவிட்டாலும் சரி, சிற்சில வெளி ஆசாரங்களை அனுஷ்டிப்பவர்கள் ஒருப்பட இந்துமதஸ்தராயிருக்கிறார்கள். ஆதலால் விசுவாச ஒற்றுமை இந்து மதத்தில் கிடையாது.

(2) தன்னிச்சைப்படி நாஸ்திகனாயிருப்பவனை இந்து மதத்தைவிட்டுத் தள்ளக்கூடிய அதிகாரி ஒருவருமில்லை. இதனிமித்தந்தான் இந்து மார்க்கத்துக்கு எந்தக் கொள்கையும் சரிதானென்று இம்மதத்தைச் சேர்ந்த பேர்போன விவேகானந்தசாமி உலகமெல்லாம் அறிய உபந்நியாசம் பண்ணினார்.

(3) இத்தேசத்து ஜனங்கள் தெய்வச்சொல் என்று கொண்டாடுகிற இருக்குவேத புத்தகத்தில் மறுபிறப்பைப் பற்றி யாதொரு வாக்கியமுமில்லை. நல்லவர்கள் இறந்தபின் மோக்ஷத்தில் நித்தியகாலம் வாழ்வார்களென்று அதில் காட்டப்படுகிறது. கெட்டவர்களுடைய கதியைப் பற்றி அது யாதொன்றும் போதிக்கிறதைக் காணோம். (Dutt. pp. 31-32.) இக்காலத்திலோ, மரித்தவன் பிறப்பின்மேல் பிறப்புக்குள்ளாகிப் பற்பல சடலத்துக்குள் நுழைந்து சக்கரம்போல சுழன்று திரிவானென்று அந்தணர் போதிக்கிறார்கள்.

(4) மேற்கூறிய இருக்குவேத நூலிலே விஷ்ணு அவதாரங்கள் அறியப்படாத விஷயம். கிருஷ்ணன்,

இராமர் என்னும் தெய்வங்களும் அதில் காணப்படுகிறதில்லை. இக்காலத்திலே, விஷ்ணு அவதாரங்களும் முந்நூற்று முக்கோடி தெய்வங்களும் உண்டென்று இந்துமத வேதியர் படிப்பிக்கிறார்கள்.

இங்கே எடுத்துரைக்கப்பட்ட நான்கு விஷயங்களால் இந்தியருடைய மார்க்கத்தில் விசுவாச ஒற்றுமையில்லையென்று எளிதில் கண்டுகொள்ளலாம்.

பி: அம்மா, நமது தேசத்து ஜனங்களை வேதமோதும் அந்தணர் ஏய்த்து மயக்கித் தங்கள் மனம்போலே ஆட்டிக்கொண்டு வருகிறதாக இந்துக்களில் அநேகர் கண்ணீரோடே சொல்ல நான் கேட்டிருக்கிறேன். சேசுவின் திரு இருதயம் அவர்கள்மேல் இரங்கி சத்தியவேதத்தில் அவர்களைப் பிரவேசிக்கப் பண்ணுவாராக. நமது சீமையின் நிற்பாக்கியம் இப்படியிருக்க, அதின் அஞ்ஞானத்தை ஒட்டி தெயோசோபி (Theosophy) என்று ஒரு நூதன மார்க்கம் தலையெடுக்கப் பார்க்கிறதாகக் கேள்விப்படுகிறேன். அது எப்படிப்பட்டது, அம்மா?

தாய்: தெயோசோபி என்பது இக்காலத்திலே முளைத்த ஒரு நூதன மார்க்கம். அது ராஷனலிஸ்தரோடும் இத்தேசத்து அஞ்ஞானிகளோடும் உறவாடுகிறது. தெயோசொபியர் தெய்வம் இல்லையென்று சொல்லமாட்டார்கள். ஆனால் கிறீஸ்துவர், மகம்மதியர், இந்துக்கள் முதலிய எந்த மதத்தாரும் தெயோசொபியராகவும் ஒருமிக்க இருக்கலாமென்று அவர்கள் விளம்பரம் பண்ணுகிறார்கள். அதினிமித்தம் இத்தேசத்து தெயோசொபியருக்கு எம்மதமும் சம்மதமே. புத்தி பக்தரைப்போலே இவர்களும் தங்கள் புத்திக்கு எட்டாத வேத ஞானத்தை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். எந்த வேதத்தில் இருந்தாலும் நல்ல கதி கிடைக்குமென்பார்கள். சம்மனசுகள், பேய்கள் முதலிய அரூபிகள் இல்லையென்று ஆட்சேபிக்க மாட்டார்கள்.

கர்னல் ஆல்க்காட் (Colonel Olcott) என்னும் அமெரிக்க துரையும் பிளாவத்ஸ்கி (Blavatsky) என்னும்



ருஷிய துரைசானியும் தெயோசொபி மார்க்கத்தை ஏற்படுத்தினவர்கள். இது 1875-ம் ௵ அமேரிக்காவிலுள்ள ஐக்கிய நாட்டின் (United States) தலைநகராகிய நியுயார்க் நகரில் (New York) ஆரம்பமானது என்கலாம். ஆல்க்காட் விபரித்தபடி தெயோசொபியத்தின் இலக்கு முப்பிரிவாகிறது. அவையாவன: (1) மனித ஜென்மம் அனைத்தையும் ஒரே சகோதர கூட்டமாக்கல். (2) கீழ்த்திசை வேதங்கள், சாஸ்திரங்கள், கலைக்கியானங்கள், இலக்கியங்கள் முதலியவைகளின் பயிற்சியை முன்னேற்றி அவைகளைக் கணிசப்படுத்தல். (3) பிரபஞ்சலோகத்தின் சுபாவ இயற்கையிலே புதைந்திருக்கும் பரம இரகசிய சூட்சங்களையும், மனிதனுடைய ஆன்மாவின் சத்தியங்களையும் ஆராய்ந்து அளவறுத்தல் ஆகிய மூன்று பாகங்களாம்.

நான்கு வருஷகாலம் பிளாவத்ஸ்கியும் ஆல்க்காட்டும் தங்கள் மார்க்கத்தை அமேரிக்கா சீமையில் போதித்தபின், பயன் ஒன்றுங் காணுமல், நமது இந்திய தேசத்துக்குப் புறப்பட்டு 1879-ம் ௵ முந்தமுந்த பம்பாயில் இறங்கினார்கள். அந்தப் பட்டணத்திலும், பிறகு கல்குத்தாவிலும், கடைசியாய்ச் சென்னையிலும் உபந்நியாசம் பண்ணினார்கள். அவர்களை சென்னை ராஜதானி ஜனங்கள் மற்றிரு பட்டணத்தாரைவிட அதிக கெம்பீரமாய் உபசரித்து வரவு கூறினார்கள். தெயோசொபியர் இருவரும் இதினிமித்தம் சென்னை நகரை தெயோசொபி சகிதத்துக்குத் தலையிடமாக்கி, அதினொரு பாகமாகிய அடையாரில் தங்களுக்கு ஒரு விடுதி அமர்த்திக்கொண்டார்கள். இது 1882-ம் ௵ நடந்த விஷயம். தங்கள் போதனைகளை இந்தியர் சுளுவாய் ஒப்புக்கொள்ளும்படி இமயமலைக்கு வடக்கேயுள்ள திபேத்து (Tibet) இராச்சியத்திலே வசிக்கும் ஒரு மகாத்துமாவான ரிஷி தங்களுக்கு அடிக்கடி தரிசனையாகி தங்களுக்குப் பற்பல பரம ரகசியங்களை வெளிப்படுத்துகிறதாக அந்த தெயோசொபியர் இருவரும் சொன்னார்கள்.

1884-ம் ௵ ஆல்க்காட்டும் பிளாவத்ஸ்கி அம்மாளும் தேக சௌக்கியத்துக்காக ஐரோப்பாவுக்கு யாத்திரை

போயினர். அப்போது சென்னையிலிருந்த தெயோசொபியருக்குள்ளே அபிப்பிராய பேதம் உண்டாகவே தெயோசொபி சகிதத்தை விட்டுச் சில அங்கத்தார் நீங்கும்படி நேரிட்டது.

இது நிற்க, 1888-ம் ௵ பிளாவத்ஸ்கி நாய்ச்சியார் ஐரோப்பாவிலிருந்துகொண்டே "இரகசிய போதகம்" என்னும் ஒரு கிரந்தத்தைப் பிரசித்தப்படுத்தினாள். இதை ஆன்னி பீஸன்று என்னும் ஒரு துரைசானி வாசித்தாள். இந்த ஆன்னி பீஸன்று, பிளாவத்ஸ்கியைப்போலவே ஏறக்குறைய இருபது பிராயத்திலே கலியாணம் பண்ணினவள். இவளுடைய புருஷன் ஒரு பதிதப் பாதிரியார். ஆனால் வேத விஷயத்திலே ஆன்னி பீஸன்று தனதிஷ்டம்போல் நடந்தாள். இதினிமித்தம் இருவரும் ஒத்து வாழாமல் பிரிந்துபோனார்கள். பிளாவத்ஸ்கி நாய்ச்சியார் எழுதின புஸ்தகத்தை ஆன்னி பீஸன்று வாசித்ததின்மேல் அந்த தெயோசொபியாளைக் காணப்போய்த் தானும் அவளுடைய மார்க்கத்தில் சேர உத்தரவு கேட்டாள். அவளைக் கொஞ்சம் சோதித்துப் பார்த்தபின், நாய்ச்சியார் அவளைத் தன் சபையில் ஏற்றுக்கொண்டாள். இது 1889-ம் ௵ நடைபெற்ற காரியமாம். தெயோசொபி சகிதத்திலே சேரவே, அந்த மார்க்கத்தில் தனது எஜமாட்டியான பிளாவத்ஸ்கி அம்மாளுக்கு ஈடானாள், வாய்ச்சாலகத்திலோ மேலானாள் என்கலாம்.

பிளாவத்ஸ்கி திரும்பி இந்தியாவுக்கு வருமுன்னே, 1891-ம் ஆண்டில் மரித்து ஆண்டவர் சந்நிதியில் தன் கடைசித் தீர்வையைக் கேட்கப்போனாள்.

பிளாவத்ஸ்கி நாய்ச்சியாருக்கு உகந்த சிஷமகளான ஆன்னியம்மாள் அந்த நாய்ச்சியாருடைய அடிகளைப் பின்சென்று இந்தியாவுக்குப் புறப்பட்டுவந்தாள். இத்தேசத்தில் கப்பலைவிட்டு இறங்கவே, தெயோசொபி மார்க்கத்தைப்பற்றி எங்கும் பிரசங்கிக்க ஏற்பட்டாள். இறந்துபோன பிளாவத்ஸ்கியின் பின்னடியரசியாக தான் வந்திருப்பதாகவும் பிரஸ்தாபித்தாள். இந்தியர் அவளை தெயோ



சொபி மதத்துக்கு நாய்ச்சியாராக ஏற்றுக்கொண்டாலும், ந்த மார்க்கம் உற்பத்தியான அமேரிக்காவில் வேறொரு ரிதன் தலைவனாக அதிகாரஞ் செலுத்திவந்தான். இவ் று தெயோசொபி மதம் இரண்டாய்ப் பிரிந்தது.

ஆன்னி பீஸன்று இப்போது இந்திய தெயோசொபி சகிதத்துக்கு நாய்ச்சியாராய்த்தான் இருக்கிறாள். அவளுக்கு வயது ஏறக்குறைய 83 ஆகிறது. தற்சமயத்தில் பீஸன்று நாய்ச்சியாரின் போதனைகளில், பின்வரும் மூன்று குறிப்பானவைகள் :

1-வது. அவனவன் எந்த மதத்திலே பிறந்தானோ அதிலேயே இருக்கக்கடவான். எந்த மதத்தாரும் தெயோசொபியராயிருக்கலாம். ஆகையால் இந்தியர்கள் தங்கள் விக்கிரக ஆராதனையை விட்டு சேசுநாதர்சுவாமியை வணங்கவேண்டுமென்று போதித்தல் ஒரு அக்கிரமம்.

2-வது. பாவ புண்ணியங்களுக்கு ஆக்கினை சம்பாவனை கொடுக்கிற தெய்வம் ஒன்று உண்டென்று சிந்தனையாயிருக்கவேண்டியதில்லை. அவனவனுடைய பாவ புண்ணிய கருமத்துக்கு ஏற்றாற்போலே ஆக்கினையோ சம்பாவனையோ பின்னடி பின்னடியாகத் தன்னாலே விளையும்.

3-வது. தெயோசொபி மார்க்கத்திலே உயர்ந்த படித்தட்டில் ஏறினவர்கள், இறந்துபோனவர்களுடைய ஆவேஷ காட்சிகளைக் காண்பார்கள். இந்த ஆவேஷங்களில் சில ரிஷிகளாகிய மகாத்துமாக்களுடைய தரிசனங்களாம். இவ்வித காட்சி கொடுக்கிற மகாத்துமாக்கள் மனிதர் அறியாத பரம ரகசியங்களையும், தூரந் தொலைகளில் நடக்கிற வர்த்தமானங்களையும், பின்னால் வருங் காரியங்களையும் அறிவிப்பார்கள் எனவாம்.

இந்த முப்போதனைகளினாலே உற்பத்தியாகிப் பிறப் து என்னவெனில் :

1-வது. தெயோசொபியென்னும் பெயர் மூன்றுங் காட்பாட்டை எடுப்பாய்த் தூக்கிக் காட்டுகிறது. ஆகை பால் தெயோசொபியின் முக்கிய கதி அந்த மூன்றுங்

கோட்பாட்டுக் [illegible]ம்பிருக்கிறதென்பது. உறுதி. தெயோசொபியென்னும் பதம் தெய்வீக ஞானம் அல்லது அறிவு என்று இயல்பிலே அர்த்தங்கொள்ளும். ஆனா(ல்) தெயோசொபியருடைய முக்கிய கதி ஆவேசங்களோ(டு) கூடாடுதல். இந்தியர்களுக்குள்ளே எக்காலத்திலும் ஞா(னி)களை ரிஷிகளென்றும், மகாத்துமாக்களென்றும் கூப்பிடுகிற வழக்கமுண்டு.' இதையறிந்த ஆன்னி நாய்ச்சியார் தனக்குத் தோன்றுகிறதாகச் சொல்லுகிற ஆவேசங்களை மகாத்துமாக்களென்றும், ரிஷிகளென்றும் கூறுகிறாள். ஆதலால் தெய்வீக ஞானம் என்று அர்த்தங்கொள்ளும் தெயோசொபி என்னும் சிறந்த நாமம் இம்மார்க்கத்தார்க்குப் பொருந்தாது.

2-வது. அவனவன் தான் பிறந்த மதத்தைவிட்டு வேறே மார்க்கத்திலே புகுதல் புத்திக்குறைச்சலென்று ஆன்னி நாய்ச்சியார் இந்தியருக்குப் போதித்து வருவதை யாவரும் அறிவார்கள். அப்படியானால், பதித மார்க்கத்தில் பிறந்து வளர்ந்து ஒரு பதிதப் பாதிரியை விவாகம் பண்ணியிருந்த ஆன்னியம்மாள் அந்தப் பதித மார்க்கத்தை விட்டு இந்த நூதன மதத்தில் உட்பட்டதற்குக் காரணமென்ன?

3-வது. அவனவன் செய்கிற பாவ புண்ணியங்களுக்கு ஆக்கினையுஞ் சம்பாவனையும் தன்னிலே விளைகிறது. ஆக்கினையிடவும் நல்ல பதவி அளிக்கவும் ஒரு தெய்வம் வேண்டுமென்று எண்ணுதல் என்னத்துக்கென்று மேரையாய் ஆன்னி நாய்ச்சியாரும் மற்றத் தெயோசொபியரும் உபதேசிக்கிறார்கள். இந்தப் போதனையினின்று விடுகிற அருத்தாபத்தி (Consequence) அண்டபிண்டங்களை ஆண்டு நடத்தும்படி ஒரு தெய்வம் வேண்டியதில்லையென்றாகிறது. அது அப்படியானால் இந்தப் பூமியை ஆளுகிறதற்கு இராஜாக்களும் வேண்டியதில்லை, நியாயாதிபதிகளும் அவசியமில்லையென முடிவு கூறலாம். ஏனெனில், இவ்வுலகத்திலே நடக்கிற கொலை, களவு, குடிவெறி, அவமியாசமணம், பொய்ச்சாட்சியம் முதலிய அக்கிரமங்



களுக்கு ஆக்கினை தன்னாலே வந்துவிடியுமென்கிறார்களே இந்தத் தெயோசொபியர். தன்னாலே தண்டனை வந்து விடியும்போது இராஜாங்கத்தார் நியாயஸ்தலத்திலே வீற்றிருந்து அந்தந்த பாதகங்களுக்குத் தீர்வையிட்டால் அப்போது சுயசுபாவ ஒழுங்காய் தன்னாலே நடக்கவேண்டிய நீதிசட்டத்தை அவர்கள் அநியாயமாய்த் தாங்கள் உண்டாக்கின சட்டத்துக்குக்கீழ் அடக்கப் பார்க்கிறார்கள் என்னத்தகும். ஆகவே இராஜாக்களும் அவர்களுடைய உத்தியோகஸ்தரும் செய்கிற தீர்ப்பு அக்கிரம வேலையென்று தீர்மானிக்கவேண்டியதாகும்.

இந்த நியாயத்துக்குத் தெயோசொபியர் எதிர்வாதமாக, இவ்வுலகத்து அந்தந்தத் தேசத்திலே பாவ வினைமிஞ்சாவண்ணம் இராஜ நீதித்தீர்வை அவசியமென்பார்கள். இது புத்திதானென்று ஒப்புக்கொள்வோம். ஆனால் இதுக்குச் சரிசமானமாக, சர்வலோகத்திலும் பாவ வினை மேலிட்டேறாமல் அடக்கும்பொருட்டு அவசியம் தெய்வ இராஜாங்கம் ஒன்று இருந்துகொண்டு தீர்வையிடுகிறதெனச் சந்தேகமற நிர்ணயிக்கக்கடவோம்.

இராஜாங்கம் இருக்கும்போது, பிரஜைகளில் யாராவது இராஜ சட்டத்தைக் கவனியாமல் தன் யுக்திப்படி சட்டஞ்செய்வது இராஜதுரோகமல்லோ? அவ்வாறே உலகத்தை ஆளுகிற தெய்வத்தின் சட்டத்தைப் படித்து அதுக்குப் பணியாமல் பாவ புண்ணியத்தின் பலாபலனைத் தங்கள் யுக்திப்படி தன்னிலே விளையப்பண்ணி, அந்தப் பலாபலனை மறுபிறப்பு விளைவிக்குமென்று போதித்தல் தேவதுரோகமன்றோ?

தெயோசொபி மதத்திலே கத்தோலிக் திருச்சபையின் ஒற்றுமைக்கு ஒவ்வாத பின்னபேதங்கள் இருப்பதினிமித்தம், கத்தோலிக்கர் அதிலே சேரப்படாதென்றும், சேர்ந்தவர்கள் திருச்சபையினின்று வெட்டுண்டுபோனவர்களென்றும் அர்ச். பாப்பானவர் விதித்திருக்கிறார். இந்தத் தெயோசொபியரைக்குறித்து, இவ்வளவு விஸ்தரித்துப் பேசினது

பெருமென்று எண்ணுகிறேன். இதில் [illegible] கூறினதைக் காய் மொழிபெயர்ப்பட்ட வரலாறுகள் மர்டோக் (Dr. Murdogh) என்பவர் தெபோசெமியனைப்பற்றி எழுதின புஸ்தகத்திலிருந்து பொறுக்கப்பட்டதென அறிந்துகொள்.

நங்கள் வெயலத்திலுலே ஞானத்தில் நிர்களங்க முப அரூபிவள்போல உருவெடுக்கலாமென்று போதிக்கும் இந்த மார்க்கமானது சேனாதிபதிவாயியுடைய திருச்சபையிலே சேர மனதாயிருக்கும் இத்தேசத்து ஜனங்களைத் தடுத்து அவர்களுடைய மதத்திலேயே இருத்தி வருகின்றது.

நான் இங்கே குறிப்பிட்ட மார்க்கத்தார் எல்லோரும் ஒரே ஆத்துமமும் ஒரே சரீரமுமாயிருக்கிற கத்தோலிக் வேத சபையின் அங்கமாயிருக்கத்தகாது என்று காண்பது எவ்வளவோ பரிதாபமான காரியம்! மகனே, அவர்கள் மனந்திரும்பும்படியாக, அநுதினம் மகா உருக்கத்தோடே பிரார்த்தித்துக்கொண்டுவா. கெட்ட மனதை நல்ல மனதாக்க ஜெபத்துக்கு சர்வ பெலனுண்டு.

---

## 31. பிறப்பையும் இறப்பையும் போக்குமோ புத்தர் மதம்?

தாய்: மகனே, இதுவரையில் நமது சென்னை இராஜதானியில் நடமாடிவரும் பல பல புறமதங்களின் கோட்டங்களை உனக்கு அவிவேகத்துக்களவாக உன் கண்முன் கட்டிக் காட்டினேன். பேர்போன இன்னம் ஒரு புறச்சமயம் [illegible]. அதின் குறைகுணத்தையும் நீ கொஞ்சம் படித்துக் கொள்ளல் நலமாயிருக்கும். அந்தச் சமயத்திற்குப் பேர் புத்தமதமாம். இந்த தேசத்திலே முன்னந்தப் பெரோங்கி வந்த இந்த மார்க்கம் இப்போது இவ்விடங்களிலே அற்றுப் போயிற்று. ஆனால் இந்துதேசத்துக்கு வடக்கிலும் கி[illegible] [illegible] சீமைகளிலும், இலங்கைத் தீவிலும் அ[illegible]



பலவாறாய் உருவெடுத்து ஆடுகிறது. நமது சென்னை இராஜதானியிலே விசேஷமாய்ச் சோழமண்டலத்து அஞ்ஞானிகளும் கிறீஸ்துவர்களும், 'பர்மா', ரங்கூன், இலங்கை முதலிய நாடுகளுக்கு ஓயாமல் போகவர இருக்கிறார்கள். நீயும் இப்படிப்பட்ட இடங்களுக்குச் செல்லும்படி நேரிடலாம். அவ்விடங்களில் எல்லாம் புத்தமதந்தான் முக்கியமாய்ப் பரவியிருக்கிறது. ஆகையால் புத்தமதம் எப்படிக்கொத்ததென்று நீ தெரிந்துகொள்வது ஒருவகையிலே அவசியமான காரியந்தான்:

பிள்ளை: அம்மா, புத்தமதத்தைப் பிறப்பித்த கௌதமரைப்பற்றிப் பள்ளிக்கூடத்திலே ஒரு பாடம் படித்திருக்கிறேன்.

தாய்: பள்ளிக்கூடத்திலே புத்தரின் விஷயமாய் நீ கற்றதென்ன? சொல்லு, பார்ப்போம்.

பி.: புத்தருக்கு சக்கியமுனி, கௌதமர் என்னும் பேர்களும் வழங்கும். அவர் கி. மு. 557-ம் வருஷம் பிறந்தாராம். அவருடைய தந்தை ஒரு சிற்றரசன். அவர் வளர்ந்து கலியாணமுடித்து ஒரு குழந்தைக்குந் தகப்பனானார். ஆனால் உலகத்திலே பிறப்பும் இறப்பும், பீடை பிணியும், பெருமை சிறுமையும், மூப்பும் உண்டாகிற காரணம் என்னவென்று அவருடைய மனது ஆராயத்துவக்கிற்று. அக்காலத்திலே ஞானிகளாக விளங்கிய சில பிராமணர்களிடத்திலே இதற்கு ஏதுகரம் ஒப்பச்சொல்லக் கேட்டதற்கு அவர்கள் அளித்த பதில்மொழி கௌதமருக்கு ஏற்கையானதாகத் தோன்றவில்லை. பிராமணர்கள் ஏற்படுத்திய அஸ்வமேதம் (குதிரைப் பலி) முதலிய உயிர்ப்பலிகளும் மற்ற யாகங்களும் அவருக்கு வெறுப்பாயிருந்தது (Dutt). ஒரு சமயத்தில் பிம்பாசர இராஜன் அனேகம் பசுக்களைப் பலியிடுகிறானென்று கேள்விப்பட்டு அவனுடைய யாகசாலைக்கு ஏகி மேற்கூறிய கொலை செய்யாமல் இருப்பதே புண்ணியமென்று விரித்துக் கூறி உயிர்ப்பலிகள் செய்யாதபடி நிறுத்தினார். இன்னும் பிராமணர்கள் மதத்திலே அநுசரிக்கப்படும் தபசு முயற்சி

களிலும் பயனில்லையென்று கண்டார். எதினாலும் அவரது மனக்கவலை நீங்காமல் யோசனைமேல் யோசனை பண்ணிக்கொண்டு வந்தார். கடைசியிலே அவருடைய புத்திக்குப் பட்ட ஞானமாவது என்னவெனில் :—மனிதன் தனக்குள் எழும்பிய விருப்பம் வெறுப்பு என்னும் பாசத்தை ஒழித்தால், பிறப்பும் இறப்பும் அவைகளோடு கூடிய துன்பங்களும் அற்றுப்போம் எனவாம். இந்த ஞானத்தை உலகத்துக்குப் போதிக்கும்படி தெய்வங் காட்சியாகிச் சக்கியமுனிவருக்கு அறிவித்ததாம். அதன்மேல் மனந்தேறி எங்கும் உபதேசஞ்செய்யப் புறப்பட்டார். பிச்சையெடுத்தே சாப்பிடுவார். பிராமணருடைய போதகங்களுக்கு எதிரிடையாக மனிதருக்குள்ளே ஜாதிபேதகமில்லை, மந்திரதந்திரங்களை ஓதவேண்டியதில்லை, பலிகளும் ஆகாது, தனது சிஷர்கள் ஒரே குடும்பத்துப் பிள்ளைகள்போலே மேன்ஜாதி கீழ்ஜாதியென்னும் பேச்சை நீக்கி அந்நியோந்நிய நேசமாய் வாழக்கடவார்கள் எனப் பிரசங்கித்து வருவார். இங்ஙனம் நாற்பது வருஷகாலமாய் உபதேசம்பண்ணி கி. மு. 478-ம் ௵ மரித்தாரெனச் சொல்லப்படுகிறது. அவர் மரித்த விபரம் எவ்வாறெனில் :—ஒருநாள் அவருடைய சிஷர்களில் ஒருவனான சந்தனன் என்னும் தட்டான் அவருக்கு விருந்து செய்தான். அவ்விருந்தில் பன்றியிறைச்சி பரிமாறப்பட்டது. அதை கௌதமர் புசித்ததின்மேல் வயதின் மூப்பினாலே அவருக்கு அஜீரணமுண்டாயிற்று. அதுதான் அவருக்குக் கடைசி உணவு. அவருடைய அசௌக்கியம் வளர்ந்து ஆயுளின் முடிவுக்குக் குறி தோன்றினது. நடக்கச் சக்தியற்றுத் தாகத்தினால் வருந்தினார். தமக்கு உயிர்பிரிகிற நேரம் அடுத்திருக்கிறதென்று பார்த்து சூழ்ந்துநின்ற சிஷர்களை கௌதமர் நோக்கி, நான் அறிந்தவைகளையெல்லாம் உங்களுக்குள் சரிவரக் கற்றுக்கொண்டவன் ஆனந்தன் என்பவனாக்கும். ஆதலால் என்னால் அறியவேண்டியவைகளை இனி அவனிடத்தில் அறிந்துகொள்வீர்களாக என மொழிந்து சில நாழிகைக்குள்ளே பிராணனை விட்டார். அவருடைய சரீரத்தைச் சந்தன முதலிய நறுமணமுள்ள விறகுகளைப் பரப்பிப் பரிமளத்



தைலங்களையும் வார்த்துச் சுட்டுப்போட்டார்கள். எரிந்தபின் சில எலும்புகள் மட்டும் கிடந்தனவாம். புத்தர் மரிக்கும்போது அவருக்குப் பிராயம் எண்பது என்கிறார்கள்.

தாய் : மகனே, சக்கியமுனியைப்பற்றி நமது தேசத்துக் கிரந்தங்கள் சாற்றியதை நீ படித்தபடி ஒப்பித்தாய். ஆனால் அவருடைய பேரால் வரையப்பட்டவைகளெல்லாம் அவர் இறந்து 200 வருஷங்களுக்குப்பின்தான் என்பதாக நூலாசிரியர் திட்டம்பண்ணுகிறார்கள். ஆகையால் அவைகளில் மெய்யும் பொய்யுங் கலந்திருக்குமென்பதற்குச் சந்தேகமில்லை. கதாப்பிரசங்கங்களை ஒன்றுக்கு இரண்டாய்க் கட்டிப்பேசுவதும் எழுதுவதும் நமது ஜனங்களுக்கு சகஜமென்று எவருக்குந் தெரியும்.

இது நிற்க, புத்தருடைய போதகங்களிலும் ஜீவிய நடத்தைகளிலும் சில முக்கிய பகுதிகளைச் சீர்தூக்கி அவைகளின் பெறுமதி என்னவென்று நிறுத்துப்பார்ப்போம்.

1. அண்டபிண்டமெல்லாவற்றையும் படைத்த கடவுளைப்பற்றி கௌதமர் யாதொன்றும் வெளிப்படையாய் உபதேசிக்கவில்லையென்று புத்த மார்க்கத்து நூல்களால் விளங்குகிறது. அதினிமித்தம் அவர் ஒரு நாஸ்திகரென்று சில கல்விமான்கள் நிர்ணயபாதஞ்செய்தார்கள். ஆயினும் கடவுளைப்பற்றி ஒருவர் யாதொன்றும் பேசாததினாலே மாத்திரம் அவர் நாஸ்திகரென்று தீர்க்கிறது சரியல்ல. தெய்வசித்தத்துக்குப் பணிந்தல்லோ புத்தர் தமது கொள்கையை உலகத்துக்கு உபதேசிக்கத் துணிந்தாரென்று அவருடைய சரித்திரத்திலே செப்பியிருக்கின்றது. ஆகையால் அவரை நாஸ்திகரென்று எண்ணுவது நியாயமல்ல. ஆனால் தெய்வத்தின் ஏவுதலுக்கு அமைந்து ஒரு நூதன வேதம் போதிக்கப்போனவர் தெய்வத்தைப்பற்றி கேவலம் மௌனஞ்சாதித்த குற்றம் அவர்மேல் சுமருகிறது நிச்சயம்.

2. நமது தேசத்து ஜனங்கள் கும்பிடுகிற திரிமூர்த்திகளுக்குள் ஒருவராகிய விஷ்ணு பத்து பிரதான

அவதாரங்கள் இதுவரையில் எடுத்திருப்பதாகப் புராணங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. அவைகளில் ஒரு அவதாரத்திலே விஷ்ணு கௌதம புத்தராக உருவெடுத்துப் புத்தமதத்தை ஏற்படுத்தினாராம். வைஷ்ணவர்கள் ஜாதி பேதங்களை நுட்பமாய்ப் பார்த்து நடக்கிறவர்கள், பூசைப் பலி கொடுப்பவர்கள், மந்திரங்களை ஓதுவோராவர். இந்தச் செயல்களெல்லாம் விஷ்ணுவுக்குப் பிரியமென்றும் அவருடைய மதத்துக்கு அவசியமென்றுமல்லோ, அவர்கள் அநுஷ்டிக்கிறார்கள். ஆனால் கௌதம புத்தர் ஜாதி பேதகத்தை நீக்கினவர். அவருடைய சரித்திரத்திலே எழுதப்பட்டிருக்கிறபடி, "புத்த சபையிலே இளைஞரும் முதியரும், பார்ப்பாருஞ் சூத்திரரும், வறிஞரும் செல்வரும், அறிஞரும் பேதையரும் ஆகிய எல்லோருமே ஒருங்குசேரலாம்." "அது உயர்ந்தவனாக எண்ணிக்கொண்டிருக்கும் இருபிறப்பாளனுக்கும் மிகத்தாழ்ந்த சண்டாளனுக்கும் ஒரேவிதமாகத் திறந்துள்ளது" என்று கௌதமரே தெளிவாய்ப் போதித்தார். பிராம்ணர் வணங்கிவந்த தேவர்களையும் தேவதைகளையும் மதித்தவரல்ல. பரம கடவுளைப்பற்றியே மௌனங்காத்தவர் பிராமணர் உண்டாக்கின சாமிகளை மதிப்பதெப்படி? இன்னம் பார்ப்பார்களின் அநுஷ்டானங்களையும் அவர்கள் ஓதிய மந்திரங்களையும் பலிகளையும் அவர் வெறுத்துத்தள்ளினார்.

கௌதம புத்தரின் நடபடிக்கை இவ்வாறாய் ஒழுக, விஷ்ணுவின் அவதாரந்தான் கௌதமபுத்தரென்றால் அப்போது தனது பக்தராகிய வைஷ்ணவர்கள் வெகு நுணுக்கமாய்க் காத்[illegible]ரும் ஜாதிபேதங்கள், பலிபூசைகள், மந்திர[illegible]யெல்லாம், விஷ்ணு புத்தரின் அவதாரமெடுத்[illegible] [illegible]த்தாரெனக் கொள்ளப்பெறும். இந்த மாறுபா[illegible] [illegible] தன் அவதாரத்திலே பண்ணினதினாலே அ[illegible] [illegible]யில் [illegible]பெற்ற [illegible]மென்பது திண்ணம்.

3. உயிர்வதை நீக்குவது புண்ணியமென்று போதித்த பிம்பாசார அரசன் உயிர்ப்பலி கொடுக்காதபடி புத்தர் தடுத்தாரென அவருடைய சரித்திரத்தில் படிக்கிறோம். புத்தமதத்தாரும் நாளதுவரையில் எந்த உயிரையும் ஒரு எறும்பு கொசுவையுமுதலாய்க் கொல்லல் பாதகமென்று உபதேசிக்கிறார்கள். பிராமணரும் அவ்வாறே சாதிக்கிறார்கள். இந்தப் போதகத்துக்கு எதிர்மாறாக சக்கியமுனி பன்றியின் இறைச்சியைத் தின்று அதினாலே அஜீரணங் கண்டு சாவானேன்? அது அவருடைய கடைசிச் செயல். அதாவது, அவர் ஞானத்திலே எல்லாருக்கும் மேலாக உயர்ந்தேறி விருப்பம் வெறுப்பென்னும் பாசங்களையெல்லாம் வெறுத்துத் தனக்கு ஏக கதியாகிய நிர்வாண (பற்று அற்ற நிலைமை) ஸ்திதியைப் பூரணமாய் அடைந்திருந்த காலத்திலே பன்றி இறைச்சியைத் தின்று மடிகிறார். பேச்சுக்கும் நடத்தைக்கும் இதுபோன்ற எதிர்மாறும் உண்டோ?



கொல்லல் பாவம், தின்னல் பாவமல்ல என்பாரானால், இதோ திருவள்ளுவர் எழும்பி,

> தினற்பொருட்டால் கொள்ளாது உலகெனில் யாரும்
> விலைப்பொருட்டால் ஊன்தருவாரில் (c. 26)

என எதிரிடைபேசுகிறார். இந்தக் கவியின் கருத்தைப் பார்த்தால் உலகத்திலே மாம்ஸம் புசிப்பவர்கள் இல்லாவிடில் உயிர்ப்பிராணிகளைக் கொல்லுவாரும் இரார்கள் என்றல்லோ முடிவுகூறலாகின்றது. ஆகவே தனக்கு இறைச்சி பரிமாறின சீஷனைக் கண்டியாமல் விட்டது கௌதமர்பேரில் பெரிய குற்றமாகச் சார்கிறது. அவர் அவனைப் புகழ்ந்தாரென்று எழுதப்பட்டிருப்பதால் அவர் மகாப் பிசகில் விழுந்தார் என்பதற்குச் சந்தேகமில்லை. ஆகையால் கௌதம புத்தருடைய கடைசிச் செயல் புத்த மதக் கொள்கைக்கு மாறுபாடாயிருக்கிறது.

4. கௌதமர் உலக துன்பத்தைப் போக்கும் வழியை அறியும்படி துவக்கத்தில் ஒன்றுஞ் சாப்பிடாமல், யோசனை பண்ணிக்கொண்டேயிருந்தார். சில நாளுக்குப்பின் களைத்து இளைப்பினாலே கால் ஊன்றி நிற்கமுடியாமல் மூர்ச்

சையாய் விழுந்தார். அவரோடேகூட இருந்த தபசிகள் அவர் இறந்தாரென்றே நினைத்தார்கள். சற்றுநேரத்திற்குப்பின் மயக்கம் தெளிந்து எழுந்ததன்மேல் பட்டினியாயிருந்து தபசு புரிகிறதிலே பலன் ஒன்றுமில்லையென்று அவருக்குப் புலப்பட்டது. அதுமுதல் கிடைத்த போசனத்தை உண்டு வருவார். தான் பரீட்சித்து அறிந்த இந்த உண்மையைச் சிஷர்களுக்குத் தெளிவித்து,

உணவால் உடம்பும்
உடம்பால் உணர்வும்

ஆகிறதென்று கௌதமர் போதித்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. திரிமூர்த்தி மார்க்கத்திலே ஒருவன் ஞானியாகிறதற்கு வயிற்றைச் சன்னஞ்சன்னமாய் ஒடுக்கிப் பட்டினியாயிருந்து மூச்சையும் அடக்கித் திரேகம் இல்லாதவன் போல ஆகவேணுமென்று அக்காலத்திலே உபதேசிக்கப்பட்டது, இக்காலத்திலும் அவ்வண்ணமே உபதேசிக்கப்படுகிறது. கௌதமர் ஞானம் பெறுகிறதற்கு இவ்வித தபமுயற்சிகள் உதவாதென்று தள்ளினர். ஆகையால் புத்தர் அவதாரமெடுத்த விஷ்ணு தபவிஷயத்திலே தனது பக்தராகிய பிராமணருடைய கொள்கையைக் கைநெகிழ்ந்தாரென்று நிச்சயிக்கவேண்டியது.

5. கௌதமர் மரித்தபின் அவருடைய சடலத்தைச் சந்தனமுதலிய நறுமணமுள்ள விறகுக் கட்டைகளைப் பரப்பி அடுக்கித் தீமூட்டிச் சுட்டார்கள். பிரேதமுழுதும் எரிந்து சாம்பலாய்ப் போகச் சில எலும்புகள்மாத்திரங் கிடந்தன. அவைகளை ஒரு கரகத்தில் போட்டு சிஷர்கள் அக்கரகத்தை ஒரு கோபுரத்தில் பதித்துப் பூச்சியமாய் வணங்கிவந்தார்கள். இந்த எலும்புகளில் ஒன்றுவது இலங்கைத்தீவுக்கு அனுப்பப்பட்டதாக நூலாசிரியர் வசனித்திருப்பதைக் காணேம். இப்படியிருக்க, இலங்கையிலேயுள்ள ஓர் கோவிலில் புத்தருடைய பல் என ஒன்று கண்டியிலே வணங்கப்பட்டு வருகிறது எவ்வளவோ அதிசயம்!



போர்த்துகீஸ்காரர் கண்டியைத் தங்கள் கைவசமாக்கொண்டபோது அங்கே அந்நாள்மட்டும் வணங்கப்பட்டிருந்த பல்லானது அவர்கள் கையில் அகப்பட்டது. அதை அவர்கள் கோவைக்கு எடுத்துப்போய் எல்லாரும் அறிய அக்கினிக்கிரையாக்கினர். அதற்குமேல் எப்படியோ புத்தருடைய பல் என்னப்பட்டதொன்றை நாளது வரையில் இலங்கைத்தீவின் புத்தமதத்தார் கும்பிட்டு வருகிறார்கள் (Buddha's Tooth by Mgr. Zaleski). ஆகையால் அந்தத் தீவிலுள்ள புத்தர்கள் கௌதமருடைய போதனையை அரைகுறையாய் ஏற்றுக்கொண்டாலும் நடக்கையிலே மெய்யான விக்கிரக ஆராதனைக்காரரென்பது துலாம்பரமான காரியம்.

6. தெய்வம் உண்டென்று கௌதமர் வெளிப்படையாய்ப் போதியாமல் மௌனங்காத்தவண்ணமே, அழியாத ஆத்துமம் உண்டென்பதைப்பற்றியும் அவர் உறுதிவாக்களித்தவரல்ல. ஒருநாள் ஒரு துறவி அவரிடஞ்சென்று, ஆத்துமம் உண்டோவென்க, முனிவர் ஒன்றுஞ் சொல்லாமலிருந்தார். அவர் சும்மா இருக்கிறதைக் கண்டு, தன் கேள்வியை மாற்றி, ஆத்துமம் இல்லையோவென்று கேட்டார். அதற்கும் அவர் வாய்பேசவில்லை.

கௌதமர் கலியாணமில்லாத பெண்களையும் தமது சங்கத்தில் சேர்த்துக் கன்னியர் அந்தஸ்தில் சீவிக்கும்படி செய்வார். அவர்களுக்குப் பிக்ஷுணிகளெனப் பெயர் வழங்கிற்று. அவர்களில் க்ஷேமையென்னப்பட்ட ஒரு பிக்ஷுணியிருந்தாள். இவள் புத்தரிடத்தில் ஞான வழிகளைப் பூரணமாய்க் கற்றவள்போலும். ஒரு சமயத்தில் கோசலதேசத்தின் அரசன் பயணம்போகையில் வழியிலே க்ஷேமையைத் தரிசித்து, "ஓ, பகவதி, சக்கியமுனி இறந்தபின் உயிர்வாழ்வாரோ? என, க்ஷேமை, "அரசே, இறந்தபின் அவர் உயிரோடிருப்பதாக எனக்குச் சொல்லவில்லை" என்றாள். அரசர், "ஓ, பகவதி, இறந்தபின் கௌதமர் இல்லாமற் போய்விட்டார் என்கவேண்டியதோ?" க்ஷேமை, "அரசே, இறந்தபின் அவர் இல்லையென்று என்

னிடத்தில் சொன்னவருமல்ல." "ஓ, அப்படியா, ஆயினும் இறந்தபின், அவர் இருப்பாரும் இராதாரும் ஆனார் என்கலாமோ, என்ன?" "மன்னரே, புத்தமுனி தான் மரித்தபின் இருப்பவரும் இராதாரும் ஆவதாக எனக்கு அறிவிக்கவில்லை" எனப் பதில் மொழிந்தாள். அதற்கு "ஓ, பகவதி, காரியம் அங்ஙனமாயின், கௌதமர் காலம் பண்ணினபின் இருக்கிறார் என்றுஞ் சொல்லப்படாது இல்லையென்றுஞ் சொல்லப்படாது என்னவோ?" என்று இராஜன் வினவ, க்ஷேமை, "ஓ மன்னவனே, கௌதமர் செத்தபின் இருப்பவருமல்ல, இராதவருமல்ல என்றும் நான் செப்பமாட்டேன். புத்தமுனிவர் இதுகாரியத்திலே எனக்கு ஒன்றுஞ் சொல்லவில்லை" என்று எல்லாம் ஐயுற வாய்ப் பேசினாள். அரசன் இதைக்கேட்டு உண்மையை அறிய வகையில்லையென்று உணர்ந்து தன் வழியே சென்றான்.

இந்த உதாரணங்களை முன்னிட்டு கௌதமர் ஆத்துமம் இல்லையென்று நினைத்தாராக்கும் என்ன இடமில்லை. ஏனெனில் கௌதமர் ஒருதருணத்தில் சீஷர்களை நோக்கி, "ஓ, பிக்ஷுகளே (புத்த சந்நியாசிகள்) உருவமுள்ள பொருள் நிலைமையுற்றதோ, அல்லவோ?" என்று வினவினார். சீஷர்கள் அது நிலையற்றது என்க, மீளவும் அவர், நிலையற்ற பொருள் துன்பமோ, இன்பமோ சொல்லுங்கள் என்றார். அது துன்பந்தானென்றார்கள். அதைக்கேட்டு, முனிவர், நீங்கள் சொல்லியபடி நிலையற்ற பொருள் எதுவோ அது ஆத்துமா அல்லவென்று கூறினார். இதன்றியே எந்த வஸ்துவுக்கு உருவமுண்டோ அது ஆத்துமாவாயிராதென்றும் போதித்திருக்கிறார்.

புத்தமுனி செப்பிய வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்தால் ஆத்துமம் இல்லையென்று அவர் எண்ணினதாக நிர்ணயிக்க இடமேயில்லை. ஆயினும் மகா முக்கிய விஷயங்களாகிய தெய்வத்தையும் ஆத்துமத்தையும்பற்றி அவர் யாதொரு கொள்கையையும் திட்டமாகவும் உறுதியாகவும் வெளியாக்காதபோதே, அவ்விரண்டு காரியங்களும் அவரு

[illegible] புத்திசு[illegible]தா நின்றமையினாலேதானென்கலாம்.

7. இவ்வுலகத்திலே பிறப்பும் இறப்பும், பிணியும் மூப்பும் ஆகிய துன்பங்களை நிவாரணமாக்கும் மார்க்கத்தை கௌதமர் தேடினார். வெகுநாள் முயன்றபின், மனிதன் தன் மனதில் எழும்பும் விருப்பமோ வெறுப்போ பற்றுதலென்னப்பட்ட யாவற்றையும் வேரோடே பிடுங்கியெறிந்தால் பிறப்பும் இறப்பும் முன்பிறப்பின் மற்றப் பீடைகளும் ஒழிந்தேபோமென்று அவருக்குத் துலக்கமாய் விளங்கினதாம். அதுமுதல் தன் பற்றுதல்களையெல்லாம் அவர் வென்றுவந்தார். பற்றுதல்களின் மேல் பூரண வெற்றியை நிர்வாண நிலைமையென்பார். இந்த நிர்வாண ஸ்திதியை குறையில்லாமல் அவர் முற்றும் அடைந்ததாக புத்தர் நூல்களில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் புத்தமுனிவர் தமது கடைசி காலத்தில் விருப்பம் வெறுப்பு என்னப்பட்டதெல்லாவற்றையும் அவித்துப்போட்டாரென்கவேண்டியது. அவருடைய போதனைப்படி பற்றுதல்களையெல்லாம் ஒருப்படப் போக்கினவனுக்கு பிறப்புமில்லை, இறப்புமில்லை, வியாதி நோவு, மூப்பு முதலிய முன்பிறப்பின் தோஷம் அண்டக்கூடாதே. இது கௌதமரின் கொள்கைப்படி சாத்தியமாயிருக்க, அவர் பன்றி இறைச்சியைத் தின்று அஜீரணத்தாலும் முதிர்ந்த வயதாலும் தீராத வியாதியஸ்தனாகி முடங்கிக்கிடப்பானேன்? அவரிடத்தில் முன்பிறப்பின் கருமதோஷமெல்லாம் தொலைந்து போனதினாலே அவரை மரணம் தீண்டப்படாதல்லோ? அதற்கு மாறாக அவர் உரோகஸ்தனாகிச் சாகும்படியானதால், பற்றுதலையெல்லாம் தொலைப்பதிலே துன்பதுரிதங்களும் தொலையுமென்று அவர் எண்ணினது பிசகாமே. மீளவும் பற்றுதல்களையெல்லாம் கௌதமர் தள்ளி முன்பிறப்பின் தோஷம் ஒன்றும் தம்மைத் தீண்டாதபடி அவர் செய்திருந்தாலும் துன்பமும் சாவும் அவரைவிட்டு நீங்கவில்லையே. ஆகையால் மனிதன் படுகிற துன்பமாகிற பீடை பிணி சாவுக்கும், முன்பிறப்பு என்னப்பட்டதுக்கும் காரணகாரிய சம்பந்தக்கோர்வை கிடையாதென்று

நிச்சயமாகிறது. இத்தேசத்து அஞ்ஞானிகள் விசுவசிக்குமாப்போலே புத்தமுனிவரை விஷ்ணுவின் அவதாரமாகப் பாவித்தால் முன்பிறப்புக்கும் அவருக்கும் யாதொரு பொருத்தமும் இருக்கப்படாதென்பது உச்சிப்பகலிலும் துலக்கமாக விளங்கும்.

உலகத்தில் பரம்பிய சாவு துன்ப துரிதங்களுக்கு, முன்பிறப்பின் தோஷமே காரணமன்றி வேறே முகாந்திரமில்லையென்று புத்தமுனிவரும் பிராமணர்களும் அவர்களைச் சேர்ந்த மற்ற அஞ்ஞானிகளும் விசுவசித்தும் பிரசங்கித்தும் வந்தனர். ஆனால் புத்தமுனிவரிடத்தில் முன்பிறப்பின் தோஷமானது தொலைந்தபின்னரும், வியாதியும் மரணமும் குடியிருந்ததை அறிவோம். ஆகவே சாவு பீடை பிணிகளுக்கு முன்பிறப்புக் காரணமல்லவென்று நிர்ணயிக்கப்பெறும். அது காரணமல்லவென்றால், முன்பிறப்பேயில்லையென்பது உறுதியான சித்தாந்தம்.

8. சக்கியமுனியின் நோக்கப்படி மனிதன் எவ்வித பற்றுதலையும் அடியோடே கொல்லுவானாகில் அவன் யாதொரு உணர்வுமில்லாமல் பட்டுப்போன மரக்கட்டையாகிறான். கௌதமர் அப்படியே ஆகியிருக்கவேண்டியது. அப்படிக்கில்லாமல் சாகும்வரையில் அவர் பசியுற்றுப் பன்றி இறைச்சியைப் புசித்தார், சாகுமுன் தாகத்துக்குத் தண்ணீர் அருந்தினார், தன் வியாதியை உணர்ந்தார். ஆகையால் மனிதன் பற்றுதலையெல்லாம் ஒருப்படப் போக்கிவிடும்படி அவர் உபதேசம் பண்ணினது மகா பிசகான காரியம்.

9. தன் பற்றுதல்களையெல்லாம் மனிதன் அவித்தால் பிறப்புமில்லை இறப்புமில்லை துன்பமும் இல்லையென்று கௌதமர் போதித்தார். அவர் கொள்கையின்படி பிறப்பு ஒரு தீங்கென்று புத்தர் நூலில் வரையப்பட்டிருக்கிறது. பிறப்பே தீங்கானால் இவ்வுலகத்திலே மனித ஜன்மமே வாழப்படாதென்று அர்த்தமாகும். மனித ஜன்மமே ஆகாதென்றால் இந்தப் பூமியும் இதுக்கு வெளிச்சத்தை வீசும் சூரிய சந்திர நட்சத்திரங்களும் என்னத்துக்கென்று



[illegible]வி எழும்புகிறது. சர்வலோகமும் பாழாய்ப் போகும்படி புத்தமதம் வழிகாட்டுகிறதென்கவும். இவ்வித கொள்கையை யார்தான் ஏற்றுக்கொள்ளமுடியும்? ஆகையால் கௌதமர் சுபாவத்திலே மகா நற்குணசாலியாயிருந்தும் முற்றும் புத்திக்கு ஒவ்வாத பிறவாமைக்கு வழியென்னும் அபத்தத்தைப் போதித்தார். தெய்வ வழிகாட்டியில்லாத போது மனிதனுடைய சுயபுத்தி எம்மாத்திரம் தவறி விழலாமென்று கௌதமருடைய ஜீவியம் நமக்குப் படிப்பிக்கிறது.

மகனே, நான் இதுவரையில் செப்பினதெல்லாவற்றையும் நீ உணர்ந்து, தெய்வ வழிகாட்டியாகிய திருச்சபையை மரணபரியந்தம் கடைப்பிடித்து நடந்துவா. நீ துன்பத்திலேயும் சாவிலேயும் மெய்யாகவே பாக்கியவானாயிருப்பாய். நமது ஆண்டவராகிய சேசுநாதர்சுவாமி கௌதமரைப் போலே துன்பம் வராத வழியை அல்ல, சாவு துன்பத்திலே பாக்கியமாயிருக்கிற வழியைத் தமது நடத்தையாலும் வாக்காலுங் கற்றுக்கொடுத்தார். அதை மறக்காதே.

---

## 32. மறுலோகமும் மறுபிறப்பும்.

தாய்: இதுவரையில், மகனே, நமது பூமியிலும் அதைச் சூழ்ந்திருக்கும் சீமைகளிலும், சேசுநாதர்சுவாமி படிப்பித்த சத்தியமறைக்கு முன்னும் பின்னுமாக, முளைத்து வளர்ந்து ஆணிவேர் இல்லாது ஆடிக்கொண்டிருக்கும் மதாசாரங்களைப்பற்றி சில அறிகுறிகளை விளம்பினேன். அவைகளில் எல்லாம் இரண்டு பாரியான குறைகள் தெளிவாய்ப் புலப்படுகின்றன. வேத விசுவாச சத்தியங்களின்பட்டிலே மனதும் புத்தியும் ஒற்றுமையில்லாத் தன்மை முதற் குறைச்சலாகும். அந்தந்த மதத்தான் தனக்குப் பிரியப்பட்டதை விசுவசிக்கிறான்; பிரியமற்றதைத் தள்ளிப்போடுகிறான். இன்றைக்கு விசுவசிப்பதை நாளைக்கு மறுக்கிறான். இரண்டாங் குறையாவது, ஒவ்வொரு மதத்திலும் சித்தாந்தங்களாகப் போதிக்கப்படுங்

கொள்கைகளில் ஒன்றோடொன்று பொருந்தாத அபத்தங்கள் பல உண்டு. இவ்விரு ஊனங்களினாலே மெய்யான வேதத்துக்கு அவசியமான புத்தி மன ஒற்றுமை குலைகிறது. இவ்வித குலைவுற்ற மார்க்கங்கள் தெய்வத்தினிடமிருந்து உற்பத்தியாகக்கூடாது. ஆகையால் அவைகள் மனிதனுடைய சுய புத்தியிலிருந்து பிறந்த பொய் மதங்களென்பதற்குச் சந்தேகமில்லை.

இதன்றியே மரணத்துக்குப்பின் நரஜென்மம் என்ன சீர் பெறுகிறதென்று நிதானித்தலே எந்த வேதத்திலும் பிரதான நோக்கம். இந்த நோக்கமில்லாத வேதம் வேதமல்ல. இதுநிற்க, மனித புத்தியானது மறுலோக இரகசியத்தை அளாவும்படியான வல்லமையற்றதென்பது யாவரும் ஒப்புக்கொள்ளுகிற காரியம். அதைச் சகலத்தையும் படைத்து ஆளுகிற தெய்வமே அறிவிக்கவேண்டிய பரம இரகசியம். இதைத் தாங்களாய் ஆழ்ந்து ஓர்ந்து தீர்மானிக்கத்துணிந்த ஞானிகள் திக்காலுக்கொருவராய்ப் பிரிந்து செல்லுகிறார்கள். இவ்வுலக பாக்கியமே மனிதனுடைய கதி, மறுலோகமேது என்பார் சிலர். முன்பிறப்பு, பின்பிறப்பு உண்டென்பார் பலர். வேறு சிலர் மனிதன் மரித்து தெய்வத்தோடே தெய்வமாய் ஏகபொருளாகிறானென்கிறார்கள். கடைசியாய்ச் சிலருடைய கொள்கைப்படி மனிதனுக்கு மறுலோகத்திலே மோக்ஷம் நரகமென இரு ஸ்தலங்களுண்டு. ஆனால் அவைகள் முடியும் முடியாது என்று ஈரொட்டாய் மொழிகிறார்கள். இந்தப் போதனைகள் மெய்யான தெய்வத்தினிடமிருந்து வருகிறதில்லை. ஆகையால் அவைகளைப் பொய்யென்று யாவரும் தள்ளிப்போடவேண்டியது.

பிள்ளை: அவைகள் தெய்வத்தினிடமிருந்து பிறக்கவில்லையென்று ஒப்பிக்கிறதெப்படி, அம்மா?

தாய்: 1. மேற்கூறிய கொள்கைகள் இதுவரையில் நாம் ஆராய்ந்து பார்த்த மதங்களில் அரைகுறையாக ஒப்புக்கொள்ளப்படுகிறது. இவையெல்லாம் பொய்மார்க்கமென்று ஏற்கனவே திட்டமாய் அறிந்துகொண்டோம்.



ஆகவே இந்தக் கொள்கைகளைக் கடவுள்தான் அறிவித்தாரென்று சொல்லவேகூடாது. அவரே அறிவித்தாரென்று சாதித்தால் கடவுள் ஒவ்வொரு மதத்தாருக்கும் ஒவ்வாத வெவ்வேறு கதியைப் படிப்பித்து ஒருத்தர் ஒருத்தரோடே வைராக்கிய போராட்டங்களை எழுப்பிவிடுகிறாரென்கவேண்டியிருக்கும். இவ்வித அலங்கோலத்தை உண்டாக்குகிற வஸ்து பொய்த் தெய்வமாயிருக்குமொழிய மெய்க்கடவுளாயிருக்குமென்று கனவிலும் எண்ணப்படாது. ஆகையால் அவைகளைக் கடவுள் அறிவிக்கவில்லையென்பது திண்ணம்.

2. ஆதிகாலமுதல் அபிரகாம் வம்சத்தாராகிய இஸ்ராயேல் என்னப்பட்ட யூதஜனங்களும் அவர்களுக்குப்பின் கிறீஸ்துவர்களும் விடாமுறையாக மெய்யான ஏக கடவுளை வெளிப்படையாகச் சர்வலோகமும் அறியும்படியான வகையாய் ஆராதித்து வணங்கிவந்திருக்கிறார்கள். நாளதுவரியந்தம் கிறீஸ்துவர்கள் அப்படியே வணங்கிவருகிறார்கள். இவர்கள் மேற்காட்டியபடி மறுபிறப்பு முதலிய சித்திகள் சுத்தப் பொய்யென வெறுத்து, மனிதனுக்குச் சாவுக்குப்பின் நித்திய மோட்சமாவது நித்திய நரகமாவது மாறாத கதியாகுமென்று ஓரே உறுதியாக விசுவசித்துப் போதிக்கிறார்கள். இதைக் கடவுள் தங்களுக்குத் தெரிவித்ததாகப் பிரமாணமாய்ச் சொல்லுகிறார்கள். மெய்யான சுவாமியைக் கும்பிடுகிறவர்களுக்குக் கடவுள் உண்மையைத் தெரிவித்தாரென்று நம்பவேண்டியதோ, பொய்யான மதத்தாருக்குத் தெரிவித்தாரென்று நம்பவேண்டுமோ? இதுக்குப் பதில்மொழி பளிச்சென்று துலங்குகிறதல்லோ? ஆகையால் சர்வலோகத்தையும் படைத்து பரிபாலனம் பண்ணுகிற ஏக கடவுளைக் கும்பிட்டுவருகிற கிறீஸ்துவர்கள் விடாமுறையாய் விசுவசிக்கிறதுபோலே, மனிதன் இறந்தபின் தன் தன் வாழ்நாட்களின் நடபடிக்கைக்கு ஒத்தபடி நித்திய மோக்ஷத்தையாவது நித்திய நரகத்தையாவது அடைவானென்பதே மாறாத சத்தியம். இதை முழுமனதோடே விசுவசியாதவன் சபிக்கப்பட்டவனென்று கிறீஸ்துவேதம் ஆணை சத்தியமாகப் படிப்பிக்கிறது. இதினிமித்தம்

இந்தச் சத்தியத்தை ஒப்பிக்கிறதுக்குத் தன்னுயிரை முதலாய்க் கொடுக்க எந்தக் கிறீஸ்தவனும் துணிந்திருக்கக் கடமை. இதர மதங்கள் மனிதனுடைய முடிவு இன்னதென்று சத்தியப் பிரமாணமாகப் படிப்பிக்கிறதுமில்லை; அதை விசுவசியாதவர்களைச் சாபம்போட்டு நீக்குகிறதுமில்லை; அதற்காக மனிதன் தன் பிராணனைக் கொடுக்கக் கடமையென்று போதிக்கிறதுமில்லை. இந்த இரு பட்சத்தையும் சீர்தூக்கிப்பார்க்கிற புத்திமான் எந்த நெறியைக் கடைப்பிடிப்பானென்று நான் சொல்லவேண்டியதில்லை.

பி.: மறுலோக வாழ்வைப்பற்றிச் சித்தாந்திகளும், சாஸ்திரிகளும், சான்றோர் என்னப்பட்டவர்களும் தங்கள் சுய புத்தியினாலே பலவாறு வசனித்திருக்கிறார்களே. அவர்களுடைய வாக்கை எடுத்துக்கொண்டே அவர்களை மடக்குகிறதெப்படி?

தாய்: அவர்களை எப்படி மடக்கி முடுக்கினாலும் தாங்கள் மடங்கினோம் முடங்கினோமென்று ஒப்புக்கொள்ள மாட்டார்கள். ஆயினும் பக்கத்திலிருந்து செவிகொடுப்பவர்களுக்கு நியாயம் பிடிபடலாம். ஆகையால் நான் செப்பும் எதிரிடை வார்த்தையைக் கவனமாய்க் கேள்.

1. மனிதனுடைய கதியெல்லாம் இவ்வுலக பாக்கியத்திலேதான் அடங்கியிருக்கிறது, அதற்கப்பால் மறுலோக வாழ்வு இல்லையென்பார் உலக ஞானிகளில் சிலர். இவர்கள் மனிதன் சாகும்போது உடலோடே உயிராகிற ஆத்துமமும் அழிந்துபோகின்றதென்பார்களாக்கும். தெய்வமில்லை மோட்சம் நரகமில்லையென்று பிதற்றுகிற நாஸ்திகர் இவ்வகை பரம ஞானிகள்தான். இவர்களுக்கு நேர்விரோதமாக இவ்வுலக சுகவாழ்வெல்லாம் சுத்த மாய்கை மயக்கந்தானென்று உபதேசிக்கிற ஞானிகளுமுண்டே. நாஸ்திகர் அவர்களுக்கு என்ன எதிர்வாதஞ் சொல்லப்போகிறார்களோ!

2. சாவுக்குப்பின் ஆத்துமத்துக்கு மோக்ஷ நரகம் இல்லையானால், தேச யுத்தங்களும் பீடை பிணியும் துவக்கும்போதே மனிதன் தன்னை மாய்த்துக்கொள்ளுகிறதல்லோ உத்தமமென்னத்தகும். தெய்வமிருந்தென்னவென்றல்லோ கேட்கும்படியாகும். ஆனால் பெருமைக்காக அங்கங்கே சமயாசமயம் தற்கொலை நடந்தாலும், அது அவலகதியென்றும் மகா கேவலமென்றும் உலகமெங்கும் நல்லோரும் தீயோரும் கற்றோரும் கல்லாதாரும் அதை வெறுக்கிறார்கள். தற்கொலை புரிந்துகொள்ளுகிறவர்களுக்கு சத்திய வேதத்தில் நல்லடக்கமில்லை. நெடுநாள் வாழவேண்டுமென்று வைத்திய சாஸ்திர வித்தைகளை மேன்மேலும் கூர்ந்து ஆழ்ந்து படிக்கிறார்கள். இவர்கள் எல்லோரும் பைத்தியகாரரென்று நாஸ்திகர் சொல்லவேண்டியது. அல்லவென்றால், தாங்களே பித்துக்கொள்ளிகளாய்ப் பிதற்றுகிறோமென்று ஒப்புக்கொண்டு முடங்கிக் கிடக்கக்கடவார்கள்.

3. மனிதனுக்கு இப்பூலோகமேயன்றி கதி வேறில்லையென்றால், மனிதனுக்கும் மிருக ஜெந்துக்கும் ஒரே கதியென்று தீருகிறது. மனிதன் புத்தியுள்ள மிருகம், கால் நடை ஜீவனோவெனில் புத்தியற்ற மிருகமென்கிற வித்தியாசம் ஒன்றுதான் நிற்கும். புத்தியற்ற ஆடு நாளைக்கு தான் சாகப்போகிறதை நினையாமல், இன்றைக்கு உண்ணும், குடிக்கும், உறங்கும்; புத்தியுள்ள மிருகமாகிற மனிதன், நான் நாளைக்குச் சாகப்போகிறேன், ஆகையால் இன்றைக்கே உண்பேன், குடிப்பேன், உறங்குவேன் (இசா. 23: 13) என்பானாக்கும். இருவர்க்கத்துக்கும் கதியொன்றேயானால் காரியம் அப்படித்தான் இருக்கவேண்டியது. ஆயினும் யாதாமொருவனை நோக்கி, "நீ புத்தியுள்ள மிருகந்தான்" என்றால் அவன் வெகுளுகிறானே. இதுக்குக் காரணமென்ன? புத்தியிருந்தும் ஒரு மிருகம்போலே தின்கிறான் திரிகிறான் என்கிற இழிவான அர்த்தம் அந்த வார்த்தைக்கு இருப்பதினாலேதானல்லோ? மனித சந்ததியும் அந்தக் குணிப்பெயரைச் சினந்து தள்ளுகின்றது. நாஸ்திகர்கள்மாத்திரம் பிரியமாய் தங்கள்மேல் அதைச் சாட்டிக்கொள்வார்களாக்கும். அப்படியானால்

மனித சந்ததியைவிட்டு மிருக ஜெந்துக்களுடைய சகவாசத்தை அவர்கள் நாடிப்போகலாம்.

4. திருவள்ளுவர் பின்வருமாறு பாடுகிறார்:—

"இலக்கம் உடம்பு இடும்பைக்கென்று கலக்கத்தைக்
கையாறாக் கொள்ளாதா மேல்." (அதி. 63)

இதன் பொருளாவது: மேலறிவுடையோர், தேகமானது துன்ப ஈட்டிவாளுக்கு இலக்கென்று தெளிந்து, என்ன துன்பம் தங்களுக்கு நேர்ந்தாலும் அதினாலே கலங்கமாட்டார் என்றபடி. மனித உடலை உள்ளும் புறம்பும் பல பல இடையூறுகள் உபாதிக்கிறது நிசமென்று மனித சந்ததி கண்கூடாய் உணர்கிறது. அப்படிப்பட்ட உடலுக்கு இவ்வுலக வாழ்வுதான் பாக்கியமென்று கூசாமல் பேசுகிறது அதிசயமே.

ஆகையால் மனித சந்ததிக்கு மரணத்துக்குப்பின் வேறு கதியில்லை, இவ்வுலகந்தான் அதுக்கு மோக்ஷமென்கிற போதனை மகா அபத்தமானதும் வெட்கத்துக்கும் உரியதென்று வெள்ளிடை மலைபோலே எவருக்கும் புலப்படும்.

---

## 33. பிறவித்துன்பம் என்பது பெருங் கட்டுக்கதை.

பிள்ளை: அம்மா, நீங்கள் விபரித்த காரியம் எனக்குத் தெளிவாயிருக்கிறது. மனிதனுடைய பாக்கியமெல்லாம் இந்தப் பாழ்லோகத்திலேயிருக்கிறதென்பதுஞ் சரி, அவன் ஒரு ஆடு மாடென்பதுஞ் சரி. இவ்வித போதகம் மனித ஜென்மத்தை இழிவாக்குகிறது. தன்னைச் சற்றாகிலும் மதிக்கிறவன் இதை ஒருபோதும் ஒப்புக்கொள்ளமாட்டான். நமது சீமையிலும் இவ்வித போதனைக்கார



பற்றி நான் கேள்விப்படவில்லை. ஆனால் எங்கே பார்த்தாலும் இவ்விடங்களில் பிறவித் துன்பம் பிறவித் துன்பமென்றே பேசுகிறார்கள். கற்றோர்கள் தாங்கள் எழுதிய நூல்களிலும் இதைக் காரண காரியமாக எடுத்துரைக்கிறார்கள். அர்ச். சவேரியாரோடே மறுபிறப்பைப்பற்றி அஞ்ஞானக் குருக்கள் வாதாடினதாக அவர் சரித்திரத்தில் படித்திருக்கிறேன். அர்ச். தோமையார் காலத்திலே இதை யிட்டு அநேகந் தர்க்கங்கள் எழும்பியிருக்குமென்பதுக்குஞ் சந்தேகமில்லை. மறுபிறப்பில்லையென்று அஞ்ஞானிகள் வாயாலேயே உரூபிக்கிறதெப்படி?

தாய்: 1. நான் தலைப்பிலேயே செப்பியபடி மறுலோக இரகசியத்தைச் சர்வலோகங்களையும் படைத்த கடவுள் தெரிவித்தாலேயன்றி மனிதன் தனது சுயபுத்தியினாலே ஆராய்ந்து ஆணை சத்தியமாகச் சாற்ற வல்லவனல்ல. ஆகவே, ஏக கடவுளை வணங்கிவரும் யூதர்கள், கிறீஸ்துவர்கள், இன்னம் துலுக்கர்கள் முதலாய் மறுபிறப்பு உண்டென்று போதிக்கிறதில்லை. மனிதன் சாகவே நரகத்துக்காவது மோக்ஷத்துக்காவது போகிறானென்று உபதேசிக்கிறார்கள். இதைத் தெய்வமே தங்களுக்கு அறிவித்ததாகவும் நிச்சயிக்கிறார்கள். அப்படியானால் மறுபிறப்பு உண்டென்பது மெய்க்கடவுளின் வாக்கென்று பரிச்சேதம் சொல்லவொண்ணாது. அதை அஞ்ஞானிகள் வழிபடும் சாமிகள் அறிவித்தன என்றால், அவர்கள் பொய்த்தேவர்களானபடியால் அவர்களுடைய போதனையும் பொய்யேயென்று யாவரும் வெறுக்கவேண்டியது.

2. இந்துதேசத்தில் எல்லாத்துக்கும் ஆதிநூலாக வரையப்பட்ட ஆகமத்துக்குப் பேர் இருக்குவேத நூலாம். அது கர்த்தர் பிறப்பதற்கு அநேக நூற்றாண்டுகளுக்கு முன்னதாய் எழுதப்பட்டது. அதைத் தெய்வ வாக்கென்று அஞ்ஞானிகள் விசுவசிக்கிறார்கள். ஆனால் அதிலே மறுபிறப்பைக்குறித்துப் பேச்சில்லை. மறுலோக அரசனாக எமதேவனென ஒருவர் இருக்கிறாராம். அவர் மனிதருக்கு உபகாரசீலர். நல்லவர்களுக்கு மரணத்துக்குப்பின்

அழியாத பாக்கியம் அடைப்பார் என்று மொழியப்பட்டிருக்கிறதேயொழிய பிறவித் துன்பத்தைப்பற்றியும் ஆக்கினைஸ்தலங்களைப்பற்றியும் யாதொரு வாக்குங் காணோம்.—(R. C. Dutt). அக்காலத்திலே உபகாரசீலனாயிருந்த எமன் இக்காலத்திலே சாவாகிற தண்டனையை அனுப்புகிற பயங்கர தெய்வமாக மாறி அஞ்ஞானிகளுக்கு நடுக்கமுண்டாக்குகிறாப்போலே, சாவுக்குப்பின் மனிதனுக்கு வரவேண்டிய பாக்கிய நிலைமை பிறவித் துன்பமாக நமது தேசத்தார் புத்தியிலே மாறிப்போயிற்று. இரண்டும் பொய்தான், எமதூதனும் மறுபிறப்பும்.

3. இருக்குவேத நூலுக்கு வியாக்கியானமாக பிராமணங்கள், உபநிடதங்கள் என்னும் விருத்தியுரைகள் நீட்டி நீட்டப்பட்டன. இவைகளில் உபநிடதங்கள்தான் முந்த முந்த மறுபிறப்புண்டென்று விளம்புகின்றன. இருக்கு நூலில் இல்லாத இந்த நூதனக் கொள்கையை ஒரு விரித்துரை ஆசிரியன் கூட்டிச் சேர்த்து வளர்த்ததாகத் தெளிவாகிறது. ஆகையால் இது பொய்யென்று அஞ்ஞானிகளும் நிராகரிக்கக்கடவார்கள்.

4. உபநிடத ஆசிரியருக்குப்பின் வந்த கௌதம புத்தர் பிறவித்துன்ப போதனையை உறுதிப்படுத்தி பிறப்பும் இறப்பும் மற்ற சரீரத் துன்பங்களும் அற்றுப்போகும்படி நிர்வாண சமயத்தை முளைப்பித்தனர். இதைத்தான் புத்தர் மதம் என்கிறோம். ஆனால் கௌதமர் நிர்வாண ஸ்திதியிலே பூரணமாய் ஏறி நின்றாலும் பன்றி இறைச்சி தின்று அஜீரணத்தாலே துன்பப்பட்டு மரித்தார். இப்படி மரித்ததினாலே பீடை பிணி சாவு முதலிய பாடுகள் காரண காரியமாக விளைகிற பிறவித்துன்பம் அல்லவென்றும், மறுபிறப்பேயில்லையென்றும் அவரே ரூபித்தாப்போலாயிற்று. ஏனெனில் மறுபிறப்பும் பிறவித்துன்பமும் நிர்வாணத்தால் விலகாதபோதே புத்தர் மதம் நிற்கிறதுக்கு ஆதாரமில்லை. அதற்கு ஆதாரமில்லையானால் மறுபிறப்பு என்கிற கொள்கையும் அடியோடே சாய்ந்து விழுகிறது.



5. அஞ்ஞானிகள் கொண்ட[illegible] முனிவர்கள் சித்தர்கள் என்னப்பட்ட ஞானிகள் நமது தேசத்தில் வழங்கிவரும் வேதநூல்கள் சாஸ்திரங்கள் புராணங்கள் எல்லாம் …று பொய்யென்று பாடியிருக்கிறார்கள். அடியில் சில மேற்கோள்களைக் கூறுகிறேன். இவைகளை "சித்தர்கள் ஞானக்கோர்வை" என்னும் புஸ்தகத்தில் காணலாம்.

(1) மயங்குதற்கு ஞானம்பார், முன்னோர் கூடி
மாட்டினார் கதைகாவிய புராணமென்றும்
இயலான ரசந்தனிலே ஈ புகுந்தாற்போலும்,
இசைந்திட்டார் சாஸ்திரங்கள் ஆறு என்றேதான்.
(அகஸ்தியர், p. 315.)

(2) ஊனென்ற உடல்நம்பி யிருந்தபேர்க்கு
ஒரு நான்கு வேதமென்றும் நூல் ஆறென்றும்
நானென்றும் நீயென்றும் பல ஜாதியென்றும்
நாட்டினார் உலகத்தோர் பிழைக்கத்தானே.
(அகஸ்தியர், p. 490.)

இந்த இரண்டு கவிகளின் பொழிப்பாவது:—சுயமான இரசத்திலே ஒரு ஈயானது விழுந்தால் அது மயங்கித் தடுமாறும்; அதுபோலே மதியற்ற ஈயைப்போன்ற ஜனங்கள் மயங்கும்படியாக, நான்கு வேதங்களென்றும், ஆறு சாஸ்திரங்களென்றும், காவியங்களென்றும், பல பல ஜாதிகளென்றும், இனிய ரசம்போலே இசைவாகப் புலவர்கள் கட்டிவிட்டார்கள். இவைகள் பொய்யாயிருந்தாலும் மனிதர்கள் வயிற்றுப்பாட்டுக்கு உதவும், என்க.

வேதநூல்கள் நான்கு பாகமாகவும், சாஸ்திரங்கள் ஆறு வகையாகவும், புராணங்கள் பதினெட்டாகவும், காவியங்கள் பலவாறாகவும் வகுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளைப்பற்றி விபரங்கள் சொல்லுவதற்கு இதுவல்ல இடம். அதற்குச் சமயம் வாய்க்கும்போது தெரிவிப்பேன். அது நிற்க, அகஸ்தியர் வாக்கின்படி இத்தேசத்து வேத ஆகமங்களும் சாஸ்திர நூல்களும் வெறுந் தப்பிதங்களானால்

அவைகளில் கர்[illegible]ற மறுபிறப்புப் போதகமும் சுத்தப் பொய்தானென்று முடிவு கூறக்கடவோம்.

6. அகஸ்தியஞானி இத்தேசத்து வேதாகமங்கள் சாஸ்திர நூல்கள் முதலியவை வீணான கற்பிதங்களென்று நீக்கினாலும், சில சித்தர்கள் அவைகளில் மறுபிறப்புமுதலான சிலவற்றைப் போற்றிவந்தார்கள். அவ்விதப் பேர்களை அகஸ்தியருக்குப்பின் வந்த போகமுனி பின்வருமாறு நகைத்துக் கண்டிக்கிறார்.

(1) எழிலான சாத்திரங்கள் கற்றுகண்டார்
தொல்லையெனும் பிறவியது கண்டதில்லை,
தோறாமல் சாஸ்திரத்தை உளறினார்கள்,
கொல்லனது வீதிதனில் ஊசிவிற்ற
கூரான கதைபோல என்முன்பாக
எல்லையுள்ள சித்தர்முனி ரிஷிகளெல்லாம்
எழிலாகப் பாடிவைத்த நூல்கள்தாமே.

(சப்தகாண்டம், Part 5, V. 991.)

(2) பார்க்கையிலே சாஸ்திரங்கள் இதிகாசங்கள்
பண்புடனே பாடிவைத்தார் முனிவர்தானும்,
ஆர்க்கமுடன் யாதேனும் விள்ளக்கூறி
வன்புடனே சாஸ்திரங்கள் கூறவில்லை,
மார்க்கமது தெரியாமல் வீணின்காதை
மயக்கமுடன் பாடிவைத்தார் நூல்கள்தோறும்.

(சப்தகாண்டம், Part 5, V. 995.)

இதன் பொருளாவது: சித்தர்களும் முனிவர்களும் பயனில்லாத சாஸ்திரங்களை உளறினார்கள். தொல்வினை என்னப்பட்ட முன்பிறப்பு பின்பிறப்புக் கண்டவர் ஒருவருமில்லை. ஆகிலும் அது உண்டென்று சாஸ்திரங்களைக் கூறுகிறார்கள். இதெல்லாம் கொல்லன் தெருவிலே ஊசி விற்கப்போன கதைக்குச் சமானமாகப் புத்தியீனத்தின் குறிப்பாம்.



7. போகமுனிவருக்குப்பின் உதித்து தமிழ்நாடெங்கும் பேரோங்கி விளங்கிய திருவள்ளுவர் இயற்றின திருக்குறள் என்னும் நூலினின்று மேற்கோளாக இரண்டு கவிகளை ஏற்கனவே எடுத்துரைத்து அதன் கருத்தை விளக்கினேன். அவைகளில் பாடியபடி துன்பப்படுகிறது மனிதனுடைய சுபாவத்துக்கு உரிய காரியமாகிறது. உடலின் இலட்சணத்தையும் கூறுபாட்டையும் சற்று கவனித்து யோசிக்கிறவன் அது துன்பத்துக்கு இரையென்றே அத[illegible]யம் ஒப்புக்கொள்வான். ஆகவே, மனித சுபாவமே துன்பமடைகிற தன்மையிலிருக்க அவனுக்கு நேரிடுகிற வியாதி இடையூறுகளெல்லாம் தொல்வினைப் பயனென்று நம்புவது முற்றும் நியாயத்துக்கடாத கொள்கையாகிறது.

8. (a) நிலையற்ற பொருளெல்லாம் துன்பமே யொழிய இன்பமல்லவென்று கௌதமர் படிப்பித்தார்.

(b) இத்தேசத்து முனிவர்கள் இயற்றிய ஞான நூல்களில் பஞ்சபூதிய உலகத்தில் இருப்பதெல்லாம் மாய்கையென்று போதிக்கிறார்கள். அதாவது, உலகத்தில் காணப்படுகிற பொருள்கள் யாவும் நன்மைபோல பாவனைகாட்டி மனிதனை ஏமாற்றுகிறதினாலே உலகமானது அவனை மயக்கிப்போடுகிற மாய்கையென்று சிலர் வியாக்கியானஞ் செய்கிறார்கள். வேறு சிலர் விபரிக்கிறவண்ணம், பஞ்சலோகமும் அதிலுள்ள எண்ணிறந்த வர்க்கப்பொருள்களும் ஒரு நீண்ட கனாவேயன்றி தங்களிலே இருப்பான வஸ்துக்கள் அல்ல, எல்லாம் கனவைப்போலே வெறும் மாய்கையாகும்.

(c) வேதாந்திகள் என்னப்பட்ட பேர்போன சாஸ்திரிகள் தங்கள் உபதேசத்திலே சர்வலோகத்திலும் இருப்பதெல்லாம் பிரமம் என்ற ஒரே வஸ்துவேயன்றி வேறில்லை. காணப்படுவதும் படாததுமான மற்றப் பொருள்களெல்லாம் அந்தப் பிரமத்தின் பாகங்களாயிருக்கின்றன. அவைகள் பிரமத்தோடே ஒரே ஐக்கியமாகி இரண்டு மெழுகுத் துண்டுகளைப்போல ஒன்றாய்ப் போகிறவைகள் என்பார்கள். இந்த ஒன்றிப்புக்கு இலயம் எனப்

யாது. அது [illegible]மே அறிவிக்கும்படியான பரம ரகசியம். 2-வது, கடவுள் ஒருவர் உண்டென்று அங்கிகரித்து அவரை வெளிப்படையாக வணங்கிவரும் கிறீஸ்துவர்கள் துலுக்கர்கள் யூதர்களாகிய இவர்களெல்லாரும் மனிதனுக்கு மோக்ஷம் அல்லது நரகந்தான் சாவுக்குப்பின் ஏக கதியென்று போதிக்கிறார்கள். 3-வது, நமது சீமையிலே ஆதியிலே வரையப்பட்ட அஞ்ஞான வேதாகமங்களிலே புனர்ஜென்மப் பேச்சே கிடையாது. 4-வது, நமது ஜென்ம பூமியிலே ஞானிகள் முனிகளென கீர்த்திபெற்றவர்கள் சாஸ்திரங்களென்றும் புராணங்களென்றும் நமது நாட்டில் புகழப்பட்ட நூல்கள் மெய்யான கடவுளின் இலக்ஷணங்களைப் போதிக்கும் வேதாகமங்களல்லவென்கிறார்கள். 5-வது, துன்பதுயரங்கள் மனித சுபாவத்துக்கு இயல்பாய் உரியவைகளெனப் புலவர்கள் பாடுகிறார்கள். அப்படியே அஞ்ஞானிகளுக்குள் விஷ்ணுவின் பேர்போன அவதாரமாக வணங்கப்படுகிற ராமர் முன்பிறப்பில்லாமல் விஷ்ணுவாகவேயிருந்தாலும் தன் எதிரியாகிய ராவணனால் வெகு இக்கட்டு இடையூறுகளைப் பட்டு அனுபவித்தாரென்று பள்ளிக்கூடங்களில் படித்துக்கொடுக்கிறார்கள். ஆகையால் இவ்வுலகத்தில் மனிதர் படுகிற துன்பதுரிதங்களுக்குக் காரணம் முன்பிறப்பல்லவென்பது நிச்சயம். முன்பிறப்பு அவைகளுக்குக் காரணமல்லவென்றால் புனர்ஜென்மம் என்னுங் கொள்கை முழுதும் அடிபட்டுப்போகிறது. அதைக் கடவுள் அறிவிக்கவில்லையென்பதும் சத்தியம்.

ஆயினும், அம்மா, இவ்விடத்தில் நான் ஒரு கேள்வி கேட்கத் துணிகிறேன். அதாவது, கடவுள் அறிவியாவிட்டாலும் அஞ்ஞானிகள் மறுஜென்மப் போதகம் மனித புத்தி நியாயத்துக்கு ஒத்திருக்கிறதென்கிறார்களே. அது புத்திக்கு ஒவ்வாத கொள்கையென்று ரூபிக்க முடியுமா?

தாய்: தற்புத்தியினின்று முளைத்த புனர்ஜென்மக் கொள்கையைத் தற்புத்தியினாலேயே ஒவ்வாத கொள்கையென்று ரூபிக்கலாம். மறுபிறப்பென்னும் கற்பிதம் உற்பத்தியான காரணத்தை ஆராய்ந்தால் இது தெளி



வாகும். இந்த உலகத்திலே மனித சந்[illegible]ளே கணக்
கற்ற பேதகங்களிருக்கிறதாகக் கண்கூடாய் அறிகிறோம்.
சிலர் சுகசெல்வராய் வாழ்கிறார்கள். சிலர் பிடை பிணி
தரித்திரத்தால் வருந்துகிறார்கள். சிலர் விருத்தாப்பியராகி
றார்கள். சிலர் பாலப் பிராயத்திலேயே சாகிறார்கள்.
எப்படி வாழ்ந்தாலும் கடைசியிலே சகலரும் சாக்காட்டு
மனிதராயிருக்கிறார்கள். இந்த விபரீதங்களுக்கும் இந்தச்
சாவுக்கும் ஆதியிலே ஒரு காரணம் இருந்திருக்கவேண்டி
யது. இந்தக் காரணத்தைத்தான் ஜென்மவினை அல்லது
கர்மம் என்று அஞ்ஞானிகள் விசுவசிக்கிறார்கள். அதா
வது, மனிதர் முதல் பிறப்பிலே புரிந்த பாவ புண்ணியங்
களின் காரணத்தினாலே மறுபிறப்பிலே காரியமாக சுக
துக்கங்களை அடைகிறார்களாம். ஆகையால் முதல் பிறப்
பில் ஒருவன் செய்த பாவ புண்ணியம் அவன் மறுபிறப்
பிலே பெறுகிற சுகதுக்கத்துக்கு ஏக காரணமாயிருக்கின்
றனவாம். இந்தக் கொள்கை நியாயத்துக்குமுன் நில்லா
தென்று ஒப்பிக்கும்படி அஞ்ஞான ஆசிரியர்கள் சொல்லு
கிற தர்க்க வழியைப் பின்சென்று மனிதன் எப்படி
உற்பத்தியானனென்று அவர்கள் மொழியும் வாக்கை
ஆராய்ந்து பார்ப்போம். இத்தேசத்துப் பண்டிதர்கள்
ஆசிரியர்கள் உபதேசிக்கிறதாவது:—1-வது, நன்மை
தின்மை பாசம் என்னும் மூன்று குணப் பொருள்கள்
அல்லது பதார்த்தங்களின் (substances) கூட்டினாலே
மனித சுபாவம் உண்டானது. இந்த மூன்று பகுதிகளுக்
கும் சாத்துவிகம், தாமசம், இராசதம் என முறையே
பெயராகும். இவைகள் ஒரே அளவாக மனித சுபாவத்
தில் இசைக்கப்பட்டிருக்கின்றன. நன்மைப் பொருள் எந்த
அளவாயிருந்ததோ, தின்மைப் பொருளும், பாசப்பொரு
ளும் அந்த அளவாகவே பிணைக்கப்பட்டன. இவைகள்
தான் பிரகிருதி (material cause) என்னப்படும்.—(Vedantasara by Colonel Jacob.)

2-வது, அவனவன் புரிகிற நல்வினை தீவினைக்குச் சரிநிகரான பலனுக்கு ஏழு வகையில் ஒன்றாய்ப் பிறப்

யிருந்தும் அடிமையல்லவென்று இயற்கைவிதி சாஸ்திரங்
களால் ஒப்பிக்க ஏலாது. ஏலாதபோதே நரஜீவன்
அநுபவிக்கும் சுகதுக்கங்கள் காரண காரியமாகப் புனர்
ஜென்மத்தின் கர்மங்களினாலே உற்பத்தியாகிறதென்னும்
போதகம் இயற்கை விதிகளில் ஒன்றென்பது அர்த்தமென்
றுணர்க.

7. இவ்வுலகத்திலே சேவகர் தாய்ப்பூமியையும்
(Mother Country) அதன் சுயாதீன அரசாட்சியையும்
பெருமையையுந் தற்காக்கவேண்டி எதிரிகளாகிய பிறதேசத்
தாரோடே வீரியமாய்ப் போராடிப் பெருமைப்பட்டம்
அடைகிறார்கள். அவ்வித யுத்தங்களில் வெட்டுக்காயம்
பட்டு உயிரை இழப்பது மகிமையிலும் மகிமையென்று
எண்ணப்படுகிறதன்றோ. உலகமெங்கும், தன் தேசம்
ஆபத்திலிருக்கையில் சண்டைக்குப்போக மனமில்லாமல்
கோழையாய்ச் சுகவாழ்வைத் தேடுகிறவனை நீசனென்று
எல்லோரும் இகழ்ந்து பேசுவார்கள். அப்போது பல்லக்
கில் ஏறியிருப்பவன் புண்ணியவான், அதைத் தூக்கிப்
போகிறவன் பாவியென்று புலவர் பாடிய வாக்கு பொய்
யென்று விளங்கும். ஏனெனில் மகிமை பெருமையென
ஏற்றுக்கொள்ளப்படுகிற இடும்பையை முன்பிறப்பு வினை
யின் ஆக்கினையென்கவொண்ணாது. பெருமைச்செயல்
தண்டனையல்ல. இதுக்கேற்பத் திருவள்ளுவர் பாடுவது :

இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்து ஊர்வது அஃதொப்பது இல்.

இதன் கருத்தென்னவெனில், துன்பம் வருங்கால் மகி
ழ்க்கடவோம், அம்மகிழ்ச்சியைப்போல் துன்பத்தை வெல்
லக்கூடியது யாதொன்றுமில்லை என்றாம்.

இத்தன்மையே அல்லலுந் தொல்லையும் மகிமை பெரு
மைக்கு வழியானால் அது மனித சுபாவத்தின் இயற்கை
விதியென் நிர்ணயிக்கலாகிறது. ஏனெனில் மனிதனுக்கு
இயல்பு மேற்தன்மை. இது இயற்கை விதியாயிருக்க
மனிதனுக்கு வருகிற துன்பதுரிதங்கள் அவன் பெருமை



ஏணியில் ஏறுவதற்குப் படிபோலிருக்கிறது. அவைகளைப்
புனர்ஜென்மக் கர்மத்தின் துர்ப்பயனென்று போதிப்பது
தப்பறை. புனர்ஜென்மம் இயற்கைச் சட்டங்களிலொன்று
என்பதும் செல்லாது.

8. இதிகாசங்களாகிய மகாபாரதத்திலும் ராமாயணத்
திலும் கிருஷ்ணன், அர்ச்சுனன், ராமன் முதலிய பேர்போன
தேவர்களும் வீரரும் கொடிய யுத்தங்கள் புரிந்ததாக வாசிக்
கிறோம். கொடிய யுத்தங்கள் எவ்வளவோ பயங்கரமான
துன்பதுயரங்கள் நிறைந்தவைகளென்று எவரும் அறிகிற
காரியம். இப்படி கொடிய போர் புரியும்படி கிருஷ்ணன்
முதலானோர் முன்பிறப்பிலே என்ன பாவஞ் செய்தார்கள்?
தங்கள் பாவத்துக்கு ஆக்கினையாக மேற்படி சண்டைபோட
வேண்டியிருந்தால் அந்த வீரர்களைத் தெய்வங்களாக
வணங்குகிறது புத்தியீனம். அவர்கள் பாவிகளல்ல, அவர்
களுக்கு முன்ஜென்மம் இல்லையென்றால், உலகத்திலே விளை
கிற இக்கட்டுப் பீடை பிணிகளுக்குப் புனர்ஜென்மம்
காரணமென்க ஒண்ணாது. புனர்ஜென்மம் காரணமல்ல
வென்றால் புனர்ஜென்மம் கேவலம் ஒரு தப்பிதமென்கவும்.

9. அவனவனுக்கு விளைகிற இடையூறுகள் புனர்
ஜென்மக் கர்மத்தின் துர்ப்பலனென்று விசுவசிக்கிற போர்ச்
சேவகர் துணிந்து போர்முனையிற் செல்லார்கள். ஏனெ
னில் படையின் முன்னிலையில் நின்று குத்து வெட்டுப் படு
கிற சேவகர்களை நமது சீமை அஞ்ஞானிகள் பார்த்து,
“ஐயோ! இவர்கள் முன்பிறப்பில் என்ன பாவஞ் செய்தார்
களோ” என்று பரிதபிக்கிறது வழக்கம். இந்தப் பேச்சு
போர்ச்சேவகருக்குப் பெருமையல்லவே. அப்படியே
போர்க்களத்து வாதனைகள் துர்வினைப்பயனால் மகா குண
சாலியான அர்ச்சுனன் யுத்தத்திலே தன் இனத்தாரைக்
கொல்லுவது பாவமென்று அஞ்சிப் பின்வாங்கும்போது
அவனைக் கிருஷ்ணன் போர்பொருத ஏவிவிட்ட காரண
மென்ன? அர்ச்சுனன் முன்பிறப்பில் புரிந்த பாவத்துக்கு
ஆக்கினையாகக் கிருஷ்ணன் அவனைத் தண்டிக்க நினைத்தா
னென்று யார்தான் சொல்லத் துணிவார்? துணியமாட்

டார்களென்பது நிச்சயமாயிருக்க, இவ்வுலக இடுக்கண் இடும்பைகள் தொல்வினைப் பயனென்பது சேவகர்களுடைய வீரியத்தை அநியாயமாய்க் கெடுக்கிற அக்கிரமக் கொள்கை. அதை இராஜரீகத்தார் கண்டித்து விலக்குகிறதுக்கு எவ்வித நியாயமும் உண்டு. சமூர்க்களத்தில் குத்துண்டு சாகும்படியான வீரியம் புனர்ஜென்ம விசுவாசத்தினாலேயல்ல, அதை இல்லையென்று பிறக்கணிப்பதினாலே உண்டாகும்.

10. அஞ்ஞானப் பண்டிதர் ஏழுவகைப் பிறப்பைப் படைத்தார்களென்றேன். திருவள்ளுவர் குறளுக்கு உரை இயற்றின பரிமேலழகர் இதைக் கணக்காய்க் குறிப்பிட்டிருக்கிறார். முன் ஜென்மத்திலே மேலான நல்வினை புரிவோர் பின்ஜென்மத்திலே தேவலோகஞ் சேர்ந்து தேவர்களாகிறார்களாம். ஆனால் தேவலோகத்து அரசனாகிய தேவேந்திரனுடைய காமாதுர நடத்தையினிமித்தம் அவன் கௌதம முனிவரால் சபிக்கப்பட்டு, நாணங்கெட்டுத் திரிந்தானென்று திருவள்ளுவர் பாடியிருக்கிறார். அவர் பாடலை இதோ எடுத்துரைக்கிறேன்..

ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்புளார் கோமான்
இந்திரனே சாலுங் கரி.

இதுக்குப் பரிமேலழகர் செய்யும் வியாக்கியானமென்னவெனில், வானலோகத்தாருக்கு அரசனாகிற தேவேந்திரன் தனது ஐம்பொறி ஆசைகளை நீக்காமல், கௌதம முனிவரால் சபிக்கப்பட்டு அம்முனிவருடைய வல்லமையைத் தெரிவித்தான் என்பதாம்.

இந்த உதாரணத்தில் புனர்ஜென்மத்தை இல்லையென்றடிக்கும்படியான பல நியாயங்கள் எழும்புகின்றன. மேலான புண்ணியவான்கள் தேவர்களாகப் பிறந்து தேவலோகத்திலே தேவர்களாய் வசிக்கிறார்களாம். அவர்களுக்கு அரசனாயிருக்கப்பட்டவர் எல்லாரிலும் உன்னத அறவாளியாயல்லோ இருக்கிறாரென்னத்தகும். அப்படியில்லாமல் தேவேந்திரன் மகா மகாப்பட்ட காமாதுரனாகிச்



சபிக்கப்பட்டு மனிதர் கனவில் முதலாய் நினைக்கமாட்டாத அவலக்ஷண ரூபமாய்த் திரிந்தானே. அவ்வித நீசப் பாவிக்கு மற்றப் புண்ணியவாளர் பிரஜைகளாகப் பிறப்பார்களென்பது புத்திமான் நம்பக்கூடிய காரியமல்ல. ஆகையால் சபிக்கப்பட்ட இந்திரன் தேவலோக அரசனென்பதும், அவனுக்குப் பிரஜைகளாகப் புண்ணியவாளர் தேவர்களாய்ப் பிறக்கிறார்களென்பதும் சுத்தப் பொய்யென நிச்சயமாகிறது.

மேலும் நமது தேசத்திலே இந்திரன் ஆதிகாலமுதல் தெய்வமாக வணங்கப்பட்டு வந்தவன். கௌதமரோ, கர்த்தர் பிறப்புக்கு 500 வருஷங்களுக்குமுன் ஜீவித்தவர். இவர் தேவேந்திரனைவிடப் பெரிய புண்ணியவான் ஆனதெப்படி? தனக்கு முந்தியே தெய்வமாக ஆராதிக்கப்பட்டு வரும் ஒரு தேவலோக அரசனைச் சபிப்பதெப்படி? ஆகையால் தேவேந்திரனுமில்லை, அவன் ஆளும்படியான தேவலோகமும் இல்லையென முடிவுசொல்லலாகிறது. தேவலோகமில்லையானால் ஏழு பிறப்பில் உயர்ந்த பிறப்பு அற்றுப்போக, மற்றப் பிறப்புக்களும் மேலும் கீழுமாய் உண்டாகுமென்கிற புனர்ஜென்மக்கொள்கை நிலையற்று விழுகிறது.

11. மிருகப் பிராணிகளுக்குப் பாவ புண்ணியம் இன்னதென்று தெரியாது. எங்கேயாவது பசும்புல்லைக் கண்டால் ஆடுமாடு அங்கே மேயத்தான் போகும். தன் கொல்லையோ ஊரான் கொல்லையோவென்று பாராது. மானைக் கண்டால் சிங்கம், புலி அதை உடனே கொன்று தின்னும். தான் கொலைபாதகம் கட்டிக்கொள்ளுகிறதென்று அது நினைக்கிறதில்லை. இது இயற்கை நடை என்கிறோம்; மிருகம் புத்தியில்லாத ஐந்தறிவுயிரென்று பண்டிதர் படிப்பிக்கிறார்கள் நமது சீமையில். அவ்வண்ணமே மிருக ஜீவன் தனது சுபாவத்துக்கொத்தாப்போலே நடக்கும்போது இழிவான வேலையைச் செய்கிறதென்று அது சிந்திக்கிறதில்லை.

நாய் எச்சிலைத் தின்னும், எருமையும் பன்றியும் சேற்றில் புரளும். இவ்விதம் உயிர்ப்பிராணி பிரியமாய்ச்

செய்கிற காரியத்தை அதுக்கு ஆக்கினையென்று சொல்லப்
படாது. மெத்தையில் வைத்தாலும் அட்டை செத்தை
யைத் தேடும். பச்சைக் குழந்தை பிரியமாய் மண்ணைத்
தின்னும்; அதுக்கு அது ஆக்கினையல்ல. அப்படியே
ஆக்கினையென்று நினையாமல் ஜீவப் பிராணிகள் செய்கிற
வேலைகள் அதுகளுக்கு ஆக்கினையல்ல. எல்லாம் அததின்
சுபாவத்துக்கு ஏற்றபடி சம்பவிக்கிறதினாலே அவைகள்
இயற்கைச் சட்ட செயலாகிறது. இது நிற்க, ஒரு எருமை
தான் செய்கிறது கெட்டதென்றாவது, இழிவென்றாவது
ஆக்கினையென்றாவது யோசியாமல், தன்னிச்சையாய் மகா
பிரியத்தோடே சேற்றில் புரளுகையில் அது முன்ஜென்மத்
தின் பாவவினைக்கு ஆக்கினையென்றால், ஒரு இராஜா பிரியப்
பட்டுப் பொசிக்கிற அமிர்தமான உணவும் ஆக்கினை
யென்றாற்போலாகும். இது புத்தி நியாயத்துக்கொவ்வாத
பேச்சு. ஆகையால் மனிதன் தான் செய்த குற்றத்துக்குத்
தண்டனையாக மறு ஜென்மத்தில் எருமையாய் அல்லது
மற்றொரு மிருகமாய்ப் பிறக்கிறானென்கிறது புத்திக்
கேடொழிய உண்மையல்ல. அப்படியல்லவாக்கும், சேற்
றிலே எருமை புரண்டு ஆனந்தங்கொள்ளுதல், அது முன்
பிறப்பில் பயின்ற புண்ணியத்துக்குச் சம்பாவனையென்று
அஞ்ஞான ஆசிரியர் வாய் கூசாமல் சொல்லுவார்களோ?
அவர்கள் சொல்லக்கூடியவர்கள்தான். ஆனால் இத்தகைய
பரம ஞானிகளோடே நியாயம் பேசுவதிலும் பிரயோஜன
மில்லை. இத்தருணத்தில் நமது தேசத்தாரின் பொது
நன்மையை உத்தேசித்து நான் சுருங்கச் செப்புவதென்ன
வெனில், வேத விஷயத்திலும், ஜாதி முதலிய உலக ஆசார
வழிகளிலும் பிராமணர்களும் அவர்களைச் சார்ந்தவர்களும்
தலை கீழும் கால் மேலுமாக நடக்கும் ஜாலவித்தையைப்
பயிலுகிறார்கள், கற்றுக்கொடுக்கிறார்கள். ஐயோ, கிறீஸ்து
வர்களும் அதற்காகப் பிராமணருக்குக் கும்பிடுபோடுகிறார்
கள்.

12. புத்தியற்ற ஜீவப்பிராணியாய்ப் பிறப்பதினாலே
புனர்ஜென்ம வினையின் பயனைக் காண இடமில்லையானால்,



மரஞ்செடி புல்லாய் முளைப்பதில் முன்பிறப்பின் வாசனையே
எள்ளளவேனும் கிடையாதென்பது திண்ணம். ஏனெனில்
தாவர வர்க்கத்துக்கு நமது தேசத்தார் குறிப்பிடுகிற ஆறு
வகை உயிரில் ஒன்றுமாத்திரமுண்டென்று போகமுனி
கூறுகிறார். அதினாலேதான் உணர்வற்ற தாவர வர்க்கங்
களை நாம் மனதுபோலே வெட்டுகிறோம், எரிக்கிறோம்,
கட்டிடங்களுக்கு உதவிக்கொள்ளுகிறோம். புலால்
மறுப்போர் தாவர வர்க்கத்தின் காய்கனிகளைப் புசிக்கிறார்
கள். அவை மறுஜென்ம உயிரானால் புசிப்பார்களோ?
இதை உற்று உணர்ந்தால் தாவரப் பிறப்பு இழிவான
தென்காமல், அது முன்ஜென்மத்துப் புண்ணியத்துக்குப்
பலனென்றே கூறவேண்டியிருக்கும். இவ்வாறு கூறுவதும்
சரி, புனர்ஜென்மக் கூத்தைப் புழக்கடையிலெறி என்பதும்
சரி.

13. இந்த மண்ணுலகத்திலே கணக்கற்ற தினுசான
விலங்குகளும், பறவைகளும், மச்சங்களும், ஊர்வனவும்,
மரஞ்செடி புல்லுகளும் உண்டாயிருப்பதைக் காண்கிறோம்.
அவைகளின் இலக்கம் மனித சந்ததியின் தொகையைவிட
அளவின்றி ஏறியிருப்பதற்குச் சந்தேகமில்லை. ஒரு பெண்
ஈயானது முப்பது நாளில் 50 கோடி முட்டைகள் இடுகிற
தாக ஜீவநூலில் (Zoology) தீரரான சாஸ்திரிகள் செப்பு
கின்றனர். ஐம்பது வருஷங்களுக்குமுன் உலகத்தின்
ஜனக்கணக்கு 100 கோடியாம். இப்பொழுதோ, அது
170 கோடியெனக் காணப்படுகிறது. இத்தனை கோடான
கோடி ஜீவன்களும் முன்பிறப்பிலே மனிதர்களாக இருந்
தால் அத்தனைபேரும் எந்தக் காலத்திலே ஈசல் ஈயைப்
போலே முளைத்து இந்தப் பூமண்டலத்திலே நடமாடினார்
கள்? இந்த லோகம் அவர்களை அடங்கலும் எப்படித்தான்
தனக்குள் அடக்கிக்கொள்ளும்படி இடமுடையதென்க
லாம்? ஆகையால் பாதி உயிர்ப்பிராணிகளாவது இப்போது
தான் முதல் பிறப்பைக் காண்கின்றனவென்கவேண்டியது;
மற்றொரு பாதி முன்வினைப் பயனாகத் தோன்றியிருக்கிற
தென்று பாவித்துக்கொள்ளுவோம். ஆனால் இந்த இரு

வகைப் பிராணிகளுக்கும் சுகதுக்கங்கள் கலந்தே வருகிறது நிச்சயம். இவ்விதம் முதல் ஜென்மத்திலேயே சுகதுக்கங்கள் மாறி மாறி வந்தால், புனர்ஜென்மத்தினாலேதான் சுகதுக்கங்கள் உண்டாகிறதென்று நிதானம்பண்ணல் சரியன்று. புனர்ஜென்மம் இல்லையென்றே தீர்க்கலாகிறது.

14. புனர்ஜென்மக்கொள்கையை உறுதிப்படுத்தி ஆசியா கண்டத்தின் கீழ்ப்பாகங்களிலெல்லாம் அதைப் பரவச்செய்த கௌதமர் தனது சீஷர்களை நோக்கி: "பிறப்புந் துன்பம், மூப்புந் துன்பம், இறப்புந் துன்பம், ஐம்புலப் பற்றுந் துன்பம். இந்தத் துன்பம் அற்றுப்போகவேண்டுமானால் நிர்வாண ஸ்திதியை அடைவதவசியம். ஐம்புலப் பற்றுதல்களை அவித்தலே நிர்வாணமாம். ஐம்புலப் பற்றுதல்களை ஒழித்தால் ஒவ்வொரு புலத்தாலும் பிறக்கிற விருப்பம் வெறுப்பு நீங்கும். இவை நீங்கினால் துன்பமும் அகலும்" என்று போதித்தார். இந்த நிர்வாண போதனையை மூல ஆதாரமாக நிறுத்தி உலக நடபடிக்கைகளைப் பரிசோதித்தால், பிறந்தவுடனே சாகிற குழந்தை முன்ஜென்மத்திலே புண்ணியஞ் செய்ததினாலே உடனே மரித்ததென்போம். ஏனெனில் துன்பத்தைப் பிறப்பிக்கிற ஐம்புலன்களும் அந்தக் குழந்தைக்குப் பிறந்தவுடனே அவிந்துபோயிற்று. அதுக்குச் சுகதுக்கமென்னும் நிலையற்ற வாழ்வுமில்லை. நிலையற்ற பொருளெல்லாம் துக்கத்துக்கு இருப்பிடமென்று புத்த முனியும் மற்ற இந்து ஞானிகளும் உறுதியாய் உபதேசித்தார்கள். (புத்தர் சரி. pp. 66-69.) இந்தக் கொள்கையை மேற்கொண்டு மனித சந்ததியில் பிறந்தவுடன் சாகிற குழந்தைகளே பாக்கியம் பெற்றவைகள் என்கவும். அவ்வாறே ஒருவன் குருடனாய்ப் பிறந்தால் ஐம்பொறிகளில் ஒன்றாகிய கண்பார்வையால் விளையும் விருப்பம் வெறுப்பு அவனுக்கு அற்றுப்போனதினால் அவன் ஐம்பொறிகளோடே பிறக்கிறவர்களைவிடப் பாக்கியவான். ஆகையால் அவன் முன்பிறப்பில் ஐம்பொறியுள்ள மனிதரைவிட அதிக புண்ணியவானாயிருந்திருக்கிறான். கௌதமரை "ஐந்தவித்தான்" என்று திருவள்ளுவர் பாடுகிறப்போலே



பிறவிக் குருடன் ஒன்று அவித்தான் என்றும், பிறந்தவுடனே செத்த குழந்தை முன்ஜென்மத்திலேயே ஐம்புலனை அவித்துப்போட்டதென்றும் முடிவுகட்டலாகும். இந்த நிதானத்தைச் சற்று விரிவாக்கும்பட்சத்தில் வியாதியஸ்தராய் தரித்திரராய்ப் பிறப்பவர்களும் பாக்கியவான்களாகிறார்கள். ஏனெனில் நிலையற்ற பொருளாகிய சுகத்தினாலே பயக்கிற துன்பமானது வியாதி தரித்திரத்தினாலே நீங்குகிறது, அல்லது வெகுவாய்க் குறைகிறது. ஐம்பொறிகளிலே முளைக்கிற விருப்பமுந் துன்பம், வெறுப்புந் துன்பமல்லோ. வியாதியினாலும் தரித்திரத்தினாலும் விருப்பத்தால் விளையுந் துன்பம் விலக, வெறுப்பால் வருந் துன்பமாத்திரம் நிற்கும். இவ்விதம் இரண்டுவகைத் துன்பத்தில் பாதித் துன்பம் விலகுகிறதினாலே வியாதியஸ்தரும், தரித்திரர்களும் பாக்கியவான்கள்தான்.

இதுநிற்க, முன்ஜென்மமேயில்லாமல் பிறவிக் குருடாய், முடமாய், தரித்திரமாய்ச் சில குழந்தைகள் பிறந்தால் அவ்வித பிறப்பு ஒரு பாக்கியமென்றே கூறவேண்டியது. ஏனெனில் அவைகளுக்கு எந்தப் புலன் அவிந்திருக்கிறதோ அந்தப் புலனாலே முளைக்கும் துன்பம் பிரயாசையின்றி விலகிற்று. இதற்கேற்ப, நமது ஆண்டவர் ஜனங்களை நோக்கி: "தரித்திரர் பாக்கியவான்கள்......உங்களுக்கு இடறலாயிருக்கிற இரண்டு கண்களோடே நரகத்திலே விழுகிறதைவிட குருடாய் மோக்ஷத்துக்குப் போகிறது வாசி" என்றார். ஆகையால் யாதொரு பொறியின்றிப் பிறத்தல் புனர்ஜென்மக் கர்மத்தின் துர்ப்பயனென்று சொல்ல நியாயமில்லை. தெய்வம் அவ்வித குறையை அனுப்புகிறதிலே ஓரவஞ்சனையாய் நடக்கிறாரென்றும், அந்த வஞ்சனையில்லையென்று காட்டும்படி புனர்ஜென்மம் ஏதுகரணமாகிறதென்று தீர்மானிக்கவும் வேண்டியதில்லை.

15. புனர்ஜென்மம் கடவுளுடைய நீதியைக் காக்க வல்லதல்ல. ஏனெனில் ஒருவன் குருடனாய்ப் பிறக்கிறான். அவ்வித பிறப்புக்குக் காரணம் அவனுடைய தொல்வினையென்று அஞ்ஞானிகள் தீர்மானிப்பார்கள். ஆனால் குற்ற

வாளி செய்த குறைகளை அவன் கண்ணுக்குத் தோன்றக் காட்டாமல், அவனைத் தண்டிப்பது நீதியல்ல, ஓரவஞ்சனையென்று உலகமெல்லாம் கதறுமே. அவ்வாறே ஒருவன் முன்ஜென்மத்திலே பண்ணின குற்றத்தை அவன் கண்ணுக்கு மறைத்து அவனைக் குருடனாகக் கடவுள் பிறக்கச் செய்தால், அவர் ஓரவஞ்சனையினாலே அவ்விதம் நடத்துகிறாரென்று குறைசொல்லவேண்டியதாகும். இதினாலே புனர்ஜென்மக்கொள்கை தெய்வ நீதியைக் காப்பாற்ற அவசியமென்பது பிசகான எண்ணம். மனிதனுக்கு மறதிக் குணம் உண்டென்பது மெய்தான். ஆனால் சுகதுக்கங்களை ஏறத்தாழப் பகிர்ந்துகொடுக்கிறதிலே தெய்வத்தினிடத்தில் பாரபட்சத்தைக் காண்கிறவன், ஒருவன் முன்பிறப்பிலே செய்த குற்றத்தை அவன் மறக்கும்படி விட்டு அவனைக் குருடனாய்ப் பிறக்கச் செய்வதிலும் ஓரவஞ்சனையைக் காண்பான். ஆகையால் தேவ நீதியைப் புனர்ஜென்மம் நிலைநிறுத்த வல்லதல்ல; அது அவசியமுமல்ல. அவசியமில்லாவிட்டால் தேவநீதியைக் காப்பாற்ற முளைத்த மறுஜென்மக்கொள்கை வேரின்றிக் காய்ந்து பட்டுப் போகிறது.

16. கடைசியாய், மனிதனுக்கு வருகிற குருடு, பீடை, பிணி, தரித்திரம் முதலிய சம்பவங்கள் அவனுக்குக் கெடுதியென்று எண்ணி அஞ்ஞான ஆசிரியர்கள் அதைப் போக்கும்படி புனர்ஜென்மத்தை முளைப்பித்தார்கள். ஆனால் அவர்கள் போதகத்தின்படியே அந்தத் துன்பங்கள் மனிதனைப் பாக்கியவானாக்குகிறதென்று ஒப்பித்தேன். ஆனகயால் அவைகளைக் கேடென்று பாவிக்கிற புனர்ஜென்மக்கொள்கை சுத்தப் பிசகென்று விளங்குகிறது. அந்தக் கொள்கையைத்தான் ஓட்டிவிடவேண்டியது.

இங்கே நான் விபரித்த காரணங்களாலே அஞ்ஞானிகளுடைய தற்புத்தியினாலே முளைத்த புனர்ஜென்மக்கொள்கையை கிறீஸ்துவர்கள் தற்புத்தியினாலே மறுத்துத் தள்ளலாமென்று தெரிந்துகொள்ளலாம்.



## 35. தனிமுதற் கடவுள்.

பி.: புனர் ஜென்மம் உண்டென்று தற்புத்தியினாலே ஒப்பிக்கத் துணிபவர்களுக்கு, அது இல்லையெனத் தற்புத்தியினாலேயே ரூபிக்க வல்லதான திஷ்டாந்தங்களை நான் வேண்டியமட்டும் கற்றுக்கொண்டேன். புனர்ஜென்மக்கொள்கை இயற்கை விதிகளுக்கு எதிரிடையாய் மோதுகின்றது. மனித சுபாவம், மிருக சுபாவம், தாவர சுபாவம் ஆகிய இவைகள் தம்பாட்டுக்குச் செய்வதையெல்லாம் முன்பாட்டு வினையென்று பேதகமாக மாறுபடுத்தல் முற்றும் புத்திக்கு அடாத காரியம். நேர்மையான ஞானத்துக்கு ஏற்காத இந்தக் கற்பனையை இத்தேசத்து அஞ்ஞானிகளாகிய அனேகங் கோடி ஜனங்கள் விசுவசித்துவருகிறார்களே. மனிதனுடைய அறிவு அம்மாத்திரம் சீர் தவறுதல் எவ்வளவோ துயரமான காரியம்!

தாய்: ஆம், மகனே. அது துயர காரியந்தான். ஆனால் அதிலும் அதிகமான கோடிப்பேர்கள் கண்டதெல்லாந் தெய்வமென்று வணங்கித் தங்களைப் படைத்துக் காப்பாற்றுகிற ஏக கடவுளை மாத்திரம் வணங்காமல் இருக்கிறார்களே. இதெவ்வளவோ வெட்கத்துக்குரிய பேதமை! இப்பேதமை நமது தேசத்தாரை விட்டு எந்தக் காலத்தில் நீங்குமோ? ஆ! என்ன பரிதாபம்! என்ன கண்ணராவி! அவர்களுடைய மனக் குருடு இவ்வுலகத்திலேயே நீங்கும்படி நாம் இரவும் பகலும் சுவாமியை நோக்கி மன்றாடி அழக்கடவோம்.

தெய்வத்தைப்பற்றியும் மரணத்துக்குப்பின் ஆத்துமத்தின் கதியைப்பற்றியும் அஞ்ஞானிகள் கிரமமற்ற எண்ணமுடையவர்களாயிருந்தாலும், அது நமது கத்தோலிக் வேதம் படிப்பிக்கிற பிரதான சத்தியங்களை உறுதிப்படுத்துகிறது. திருச்சபை அன்னப்பட்சிக்குச் சமானம். எப்படியெனில்:—உலகமெங்குந் தெய்வம் தெய்வமென்று

பேரிடி முழங்குகிறதேயன்றித் தெய்வம் இல்லையென மனதினின்று தன்னெழுச்சியாய்த் தன்னாலே ஒரு கீச்சுக்குரலாவது ஒரு மூச்சாவது எழும்புவதைக் காணோம். கடவுள் உண்டென்கிற சத்தியம் சகல மனிதர் இருதயத்திலும் இயற்கை விதிகளில் ஒன்றாகப் பதியப்பட்டிருக்கிறதினிமித்தம், எதையாவது சாமியென்று பாவித்து ஜனங்கள் அதுக்குப் பூசை நைவேத்தியஞ் செய்துவருகிறார்கள். ஆனால் கூர்ந்த அறிவுள்ள சில குணசாலிகள் அஞ்ஞான மதத்திலே பிறந்திருந்தாலும் ஜனங்களுடைய குருட்டு வழியைத் திருத்திக் கடவுள் ஒன்றேயெனப் போதித்திருக்கிறார்கள். இதுக்கத்தாட்சியாகச் சிவவாக்கியரும் திருவள்ளுவரும் பாடியதை இதோ கூறுகிறேன் :—

*நட்ட கல்லைத் தெய்வமென்று நாலு புஷ்பஞ் சாத்தியே*
*சுற்றிவந்து மொணமொணென்று சொல்லும் மந்திரமேதடா*
*நட்ட கல்லும் பேசுமோ நாதன் உள்ளிருக்கையில்,*
*சுட்ட சட்டி சட்டுவங் கறிச்சுவையறியுமோ?*

(சிவவாக்கியம் பா. 518.)

இதற்குத் தமிழ் வித்துவான்கள் புரிந்த வியாக்கியானமாவது :—சிற்பியினால் உருவாக அமைக்கப்பட்ட ஒரு கல்லை பரம்பொருளாகிய தெய்வமென்று அதுக்குமுன் மந்திரங்களை ஓதுவதில் என்ன பிரயோஜனம்? பொறிக்குஞ் சட்டி கறியின் ருசி பார்க்குமோ? அப்படியே ஓதிய மந்திரத்தைக் கல்லானது உணரப்போகிறதில்லை. பரம்பொருளாகிய கடவுள் அவனவன் இருதயத்தில் வசிக்கிறார். அவருக்கல்லோ அர்ச்சனைபுரியவேண்டுமென்பதாம். இந்தக் கவியில் சிவவாக்கிய ஞானி கல்லைமுதலாய்ச் சுவாமியென்று கும்பிட்டுவரும் நமது தேசத்தாருடைய குருட்டாட்டத்தை நகைத்துப் பழிக்கிறார். இது அன்னத்துக்குத் தள்ளுபடியான ஜலம்போல.

திருவள்ளுவரோவென்றால் ஏக தெய்வத்தினுடைய இலக்ஷணம் நமது சீமையில் எல்லாருக்கும் விளங்கும்படி பாடியதாவது :



“அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.”

இக்குறள் அன்னத்துக்கு இயற்கையான பால்போல. இதற்குப் பரிமேலழகர் உச்சிதமான வியாக்கியானஞ் செய்திருக்கிறார். அவரது செந்தமிழை இயற்றமிழாக வரைகிறேன். அகர எழுத்து நமது தமிழ்ப் பாஷையில் மாத்திரமல்லாமல் வடபாஷைகளிலும் முதல் அக்ஷரமாகத் தோன்றுகிறது. வாயைத் திறந்தாலே போதும், அ என்பது இயல்பாய்ப் பிறக்கும். அவ்வாறே கடவுள் உலகத்துக்கெல்லாம் முதலாக இயல்பாய் இருப்பு உடையவர். சர்வலோகமும் அதிலுள்ள சராசரமும் அவருடைய செயலால் உண்டானவைகள். “காணப்பட்ட உலகத்தைக்கொண்டு காணப்படாத கடவுளுக்கு இருப்பைச் சொல்லவேண்டியிருப்பதால்,” உலகமானது ஆதி பகவனாகிய முதலையுடையது என தனிமுதற்கடவுளின் இருப்பு திருவள்ளுவரால் கூறப்படுகிறதென்றவாறு.

இந்தக் கவியிலே தெய்வத்தின் இருப்பு எல்லாத்திலும் இயல்பான சத்தியமென்று தெளிவாய்ச் சர்வ ஜாதி சந்ததிகளுக்கும் விளங்கும்படி, அதை வாயிலிருந்து எல்லாச் சப்தத்திலும் முதலாக இயல்பாய்த் தன்னாலே எழும்புகிற அ என்னும் ஒலிக்கு ஒப்பிடுகிறார். இந்த ஒப்பனைக்கு இசைவாக வெகு பேர்போன தமிழ் இலக்கண ஆசிரியராகிய பவணந்தி முனிவர் வசனிப்பது :

“அ, ஆ, அங்காப்புடைய” என்றே.

இதுக்கு அர்த்தமென்னவெனில், அ, ஆ என்னும் ஒலி உண்டாவதற்கு மூச்சுவிடும்படி வாயைத் திறந்தாலே போதும். அது தன்னாலே பிறக்கும் என்பதாம். அதுபோலவே, நமது மனதிலிருந்து எழும்புகிற மூச்சாகிய எழுச்சி தெய்வம் உண்டென்று இயல்பாய் வெளிப்படுத்துகிறதென்பது திருவள்ளுவருடைய கருத்து. அ என்னும் அக்ஷரம் இந்தியசீமைப் பாஷைகளிலுமன்றி ஐரோப்பிய காண்டத்தின் அந்தந்த இராட்சியங்களின் பாஷைகளிலும்

தலையெழுத்தாக நிற்கிறது உண்மை. இதினிமித்தம் தெய்வத்தின் இயல்பான இருப்பை திருஷ்டாந்தமாய் ரூபிக்கும்படி அ என்னும் ஒலி எழுத்தினின்று திருவள்ளுவர் எடுத்த உவமான ஒப்பனையானது உலகத்தின் சகல தேசத்தார்களுக்கும் ஒளியாக வீசி அகரத்தைப்போலே ஏக கடவுள் சர்வலோகத்துக்கும் ஆதியாயிருக்கிறாரென்னும் சத்தியத்தை மறுபேச்சுக்கிடமில்லாமல் நிலைநிறுத்துகின்றது. இதினாலே நாஸ்திகனாயிருப்பது மனுஷ சுபாவத்துக்கும் ஒவ்வாது பொறுக்காது என்று தன்னாலே புலப்படும்.

இவ்வாறு தெய்வத்தின் தன்மை இயல்பாய் இலங்குகையில், "நமது சத்திய வேதாகமத்தைத் திறந்து பார்க்குமிடத்து நாமே அ, நாமே ஓ, நாமே ஆதி, நாமே அந்தம் என ஒருமுறைக்கு மும்முறையாகச் சர்வேசுரன் திருவுளம்பற்றியிருப்பதைக் காண்கிறோம். (காட்சி. 1, 8; 21, 6; 22, 13.)

இதென்ன ஆச்சரியம்? வானமும் பூமியும் ஒரே மனமாய் ஒரே உபமானத்தை எடுத்துப் பேசுகிறதே. பரலோகத்திலே தெய்வத்தினின்று இறங்கும் ஒலியும் பூலோகத்திலே மனித சுபாவத்தினின்று எழும்பும் ஒலியும் சர்வத்தையும் படைத்த கடவுளொருவர் அகரம்போல ஆதியாக உண்டென்று அகிலலோகமும் அதிர்ந்து நடுங்கும்படியான பேரிடிமுழக்கமாய்ச் சப்திக்கிறது. இதற்குமேல் தெய்வம் இல்லையென்று பிதற்ற எந்த வாயின் நாவிலெழும்பும், எந்தப் பேய் மனதில் முளைக்கும்?

சப்தங்களுக்கும் எழுத்துக்களுக்கும் எல்லாம் முதலாகிய அ ஒன்றேயொழிய பலவகை அ கிடையாது. அவ்விதமே தெய்வம் ஒன்றே அன்னியில் பலவகையில்லையென்று இந்த அகர ஒப்பனையினாலே தன்னிலே தெளிவாகிறது. இந்தச் சத்தியத்தை உறுதியாய் உணர்த்தும்படி நாமே அ என்ற கடவுள், நாமே ஆதி என்றும் அருளிச்செய்கிறார். இதுக்குச் சரிபொருத்த எதிரொலியாக "ஆதிபகவன் முதற்றே உலகு" எனத் திருவள்ளுவர்



தெய்வத்துக்கு "ஆதிபகவன்" என்னும் பேர் சூட்டுகிறார். தமிழ்ப்பாஷையிலே கடவுளைக் குறிக்கும் நாமகரணங்கள் நூற்றுக்குக் குறையாமலிருக்க அவைகளில் ஆதிபகவன் என்பதைத் திருவள்ளுவர் முக்கியமாய்ப் பொறுக்கி எடுத்தபோதே, நாம் அ, நாம் ஆதியெனத் தெய்வமே தமக்கிட்டுக்கொண்ட நாமதேயத்தைவிட அதிக இயற்கையான பெயரை அவருக்கு மகுடமாக மனிதன் சூட்ட வல்லவனல்லவென்றதாயிற்று. உள்ளவாறு ஆதிபகவன் என்னும் மொழியின் அர்த்தங்களை ஓர்ந்துபார்த்தால் அது உசிதமான பயனைத் தருகிறதென்று காண்போம். கிரந்தப்பாஷையில் ஆ-தி என்பது எப்பக்கத்திலும், கொடை எனப் பொருள் தரும். கடவுள் எல்லாவற்றையும் படைத்தவரானதால் எப்பக்கத்திலும் மேலுலகங் கீழுலகமெங்கும் கொடையாளி; சர்வகொடையாளியானால் சகல வஸ்துக்களுக்கும் அவர்தான் துவக்கம். அல்லது ஆதியென்பது திருஷ்டாந்தமாய்த் தோன்றும். ஆதி என்பது ஆத எனக் கடைசி முடிவெழுத்துத் திரிந்தால், கிரந்தப்பாஷையில் அதுக்கு எடுத்துக்கொள்ளல் என அர்த்தஞ் செல்லும். கடவுள் சகலத்தையுங் கொடுக்கிறதுபோலே சகலத்தையும் அழிக்க வல்லவரான அந்தமென்பது இதனால் விளங்குகிறது. ஆதன் என்னும் நமது முதல் தந்தையின் நாமத்துக்கு இந்தக் கருத்து இசையும். தெய்வ உரிமையை ஆதன் எடுக்கப் பார்த்துப் பாவியானான். ஆகையால் கடவுள் சர்வத்துக்கும் ஆதி ஆதமாய் அடியும் முடிவுமாகிய கதியாயிருக்கிறாரென்னும் உன்னத பொருள் நாம் ஆதி என்னும் நாமத்தில் தொக்கி நிற்கிறது. இதென்ன அதிசயம்!

இப்படியிருக்க ஆதியென்னும் பதத்துடன் பகவன் என்னும் சொல்லைத் திருவள்ளுவர் ஒட்டினது அதிலும் பெரிய அதிசயமாகும். ஏனெனில் இந்த வார்த்தை ஆதி அந்தமாகிய கடவுள்மட்டில் சிருஷ்டிகளின் கடமையென்னவென்று தெளிவாக்குகின்றது. பகவன், பாகம், பாக்கியம் என்பதும், பக்தன், பக்தி என்பதும் கிரந்தப்பாஷையில் ஒரே மூலப்பகுதியினின்று பிறப்பதென்றறிக.

அந்த மூலப்பகுதியின் அர்த்தம் சம்பந்த முறையைக் காட்
டும்படியான இரு கவைகளாய்ப் பிரிகிறது. அதில் ஒரு
கவை தெய்வத்தை நோக்கியெழும்புகின்றது. பகவன்,
என்றால் தாராள எஜமான், தயாள பரிபாலன் எனப் பயன்
படும். இப்பயன் ஆதி என்னும் பதத்தின் கருத்தோடே
பொருந்திச் சர்வலோகங்களுக்கும் ஆதி கொடையாளி
யாகிய கடவுள், அந்த லோகங்களையெல்லாம் ஆண்டு காப்
பாற்றிப் பரிபாலனம் பண்ணிவருகிறாரென்னும் சித்தாந்தத்
தையும் கூட்டி, படைத்தல், அளித்தல், அழித்தலாகிய
செயல்கள் தெய்வ சுபாவத்துக்கு இயல்பாய் உரியவை
யென்று விளம்புகின்றது. இதுக்குச் சோடியான மற்
றொரு கவையோ படைப்புண்ட வஸ்துக்களை நோக்கிச்
செல்லுகிறது. அதின் நோக்கப்படி பக என்னும் பகுதி
யின் பயன்: (1) பெற்றுக்கொண்ட சுதந்தர பாகம், (2)
பாக பாக்கியம், (3) பாக்கிய அநுபோகம், (4) அநுபோக
பாக்கியத்தின்மேல் பற்று, நேசம், (5) அந்தப் பாக்கியத்
துக்கு நேர்ச்சி, சேவிப்பு, வணக்கம், ஆராதனை என இவை
கள் ஒன்றின்மேலொன்று ஏற்றப்பட்டு நிற்கின்றன. இந்
தப் பயனையெல்லாம் பகவனோடே ஒட்டுங்கால் கடவுளே
மனிதன் பெற்றுக்கொள்ளும் பாக பாக்கியம், அவரே அவ
னுடைய அநுபவ சுகிப்பு, தெய்வ சுகிப்பே அவனுடைய
நேசம், அந்த ஆனந்த கடவுளுக்குத் தன்னை நேர்ந்து
கொண்டு, அவரை வணங்கிச் சேவித்து ஆராதித்தல் மனித
இயல்பு என மகாச் சிறந்த பொருள் முடிவுபெறும். தெய்
வம் நீங்கலாக மற்ற எந்த வஸ்துவுக்கும் இந்தக் கோர்வை
அர்த்தஞ் செல்லமாட்டாது. இந்த இரண்டாம் வகை
அர்த்தத்தைத்தான் பக்தன், பக்தி என்னும் வார்த்தைக
ளால் வழக்கமாய்க் குறிக்கிறோம்.

இதை ஆராய்ந்தபின் நமது வேதாகமத்தை விரித்துப்
படிக்குங்கால், "ஆண்டவர் எனது சுதந்தர பாகம்" (சங்.
15-5), "கடவுள் என்றென்றைக்கும் என் பாகம்" (சங்.
72-26) எனத் தேவ வாக்கிலும் அந்த வார்த்தையைத்
தானே கேட்கிறோம். ஆகையால் தெய்வத்துக்குத் தமி



ழில் இடப்பட்ட நாமதேயங்களில் திருவள்ளுவர் பகவன்
என்பதைத் தெரிந்துகொண்டு தெய்வந்தான் நமது சுதந்தர
பாக்கியமென்றும், அவரையே நாம் சிநேகித்துச் சேவித்து
ஆராதிக்கவேண்டுமென்றும் இரண்டெழுத்து மொழியால்
தெளிவிப்பது மகா அதிசயமென்பதற்குச் சந்தேகமில்லை.

இன்னம் இதுக்கும் மேலான அதிசயமாக, பகம் என்
பது கடவுளின் ஆறு குணங்களையுந் தொகுப்பாய்க் குறிக்
கிறதென்று அகராதி நூலாசிரியர் கூறுகிறார்கள். அந்த
ஆறு இலக்ஷணங்களில் தானுயிருத்தல் முதலாவதாகும்.
கிரந்தப்பாஷையில் ப்ஹவம் என்றால் இருப்பு எனப்
பொருள்தரும். இது தமிழில் பகவம், பகம், பவம் எனத்
திரிந்து வரலாம். ஆகையால் பகம் என்பதில் இருத்தல்
என்னும் பயன் அடங்கியிருக்கிறது. ஆதிகாலத்திலே
பேர்போன தீர்க்கதரிசியாகிய மோயீசன் சுவாமியை
நோக்கி, ஆண்டவரே! ஜனங்கள் தேவரீருடைய பெயர்
என்னவென்று என்னை வினவினால் அவர்களுக்கு என்ன
சொல்லுவேன் என்று வணங்கி நின்றபோது, கடவுள்
மோயீசனை நோக்கி, நமது பெயர் ப்ஹவம் இருக்கிறவர்
(Jehovah) எனப் பதில்மொழிவாய் என்றார். திருவள்
ளுவரும் தெய்வத்துக்குச் செல்லும்படியான மற்ற நாம
கரணங்களையெல்லாம் பார்க்க தெய்வம் தமக்கிட்டுக்
கொண்ட ப்ஹவம் (இருப்பு) என்னும் நாமமே சிறந்த
தென்று அறிந்தவர்போலே பகவன் என்று கடவுளைத்
தலைப்பில் கூறி அவர் தாமாயிருக்கிறவரென்று பேரொளி
விடுகிறார். ஆகையால் தெய்வம் தமக்கு இட்டுக்கொண்ட
அ, ஆதி, அந்தம், பவம் என்னும் பெயர்களை திருவள்
ளுவர் ஆதிபகவன் என்னும் பதத்தில் தொகுப்பாய்
அடக்கித் தெய்வத்தின் மாட்சி மகிமையையும், நன்மைத்
தனத்தையும் சகலரும் உணர்ந்து அவரை ஆராதித்துப்
போற்றிப் புகழ்ந்து சேவிக்கவேண்டுமென்று படிப்பிக்கி
றார். உலகத்திலுள்ள வேறெந்தப் பாஷையிலும் ஆதிபக
வன் என்னும் சொல்லுக்கு இணையான வார்த்தை கிடையா
தென்கலாம்.

சர்வேசுரன் திருவள்ளுவருக்கு விசேஷ ஞானத் தெளிவை அளித்து அவர் வழியாய்த் தமிழ்ச் சீமையோர் தமது சுய இலக்ஷணத்தை உத்தமமானவிதமாய் அறியும்படி செய்ததை உய்த்து உணர்ந்தால், ஆண்டவர் தமிழராகிய நமதுபேரில் அருமையான தயவைக் காட்டுகிறாரென்று தெரிந்துகொள்ளுவோம். இந்தத் தயவுக்கு நாம் அநந்த நன்றிபுரிந்து பதில் வணக்க நேசம் காட்டவேண்டியதல்லோ? ஐயோ, இப்படியில்லாமல் நமது தேசத்தார் பலவகைத் தேவர்களையும், கல்லையுந்தானே, சாமி, சாமியென்று கும்பிடுகிறார்கள்! சிவவாக்கியரும் திருவள்ளுவரும் இவர்களுடைய நடத்தைக்கு விரோதமாய்ச் சாட்சி சொல்லும்போது தமிழ் அஞ்ஞானிகள் போக்குச்சொல்ல இடமிராது.

---

## 36. தெய்வ இலட்சணம்.

சேசுநாதர்சுவாமி தமது திவ்விய வேதத்தை யூதர்களுக்குப் போதிக்கச் சித்தமானபோது, அதுக்கு அவர்கள் விசுவசித்துவந்த வேதாகமமே தமக்கு அத்தாட்சியென்று தெளிவாய் ஒப்பித்தார். அதினாலே அவருடைய வாக்கை மறுத்தடிக்க யூதசாஸ்திரிகளுக்கு வகையில்லாமற் போயிற்று. வீம்புக்காக அவர்களில் சிலர் எதிர்வாதஞ் செய்தாலும் அது அபலார் புத்திக்கு ஏறவில்லை. அஞ்ஞான தேசத்தாருக்குக் குறிப்பான அப்போஸ்தலரான அர்ச். சின்னப்பர், திவ்விய கர்த்தர் காட்டிய அவ்வித வழியைத்தானே பின்பற்றிச் சத்திய வேதத்தைப் பிரசங்கித்தார். ஒரு சமயத்திலே அவர் அத்தேனே நகரத்துக்குப் பயணம் போகவேண்டியிருந்தது. ஐரோப்பா கண்டத்திலே அத்தேனேயூர்தான் அக்காலத்தில் எவ்வித சாஸ்திர கலைக்கியானங்களிலும் உன்னத சித்திர சிற்ப வித்தைகளிலும் தாய் ஸ்தலம். இந்த விஷயங்களிலெல்லாம் அங்கே முடிவான தீர்மானத்துக்கு அப்போது மறு



பேச்சில்லை. விக்கிரக ஆராதனைக்கும் அது மும்முரமான இருப்பிடம். வேத காரியங்களில் நூதனமாக யாராவது போதித்தால் அதை விசாரிக்கும்படி ஆரேயோப்பாகஸ் (Areopagus) என்று மகா பேர்போன சாஸ்திர சங்கமொன்று அங்கே கூடுவது வழக்கம். அர்ச். சின்னப்பர் அந்தப் பட்டணத்தைச் சுற்றி உலாவுகையில் அதில் எங்கே பார்த்தாலும் விக்கிரகங்கள் அவருக்குத் தென்பட்டது. ஓர் கோவிலில் "அறியப்படாத கடவுளுக்கு" என்று எழுதியிருக்கக் கண்டார். அவர் மனதில் துயரமும் ஆத்திரமும் பொங்க, அவர் எதிர்ப்பட்டவர்களோடே பேசி விக்கிரக ஆராதனையைக் கண்டித்து சேசுநாதர்சுவாமியைப் பற்றி உபதேசித்தார். இந்த நூதனத்தைக் கேட்ட சில தத்துவ சாஸ்திரிகள் அவரை மேற்கூறிய வித்தியாபாரகரின் சங்கத்துக்கு அழைத்துக்கொண்டு போனார்கள். அவர் சபைநடுவில் நின்று கூடியிருந்த பெரியோர்களை நோக்கி, "அத்தேனே நகரின் மகான்களே, அந்நியனாகிய நான் உங்கள் ஊரைச் சுற்றிப்பார்த்து வந்தேன். பல பல தெய்வங்களை மிமிசையாய் வணங்குவதில் உங்களுக்கு மிஞ்சினவர்கள் உலகத்தில் கிடையாதென்பேன். ஆனால் ஓரிடத்தில் மாத்திரம் ஓர் கோவிலில் "அறியப்படாத கடவுளுக்கு" என்று வரையப்பட்டிருப்பதைக் கண்டேன். நீங்கள் இதுவரையில் அறியாமல் தண்டனிட்டுவரும் தெய்வம் இன்னதென்று இதோ உங்களுக்குத் தெளிவிக்க வந்தேன். அவர்தான் வானத்தையும் பூமியையும் அவைகளில் அடங்கிய சகல வஸ்துக்களையும் சுத்த சூனியத்தினின்று படைத்தவர். அவர் எங்கும் நிறைந்தவர். அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம். இதற்கு மேலாக நாம் அவருடைய சந்ததியென்றே உங்கள் புலவர்கள் பாடியிருக்கிறார்கள். நாம் தெய்வ சந்ததியாய் இருக்க, நமது கைவேலையால் உருவாக்கப்பட்டு நமக்குக் கீழ்த்தரமாயிருக்கும் பொன் வெள்ளி மரச்சிலைகளை நாம் எப்படித்தான் தெய்வங்களாகப் பாவித்து வணங்க மனமொப்பும்" என்றார். அவருடைய நியாயத்தைச் சில

உணர்ந்து அஞ்ஞானத்தை வெறுத்துக் கிறிஸ்தவர்களாகு கள். (அப். நட. 17 : 15-34.)

இந்த வரலாற்றை ஆராய்ந்தால், இதர மதத்தார்களுக்குக் கிறிஸ்துவேத சத்தியங்களை உபதேசிக்கையில், அவர்கள் நம்புகிற மெய்யும் பொய்யுங் கலந்த ஆசாரங்களில் நல்லவைகளைக் கத்தோலிக்கர் பிரித்தெடுத்து அவைகளோடே சுவிசேஷ சத்தியங்களை இணைத்து ஏற்ற மார்க்கத்தில் அவர்களைச் செலுத்திப் பொய்யான எண்ணங்களை விவேக புத்தியுடன் களையப் படிப்பார்கள். இதுவே சேசுநாதர்சுவாமியும் அர்ச். சின்னப்பரும் தங்கள் செய்கையால் கற்பிக்கிற மார்க்கம். இதுதான் பவணந்தி முனிவர் மாணாக்கர் விஷயமாய்ச் சொல்லுவதுபோல், அன்னப்பட்சியின் நடத்தை. பாலும் ஜலமும் கலந்திருந்தால் ஜலத்தைப் பிரித்துப் பாலை மாத்திரம் அருந்துமாம் அந்தப் பறவை. அதுக்குச் சரிநேராக இதர மதத்தாருடைய பொய்யும் மெய்யுங் கலந்த கொள்கைகளை வெவ்வேறாக்கி உண்மையை உறிஞ்சி அவ்வுண்மையைச் சுவிசேஷ சத்தியங்களோடே பொருத்திக் கிறிஸ்துவேத ஏற்பாடுகளை இசைவாகக் கோர்த்து புத்திக்குள்ளும் மனதுக்குள்ளும் புகட்டுவதே உத்தம முறை. அர்ச். சின்னப்பரைப்போலே இந்த முறையை அர்ச். தோமையார் அனுசரித்து அஞ்ஞானிகளான நமது முன்னோர்களுக்கு அடியில்வரும் முக்கியமான வேதசத்தியங்களை உணர்த்தினாரென்று நாம் நிதானித்துக் கொள்ளலாம். அந்தச் சத்தியங்களாவன :—

1-வது. சர்வலோகத்தையும் படைத்த கடவுள் ஒருவரிருக்கிறார். அவர் ஏக கடவுள்.

2-வது. அவருடைய இலக்ஷணங்கள்.

3-வது. அவர் திரித்துவமாயிருக்கிறார்.

4-வது. நல்லவர்களுக்குப் பாக்கியம் அளிப்பார் தீயோர்களுக்கு ஆக்கினையிடுவார்.

5-வது. தலைமையாகிய பாவம் பிறந்த விபரம்.

6-வது. பாவத்தைப் போக்கும்படி கடவுள் எடுத்த மனுஷாவதாரம்.

7-வது. அந்த மனுஷாவதாரத்தின் பயனாகிய தேவ திரவிய அனுமானங்கள்.

இந்த ஏழு பகுதிகளில் முதல் பகுதியைப்பற்றிப் போன பாடத்தில் வியாக்கியானம் செய்திருக்கிறேன். தெய்வ இலக்ஷணங்களில் இரண்டு மூன்று அந்தப் பாடத்திலேயே கோர்க்கப்பட்டன. திருவள்ளுவர் கடவுளுக்கு எட்டுக் குணங்கள் உண்டென்கிறார். அந்த "எண்குணத்தான் தாளை" வணங்காதவன் ஐம்பொறிகளையுடையவனாயிருந்தும், அறிவாளி மனிதனல்ல, சுவரணை கெட்ட மனுஷ பாவையென உலகம் இகழும்படி அவர் பாடியது பின் வருமாறு :—

"கோள் இல் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை."

இதன் பொருள் என்னவெனில், தத்தமக்கேற்ற உணர்ச்சிகள் அற்றுப்போன ஐம்பொறிகள் எப்படியோ, அப்படியே எட்டு இலக்ஷணங்களையுடைய கடவுளை வணங்காத் தலைகளையுடைய மனிதர்களும். அவர்கள் மனிதரூபமான பாவைகளேயன்றி மெய்யான மனித சுபாவத்தைக் கொண்டவர்களல்ல என்ப. தெய்வத்தை வணங்காமல் மனித சுபாவம் இருக்கமுடியாதென்று தெளிவிக்கும்பொருட்டுத் திருவள்ளுவரைவிட அதிக உரம் திரமாய், திட்பநுட்பமாய்ப் பேசின அகிறிஸ்துவர்கள் (Non-Christians) யாருமில்லை.

அவர் குறிப்பிட்ட தெய்வ இலக்ஷணங்கள் எட்டிலே விசேஷமாய் ஒன்று நமது சகோதர அஞ்ஞானிகள் முக்கியமாய் உய்த்துணரத்தக்க ஆழ்ந்த சிந்தனை அடங்கியதாகும். அதை இவ்விடம் விரித்துரைக்க எத்தனிக்கிறேன். தெய்வ இலக்ஷணத்தைப்பற்றி நமது புலவர் அடியில் வருமாறு பாடுகிறார் :—

பொறிவாயில் ஐந்து அவித்தான் பொய்தீர் ஒழுக்கம்
நெறிநின்றார் நீடுவாழ்வார்.

இந்தக் கவிக்குப் பயன் என்னவெனில், கடவுள் ஐம்பொறிகள் வழியாய்ப் பிறக்கும் விருப்பம் வெறுப்புகளையெல்லாம் அவித்தவர், முற்றும் ஒடுக்கி அடக்கினவர். ஆகையால் அவரால் அருளப்படும் வேதமார்க்கத்தில் பொய்யான கொள்கைகள் பரிச்சேதம் இராது. அவ்வளவும் மெஞ்ஞானமயமாயிருக்கும். அந்த மெஞ்ஞான வழியிலே நிலைமையாய் நின்று நடப்போர்கள் எந்நாளும் பாக்கியவான்களாய் வாழ்வார்கள். பரிமேலழகர் தமது உரையிலே அப்படிப்பட்டவர்களுக்கு மறுபிறப்பில்லை, எக்காலமும் ஒரே தன்மையாய் வாழ்வார்களென்கிறார்.

மேலே கூறப்பட்ட சித்தாந்தங்களை ஒவ்வொன்றாய்ப் பரிசோதித்தால் அதில் திட்பம் நுட்பம் ஒட்பம் (ஒளி) ஆகிய முக்குணங்களும் பூரணமாய் இலங்குகிறதைக் காண்போம்.

1. கடவுள் ஐம்பொறிகளின் விருப்பம் வெறுப்புகளை அவித்தவர். தமிழ்ப் பாஷையில் கடவுளுக்கு நாமகரணங்கள் நூற்றுக்குக் குறையாதென்றேன். அவைகளில் "அரூபி, நிரூபன், பிறப்பிறப்பிலான், பரம்பொருள்" என்பவை சிலவாமென்க. இவைகளின் நோக்கப்படி தெய்வத்துக்கு ரூபமில்லை, பிறப்பு இல்லை, இறப்பு இல்லையென்பது நிர்ணய சத்தியம். ஆகையால் கடவுளுக்குச் சரீரமுமில்லை ஐம்பொறிகளுமில்லை. ஒரு பொறியுமற்ற சுவாமியை ஐந்தவித்தான் என்று வியர்த்தமாய் தமது கவிராயர் போற்றுகிறாரென்கலாமோ? அல்லவே. அவர் இத்தேசத்துப் புராணங்களை ஆராய்ந்து பார்த்தார். அவைகளில் வாழ்த்தப்படுகிற ஆணும் பெண்ணுமாகிய தேவர்கள் பற்பல அவதாரங்களாய், வேஷங்களாய்த் தோன்றினதிலே தங்கள் ஐம்புலன்களை ஒடுக்கி அடக்கமாட்டாமல் இச்சைகளாய்ச் சாதாரண மனித ஜன்மத்தைவிடக் கேடுகெட்ட அசுசியான நடக்கைகளில் வழுவி விழுந்திருப்பதைப் புல

வர்கள் புகழ்கிறார்கள். திருவள்ளுவர் இவ்வித புகழ்ச்சிகளை நிராகரித்து எண்குணத்தானாகிய கடவுள் மனித ரூபமெடுத்தால் அவர் அகத்தியம் தனது ஐம்பொறிகளையும் முற்றும் சீர்கேடறப் பூரணமாய் அடக்கி நடத்துவாரென்று வெளிப்படுத்துகிறார். அது உறுதிப்பாடாகையால், புராணங்களில் தெய்வங்களாக மதிக்கப்பட்டு வரும் தேவர்கள் தங்கள் ஐம்பொறிகள் சென்றவழியே ஓடித்திரிந்து வசைப்பேர்கள் முதலாய்ப் பெற்றதினாலே அவர்கள் மெய்யான தெய்வங்கள் அல்லவென்று குறிப்பினாலே சுட்டிக்காட்டுகிறார்.

இதற்கு நேர் எதிர்நிலையாகச் சிலுவையிலே அறையுண்டு கண், காது, வாய் முதலிய பொறிகளெல்லாம் அவிந்து இரத்தத்தில் தோய்ந்து கிடக்கும்படியான பாடுபட்டு அந்தரத்தில் மூன்று ஆணிகளில் தொங்கிய நமதாண்டவராகிய சேசுநாதர்சுவாமியைச் சற்றுக் கூர்ந்து பார்ப்போம். இதோ அவரே "பொறிவாயில் ஐந்தவித்தான்." ஆகையால் அவரே மனித ரூபமெடுத்த கடவுள் என்பது திருவள்ளுவரின் குறிப்புக்கேற்றவண்ணம் உறுதியான சித்தாந்தம். ஏனெனில் ஐந்தவித்தான் என்னும் தொடர்மொழியில், அவித்தான் என்னும் பதத்தைக் கவனித்துப் படித்தால், ஐம்புலன்களையும் அற்ப மாசும் வராமல் முற்றும் ஒடுக்கி அவைகளிருந்தும் இல்லாதவைபோல நடக்கிறவன் என்று பொருள் பெறும். இந்தச் சம்பூரண பொறி அடக்கம் தெய்வ வல்லமையின் நிச்சயமான குறி. ஏனெனில் எந்த மனிதனும் தன் சுயபலத்தினாலே மாத்திரம் தன் ஆசாபாசங்களை அடியோடந்தம் பிறப்புமுதல் இறப்புவரையில் ஒரே சீராய் அடக்கி ஒடுக்கி நடக்க வல்லவனல்ல. மனித ரூபமெடுத்த தெய்வம் ஒன்றே தனக்கிருக்கிற சுபமான தெய்வ பலத்தினாலே இயல்பாய் ஐந்தவித்தானாயிருப்பார். "ஐம்புலத்தடங்கான்" என்றும் தமிழில் தெய்வத்துக்குப் பெயர். இப்படியிருக்க சேசுநாதர்சுவாமி பாடுபட்ட சுரூபத்தைப் பார்த்தாலே போதும். இதோ ஐந்தவித்தானுடைய ரூபம் இதுவேயென்று யாரும் ஆணை

விட்டுச் சொல்லக்கூடியதாயிருக்கின்றது. ஆகையால் சிலுவையிலே ஆணிகளில் அறையுண்டு தலையிலே முள்முடியைத் தரித்து இரத்தக் கண்ணீர் விட்டுக்கொண்டு தொங்குகிற சேசுநாதர்சுவாமி ஐந்தவித்தான் என்பது சத்தியம். ஆகவே அவர் மனிதரூபமெடுத்த கடவுள் என்பதற்குச் சந்தேகமில்லை.

சுவிசேஷத்தை எடுத்துப் படித்தாலோ அதிலே சேசுநாதர்சுவாமி தம்மைப்பற்றிப் பேசுகையில், நரிகளுக்குக் கெபியும், குருவிகளுக்குக் கூடுமுண்டு; எனக்கோ தலைசாய்க்க இடமில்லையென்றார் (மத். 8: 20). இந்த வாக்கை அவருடைய ஜீவியமானது பிறப்புமுதல் இறப்புவரையில் சாங்கோபாங்கமாய் நிறைவாக்கினதேயன்றிச் சற்றாகிலும் குறைவாக்கவில்லை. எப்படியெனில், வேதாகமத்திலே வரைந்திருக்கிறபடி சர்வேசுரனாகிய அவர் அட்டதரித்திரத்திலே மாட்டுக்கொட்டிலிலே பிறந்து பாலப் பிராயத்திலேயே எஜிப்து தேசத்திலே பரதேசியாய்த் திரிந்து முப்பது பிராயம்வரையில் மதிப்பற்ற பட்டிக்காடான நசரேத்தூரில் எளிமைத்தனத்தில் ஜீவனம் பண்ணிவந்தார் (அரு. 1: 46). பிராயம் முப்பதானதின் மேல் ஜனங்களுக்குத் தமது தெய்வீக ஞானத்தைப் பிரசங்கித்தார். வீடு வாசலில்லாமல் ஊருக்கு ஊர் பரதேசியாய்ச் சென்றார். அவருடைய போதகத்தை விரோதித்த பாவிகள் அவரைப் பிடித்து அடித்துத் தலையிலே முள்முடி சூட்டிக் கடைசியாய் அவரைச் சிலுவையிலே அறைந்து கொன்று அவருடைய திரு இருதயத்தையும் ஈட்டியினாலே குத்தித் திறந்தார்கள். அவர் வாய் திறவாத மாசற்ற செம்மறிப்புருவைபோலே எல்லாப் பாடுகளையும் ஏற்றுக்கொண்டு உயிரைக் கொடுத்து மனிதருடைய பாவங்களுக்கு உத்தரித்தார்.

இங்கு நான் தொகுப்பாய் உரைக்கிற இந்த நடபடிக்கை சேசுநாதர்சுவாமி மெய்யாகவே "பொறிவாயில் ஐந்தவித்தான்" என்று புலப்படுத்தித் தோற்றுவிக்கிறதல்லவோ? ஆகையால் மனிதரூபமெடுத்த தெய்வம் ஐந்

தவித்தானாயிருப்பானென்று திருவள்ளுவர் திண்ணமாய்
மாழிகிறதும்போலே சுவிசேஷ வாக்கியமும் மனிதாவதார
மடுத்த சர்வேசுரனாகிய சேசுநாதர்சுவாமி முற்றும் ஐந்
வித்தானென்று அவருடைய ஜீவிய நடபடிக்கைகளை
டுத்துக்காட்டி ஒப்பிக்கிறது. இதுகாரியத்திலே திரு
வள்ளுவர் கத்தோலிக் வேதத்தின் திருச்சுவிசேஷத்
தோடே எள்ளளவுமுதலாய்ப் பிசகாமல் ஒத்திருக்கிறது
மகா மகாப்பட்ட ஆச்சரியமல்லோ. தெய்வப் புலவரென்று
திருவள்ளுவர் வாக்கைத் தங்கள் தலைமேலே வைத்துக்
கொள்ளும் நமது இனத்தாராகிய தமிழ்நாட்டார் இந்த
ஒருதலை துணிதலைச் சற்றாகிலும் கரிசனமாய்க் கவனிப்பார்
களாகில், நமது நாட்டில் கொண்டாடப்படுகிற தெய்வங்
களில் யாரையாவது ஐந்தவித்தாரென்று கூற வகையில்லை
யென உள்ளங்கை நெல்லிக்கனிபோலத் தெளிந்துகொள்ளு
வார்கள். தெளிந்து அவர்கள் போலித் தெய்வங்களை
யன்றி மெய்யான தெய்வங்கள் அல்லவென்று தள்ளுவார்
கள். அதற்குமேல் நமதாண்டவராகிய சேசுநாதர்சுவாமி
யுடைய ஜீவிய வரலாற்றை ஆராய்ந்து அவர் மெய்யாகவே
பொறிவாயில் ஐந்தவித்த நரதேவனென்று விசுவசித்து
அவரை வணங்கி ஆராதிப்பார்கள். திருவள்ளுவர் வாக்கை
நேர்மையான மனதோடே யோசித்துப்பாராததினிமித்தம்
நமது தேசத்திலே கணக்கற்ற பேர்கள் பேய்க்கணங்களை
யும், சூரியனையும், ஆறு, குளம், மரம், இன்னம் சிவவாக்கி
யர் பழித்துக்காட்டுகிற கல்லையுந்தானே சாமி, சாமியென்று
பூசிக்கிறார்கள். திருவள்ளுவர் இக்காலம் இவ்விடமிருப்
பாராகில், அசுசியான ரூபங்களைப் பிரசித்தமாய் வைத்
திருப்பவர்களைக் கண்டனை தண்டனை செய்வாரென்பதிற்
சந்தேகமில்லை.

பிள்ளை : அம்மா, நீங்கள் தெய்வ இலக்ஷணம் இன்னதென்று நமது தேசத்து அகிறீஸ்துவ (Non-Christians) ஞானிகளுடைய வாக்குகளை எடுத்து விளக்கினீர்கள். அவ்வாக்குகள் இந்துமதத்தார் மனதில் அம்புபோலக் குத்த வேண்டியது. ஆயினும் அவர்களில் சில அறிவாளர்களே

உண்மையை உணராமல் எதிர்வாதம் பேசுகிறார்கள். அவர்களுடைய சிந்தனையிலே, எங்கும் நிறைந்திருக்கிற கடவுளை மனதுக்குள்ளே மாத்திரம் இருக்கிறவர் என்றாற்போலே சிவவாக்கியர் பாடியது பிசகாம். அவர் கல்லிலும் உண்டு, புல்லிலும் உண்டல்லோ. ஆகக்கொள்ள, கல்லைக் கும்பிட்டாலும் புல்லைக் கும்பிட்டாலும் கடவுளுக்குத்தானே அந்தக் கும்பிடு செல்லும். இதை யோசியாமல், நட்ட கல்லுந் தெய்வமாகுமோவென்று சிவவாக்கியர் நகைப்பது அநர்த்தமென்கிற வழக்காடிகள் அநேகாநேகர்.

தாய்: இவர்கள் சிவவாக்கியர் மொழிகளின் ஆழ்ந்த பொருளைக் கண்டுணரவில்லை. கடவுள் கல்லிலே இல்லையென்றாவது, கல்லிலேயிருக்கிற கடவுளை வணங்கப்படாதென்றாவது சிவவாக்கியர் பேசுகிறாரோ? இல்லையே. கல்லிலேயும் புல்லிலேயும் தெய்வம் இருக்கிறதினாலே கல்லும் புல்லும் தெய்வமாகாது; அதுக்கு எவ்வித அறிவுங் கிடையாது. கடவுளோ அநந்த ஞானியென நியாயத்தைப் பகுத்துக் காட்டுகிறார். இதை உணராத அல்லது உள்ளவாசி உணர மனதில்லாத கல்விமான்கள் கல்லிலே கடவுள் வசிக்கிறதினாலே கல்லையுந் தெய்வமாகக் கும்பிடலாம் என்றால் அது கோணப்புத்தியென்பதற்குச் சந்தேகமில்லை. அப்படிப்பட்டவர்களே கடவுள் எந்த மனிதனிடத்திலேயும் இருக்கிறதினாலே தாழ்ந்த ஜாதி மனிதனிடத்திலும் இருக்கிறாரென்று, அவனைச் சாமியென்று விழுந்து கும்பிடலாமே. ஏன் அவ்வண்ணம் செய்யாமல் அவனைத் தொட்டாலே போதும், தீட்டாகுமென்று பிதற்றுகிறார்கள்? தெய்வத்தைத் தொடல் தீட்டாகுமோ? இந்துமதக் கொள்கைகளுள் பெரும்பாகம் இவ்விதமே ஒன்றுக்கொன்று ஒவ்வாமல்தான் இருக்கின்றது. இந்தியர் அனுசரிக்கிற மதம் ஆயிரந் தலையுள்ள மதம் என்கலாம். இத்தேசத்திலே ஜாதிகளெத்தனையோ மதங்களும் அத்தனை என்கலாம்.

சேசுநாதர்சுவாமியைக் கும்பிடுகிறவர்களைக் கிறீஸ்துவர்களென்கிறோம். மகமதுவை நம்புகிறவர்களை மகமதியரென்கிறோம். இந்தியர் மதத்தைக் குறிப்பாகக் காட்டுகிற பொதுப் பெயர் எந்த இலக்கண இலக்கியத்திலுங் கிடையாது. இந்துமதம் என்னும் பெயர் நேற்று முளைத்தது. ஐம்பது வருஷங்களுக்குமுன் அப்பெயர் வழங்கவில்லை. ஆயினும் சுருங்கச் சொல்லும்படி. இத்தேசத்து அஞ்ஞான மார்க்கத்தை இந்துமதமென்றே பேரிட்டுப் பேசுவோம்.

இந்துமதக் கல்விமான்கள் இருகட்சியாய்ப் பிரிந்து வாதாடிக்கொண்டு வருகிறார்கள். அவர்களுக்கு துவிதர், அத்துவிதர் எனப் பெயருண்டாயிற்று. சிருஷ்டிகர் சிருஷ்டியென்றாவது, சித்து அசித்து என்றாவது ஆத்துமம் பிரகிருதி என்றாவது பொருள்களெல்லாம் இருவகைப்படுமென்று விசுவசிக்கிறவர்கள் துவிதர் என்னப்படுகிறார்கள். சித்து என்றால் அறிவுப்பொருள், அசித்து அல்லது பிரகிருதி என்றால் அறிவிலாப்பொருள். அத்துவிதர்களோவெனில் பிரமம் என்பது மாத்திரம் மெய்யான பொருள், பொருள்களாகத் தோன்றுகிற மற்றவையெல்லாம் கனவில் தட்டுகிற ரூபங்களைப்போன்ற மாய்கைகளென்று எண்ணுகிறார்கள். துவிதம் என்றால் இரண்டு என்றும், அத்துவிதமென்றால் இரண்டல்ல, ஏகப்பொருள் என்றும் அர்த்தம் பெறும்.

அத்துவிதக் கொள்கையானது தப்பறையென்று ஒப்பிக்கும்பொருட்டு சிவவாக்கியர், கல்லைத் தெய்வமென்று பாவித்துக் கும்பிடாதே; ஏனெனில் கல்லிலே தெய்வம் வசிக்கிறதினாலே கல் வேறாகவும் தெய்வம் வேறாகவும் இருவகைப் பொருள்கள் உண்டேயன்றி, அறிவும் பேச்சுமில்லாத கல்லும் அநந்த ஞானமுடைய கடவுளும் ஒரே ஏகமென்பது புத்திக்கொவ்வாத காரியமென்று அத்துவித மார்க்கத்தை மறுத்துத் தள்ளுகிறார். கத்தோலிக் திருச்சபையும் அத்துவித சமயம் அந்தப் பிசகான மார்க்கமென்று அதைத் துவேஷித்து, சிருஷ்டிகர் சிருஷ்டிப்பு என இருவகைப் பொருள்கள் உண்டெனத் திட்டமாய்ப் போதிக்கிறது.

பி.: அத்துவிதருடைய கொள்கையானது சுத்தப் பிசகென்று சிவவாக்கியர் பாட்டிலே தெளிவாய்த் துலங்குகிறது. ஒரு வீட்டிலே மனிதனிருக்கிறதினாலே வீடே மனிதனென்று யார்தான் கூச்சமில்லாது சொல்லத் துணிவார்? அதுபோலே கல்லிலே புல்லிலே கடவுள் பிரசன்னமாயிருக்கிறதினாலே அதைக் கடவுளென்று பூசித்தல் மகா புத்தியீனம். ஆகையால் சிவவாக்கியருடைய கவி மகா நீதியாயத்துக்கு ஒத்திருக்கின்றது. அதிலே யாதொரு ஆக்ஷேபணைக்கிடமேயில்லை.

ஆனால் திருவள்ளுவர் பாடிய கவியிலே விகற்பம் தோன்றுகிறது. இப்புலவர் மனிதரூபமெடுக்குங் கடவுளை ஐந்தவித்தானென்றாற்போலே கௌதம முனியையும் ஐந்தவித்தான் என்று புகழ்கிறார். அப்படியானால் கௌதம முனியை மனிதரூபமெடுத்த ஒரு தெய்வமென்கலாமோ?

தாய்: கடவுள் மனுஷாவதாரமெடுத்தால் பிறப்பு முதல் இறப்புவரையில் ஐந்தவித்தானாகவே விளங்குவார். கௌதமரோ இளம்பிராயத்தில் கலியாணம் முடித்து ஒரு குழந்தைக்குந் தந்தையானார். முதிர்ந்த வயதில் பன்றி இறைச்சியைப் புசித்து அஜீரணத்தினாலே வியாதிப்பட்டு மரித்தார். ஆகையால் ஐந்தவித்தான் என்கிற இலக்ஷணம் கௌதமருக்கு மெய்யாகவே செல்லாது. திருவள்ளுவரைத் தெய்வப் புலவரென்கிறோம். மகா சுத்தமான ஜலத்தைத் திவ்வியமான ஜலமென்போம். இவ்வித பேச்சுகள் பெருமை பாராட்டச் சொல்லப்படும் புகழ்ச்சிகளேயொழிய மெய்யாகவே தெய்வத்தன்மையைக் குறிப்பவைகளல்ல. அவ்வண்ணமே பிரபஞ்ச வாஞ்சைகளை அடக்கிவந்த கௌதமருடைய பெருமையைப் பாராட்டும்படி அவரை ஐந்தவித்தானென்று திருவள்ளுவர் கூறுகிறாரேயல்லாமல் தெய்வத்துக்கு மாத்திரம் பூரணமாய் உரிய அந்த இலக்ஷணம் இவரிடத்திலும் பூரணமாயிருந்ததென்று பரிச்சேதம் சொல்லப்படாது. படைப்புண்ட வஸ்துக்களுக்குள்ளே அர்ச். கன்னிமரியம்மாளை மாத்திரந்தான்

[illegible]மம் ஐந்தவித்தாள் என்கவேண்டியது. ஆனால் அது [illegible]னுக்கு இயல்பாய் உரிய இலக்ஷணமல்ல. சர்வேசுரன் [illegible]ளை மாசில்லாமல் உற்பவிக்கச் செய்ததினாலே அவளு[illegible]ய அமலோற்பவம் அவளை ஐந்தவித்தாளாயாக்கிற்று. [illegible]ளை எல்லாருக்கும் கீழானவளாகத் தாழ்த்திவந்த அந்த ஆண்டவளும் மகா நன்றியறிதலோடே, என்னிடத்தில் இருக்கிற நன்மையும் மாசற்றதனமும் தெய்வ கிருபையினாலே எனக்கு அளிக்கப்பட்டது; ஆகையால் என்னாத்துமம் கர்த்தரைத் தோத்தரிக்கிறதென்றாள்.

ஆகவே பொறிவாயில் ஐந்தவித்தான் என்னும் இலக்ஷணம் சிலுவையிலே தொங்கிய நமது திவ்விய இரக்ஷகரான சேசுநாதர்சுவாமிக்கு மாத்திரம் உரிய குறி. நமது தேசத்திலே வணங்கப்படும் முப்பத்து முக்கோடி தேவர்களுக்கு அந்த இலக்ஷணம் பொருந்தாது. ஆகையால் அவர்கள் தெய்வ அவதாரங்களல்ல; அவர்களை வர்ணிக்கிற புராணங்களும் இதிகாசங்களும் தெய்வ வாக்கியங்களென கல்விமான் எண்ணலாகாது. இதினிமித்தந்தான் அகஸ்தியர் அவைகளை வயிறு வளர்க்க ஏற்பட்ட பொய்க் கதைகளென்கிறார்.

---

## 37. மெய்வேதம் ஒன்றேயொன்று.

அதற்குமேல் பொறிவாயில் ஐந்தவித்தான் "பொய்தீர் ஒழுக்கம்" என்கிறார் திருவள்ளுவர். அதாவது, ஐம்புலன்களையும் அவித்தவன் படிப்பிக்கும் மார்க்கத்திலே பொய்க்கொள்கையென்னப்பட்ட யாவும் அற்றுப்போயிருக்கும். இது "அவருடைய வேத மார்க்கம்" என்று பரிமேலழகர் கூர்ந்து சொல்லுகிறார்.

இந்த உலகத்திலே மனிதாவதாரமெடுத்த சேசுநாதர் சுவாமி ஒருவரே பொறிவாயில் ஐந்தவித்தானாயிருக்க, அவர் படிப்பித்த கிறீஸ்துவேத மார்க்கமொன்றே பொய்க் கலப்பில்லாத சத்திய வேதமென்பது வெட்டவெளியாய்த் துலங்குகிறது. மற்ற மதங்களெல்லாம் ஐம்பொறிகளை அவி

யாத பேர்வழிகளாலே கிளைத்தபடியால் அவைகளெல்லாம் பொய்மார்க்கங்களாகின்றன.

பி.: கிறீஸ்து மார்க்கம் அநேக பிரிவுகளாக உடைபட்டிருக்கிறது. அவைகளில் ஒன்றுக்கொன்று விகற்பமான கொள்கைகளைக் காண்கிறோம். அவைகளையெல்லாம் சேசுநாதர்சுவாமி படிப்பித்த பொய்தீரொழுக்கம் எனக்கூட முடியுமோ?

தாய்.: பரிச்சேதம் முடியாது. ஆனால் இந்தச் சந்தேகம் அர்ச். தோமையார் காலத்திலாவது, கி. பி. பதினைன்காம் நூற்றாண்டில் நமது தேசத்திலே வேதம் போதிக்க வந்த அர்ச். ஐந்துகாயப் பிரான்சீஸ்கு சபைச் சந்நியாசிமார்கள் காலத்திலாவது, பின்னால் அர்ச். சவேரியார் காலத்திலாவது குறுக்கிடுவதற்கு இடமில்லாதிருந்தது. ஏனெனில் அவர்கள் காலத்திலே பதிதப் போதகர்கள் இந்திய தேசத்திலே அவர்களோடே எட்டிக்குப் போட்டியாய் வாதாட வரவில்லை. இக்காலத்திலே அநேக பதிதமார்க்கத்தார்கள் கத்தோலிக் வேத குருக்களுக்கு எதிரிகளாகத் தோன்றித் தாங்கள் போதிக்கிற வேத உபதேசம் சேசுநாதர்சுவாமி கற்பித்த மெய்யான கிறீஸ்து மார்க்கந்தானென்று சபதங் கூறுகிறார்கள்.

இவ்வித திக்குமாறாட்டத்தில் நமது சகோதரராகிய இந்துக்கள் செல்லவேண்டிய வழியென்னவெனில்: முதலாவது, தாங்கள் அனுசரிக்கிற மதங்கள் பொறிவாயில் ஐந்தவித்தானால் உண்டாகாத பொய்மார்க்கமென்று அடியோடே அவைகளைக் களைந்தெறியக்கடவார்கள். எறியாவிடில் அஞ்ஞானத்திலே சலஞ்சாதித்துவந்த கிரேக்கருக்கும் ரோமானருக்கும் அர்ச். சின்னப்பர் போட்ட சாபவாக்கு இவர்களையும் பிடிக்கும். அந்த அப்போஸ்தலர் வசனித்தபடி, "கிரேக்கரும் ரோமானரும் மெய்யான கடவுளை அறியத் திறமையுள்ளவர்களாயிருந்தார்கள், அவரை அறிந்துங்கொண்டார்கள். தாம் யாரென்று அறிந்து கொள்ளும்படியானவிதமாய்க் கடவுள் தம்மை அவர்களுக்கு வெளிப்படுத்தினார்; அவரை அவர்கள் அறிந்தும், அவரைப் புகழ்ந்து ஆராதிக்கவில்லை; தங்கள் சிந்தனையிலே வீணர்

ளானார்கள், குருடர்களுமாய்ப்போனார்கள். தங்களை ஞானிகளென்று போற்றினவர்கள் மெய்யாகவே அஞ்ஞானிகளாகத் தாழ்ந்தார்கள். சர்வமகத்துவம் நிறைந்த கடவுளை விட்டு மனிதர்களையும், மிருகங்களையும், பறவைகளையும், இன்னம் தரையிலே ஊர்வனவைகளையும் கையெடுத்துக் கும்பிட்டார்கள். சர்வேசுரன் முனிந்து அவர்களைக் கைவிட்டார். அவர்கள் தங்கள் சரீர இச்சைகளுக்கு அடிமைகளாகி மிருகங்கள்போலே நடந்தார்கள். அவர்களுடைய தூர்ச்சனம் அவர்களைத் தெய்வசாபத்துக்கு உள்ளாக்கினதென்று அவர்கள் கண்டாலும் அவர்கள் மன்னிப்படைகெட்டவர்களாய்ப் போயினர். அவர்கள் மன்னிப்படை... பும்படியான போக்குச்சொல்ல வகையில்லை" (உரோமர், அதி. 1).

நமது சகோதர தமிழ்நாட்டார் கிரேக்கர் ரோமானரை விட அதிகத் தெளிவாய் உலக சிருஷ்டிகரை அறிந்திருக்கிறார்கள்.

ஆகையால் 1. அவர்கள் முப்பத்து முக்கோடி தேவர்களையும், பசுவையும், பாம்பையும் கும்பிடுதல் தேவகோபத்தை மூட்டுமென்று பயந்து நடுங்கித் தங்கள் அஞ்ஞான மார்க்கங்களைவிட்டு முற்றும் நீங்கவேண்டியது அவசியம். அதன்பின் பொறிவாயில் ஐந்தவித்தான் போதித்த பொய்தீர் ஒழுக்கமாகிய கிறீஸ்துவேதமொன்றுதான் மெய்மார்க்கமென்று தப்பாமல் நிர்ணயிக்கலாகும்.

2. ஆனால் கிறீஸ்து மார்க்கம் அநேகம் பிரிவுகளாகக் கலைந்து பலவாறாய்த் தோன்றுகிறது. அவைகளில் கத்தோலிக் திருச்சபையொன்று மாத்திரம் பொறிவாயில் ஐந்தவித்தானுடைய வேதமார்க்கமென்று தெளிவடைவதற்கு நல்ல மனதோடே ஒழுகி நடக்கும்படியாகத் தீர்மானித்துக்கொண்டு மெய்யான வேதவழியை அறியவும், நீதி வழியே செல்லவும் ஏக கடவுளை நோக்கி முழு இருதயத்தோடே பிரார்த்தித்து வருவார்களாக. அஞ்ஞானியும் ரோமை தேசத்தானும் சேனை ஸ்தாபதாருமான கோர்னேலியுஸ் நீதிநெறியில் தெய்வபயத்தோடே நடந்து

கடவுளை நோக்கிப் பிரார்த்திப்பார், தானதர்மஞ் செய்வார். சர்வேசுரன் அவருடைய மன்றாட்டைக் கேட்டு அர்ச். இராயப்பரை அவரிடம் அனுப்பச் சித்தமானார். அர்ச். இராயப்பர் கிறீஸ்து மறையைக் கோர்னேலியுஸுக்குப் போதித்து அவருக்கு ஞானஸ்நானங் கொடுத்தார் (அப். நட. 10). அவ்விதமே அஞ்ஞானிகளாகிய நமது சகோதர தமிழ் நாட்டார் கடவுளைப் பிரார்த்திப்பார்களேயாகில் அகத்தியம் தேவகிருபையின் வரப்பிரசாதம் அவர்களுக்கு அளிக்கப்படும். அவர்கள் கிறீஸ்துவேதத்திலே சேர்வார்கள்.

3. அவரவர்களுடைய புத்தி அறிவுக்கு ஏற்றப்போலே பின்வரும் குறிகளாலே கத்தோலிக் வேதம் ஒன்றே சத்திய வேதமென்றும், மற்றக் கிறீஸ்து மார்க்கங்கள் பொய் மதங்களென்றும் உணர்ந்துகொள்ளலாம்.

முதற் குறி:—வேதவிசுவாச சத்தியங்களைப் படிப்பிப்பதில் கத்தோலிக் திருச்சபையில் மாறாத ஒரே நிலைமையான ஒற்றுமை விளங்குகிறது. மற்றக் கிறீஸ்து மார்க்கங்களில் மாறாத நிலைமையான விசுவாச ஒற்றுமை கிடையாது. கி. பி. நான்காம் யுகத்தின் மத்தியில் ஜீவித்த பேர்போன வேதவித்தியாபாரகரான அர்ச். இலாரியார் (St. Hilary) காலத்திலே அநேக பதித மதங்கள் தலையெடுத்திருந்தன. அர்ச். இலாரியார் உயர்ந்த கோத்திரத்திலே அஞ்ஞானியாய்ப் பிறந்து வளர்ந்து நானாவித கல்வி கலைக்கியானங்களைத் தீரக்கற்று முடித்தவர். நேர்மையான நல்ல மனதோடே வாழ்ந்துவந்த இவர் தமது தேசத்தார் ஆணும் பெண்ணுமான பூதங்களையும் மிருகங்களையும் சுவாமிகளென்று வணங்குகிறது மகா அக்கிரமமென்று அஞ்ஞான மதத்தை வெறுத்து மெய்யான ஏக கடவுளை ஆராதிக்க வேண்டுமென்று தெளிந்துகொண்டார். பிறகு கிறீஸ்து வேத முறைமைகளை ஆராய்ந்துபார்த்து கத்தோலிக் வேதத்திலே சேர்ந்து ஞானஸ்நானம் பெற்றார். கத்தோலிக் திருச்சபைக்கு எதிரிடையாக எழும்பியிருந்த பதித மார்க்கங்களிலே இராஜாக்கள் முதலாய்ச் சேர்ந்திருந்…ம் அவர் அவைகளில் பிரவேசிக்கவில்லை. ஏனெனில் …ந்தப் பதிதமதங்களிலே விசுவாசக் கொள்கைகள் நிலை… மாறிக்கொண்டிருக்கிறதினாலே அவைகள் பொய் …ங்களென்கிற குறியைத் தங்கள் நெற்றியிலே தாங்கலாய்க் குத்திக்கொண்டு திரிகின்றன. கத்தோலிக் திருச்சபையின் விசுவாச போதனைகளிலே மாறாத ஒற்றுமை விளங்குகிறதினாலே அது ஒன்றுமாத்திரம் சர்வேசுரனுடைய மெய்யான வேதமென்று அர்ச். இலாரியார் தாம் எழுதின பிரபந்தத்திலே விபரிக்கிறார். இந்த அறிகுறியை நமது தேசத்து இந்துக்களும் இலேசாய்க் கண்டுகொள்ளலாம். மனதுமாத்திரம் நேர்மையான குணத்தை உடைத்தாயிருக்கவேண்டியது.

இரண்டாங் குறி:—மேற்கூறிய ஒற்றுமையைக் காப்பாற்றும்படி கத்தோலிக் திருச்சபையிலே ஒரு தலைவரிருக்கிறார். அவருக்குப் பெயர் அர்ச். பாப்பாணவர். வேத விஷயத்திலே கத்தோலிக் சபையார் எல்லோரும் அந்தத் தலைவருடைய சொற்படி கேட்டு நடப்பது அத்தியாவசியம். பதித மதங்களிலே அவ்வித தலைமையில்லாததினாலேயும், பேருக்கு இருந்தாலும் அவருக்கு அத்தியாவசியம் வேத விஷயத்திலே கீழ்ப்படியவேண்டுமென்கிற கடமையில்லாததினாலேயும், பதித மதங்கள் இயல்பிலே பொய்மதங்களென்பது நிச்சயம்.

மூன்றாங் குறி:—வேத புஸ்தகத்தைக் கத்தோலிக்கர் தங்கள் சுய புத்திப்படி அர்த்தம் பண்ணாமல் கத்தோலிக் திருச்சபை அங்கீகரியாத வியாக்கியானங்களைத் தள்ளிப்போடுகிறார்கள். பதித மார்க்கத்தார்களோ வேத புஸ்தகத்தை அவனவன் புத்திக்கேற்றபடி அர்த்தம் பண்ணலாமென்கிறார்கள். இதினாலே ஒன்றுக்கொன்று ஒவ்வாத விகற்ப கொள்கைகள் பெரிய காரியங்களிலும் சிறிய விஷயங்களிலும் உண்டாகுமென்கிறதினிமித்தம் பதிதமதங்கள் பொய்மதங்களென்று தன்னாலே விளங்கும்.

இந்த மூன்று குறிகளாலே நமது இந்து சகோதரர்கள் கத்தோலிக் வேதமொன்றே மெய்யானது, அதை

மாத்திரந்தான் பொறிவாயில் ஐந்தவித்தானாகிய சேசு
நாதர் படிப்பித்தாரென்றும் சுலபத்திலே கண்டுகொள்வார்
கள். கொர்னேலியுஸ், இலாரியார் இவர்களைப்போலே கத்
தோலிக் வேதத்திலே சேர்வார்கள். அப்போதுதான்
நமது தேசம் கத்தோலிக்கு தேசமாகும். கிறீஸ்து
இராஜாவின் செங்கோல் நமது நாட்டில் ஸ்திரமாய் நாட்
டப்படும்.

பி.: அம்மா, கத்தோலிக் திருச்சபை மாத்திரமே
பொறிவாயில் ஐந்தவித்தானாகிய சேசுநாதசுவாமி போதித்த
மெய்யான வேத சபையென்றும், மற்றப் பதித பிரிவினை
மதங்களெல்லாம் போலிக்கிறீஸ்து மதங்களென்றும்
தெரிந்துகொள்ளும்படி, நீங்கள் இலக்கிட்ட மூன்று அறி
குறிகளும் கற்றவர்களும் கல்லாதவர்களும் இலேசாய்ப்
பரீக்ஷிக்கக்கூடிய மாத்திரைகளாயிருக்கின்றன. சுலபமான
இந்த அறிகுறிகள் அஞ்ஞானிகள் மதம் பொய் மார்க்க
மென்று ஒப்பிக்க உதவுமோ?

தாய்: ஏகத்தாராய் உதவும். கத்தோலிக் வேதம்
மற்ற எந்த மார்க்கத்தையும் இந்த முக்குறிகளாலே வெல்
லும். முந்த முந்த இந்து மதத்தை ஆராய்ந்து பார்ப்போம்.
அதில் முதல் குறியாகிய விசுவாச ஒற்றுமை கிடையாது.
மோக்ஷகதி பெறும்படி அவனவன் அகத்தியம் பூரண மன
தாய் ஒப்புக்கொள்ளத்தக்க வேதசத்தியங்கள் இன்னவை
யென்று ஸ்திரமாய் இந்து மதத்தில் போதிக்கப்படுவது
யாதொன்றுமில்லை. ஒருவன் வேதாந்தியாயிருந்தாலுஞ்
சரி, நாஸ்திகனாயிருந்தாலுஞ்சரி, தான் புறத்தி மார்க்கங்
களிலே சேரவில்லையென்றாலே போதும். அவன் இந்து
மதத்தானாகப் பாவிக்கப்படுகிறான். இந்து மதத்தைப்பற்றி
அமெரிக்கா கண்டத்தில் உபந்நியாசம் பண்ணப்போயிருந்த
பேர்போன விவேகானந்தசாமி அங்கே சிக்காகோ நகரில்
(Chicago) கூடியிருந்த ஒரு பெரிய சங்கத்துக்கு முன்
எழுந்து நின்று தெய்வம் உண்டென்கிற வேதாந்தியும்,
தெய்வம் இல்லையென்கிற நாஸ்திகனும் இந்து மதத்தானா
யிருக்கிறானென்று பிரசங்கித்தார். இதினாலேதான்,

ஜீவாத்மம் வேறே, பரமாத்மம் வேறேயென்கிற துவிதரும்,
எல்லாம் பரமாத்மாவேயன்றி வேறொன்றுமில்லையென்
னும் அத்துவிதரும் ஒருவர் ஒருவரைப் பொய்யரென்று
திட்டிக்கொண்டே தாங்கள் எல்லோரும் இந்துமதத்தார்
கள்தானென்று சொல்லிக்கொள்ளுகிறார்கள். ஒவ்வாத
இவ்வித மாறுபாடொன்றே இந்துமதம் அபத்த மார்க்க
மென்று ஒப்பிக்கப்போதுமானது.

முதற் குறி:—கத்தோலிக் திருச்சபையானது சேசு
நாதர்சுவாமியும் அவர் பேரால் அப்போஸ்தலர்களும்
போதித்த வேதசத்தியங்கள் இன்னவையென்று குறிப்
பிட்டு எல்லாரும் அவைகளை விசுவசிக்கக் கடனென்று கற்
பிக்கிறது. மற்ற விஷயங்களில் கத்தோலிக் வேதபாரகருக்
குள் விகற்பமான எண்ணங்கள் இருக்கலாம். இருந்தாலும்
ஒருவர் ஒருவரைப் பொய்யரென்று இகழப்படாது. இகழ்ந்
தால் குற்றவாளிகளாகிறார்கள். பின்னால் அர்ச். பாப்பான
வர் அந்த விகற்ப எண்ணங்களைப் பரிசோதித்து வேத
சத்தியம் இன்னதென்று ஒருதலை துணிந்தால் கத்தோலிக்
கர் யாவரும் அந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொள்வது
அவர்களுடைய கடமை. ஏற்றுக்கொள்ளாமல் மறுதலி
துணிந்தால் அவர்களுக்கு வேத சடங்குகள் விலக்கப்படும்.

இரண்டாங் குறி:—கத்தோலிக் சபை உலகத்தில்
உள்ள சகல தேசங்களிலும் பரவியிருந்தாலும் அச்சபை
யார் அனைவோருக்கும் தலைமையாக அர்ச். பாப்பானவர்
ஒருவர் இருக்கிறார். வேத விஷயத்திலே எல்லாரும்
அவர் சொற்படி கேட்டு நடக்கிறார்கள். இவ்வித உள்ள
ரங்க வெளியரங்கச் சிரவணம் அவர்கள் மோக்ஷகதி சேர்வ
தற்கு இன்றியமையாத சாதனம். இந்துமதத்திலே இப்
படிக்கொத்த ஞானதிபதி பரிச்சேதம் கிடையாது. ஆயி
னும் இந்து மதம் உலகத்திலுள்ள தேசங்கள்தோறும்
பரவாமல், இமயமலைக்கும் கன்னியாகுமரிக்கும் நடுவிலுள்ள
சுருக்கமான பூமிக்குள்ளடங்கி யிருக்கிறதறிவோம். கத்
தோலிக் சபையின் தலைவராகிய அர்ச். பாப்பானவர் ரோமா
புரியில் வாசஞ்செய்கிறாரென்று உலகமெல்லாம் அறியும்.

இந்துமதத்துக்கெல்லாந் தலைமையாக ஒருவரும் இல்லாமையால் அவர் இந்துதேசத்திலே இன்ன ஊரிலே வாசம் பண்ணுகிறாரென்று சொல்ல இடமில்லை. இந்து மதமென்று பொதுப் பெயராகக் குறிப்பிடக்கூடிய மார்க்கம் இந்தியருக்குள்ளே காணமுடியாது. அவர்கள் [illegible]விதர், அத்துவிதர், வைஷ்ணவர், சிவபக்தர் எனப் பலவாறாய்ப் [illegible]து நிற்கிறார்கள். இந்தியர்களுக்குள்ளே ஜாதிபேதகங் [illegible] வெவ்வாசார பேதகங்களும் அநந்தமே. [illegible]வாறு ஆசார பேதகத்தையும் காக்கும்படி அனேகானேக ஆசாரியர்களும் புரோகிதர்களும் ஊருக்கூர் சுற்றித் திரிந்து பிழைக்கிறார்கள். ஒவ்வொரு ஜாதி வகுப்பின் புரோகிதர் என்ன உபதேசம் செய்கிறாரோ, அதைத்தான் அந்த வகுப்பார் ஒப்புக்கொண்டும் கொள்ளாமலும் தங்கள் வாழ்நாட்களைக் கழிக்கிறார்கள். மைசூர் இராட்சியத்திலுள்ள சிங்கேரியிலும், இன்னுஞ் சில ஊர்களிலும் உலககுருக்களெனச் சில பிரதான ஆசாரியர்கள் இருக்கிறார்கள். ஜனங்களும் அவர்களை மிகவும் வணங்கிவருகின்றனர். ஆனால் இந்துமதத்தானாயிருக்கும்படி அவர்களுடைய போதகத்தை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்கிற கடமையில்லை. ஆகையால் இந்துமதம் ஆயிரந் தலைப் பூதமென்கலாம். இந்தப் பூதம் பொறிவாயில் ஐந்தவித்தானுடைய பொய்தீரொழுக்கமென்று யார்தான் கூசாமல் கூறத் துணிவார்? கொஞ்சம் யோசிக்கிற எந்த மனிதனும் இந்து மார்க்கம் ஆயிரந்தலைப் பொய்மதமென்றே உணர்ந்துகொள்வான். ஆகையால் இந்துக்களுடைய வேதம் பொறிவாயில் ஐந்தவித்தானுடைய பொய்தீரொழுக்கமென்கமுடியாது.

மூன்றாங் குறி:—(1) கத்தோலிக் திருச்சபையிலே விளங்கிற வேதாகமம் மெய்யான ஏக கடவுளாலே அருளிச்செய்யப்பட்ட சத்திய வாக்கென்று கத்தோலிக்கர் யாவரும் முழுப்பூர்த்தியாய் விசுவசிக்கக் கடன். (2) வேதாகமத்துக்கு அவனவன் யுத்திப்படி வியாக்கியானஞ் செய்யவொண்ணாது. திருச்சபையிலே அங்கீகரிக்கப்பட்ட சாஸ்திரிகளுடைய வியாக்கியானத்துக்கு எதிரிடையான எண்ணத்தைத் தானாய் நாட்டிப் பிடிவாதமாய் அதை நிலைநிறுத்தக் கருத்துவைக்கப்படாது. யாதொரு வியாக்கியானம் ஆகாதென்று அர்ச். பாப்பானவர் தள்ளினால் அவருடைய தீர்ப்புக்குப் பணிந்து நடப்பது அத்தியாவசியம். பணியாதவன் திருச்சபைக்குப் புறம்பாக்கப்படுவான்.

இந்து மதத்தார் தங்களுக்கு ஆதியிலே கடவுள் ருக்கு வேதம் என்னப்பட்ட ஒரு ஆகமத்தை அருளிச்[illegible]தாக விசுவசிக்கிறார்கள். ருக்கு என்னும் பதம் கிரந்தப் பாஷையிலே புகழ் துதி எனப் பொருள்கொள்ளும். இந்த ருக்குவேதத்தினின்று சில பகுதிகள் துண்டாக எடுக்கப்பட்டு எசூர் வேதம், ஸாமவேதமென கூட இரண்டு வேதங்கள் உண்டாயின. இவைகள் உண்டாகி அநேக காலங்களுக்குப் பின் ருக்குவேதத்தை ஒட்டியும் ஒட்டாமலும் அதர்வண வேதமென நான்காம் வேதாகமம் கிளைத்தது. ஆகவே நமது சகோதர இந்துக்களுக்குள்ளே வேதம் நான்கென்பது சகஜமான பேச்சு.

ருக்குவேதம் தெய்வங்களின் புகழ் துதிகளை ஓதுகிறது. பலிகளையும் காணிக்கைகளையும் படைக்கும்போது பிராமணர் பண்ணும் உச்சாரணம் எசூர்வேதம். எசூர் என்பது பலிபூசை எனப் பொருள்கொள்ளும். சந்திரனுக்கும் இறந்துபோன முன்னோர்களுக்குஞ் செய்யுஞ் சடங்குகளில் பாடப்படும் மந்திரங்கள் சாமவேதமாம். இறந்துபோன முன்னோர்களுக்குச் சந்திரன் ஒரு உறைவிடமென்பது அஞ்ஞானிகளுடைய எண்ணம். சாமம் என்றால் ஆற்றுதல் அமர்த்துதல் என அர்த்தம் பெறும். ஆகையால் சாமவேதம் இறந்துபோனவர்களுக்கு ஆறுதலாக இயற்றப்பட்ட மந்திரமென்கலாம். கடைசியாய் அதர்வண வேதமாவதேதென்றால் அந்தந்தப் பலிபூசை காணிக்கைகளை நிறைவேற்றுகையில் நேரிடும் குற்றங்குறைகளைப் பரிகரிக்கும்படி ஏற்பட்ட மந்திரக் கோர்வையாகும். அதர்வணென்னும் பதத்துக்கு அர்த்தம் தீ என்கிறார்கள். பொன்னைத் தீ எப்படிச் சுத்திகரிக்கிறதோ அப்படியே பலிபூசைகளில் உண்டாகும் மாசு கறைகளை அதர்வணவேத மந்திரங்

கள் புனிதமாக்கிறதாம். அதர்வணவேதம் மாயவித்தை களையும் படிப்பிக்கிறது.

இதுகாறும் நான் விபரித்த விஷயங்களைக்கொண்டு இந்துமதத்திலே நான்கு வேதமாகிலும் உண்டென்று தெளிவாகிறது. ஆயினும் தமிழ் நாட்டாருக்குத் தலைமையான சித்தராகிய அகஸ்தியமுனி இந்த நான்கு வேதாகமங்களும் பொய்யான கற்பிதங்களென்று உரைத்த வாக்கியத்தை நான் ஏற்கனவே எடுத்துக் கூறினேன் (229-ம் பக்கம் காண்க). சித்தர் முனிவரென்றால் மகாப் பரிசுத்தர், மகா தபசி என அர்த்தம் பெறும். நாம் எப்படி அர்ச்சியசிஷ்டவர்களை வணங்குகிறோமோ, அப்படியே இந்து மதத்தாருக்குள் சித்தர்களும், முனிவர்களும் என்க. ஆனால் அர்ச்சியசிஷ்டவர்கள் நித்திய மோக்ஷத்திலே வாழியுள்ள காலம் பாக்கியமாய் வாழ்கிறவர்களென்று கத்தோலிக் வேதம் படிப்பிக்கிறது. சித்தர்களும் முனிவர்களும் இந்து மதக் கொள்கைப்படி ஆகாய மண்டலத்திலே வசிக்கிறார்களாம்.

அகஸ்தியமுனியை இந்துக்கள் எந்த மேல்மண்டலத்திலே வைத்தாலுஞ்சரி, அவர் இந்துமதத்து நான்கு வேதங்களையும் நிந்தித்தவரென்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை. ஆயினும் அவர் இந்துமதஸ்தராகவும், அதிலே மகாத்துமாவாகவும் சித்தராகவும் வணங்கப்படுகிறார். அவர் வாக்குக்கு மறு வாக்கில்லையென்கிறார்கள். ஆகையால் நான்கு வேதங்களையும் புறக்கணித்தாலும் ஒருவன் இந்து மதத்தானுயிருக்கலாமென்பது தன்னாலே விளங்கிறது.

ஐந்தவித்தான் என்னும் மேலான புகழ்பெற்ற கௌதமமுனி நான்கு வேதங்களையும் மதிக்கவில்லை. மதியாவிட்டாலும் நமது தேச சகோதர இந்துக்கள் அவரை மகா முனியென்று பாராட்டி அவரை விஷ்ணுவின் ஓர் அவதாரமென்கிறார்கள்.

ஏறக்குறைய இருநூறு வருஷங்களுக்குமுன் சோழ நாட்டில் ஜீவித்த தாயுமானவர் புலவராகவும் ஞானியாகவும் இந்து மதத்தாரால் கொண்டாடப்பட்டு வருகிறதை யார் அறியார்? அவர் தமது பாடலில் வேதாகமங்கள் அநந்த



[illegible]ன்கிறார் (தாயுமானவர் பாடல் பக்கம் 32). வேதாக
[illegible]கள் கடவுள் அறிவித்த மெய்வாக்காயிருக்க அவைகள்
கணக்கில்லாமல் அநந்தமாயிருக்கிறதென்று சொன்னால்
அது பரிகாசமாகிறதல்லோ? கணக்கற்ற வேதாகமங்களைக்
கண்டபடி சர்வ ஞானமுள்ள தெய்வம் வாரி இறைக்குமோ?
அவைகள் ஒரே சத்தியவாக்காயிருந்தால் கணக்கற்ற வேதா
கமங்களென்று தாயுமானவர் உரைத்திருப்பாரா? அவை
கள் பலவாறாய் ஒன்றோடு ஒன்று பொருந்தாமல் விபரீதமா
யிருந்தால் சத்திய சுரூபியாகிய தெய்வம் மெய்யும் பொய்யும்
கலந்து பல பல வேதாகமங்களை அருளிச் செய்தாரெனத்
தகும். இப்படிப் போதிக்கிறது தேவ தூஷணமாகும்.
வேதாகமங்கள் கடவுளால் அறிவிக்கப்பட்ட மெய்வாக்கா
யிருந்தால், இந்து மார்க்கத்தார் மகா ஞானியென்று புகழ்
கிற தாயுமானவர் இந்த தேவ தூஷணத்தைச் சொல்லி
யிருக்கமாட்டார்.

வேதம் அநந்தமென்று தாயுமானவர் உரைக்கும்படி
வந்த காரணம் அடியில் வரும் விபரங்களால் தெளிவாகும்.
இந்து மதத்தார் நான்கு வேதாகமங்களுக்கும் வியாக்கியான
மாக எழுதப்பட்ட பிராமணங்கள் உபநிடதங்கள் * என்
னும் நூல்களையும் தெய்வ வாக்கென்று நினைக்கிறார்கள்.
இந்த வியாக்கியான நூல்களினின்று பிரிந்த அறுவகை
தத்துவ † மதங்களையும் (Philosophical system) கடவுள்
அருளிச்செய்த சாஸ்திரங்களென்று சாதிக்கிறார்கள். சாஸ்
திரங்கள் பொய்யாகாது என்னும் பேச்சு இந்துக்களுடைய
வாயிலிருந்து ஓயாமல் புறப்படுகிறதை நாள்தோறும் கேட்க
லாம். ஆயினும் இந்த ஆறு மதங்கள் அல்லது சாஸ்திரங்
கள் ஒன்றோடு ஒன்று மோதுகிறதென்று அடியில் வரும்
மேற்கோளால் விளங்கும்.

ஒன்றே பொருள் என்னில் வேறு என்ப வேறு என்னில்
அன்று என்ப ஆறு சமயத்தார்.

(திருவள்ளுவர்மாலை, பா. 9.)

* உபநிடதம் = இரகசிய ஞானம்.

† தத்துவ சாஸ்திரம் = உண்மையை ஆராயுஞ் சாஸ்திரம்.

இந்தச் செய்யுளின் பயன் என்னவென்றால், இந்திய மார்க்கத்தார் ஆறு சாஸ்திர சமயத்தாராய் அல்லது மதத்தாராய் வகிர்ந்திருக்கிறார்கள். அந்த வகுப்பார்களுக்குள்ளே பல எதிர்வாதங்கள் நடைபெறுகிறது. ஒரு வகுப்பார் பஞ்சலோகமும் சகல உயிர்ப்பிராணிகளும் கடவுளும் ஆகிய மூவகைப் பொருள்களும் தோற்றத்துக்கு மாத்திரம் மூன்று பகுதிபோலக் காணப்படுகிறதேயன்றி எல்லாம் பிர்மா என்னும் ஒரே வஸ்துவல்லாமல் வேறு வஸ்து அல்லவென்கிறார்கள். அவர்களை மற்றொரு சாஸ்திர சமயத்தார் மறுத்து மூன்று வகைப் பொருள்களும் வெவ்வேறானவையென நாட்டுகிறார்கள். இவர்களின் சாஸ்திரமும் உண்மையல்லவென்று பின்னொரு சமயத்தார் ஆக்ஷேபிக்கிறார்கள். "ஆதலால் ஆறு சமய நூல்களும் இவ்வாறு ஒன்றால் ஒன்று மறுக்கப்படுகின்றன." இந்தக் கடைசி வசனம் திருவள்ளுவ மாலைக்கு உரை இயற்றினவர் வரைந்த வாக்கியம். அதற்கு முந்தின பாகமாகிய உரை செந்தமிழில் எழுதப்பட்டிருப்பதால், அதைக் கொடுந்தமிழில் நான் விபரித்திருக்கிறேன்.

இந்த மேற்கோளால் ஆறு சாஸ்திரங்களும் ஒன்றையொன்று விரோதித்து அகற்றக்கொள்ள அவைகளெல்லாம் தப்பில்லாத சத்திய சுரூபியாகிய தெய்வ வாக்கென்று விசுவசிப்பது தெய்வத்துக்கு அவமானமல்லோ! ஆயினும் நமது தேசத்து இந்துக்கள் அவைகள் எல்லாந் தெய்வத்தால் அருளப்பட்டதென்றும் அவைகளில் பொய் இல்லையென்றும் சாதிக்கிறார்கள். தெய்வத்தை நகைக்கிறதுக்கு மனம் வைக்கிற நாஸ்திகன் அதிகஞ் சொல்லமுடியாது. ஆகையால் இந்து மார்க்கத்தாருடைய வேதாகமங்கள் மெய்யான தெய்வ வாக்கல்லவென்பது திண்ணம்.

தங்கள் தெய்வங்களைப் பழிக்கிறதுக்கு இதுவும் போதாதென்றாற்போல புலவர்கள் தங்கள் விசித்திர விநோத வல்லமையை எடுப்பாய்க் காட்டும்படி எழுதிய இதிகாசங்களையும் அசுசியான புராணக் கதைகளையும் இந்து மதத்தார்கள் தேவன் அருளிச்செய்த ஐந்தாம் வேதாகமம் என்கிறார்கள். தெய்வங்களைப் பழிக்கிறதுக்கும்



களைப்போலே நீசரும் பொய்யரும் எங்கும் கிடையாதென்று யாரும் உணரும்படிக்கும் இந்த ஐந்தாம் வேதாகமத்துக்கு மிஞ்சி ஒன்றும் வேண்டியதில்லை.

இதுபரியந்தம் நான் விபரித்த திருஷ்டாந்தங்களினாலே இந்து மதத்திலே மெய்யான சத்திய வேதத்துக்குரிய ஒற்றுமைக்குறிகள் கிடையாதென்று வெட்டவெளியாகிறது. அந்தத் திருஷ்டாந்தங்களை இதோ இவ்விடஞ் சுருங்கச் சொல்லுகிறேன். (1) நமது தேசத்து சகோதர இந்துக்கள் என்னத்தை விசுவசித்தாலுஞ் சரி, புற மார்க்கங்களில் அவர்கள் வெளியரங்கமாய்ச் சேராத வரையில் இந்து மதத்தாராகவேயிருக்கிறார்கள். (2) இந்து மதத்துக்குப் பொதுவான தலைவர் ஒருவருமில்லை. தலைவர்கள் நாற்றுக்கணக்காய்ச் சுற்றித்திரிகிறார்கள். இந்து மதத்தார் அவர்கள் போதனைகளை அத்தியாவசியம் கேட்டு நடக்கக் கடமையுமில்லை. வேதாகமம் துவக்கத்திலே ஒன்றாயிருந்து காலக்கிரமத்திலே நான்கு வேதமாகிப் பின்னால் அநந்தமாகிவிட்டது. அவைகளைப் பொய்யென்று அகற்றின அகஸ்தியர், கௌதமர், போகர் முதலியவர்களை இந்து மதத்தார் ஞானிகளென்றும், மகாத்துமாக்களென்றும் ஏற்றி வாழ்த்துகிறார்கள். ஆகையால் ஒருவன் வேதாகமங்களைப் பூசித்தாலுஞ்சரி, பிறக்கணித்தாலுஞ்சரி இந்து மதத்தானாயிருப்பதற்கு விக்கினமில்லையென முடிவு கூறலாகிறது. 18

இவ்விடம் தொகுப்பாய்க் கூறப்பட்ட திருஷ்டாந்தங்களினாலே சத்திய வேதத்துக்குரிய முக்குறிகளும் இந்து மதத்திலே அற்றுப்போயிருப்பதால் அது பொய் மார்க்கமென்பது உறுதி. அதைப் பொறிவாயில் ஐந்தவித்தான் அருளிச்செய்தாரென்கவுங்கூடாது. இவ்வாறு பாலையும் நீரையும் அன்னப் பறவை பிரிக்குமாப்போலே பொய்யும் மெய்யும் பிரித்துக்காட்டுகிறது பொறிவாயில் ஐந்தவித்த நர தெய்வமாகிய சேசுவின் கத்தோலிக் திருச்சபை.

*N.B.*—இங்கே கூறிய வேதாகம விஷயங்களுக்கு மேற்கோள் Monier Williams.

---